# அறிய வேண்டிய ஐம்பொருள்

★

டாக்டர் அரங்க சீனிவாசன் டி.லிட்.,

# அறிய வேண்டிய
# ஐம்பொருள்

கவிக்கடல், கவித்தென்றல், கவிதைச் செம்மல்,
கம்பன் வழிக் கவிஞர், அருட்கவி,
**டாக்டர் அரங்க சீனிவாசன்** டி.லிட்.,

**அன்னை நாகம்மை பதிப்பகம்**
2/141 கந்தசாமி நகர், பாலவாக்கம்
சென்னை-600 041

முதற்பதிப்பு : 1993
© அரங்க சீனிவாசன்

விலை ரூ. 25-00

அச்சிட்டோர் :
கவின்கலை அச்சகம்,
கந்தசாமிநகர், பாலவாக்கம்,
சென்னை-600 041
தொலைபேசி : 41 71 41

THIS BOOK IS

PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF

TIRUMALA TIRUPATI DEVASTHANAMS

UNDER THEIR SCHEME

"AID TO PUBLISH RELIGIOUS BOOKS".

# அணிந்துரை

வைணவம் என்பது ஒரு நெறி.

நெறி என்றால் இறைவனை அடையும் வழி என்பது பொருள், இது ஐம்பொருள்களிலே ஒன்று.

ஐம்பொருள்கள் ஆவன எவை?

அர்த்த பஞ்சகம் என்பது வடமொழி. ஐம்பொருள் என்பது இதன் பொருள்.

இந்த ஐம்பொருள்களிலே இறைநிலை என்பது ஒன்று.

உலகைத் தோற்றுவித்து, உயிருள்ளன அல்லன ஆகிய பல பொருள்களை உண்டாக்கி அவற்றை அருள்பாலித்துக் காத்து நிற்கும் தலைமைப் பொருள் இது.

இரண்டாவது பொருள் உயிர் நிலை.

இது இறைவன் படைப்பில் உயர்ந்ததாகத் திகழ்வது, படைக்கப்பட்டவற்றிலே அறிவு வாய்க்கப் பெற்றதாய் வால் அறிவன் தாள் சேரும் குறிக்கோள் உடையதாய் இயங்குவது இது.

மூன்றாவது பொருள், நெறி.

இது அறிவு படைத்த உயிர், தன்னைப் படைத்த இறைவனை அடையும் குறிக்கோளைப் பெற முயலும் வழியாகும்.

நான்காவது பொருள் தடை.

இது உயிர், இறையை அடைய முடியாதபடி தடுக்கும் ஊழ்வினை என்னும் இடையூறு ஆகும். ஊழ் வெல்லும்போது உயிரின் முயற்சி தோல்வியடைய நேரிடும். ஊழைத் தன் அறிவினாலும், தான் நிற்கும் நெறியினாலும் வென்று இறையை அடைவது உயிரின் கடமையாகும்.

ஐந்தாவது பொருள் வாழ்வு.

இது ஊழ்வினையாகிய தடையைக் கடந்து, நல்நெறியில் அன்புடன் நடந்து, இறையை அடைந்து பெறும் பலனே சிறந்த வாழ்வாக அமைகிறது.

வாழ்வு என்பதன் பொருள் இங்கே முற்றுப் பெறுகிறது.

இந்த அரிய ஐந்து பொருள்களையும் விளக்கும் நூலே அர்த்த பஞ்சகம் அல்லது ஐம்பொருள் ஆகும்.

இந்த ஐம்பொருளை எளிய தமிழில், எவரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் தெளிவாக விளக்குகிறார் அருட்கவி அரங்க சீனிவாசன் அவர்கள்.

அருட்கவி அரங்க சீனிவாசன் அவர்கள் ஒரு கல்விக் கடல்.

வைணவ நூல்களில் ஆழ்ந்த புலமையும், சைவ சித்தாந்தத்தில் அதற்கு ஈடான பயிற்சியும், எந்தச் சமயத்தை யும் சமமாகப் பார்க்கக் கூடிய தெளிவும், நல்லன கொண்டு அல்லன தள்ளும் பக்குவமும், காந்திய நெறியையே தன் வாழ்வு நெறியாகக் கொண்ட தூய்மையும் ஒருசேர வாய்க்கப் பெற்ற சான்றோர் ஆவர்.

அவர் எழுதிய ஐம்பொருள் விளக்கம் சமய உணர்வை நல்லுணர்வாக வளர்க்கும் ஒரு கருவியாகும்.

இந்நூல் வைணவ சித்தாந்தத்திற்கு நல்ல விளக்கமாகத் திகழ்கிறது.

—மாணிக்கவாசகன்

# அருட்கவி அரங்க சீனிவாசன் அவர்களின்
## வாழ்க்கைக் குறிப்பு

அரங்க. சீனிவாசனார் 29-9-1920இல் பர்மிய நாட்டில் பெகு மாவட்டத்திலுள்ள சுவண்டி எனும் ஒரு சிற்றூரில், உழவர் குடியில் பிறந்தவர்.

தந்தையார், திருவாளர் அரங்கசாமி நாயுடு. தாயார் திருமதி மங்கம்மாள்.

திருமதி மங்கம்மாள், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நிறுவிய இந்திய தேசிய ராணுவத்தின் ஜான்சிராணி பிரிவில் போர் வீராங்கனையாகப் பணியாற்றினார். இவர் கையில் துப்பாக்கி யேந்திப் போர் முனைகளில் வீரத்துடன் போரிட்டது குறிப்பிடத் தக்கது. அவர்களின் 85ஆம் அகவை வரை மாநில அரசின், தியாகிகள் ஓய்வு ஊதியம் பெற்று வந்தார். 1989 மார்ச் மாதம் இயற்கை எய்தினார்.

சீனிவாசனாருக்குப் பத்தாவது அகவையிலேயே இலக்கிய ஆர்வம் அரும்பியது. அந்த அரும்பு. படிப்படியாகக் கவிதை மலர்களாகி மணம் வீசத் தொடங்கியது.

இவரது பதின்மூன்றாம் அகவையில், 'தேசிய கீதம்' என்ற சிறுநூல் வெளி வந்தது.

சுதேச பரிபாலினி, பர்மாநாடு, பால பர்மா, சுதந்தரன், ஊழியன் முதலிய பர்மிய நாட்டுத் தமிழ் இதழ்களில் இவரது படைப்புகள் இடம் பெறலாயின.

கம்பராமாயணப் பிரசங்க விற்பனரும் காவடிச் பாடிய அண்ணாமலையின் நண்பருமாகிய சங்கரப்புக்

கவிராயரின் மகள் வழிப் பேரனாகிய இவரது இருபது அகவைக்குள் 10 நூல்கள் வரை வெளிவந்தன.

பள்ளிப் படிப்பை முடித்த பின்பு, பழனி பக்கிரிசாமிப் பிள்ளை என்ற பரிபூரணானந்த சுவாமிகளிடம் பல ஆண்டுகள் இலக்கண, இலக்கியங்களைப் பாடம் கேட்டார். திரு. பக்கிரிசாமிப்பிள்ளை பழனி மாம்பழக் கவிச்சிங்கநாவலரின் முதன்மை மாணவர்.

அக்காலத்து மிகச் சிறந்த புலமையாளராகவும் வேதாந்த வித்தகராகவும் விளங்கிய சுவாமிகள், தம் பல நூறு மாணவரிடையே, இவர்பால் மிக்க அன்பு பாராட்டிப் புலமையில் முந்தி யிருப்பச் செய்தார்கள்.

1942ஆம் ஆண்டு உலகப் பெரும்போரின் போது, கால் நடைப் பயணமாகவே பாரதநாடு புறப்பட்ட இவர், இடை வழியில் பல இடையூறுகளுக்கும் நோய்களுக்கும் குண்டர்கள் தாக்குதலுக்கும் ஆளாகினமையால், கௌஹாத்தியில் பல மாதங்கள் மருத்துவமனையில் தங்க நேர்ந்தது.

வெறுங்கையுடன் வந்தாலும், தம்மிடமிருந்த புலமைச் செல்வத்தால், பாரதத்திலும் பெருமித வரவேற்பினை முயன்று தேடிக் கொண்டார்.

முதன் முதலாகச் 'சங்கரன் கோவில் நான்மணி மாலை' என்ற நூலைப் படைத்து, சங்கரன் கோயிலிலேயே அரங்கேற்றினார். அதற்குப் பொருளும் பாராட்டும் கிடைத்தன.

பேரறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் இவரது புலமை கண்டு, மாதந்தோறும் அரசு உதவி கிடைப்பதற்கு வழி வகுத்தார்.

தொண்டர்குழாம் ஆறுமுகம்பிள்ளை
தசாவதானம் ஆறுமுகம்பிள்ளை
பாலகவி வயினாகரம் இராமநாதன் செட்டியார்

முதலியோர் இவர் கவிதைகளைச் சுவைத்துப் பாராட்டி எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்க நிறுவனராகவும் இருந்து சிறப்புற்றார்.

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பாடம் நடத்தி வந்தார்.

கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'ஜோதி' மாத இதழிலும் திருச்சி 'தொழிலரசு' இதழிலும் உதவியாசிரியராகப் பணியாற்றினார்.

காந்திகாதை என்ற பெருங்காப்பியம் படைத்துப் பாரதீய வித்யா பவன் நிறுவிய இராஜாஜி நினைவு முதற்பரிசும் தமிழக அரசின் சிறப்புப் பரிசும் பெற்றார்.

கோவை இராமகிருஷ்ணா வித்யாலயாவின் சார்பாகப் பெருந்திருவாளர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள். காந்தி காதைக்குப் பரிசும் பாராட்டும் வழங்கினார்.

காவடிச்சிந்தும் கவிஞன் வரலாறும் என்ற வரலாற்று ஆய்வு நூல், தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது,

இதுகாறும் எழுதி வெளி வந்துள்ள சுமார் நாற்பது நூல்களுள்,

வங்கத்துப்பரணி
வழிகாட்டும் வான்சுடர்
தியாக தீபம்
காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும்
சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
காந்திகாதை
எழுத்துலக நாயகி
கடவுள் வரலாறு
அகமும் புறமும்

தமிழ் நூல்களில் தேசியம்
தாகூர் அஞ்சலி
காதல் அருவி

முதலிய நூல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அவற்றுட் சில பரிசுகள் பெற்றவை.

இவர் தம் இலக்கியப் பணியைப் பாராட்டி, அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அருட்கவி என்ற விருது வழங்கிப் பாராட்டியது.

உயர்திரு ம. பொ. சி. அவர்கள் தலைமையில் இயங்கும் நாமக்கல் கவிஞர் நினைவுக் குழுவினர், இவருக்குப் பாராட்டுக் கேடயமும் கவித்தென்றல் என்ற விருதும் வழங்கினர்.

பொள்ளாச்சி அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள் விழாவெடுத்துப் பெரும் பொருள் பரிசும் கேடயமும் சால்வை யும் அளித்துப் பாராட்டினார்கள்.

சென்னைத் தமிழ் வளர்ச்சி மன்றம் கவிதைச் செம்மல் என்ற விருதினை அளித்தது.

இவர்தம் 'காந்தி காதை'யைத் திருச்சி திருக்குறள் கழகத் தார், பலமுறை புலமைச் செல்வர் பலரைக் கொண்டு தொடர் சொற்பொழிவுகள் நடத்தி வருகின்றனர். பட்டி மன்றம், வழக்காடு மன்றம், கருத்தரங்கங்களும் நடத்திக் காந்தி காதையின் சிறப்பைப் பரப்பி வருகின்றனர்.

சென்னை இராமலிங்கர் பணிமன்றத்தினர் எடுக்கும் வள்ளலார் மகாத்மா விழாவில்' ஆண்டுதோறும் தொடர் சொற்பொழிவாகக் 'காந்தி காதை'யை இடம் பெறச் செய்து வருகின்றனர். சிலம்பொலி செல்லப்பனாரின் வாக்கு வன்மை யால் காந்தி காதைக்குப் பேரும் புகழும் சேர்ந்து வருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அஞ்சல் வழிப் பட்டப் படிப்புக்கும் பாரதிதாசன் பல்கலைக் கழகப் பட்டப் படிப்புக்கும் சில தன்னாட்சிக் கல்லூரிகள் பட்டப்படிப்புக்கும் 'காந்தி காதை'யைப் பாடமாக வைத்துள்ளன.

'வங்கத்துப்பரணி'யும் பட்டப் படிப்பின் பாடமாக இடம் பெற்றுள்ளது.

ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள் நிறுவிய தமிழ் சமஸ்கிருத ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி முனை வராகப் பணியாற்றிய அரங்க. சீனிவாசனார், குமாரராஜா முத்தைய செட்டியார் நினைவுமலர், ராணிமெய்யம்மை ஆச்சி நினைவு மலர், மதுரைத் தமிழிசைச் சங்கத் தொடக்க விழா மலர் முதலிய பத்துக்கும் மேற்பட்ட மலர்களுக்குப் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

மேலும் பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் இருந்து, பல நூல்களைப் பதிப்பித்தும் உரை எழுதியும் உள்ளார்.

அரசு தொல்பொருள் இலாகாவின் மூலம் 'வானர வீர மதுரைப் புராணம்' என்ற நூல் திருந்திய பதிப்பாக வெளி வந்துள்ளது,

'தினமணி' ஆசிரியர் திரு. ஏ. என். சிவராமன் அவர்கள் சைனாநாட்டுப் பயணம் மேற்கொண்டபோது, தினமணியில் அவர் எழுதி வந்த கட்டுரைப் பகுதியில், இவரைத் தொடர்ந்து எழுதி வரும்படி பணித்துச் சென்றார்கள். அதன்படி நான்கு மாதங்கள் தொடர்ந்து கட்டுரைகள் தினமணியில் எழுதி வந்தார். அக்கட்டுரைகள் பின்னர் வானதி பதிப்பகம் மூலம் நூல் உருவம் பெற்றது.

தினமணியில் பல்லாண்டுக் காலமாக மதிப்புரைப் பகுதியில் பல நூறு நூல்களுக்கு மதிப்புரைகள் எழுதி யுள்ளார்; எழுதி வருகின்றார்,

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை நடத்திய ஆய்வரங்குகள் சில வற்றில் இவர் தலைமை தாங்கியுள்ளார்.

சென்னை இரத்தினவேல் சுப்பிரமணியம் செந்தமிழ்க் கல்லூரியில் சிறப்புப் பேராசிரியராகப் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருகின்றார். சென்னைத் தமிழ் வளர்ச்சி மன்றத் தின் அவைக் கவிஞராக விளங்கும் பெருமை இவருக்கு உண்டு.

பேரருளாளர் தி. சு அவினாசிலிங்கம் செட்டியார் அவர் களால் நிறுவப்பட்டு, தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியிட்ட 'தமிழ் வளர்ச்சிக் கழக'த்தின் பொதுக்குழு உறுப்பினராகப் பணியாற்றி வருகின்றார்.

இலக்கியப் பாடங்கள் நடத்திப் பற்பலரைப் புலவர் களாக்கிய திரு. அரங்க சீனிவாசன், எழுபத்து மூன்று அகவை எட்டிய நிலையிலும் சோராமல் இலக்கியப் பணி செய்து புதுப்புது நூல்கள் பல படைத்து வருகின்றார்.

காந்திய நெறியிலும், தேசியத்திலும், தமிழ்மொழியிலும் ஈடுபாடு கொண்ட இவருக்குத் தமிழக அரசு. தமிழறிஞர் என்ற முறையில் மாதந்தோறும் சிறப்பு ஓய்வூதியம் வழங்கி வருகின்றது.

இன்று ஒரு சிற்றூரில் (கோவிலூர், திண்டுக்கல்-624706) அமைதியாக இலக்கிய ஆய்வு செய்து வரும் இவர், பொருட் செல்வராக இல்லையெனினும் புலமைச் செல்வராகப் பெரு மிதத்துடன் வாழ்ந்து வருகின்றார்.

காவடிச் சிந்து புகழ் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரின் கவிதைகள் முழுவதும் இவர் பெரு முயற்சி செய்து தொகுத்து, கடினமான அப்பாடல்களுக்கு நுண்ணிதின் உரை கண்டுள்ளார். அந்நூல் பெரும்பொருட் செலவில் சேகர் பதிப்பகத்தில் (எம்.ஜி ஆர். நகர் சென்னை-78) வெளியிடப்பட்டுள்ளது.

'கம்பன் கவிதைகளில் அரங்க. சீனிவாசன் கவிதைகளைக் கலந்து விட்டால், பிரித்துக் காண எந்தக் கொம்பனாலும் இயலாது' என்று ஜஸ்டிஸ் மகராஜன் அவர்கள் தமது 'பரிசு பெற்ற பார காவியம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள் ளார். அந்தக் கட்டுரை அவரது இறுதிக் கட்டுரையாகத் 'தினமணி'யில் வெளிவந்தது.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள், தம் கட்டுரைகளில் இவரின் கவிதைகளை எடுத்து ஆண்டுள் ளார்கள்.

தமிழ்க் கடல் ராய. சொ. அவர்கள் அரங்க. சீனிவாசனின் கவிதைகளை ஆங்காங்கே கூறி, 'இவன்தான் கவிஞன்' என்று பாராட்டி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் அரங்க. சீனிவாசனிடம் பேரன்பு கொண்டவர். காந்தி காதை பரிசு பெற்றபோது, கம்பன் விழாவில் மலர்க் குடை நிழலில் இருத்திப் பாராட்டு நடத்தினார்.

கோவைக் கம்பன் கழகத்தாரும் பாராட்டு விழா நடத்திப் பரிசும் பாராட்டும் வழங்கினர்.

'ஆயிரம் கவிஞர் ஆயினும் அரங்க. சீனிவாசன் ஆவரோ!' என்று பாராட்டிக் கம்பன் வழிக் கவிஞர் என்ற விருதும் அளித்தார், வாகீச கலாநிதி கி.வா.ஜ. அவர்கள்.

சமயத் தத்துவங்களில் ஆர்வம் கொண்ட இவர் தத்துவ நூல்கள் சில, எளிய நடையில் எழுதியுள்ளார்.

இவர் எழுதிய மனித தெய்வம் காந்தி காதை சில ஆண்டு களாகத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தாரின் பத்தாம் வகுப்பில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

சிலர் எம்.பில். ஆராய்ச்சி செய்து பட்டம் வாங்கி யுள்ளனர். சிலர் பிஎச்.டி.க்கு ஆய்வுக்கு எடுத்து முடித் துள்ளனர்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நுழை வாயில் | 1 |
| வைணவ சமயத்தின் சாரம் | 21 |
| | 22 |
| உயிர் | 68 |
| நெறி | 113 |
| தடை | 137 |
| வாழ்வு | 164 |
| பிற்சேர்க்கை | |
| 1. எங்களது திருநாடு | 182 |
| 2. பாரதியார் பாடல் | 185 |
| 3. பாரதியார் பாடல் | 186 |

# நுழைவாயில்

## காப்பு

எம்பெருமான், ஆவி, நெறி, ஏய்ந்ததடை, வாழ்வு என்னும்
ஐம் பொருளும் ஆராய்ந்து அளிக்கவே—உம்பர்தொழும்
வாரிமா றன்கருணை வள்ளன்மை வாரி அருள்
காரிமா றன்கருணை காப்பு.

[அன்வயம்] எம்பெருமான், ஆவி, நெறி, ஏய்ந்ததடை, வாழ்வு என்னும் ஐம்பொருளும் ஆராய்ந்து அளிக்க,

உம்பர் தொழும் வாரி மால் தன் கருள் நை வள்ளன்மை வாரி அருள் காரிமாறன் கருணை காப்பு,

[அரும்பத உரை] ஆவி—உயிர். வாழ்வு—பலன். உம்பர்—தேவர். வாரி—திருப்பாற்கடல். மால்தன்—திருமாலினுடைய. கருள்—அறியாமை இருள். நை – அழிக்கின்ற. வள்ளன்மை—கொடை. வாரி அருள்—அள்ளித் தந்த. காரிமாறன்—நம்மாழ்வார். கருணை—திருவருள். காப்பு—காவலாகும்.

[பொழிப்புரை] இறை நிலையும் உயிர் நிலையும் உபாயமும் தடையும் பயனும் என்னும் அருத்தபஞ்சகமாகிய ஐம்பொருளும் ஆராய்ச்சி செய்து உலகினர்க்குத் தருவதற்கு, தேவர் தொழுகின்ற திருப்பாற்கடலில் பள்ளி கொள்கின்ற

திருமாலினது அறியாமை அழிக்கின்ற (அருட்) கொடையை (உலகுக்கெல்லாம்) அள்ளித் தந்தருளிய நம்மாழ்வாரது திருவருள் காப்பு ஆகும்.

அளிக்க காப்பு என்று கூட்டுக, மால்தன் வள்ளன்மை என்றும் கருள் நை வள்ளன்மை என்றும் தனித்தனிக் கூட்டுக,

வங்கம் தந்த தங்கம் ஜகதீஷ் சந்திரவசு. அவர் உலகப் பெரும் பரிசாகிய நோபல் பரிசைத் தம் ஆய்வுக்காகப் பெற்ற அறிவியல் அறிஞர்.

அவர் ஒருகால் இலண்டன் இராயல் சொஸைட்டி என்ற நிறுவனத்தில் ஒரு சொற்பொழிவாற்றினார். அப்போது,

"அண்ட சராசரம் முழுவதும் ஒரு மெய்ப்பொருளி னிடத்துத் தோன்றிய பல வேறுபட்ட தோற்றங்களே. 'ஒரே பேருண்மையாக உள்ள அந்த மூலப் பொருள், பல்வேறு இயற்கைத் தோற்றங்களின் வழியாக ஊடுருவியிருப்பதை அறிபவனே, மெய்ப்பொருளின் உண்மையை அறிந்தவன் ஆவான்' என்பதே இந்தியத் தத்துவ ஞானம்" என்று விளக்கம் தந்தார்.

இந்த விளக்கத்துக்கு எடுத்துக் காட்டாக இருப்பது வைணவ சமயக் கொள்கைகள்.[1]

---

1 அணுவையும் பிளந்து அதனுட் பேரண்டமே இயங்கு கின்றது என்று சான்று காட்டியவர் ஐன்ஸ்டைன், அந்த விஞ்ஞானியைக் காணப் பேரறிஞர் ஒருவர் சென்றார். ஐன்ஸ்டைன் வீட்டு முன் அறையில் திருமால் சிலை ஒன்று இருப்பதைக் கண்டு "இது ஆசிய மக்கள் வணங்கும் உருவம் அல்லவா? இதைப் பெரிய அறிவியல் அறிஞராகிய தாங்கள் வைத்திருக்கலாமா?" என்று கேட்டார்.

வைணவம் என்ற சொல் விஷ்ணு என்பதிலிருந்து தோன்றியது. விஷ்ணு என்பது எங்கும் பரவிய பொருள் என்ற கருத்தினை உட்கொண்டது.

> "கரந்தசில் விடந்தொறும் இடம் திகழ் பொருள்தொறும்
> கரந்து எங்கும் பரந்துளன்"

என்ற ஆழ்வார் கருத்தே ஜகதீஷ் சந்திரர் விளக்கிய கருத்தாக இருப்பது வியப்பன்றோ?

அருவ வழிபாடும் வைணவம் ஏற்றுக் கொள்கின்றது. அருவம் என்பது அவ்யக்தம் என்றும் நிர்க்குணம் என்றும் பெயர் பெறும். உருவம், சகுணம் எனப்படும். இவ்விரண்டில் எது சிறந்தது என்று அர்ச்சுனன் வினா எழுப்புகின்றான்.

"அவ்யக்தமாகிய அருவ வழிபாட்டில் மனம் ஈடுபடுவோர்க்குத் தொல்லை அதிகம். சகுண வழிபாடே எளிமையானது" என்பது கண்ணன் அளித்த விடை.

"அருவ வழிபாட்டினன், மனத்தினால் உலக நன்மையை நினைக்கின்றான். உருவ வழிபாட்டினன், இறைவன் தந்த

---

அதற்கு அவர் "நாம் எதைப் பற்றி ஆய்வதற்கு முதலடி எடுத்து வைத்திருக்கின்றோமோ அதனை அவர்கள் முன்னமே முழுமையாக அறிந்து வைத்துள்ளனர் என்பதற்குச் சான்று தான் இவ்வுருவம். 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பது இக்கருத்தை விளக்கும் சுலோகம்" என்று விளக்கியதாக அவர் வரலாற்றில் காண்கின்றோம்.

ஒரு வைணவன் தனக்கும் மற்ற வைணவர்களுக்கும் மட்டும் "நலம் உண்டாகட்டும்!" என்று எண்ணமாட்டான். "சர்வ ஜனோ சுகினோ பவந்து" என்பதே அவன் பிரார்த்தனை,

'வசுதைவ குடும்பகம்' (உலக முழுவதும் வாசுதேவன் குடும்பம்) என்று கருதுவான். இந்தக் கருத்துத் தொடரைக் கேட்ட மேனாட்டு அறிஞர் ஒருவர். "இது எவ்வளவு உயர்வான விரிவான எண்ணம்" என்று வியந்தாராம்.

புலன்களால் இறைபணி செய்கின்றான்'' என்பர் வினோபா அடிகள்.

வைணவம் உருவ வழிபாட்டையே உயர்வாக மதிக்கின்றது. ஆழ்வார்களும் ஆசாரியரும் அதிலேயே மண்டினர்.

எழுத்துக்கு இரு வகை வடிவுண்டு. 1. ஒலி வடிவம். 2. வரி வடிவம், ஒலி வடிவந்தான் எழுத்தின் உண்மை வடிவம். ஆயினும் அந்த ஒலி வடிவை மட்டும் அறிந்து கொள்வது கடினம். வரி வடிவம் கற்பது எளிது. அதைக் கற்றுக் கொண்டால், ஒலி வடிவமான மொழியை எளிதில் கற்கலாம். அதைப்போல், எளிதான உருவவழிபாட்டில் ஈடு பட்டவர்க்கு அருவ நிலையை அறிவது எளிதாக அமையும்.

கடவுளுக்கு உருவமே இல்லை என்றும் உருவம் கற்பித்து வழிபடுவது அறியாமை என்றும் கருதும் சமய வெறியர் ஒருவர், ஒரு சான்றோரைக் கண்டார்.

''கடவுளுக்கு உருவம் உண்டா?'' என்பதே அவர் சான்றோரிடம் எழுப்பிய முதல் வினா.

''யார் உருவம் உண்டு என்று சொன்னது?'' என்ற விடை உடனே கிடைத்தது.

''இந்தச் சான்றோர், கடவுளுக்கு உருவம் இல்லை என்பதனை ஒப்புக் கொள்கின்றார்'' என்று அச்சமய வெறியர் கற்பனை செய்து கொண்டார்.

''சரி! கடவுளுக்கு உருவம் இல்லை என்றபோது, விக்கிரக வழிபாடு தவறுதானே!'' இது அவர் எழுப்பிய மறுவினா.

''கடவுளை நாம் கண்டதில்லை. காணவும் இயலாது. கண்டவரும் விண்டிலர் விண்டவர் கண்டிலர், நம்மைப்

பற்றி ஆராய்வோம். உங்களைப் பொறுத்தவரை உண்மை என்ன? உங்களுக்கு வடிவம் உண்டா! இல்லையா?''
—சான்றோரின் வினா.

''எனக்கு உருவம் இல்லையா! இதோ! நான் இருக்கிறேனே! எனக்கு உருவம் உண்டு என்பதற்கு, இது சான்று ஆகாதா?

—சமய வெறியர்

''ஆம்! நீங்கள், மீசை தாடியுடனும் மழித்த தலையுடனும் ஐந்தடி உயரத்துடனும் உள்ள மனிதர்! அப்படித் தானே!''
—சான்றோர்

''சந்தேகமே இல்லை'' —சமய வெறியர்

''அப்படியானால்'' இந்த உடல்தான் நீங்கள், ஆனால் இறந்தவுடன் இந்த உடலைப் புதைக்கின்றார்களே! ஏன்? இந்த உடம்பு தான் நீங்கள் என்றால், புதைப்பதை இந்த உடம்பு ஏற்காமல் எதிர்ப்புக் காட்டலாமே!''

—சான்றோரின் அமைதியான உரை

இந்த வினாவினால், அவர் அதிர்ச்சியுற்றார். ''இல்லை; இல்லை. இந்த உடம்புக்குள் இருக்கும் உயிர்தான் நான்''
—என்பது அவரின் விடை

''அப்படியானால், தொடக்கத்தில் கூறியது போல், உண்மையில் நீங்கள் இந்த உடல் அல்ல; பெயரும் வடிவமும் இல்லாத உயிர் என்பதை ஏற்கின்றீர்கள் அல்லவா? ஆனாலும் உங்களை அறியாமலே இந்த உடலோடு உங்களை இணைத்துக் கொண்டு பேசுகின்றீர்கள். நீங்களே உருவமுடையவராக இருக்கையில், அவ்வாறு இருக்கும் வரை, நம்மையெல்லாம் படைத்து அகமும் புறமும் இருக்கும் கடவுளை ஏன் விக்கிரக மூலம் வணங்கக் கூடாது?''

இந்த வினாவுக்கு விடையிறுக்க இயலாத அவர் வாயடைத்து விடைபெற்றார். ஆம். தாம் முதலில் கேட்ட வினாவுக்கு இப்போது விடை பெற்றார்.

இன்னொரு செய்தியும் இங்குக் குறிப்பிடுவது நலம் பயக்கும்.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் ஆழ்வார் சமஸ்தானத்து அதிபருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அந்த அதிபர் உருவ வழிபாட்டை வெறுப்பவர். ''கல்லிலும் செம்பிலும் இறைவன் இருப்பானா?'' என்று ஏளனம் செய்தார்.

சுவாமிகள் அங்குச் சுவரில் மாட்டியிருந்த அந்த அதிபரின் உருவப்படத்தை எடுக்கச் செய்தார்; அந்தப் படத்தில் காறி உமிழ்ந்தார். இச் செயலைக் கண்ட அதிபர் சினம் கொண்டார்.

''நீர் ஒரு துறவியாகையால் பொறுத்தேன். வேறு யாராவது இவ்வாறு செய்திருந்தால், மரண தண்டனை விதித்திருப்பேன்'' என்றார்.

''மரண தண்டனை விதிக்கும் அளவுக்கு நான் என்ன தவறு செய்தேன். ஒரு காகிதத்தில் எச்சில் துப்பினேன். அவ்வளவு தானே! இது, ஒரு பெரிய குற்றமா?'' என்றார்.

''அது வெற்றுக் காகிதமா? என் உருவப்படம் அல்லவா? உமது செயல் என்னை அவமதித்தது அல்லவா?'' என்றார்

''ஐயன்மீர்! கல்லிலும் செம்பிலுமா இறைவன் உள்ளான்? என்று கல்லையும் செம்பையும் அவமதித்தீரே! அது, உமது பகுத்தறிவுச் செயல் என்றுதானே எண்ணினீர்?

''இந்தக் காகிதம் மட்டும் நீர் எப்படி ஆனீர்! இதை அவமதிப்பது உம்மை அவமதித்தது எப்படி ஆகும்?'' என்றார் சுவாமிகள்.

அதிபர் வாயடைத்துப் போனார். தம் தவறு உணர்ந்து திருந்தி, அன்று முதல் உருவ வழிபாட்டை ஏளனம் செய்யாமைமட்டோ? ஏற்றுக் கொள்ளவும் செய்தார் என்பதே அந்தச் செய்தி.

உயிர்ப் பொருள், உயிர்இல் பொருள்[1] ஆகிய அனைத்தும் இறைவனுக்கு உடல் என்றும் உலகுக்குச் செய்யும் தொண்டு இறைவன் தொண்டு என்றும் நம்பும் வைணவம், மிகமிகத் தொன்மையானது.

தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் "மாயோன்" என்று குறிப்பிடுகின்றது. திருக்குறள் அடியளந் தான் என்கின்றது.

பழமையானது மட்டுமன்று. உலகமெங்கும் மிகப் பழங்காலத்தில் பரவியிருந்த சமயமும் வைணவமே எனலாம். அது உருவ வழிபாட்டில் ஊற்றம் உடையது.

சீனாவில் பழங்கால அரசர் சிலர் நாராயணா என்று பெயர் வைத்துக் கொண்டுள்ளனர்.

ஜப்பானில் கையில் புல்லாங்குழலுடன் உள்ள கண்ணன் சிலைகள் உள்ளன. அவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னையவை என்கின்றனர்.

உலகின் முதல் இலக்கியம் இருக்குவேதமே என்பதைப் பன்னாட்டு அறிஞரும் ஒப்புகின்றனர்; உறுதி செய்கின்றனர். இதுகாறும் இருக்குவேதம் தோன்றிய காலம் கி, மு. 4500 என்று சிலரும் கி. மு. 1500 என்று சிலரும் கூறிவந்தனர்.

அண்மையில் துருக்கியில் அகழ்வாய்வு, நெவாலி கோரி என்னும் இடத்தில் நடந்தது. ஜெர்மன் பல்கலைக் கழகப்

1 பிரகாசம், அப்பிரகாசம் என்றும் பசு, பாசம் என்றும் கூறுவது சைவம்,

பேராசிரியர் ஹாப்த்மன் என்பார், அங்கு ஆய்வு செய்தார். பழங்கால நாகரிகச் சமுதாயம் ஒன்றின் அடையாளங்கள் அங்குள்ளதைக் கண்டார். அச்சமுதாயம் கி. மு. 7000க்கும் முற்பட்டது என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன என்கின்றார்.

அந்த அகழ்வுகளின் போது, சிதைந்த நிலையில் ஓர் ஆலயம் இருந்தது. உலகில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மிகப் பழமையான ஆலயம் இதுதான் என்று சித்தார்த் என்ற அறிஞர் உறுதிப் படுத்தியுள்ளார். அந்த ஆலயம் திருமால் ஆலயமாக இருப்பதற்குச் சாத்தியமுண்டு என்பதும் சிலர் கருத்து.

அந்த அகழ்வில் சுண்ணாம்புக்கல்லில் செய்த மனிதத் தலையுருவம் ஒன்று கிடைத்துள்ளது. முன்தலை மழுங்கச் சவரம் செய்யப்பட்டுப் பின் தலையில் குடுமி உள்ளதாக அத்தலை காணப்படுகின்றது. ஆதலால் அது, வேதம் ஓதும் அந்தணரின் உருவம் என்பதில் ஐயம் இல்லை என்பது சித்தார்த் அவர்களின் கருத்து.

அந்த அகழ்வாய்வுகளின்படி, இருக்கு வேத காலம் கி. மு. 7300 என்று உறுதியாகின்றது. இதற்குப் பல தடயங்கள், நெவாலி கோரியில் கிடைத்துள்ளன என்கின்றார் அவர்.

அங்கு இன்னும் ஆழமாக அகழ்வு மேற்கொண்டால் மேலும் பழமையான சான்றுகள் கிடைக்கலாம், நாகரிக வளர்ச்சி பெற்ற சமுதாயமும் அதைச சூழ்ந்து பழங்குடி சமூகங்களும் வாழ்ந்ததாகத் தோன்றுகின்றது என்பது பேராசியர் ஹாப்த்மன் கருத்து.

இருக்கு வேதம் குறிக்கும் சமுதாயத்துக்குச் சான்றுகள் பல இங்குள்ளன என்கிறார் சித்தார்த்.

"துருக்கி அனடோலியா பகுதியில் கி. மு. 7000க்கு முன்னரே விவசாயச் சார்புள்ள இந்திய—ஐரோப்பிய மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை ஏற்க இயலும். பனியுகம் முடிவதற்கு முன்னமே அங்கு வேளாண்மை நடைபெற்றிருக்கலாம் என்று பிரிட்டன் தொல்லியலாளர் டாக்டர் காலின் ரென்ல்ப்ரூ என்பார் கூறியுள்ளார்" என்று த்தார்த் சிஅறிவிக்கின்றார்

இதன்படி கி. மு. 7300க்கு முற்பட்ட இருக்கு வேதத்திலே விஷ்ணு என்ற பெயர் பலமுறை வந்துள்ளமையாலும் உலகமளந்த செய்தி உள்ளமையாலும் வைணவத்தின தொன்மையும் முன்மையும் நன்கு உணரலாம்.

இது தவிர, கம்போடியா (காம்போஜ) நாட்டில் உலகிலேயே மிகப் பெரிய வைணவ ஆலயம் அங்கோர்வாட் என்ற இடத்தில் உள்ளது.

தாய்லாந்தில் ஆண்டாள் அருளிய திருப்பாவை மந்திரமாக இன்று வழக்கில் உள்ளது. பல ஊர்கள் இராமாயணத் தொடர்புடையனவாக உள்ளன. அவர்கள் வெளியிடும் பரிசுச் சீட்டில் இராமாயணக் கதை வண்ண ஓவியங்களாக வரிசையாக வெளியிடப்படுகின்றன.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த பாலித் தீவில் வாழ்பவர் அனைவரும் வைணவ சமயத்தினரே ஆவர்.

இந்தோனேசியாவில் பெரும்பான்மையினர் இசுலாமியர் ஆயினும் சுகர்ணோ (சுகர்ணன்), இரத்தினா தேவி போன்ற வைணவப் பெயர்களை வைத்துக் கொள்கின்றனர்.

இந்தோனேசிய விமான சர்விசுக்குக் 'கருடா ஏர் லைன்ஸ், என்றே பெயர் சூட்டியுள்ளனர்.

இந்தியாவுக்கு வருவது இந்தோனேசிய முகமதியர்க்குத் தீர்த்த யாத்திரை. இந்தத் தீர்த்த யாத்திரை மேற்

கொள்பவரிடம், அவர் உறவினர்கள், "திரும்புகையில் கங்கைக் தீர்த்தம் கொண்டு வாருங்கள்" என்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

இந்தோனேசியப் படைவீடுகளில் ஆசார்யர் துரோணர் சிலை உள்ளது. வீரர்கள் அதன் முன் நின்று "நான் அர்ச்சுனனைப் போல் வீரனாக வேண்டும்" என்று உறுதி மொழி எடுத்துக் கொள்கின்றனராம்.

சைனாவில் சுவான் சௌ என்ற ஊரில், கஜேந்திர மோட்சம், உரலில் கட்டுண்ட கண்ணன் சிற்பங்கள் உள்ளன. அவை பற்பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை என்று தொல்லியல் அறிஞர் கருதுகின்றனர்.

இத்தகைய பழமையும் செழுமையும் முழுமையும் பெற்ற வைணவம் பற்பல அடிப்படை நூல்களையும் கொள்கை களையும் கொண்டுள்ளது.

அவற்றுள் திருவாய்மொழி மிகமிகச் சிறப்பும் தெளிவும் வாய்ந்தது. அந்நூலின் அடிப்படையிலேயே தத்துவங்களை விரிவுபடுத்தி, விசிஷ்டாத்துவைதம் என்ற பெயர் சூட்டினார் உடையவர்.

உடையவராகிய எம்பெருமானார் திருத்தம் செய்து நிறுவியமையால் வைணவம் "எம்பெருமானார் தரிசனம்" என்ற பெயருடன் விளங்குகின்றது.

வைணவன் ஒருவன், இன்றியமையாமல் அறிய வேண்டுவன மந்திரத் திரயம் என்னும் மூன்று மந்திரங்கள் ஆகும்.

இந்த மூன்று மந்திரங்களின் விளக்கத்தில் வைணவத் தத்துவம் அனைத்தும் ஆலமர் வித்தின் அருங்குறள் போல அடங்கியுள்ளது.

இம்மந்திரங்களின் விளக்கத்தில், உயிரின் உய்திக்கு இன்றியமையாது அறிய வேண்டியன அஞ்சு அர்த்தம் என்பர். அது அர்த்த பஞ்சகம் எனப் பெயர் பெறும்.

இத்த ஐம்பொருளையும் அறிவதற்கு முன்பு வைணவன் ஒருவன் தன்னைப் பிறந்தவனாக எண்ணான். 'அன்று நான் பிறந்திலேன்' என்றே எண்ணுவான். இப்பொருள் அறிந்த பின்பு, 'பிறந்த பின் மறந்திலேன்' என்கிற படியே இதை நினைத்து ஆய்வதையே பொழுது போக்காகக் கொள்வான்.

அந்த ஐம்பொருள் யாவை என்பதனைத் திருவாய் மொழித் தனியன் ஒன்று விளக்குகின்றது.

''மிக்க இறைநிலையும் மேலாம் உயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்
யாழின் இசை வேதத்து இயல்''

என்பதே அந்தத் தனியன்.

1. இறைநிலை, 2. உயிர்நிலை, 3. நெறி, 4. தடை, 5. வாழ்வு என்பனவே அவை.

''அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க
சம்பந்தம் காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவம் ஒன்று வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டு
மவன் அன்றோ ஆசாரி யன்''

என்ற பாசுரமும் இந்த ஐம்பொருளையே உணர்த்த எழுந்தது.

1, அரங்கன் (இறைநிலை), 2. ஆவி (உயிர் நிலை), 3. தடை, 4. திவம் (வாழ்வு), 5. நெறி என்பன இங்கும் காட்டப்பட்டுள்ளமை அறியலாம்.

ஒருவன் பல்கலை அறிஞன். ஒருகால் ஒரு படகில் பயணம் செய்தான். வழியில் படகுக் காரனிடம் உரையாடத் தொடங்கினான்.

"உனக்குக் கீதை தெரியுமா?"—அறிஞன்

"தெரியாது." —படகுக்காரன்

"அப்படியானால் உன் வாழ்வில் பாதி வீணானது"
—அறிஞன்

"உனக்கு உபநிடதம் தெரியுமா?"—அறிஞன்

"தெரியாது" —படகுக்காரன்

"அப்படியானால் உன் வாழ்வில் இன்னும் கால் பங்கு வீணாகி விட்டது."

படகுக்காரன் ஆற்றைக் கடப்பதிலேயே கவனமாக இருந்தமையால், அறிஞன் பேச்சு எரிச்சலையூட்டியது.

பட்டுக்காரன், அறிஞனிடம் ஒரு கேள்வி கேட்டான்.

"ஐயா! உமக்கு நீந்தத் தெரியுமா?" என்பதே அவன் எழுப்பிய வினா.

"தெரியாது" என்றான் அறிஞன்.

"அப்படியானால், உமது வாழ்க்கை முழுவதும் வீணாகி விட்டது. ஏனெனில் படகு ஓட்டையாகி, அதன்வழி நீர் புகத் தொடங்கிவிட்டது. சற்றுப் போதில் படகு முழுகிவிடும். இத்தனை கலை கற்ற நீவிர் நீந்தக் கல்லாமையால், உம் வாழ்க்கை முழுவதும் வீணாகி விட்டதே!" என்று கூறிவிட்டுப் படகுக்காரன் ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கிவிட்டான்.

கலைஞன் என்ன ஆயிருப்பான் என்று சொல்லவா வேண்டும்!

அந்தக் கலைஞனைப்போல் வேதம், உபரிஷதம் முதலிய அனைத்துக் கலைகள் கற்றாலும ஒருவன் ஈடேற இயலாது. அந்தக் கலைகளுக்கெல்லாம் உயிர் போன்ற ஐம்பொருள் அறிவு பெற்றவனே பிறவிக் கடல் நீந்துவான். நீந்தத் தெரி

யாமல், பல கலை கற்றிருந்தும் அந்த அறிஞனுக்கு அக்கலைகளால் ஏதும் பயன் இல்லாமல் போனதன்றோ? அதைப் போல் இன்றியமையாமல் அறிய வேண்டிய ஐம்பொருள் அறிவு இல்லாமல் எவ்வளவு கற்றாலும் அக்கரை சேர யாராலும் இயலாது என்பது உறுதி என்பது வைணவர் கொள்கை.

ஆழ்வார் திருவாய் மொழி துவய மந்திரத்தின் விளக்கம் என்பர். அதனால்தான் அதற்குச் 'சரணாகதி' எனப் பெயர் வந்தது என்றும் கூறுவர்.

வேறு ஒரு வகையில் நோக்கினால், துவய மந்திரத்தின் விளக்கம் மட்டும் அல்ல. உயிர் அவசியம் அறிய வேண்டிய 'அஞ்சு அர்த்'தத்தை விளக்கமாகச் சொல்ல எழுந்ததே திருவாய் மொழி என்பது தேறும்.

உயர்வற, திண்ணன், அணைவது, ஒன்றும் தேவும் எனத் தொடங்கும் நான்கு - திருவாய் மொழிகளும்[1] இறைநிலையையும்,

பயிலும் சுடரொளி, ஏறாளும் இறையோனும், கண்கள் சிவந்து, கருமாணிக்கம் எனத் தொடங்கும் நான்கு திருவாய் மொழிகளும் உயிர் நிலையையும்,

நோற்ற நோன்பிலேன், ஆரா அமுதே, மானேய் நோக்கு, பிறந்தவாறு எனத் தொடங்கும் நான்கு திருவாய் மொழி களும் வழியையும்,

எம்மாவீடு, ஒழிவில் காலம், நெடுமாற்கடிமை, வேய்மரு தோளிணை எனத் தொடங்கும் நான்கு திருவாய் மொழி களும் வாழ்வாகிய பயனையும்

1. திருவாய்மொழி என்பது நூலின் பெயரைக் குறிப்பதோடு ஒவ்வொரு பதிகத்தையும் குறிக்கும். 'பத்து' என்பது பத்துப் பதிகங்களை (நூறு பாடல் களை)க் குறிக்கும்.

வீடுமின் முற்றவும் சொன்னால் விரோதம், ஒரு நாயக மாய், கொண்ட பெண்டிர் எனத் தொடங்கும் நான்கு திருவாய் மொழிகளும் தடையையும் விளக்குவன.

மற்றைய எண்பது திருவாய் மொழிகளும் இந்த ஐம்பொருள்களையே பொதுவாக விளக்குகின்றன என்பது ஆன்றோர் கருத்து.

வைணவத்துக்கு உயிர்நாடியான திருமந்திரத்திலிருந்தும் திருவாய் மொழியிலிருந்தும் இந்த ஐம்பொருள்களுக்கும் வேறு ஆக இன்னொன்றும் அறிந்து கொள்ளல் வேண்டும். அப்போதுதான் நம் அறிவின் பயனும் பிறவிப் பயனும் முழுமை பெறும்என்பர்.

''மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன். உற்றதும் உன்னடியார்க்கு அடிமை.
மற்றெலாம் பேசிலும் நின்திரு எட்டெழுத்தும்
கற்று நான் கண்ண புரத்துஉறை அம்மானே''

என்பது திருமங்கை மன்னன் பாசுரம்.

கண்ணபுரத்து அம்மானே! நின்திரு எட்டெழுத்தாகிய திருமந்திரம் ஐம்பொருள் முதலிய வேறு பலவற்றைக் கற்பித் தாலும் நான் கற்றுக் கொண்டது வேறு ஒன்று. அதுதான் சாலச் சிறந்தது. அது என்னவெனில், உன்னைத் தவிர வேறு தெய்வம் உண்டு என்று இருப்பாரோடு சேராமையும் உன் அடியார்கது அடிமை செய்கையும் ஆகும்'' என்பது இப்பாசுரத்தின் பொருள்.

'ஒருவனைப் பற்றி ஓர் அகத்து இரு' என்றார் ஔவையார்.

''முழுமுதற் கடவுள் ஒருவனையே தஞ்சமாகப் பற்றி, வேறு நினைவின்றி அவனையே நினைத்துக் கொண்டு இரு'' என்பது அத்தொடரின் பொருள். இந்தக் கருத்தையே

"ஒன்று என்று இரு. தெய்வம் உண்டு என்று இரு" என்று பிறரும் சொல்லுவர்.

இறைவனுக்குச் செய்யும் கைங்கரியத்தைக் காட்டிலும் இறைவன் அடியார்க்கு அடிமையாயிருப்பதே உயிருக்கு உண்மையான தகுதியாகும்:

படமாடும் கோவில் பரமர்க்கு ஒன்று ஈயின்
நடமாடும் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடும் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடும் கோவில் பரமர்க்கு அங்கு ஆமே

என்றார் திருமூலர். படமாடும் கோவில் பரமனைக் காட்டிலும் அவனுக்கு நடமாடும் கோவிலாக விளங்கும் அடியார் தொண்டே சிறந்தது என்பது இதன் திரண்ட பொருள்.

இனித் திருவாய்மொழி இந்த ஐம்பொருளையும் எவ்வாறு உணர்த்துகின்றது என்று காண்போம்:

பதச்சோறு ஆகத் திருவாய்மொழியின் முதற்பாசுரத்தை மட்டும் எடுத்து ஆய்வது போதுமானது.

"உயர்வற உயர் நலம் உடையவன் எவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்
துயர்அறு சுடர்அடி தொழுதுஎழு என் மனனே"

என்பது முதற் பாசுரம்.

1. உயர்வற உயர்நலம் உடையவன்; அயர்வறும் அமரர் கள் அதிபதி என்ற பகுதிகள் இறை நிலையையும்

2. என் மனனே என்பது உயிர் நிலையையும்

3. அருளினன் என்பது அவனே நெறியாவதையும்

4. மயர்வு என்பது தடையையும்
5. தொழுதுஎழு என்பது வாழ்வையும்
சொல்லுகிறது இப்பாசுரம் என்பர்.

இந்த ஒரு பாசுரத்தின் விளக்கமே திருவாய் மொழியின் முழுச்சாரம் என்று கோனேரி தாசியை என்னும் வைணவப் பெண் அடியார் 'திருவாய் மொழித் திருவாசகமாலை'' என்ற தம் வியாக்கியானத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். பிற ஆசாரியர்களின் கருத்தும் அதுவே.

ஓம் நமோ நாராயணாய என்ற எட்டெழுத்துத் திருமந்திரமும் ஐம்பொருளையே விளக்குகின்றது என்பர் சான்றோர்.

திருமந்திரத்தின் முதற்பதம் ஓங்காரம். அது சேதனனின் இயல்பையும் நாராயணபதம் இறைவன் இயல்பையும் ஆய என்ற நான்காம் வேற்றுமை உருபு கைங்கரியமாகிய பலனையும்

நம: என்ற பதத்தில் உள்ள ம: என்னும் பதம் அகங்கார மமகாரமாகிய தடைகளையும்

நம: என்ற பதம் ''என்னைக் காத்துக் கொள்ள என்னால் ஆகாது. எம்பெருமானே காப்பவன்'' என்று உணர்த்துவதால் நெறியையும் திருமந்திரம் விளக்குகின்றது என்பார்.

இராமாயணத்தின் சாரமும் ஐம்பொருளே என்று ஆன்றோர் விளக்கியுள்ளனர். இராமன் வரலாறு இறைநிலையையும் மற்றைத் தம்பியர் ஒழுகலாறு உயிர் நிலையையும் சரணாகதி சாத்திரம் எனப்படுவதால் நெறியையும் பரதன் கவித்துக் கொண்ட மணிமகுடம் (திருப்பாதுகை) வீடணன் சூடிக் கொண்டமையால் கைங்கரியமாகிய பலனையும் இராவணன் செயலினால் தடையையும் இராமாயணம் விளக்குவதைக் காணலாம்.

திருவாய்மொழியும் திருமந்திரமும் இராமகாதையும் ஐம்பொருள்களையே விளக்கினாலும் அதனைச் செவ்வையாக அறிந்து கொள்ள ஆசாரியன் ஒருவன் வேண்டும். கூர்த்த மதி வேண்டும். ஒத்த கருத்துடைய அடியார் குழாங்களின் உறவு வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் திருவருளே உபாயமாகக் கோடல் வேண்டும்.

இக்காலத்துத் தக்க ஆசாரியன் கிடைப்பது அரிது. கிடைப்பினும், அடிக்கீழ் அமர்ந்து அறிவுரை கேட்க அவகாசம் கிடைப்பது அரிது. அவகாசம் கிடைப்பினும் பெரும்பாலான ஆசாரியர்கள் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையையே கையாளுவர். ஏனெனில் வைணவத் தத்துவ விளக்க நூல்கள் அனைத்தும் மணிப்பிரவாள நடையிலேயே உள்ளன.

ஆசாரியனிடம் பெறும் மணிப்பிரவாள நடை உபதேசமே புரிந்து கொள்ள இயலாதபோது, தாமே படித்துப் புரிந்து கொள்வது எளிதாகுமா?

வைணவத் தத்துவங்கள் அருட்செல்வக் களஞ்சியங்கள். அவற்றை நம் முன்னோர் பலவகை ஆன்மிகக் கருத்துக்களால் நிரப்பி வைத்துள்ளனர். மணிப் பிரவாளப் பூட்டு, அதை நாம் எடுத்துத் துய்க்கத் தடையாக உள்ளது. தடைக்கு அஞ்சி, அழியாத அளவற்ற செல்வத்தை இழக்கலாமா?

மணிப் பிரவாள நடையில் அமைந்த பல நூல்களையும் கற்று, அவற்றைத் தமிழ்நடையாக்கி எல்லோருக்கும் எளிமையாக்கித் தரல் வேண்டும் என்பது என் நெடுநாளைய அவா. ஆனால் அதற்கேற்ற காலம் கனியவில்லை.

அண்மையில் பழனி இறைபணி மன்றச் செயலர் செல்வராசு அவர்கள் நட்பை இறையருளால் பெற்றேன்.

அவர் இறைபணிக்கே தம்மை ஆட்படுத்திக் கொண்டவர், ஓய்வோ சோர்வோ இன்றி இறைபணியோடு அடியார் பணியும் செய்து வருபவர்.

வைணவத்தில் அடங்காத ஈடுபாடு உடையவர். அவர் அடியேனிடம், ''அர்த்தபஞ்சகம் விளக்கியருளல் வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதனை விண்ணப்ப மாகக் கருதாமல் இறைவன் ஆணையாக ஏற்றேன். அவர் ஒருவருக்கு மட்டும் விளக்குவதைவிடப் பலரும் பயன் பெறும்படி, எளிய தமிழ்நடையில் ஒரு நூலே எழுதி விடலாமே என்று முயன்றேன். அந்த முயற்சிதான் பயனாகத் தங்கள் கரங்களில் தவழ்கின்றது.

ஒன்றுக்கும் பற்றாத அடியேன் எங்கே? ஆழ்ந்த தத்துவ மான அர்த்தபஞ்சகம் எங்கே? ஆதலால் நிறைகள் குறை வாகவும் குறைகள் நிறைவாகவும் இருக்கும். வடமொழிச் சொற்களுக்கு அடியேன் கையாண்ட தமிழ்ச்சொற்கள் இலக்கணப்படி சரியாயிருப்பினும், மணிப்பிரவாளத்தில் பழகிப் போனவர்க்கு, இனிமை பயவாமல் இருக்கலாம்.

ஆயினும் செய்திதான் முக்கியம். தமிழ் மட்டும் அறிந்தவர் இதனை எளிதில் படித்துணரலாம் என்பது என் கருத்து.

இந்நூல் உருவாகக் காரணமாயிருந்த திரு செல்வராசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இறைவன் அவர் மூலம் அடியேனைக் கருவியாகக் கொண்டு இந்நூலை உருவாக்கிக் கொண்டான். அதன் பயனைப் பற்றி எண்ணிப் பார்க்க அடியேனுக்கு ஏது தகுதி.

அடியேனுடைய பல நூல்கள் வெளிவரப் பொருளுதவி செய்து வரும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார்

இந்நூலுக்கும் உதவியுள்ளனர். அவர்களுக்கு அடியேன் நன்றி உரியது,

மகாகவி பாரதியார் உள்ளதெல்லாம் ஓர் உயிர். உலகம் மாயை என்ற கொள்கையினராயிருந்தனர். இறுதிக் காலத்தில் திருவாய்மொழியில் ஈடுபட்டு வைணவக் கொள்கை களையும் பாடல்களாக்கத் தொடங்கினார். அத்தகைய பாடல்கள் இரண்டனை இறுதியில் இணைப்பாகச் சேர்த் துள்ளேன்.

பண்டைக்குலம் தவிர்ந்து தொண்டைக்குலமாக உயர்ந்தவர் முருகேச ராமாநுச ஏகாங்கி சுவாமிகள். அவர் பாடல் ஒன்று நாடோடிப் பாடல் இசையில் ஐம்பொருளுடன் வைணவச் செம்பொருளையும் ஒருங்கே விளக்குகின்றது. அதனையும் பின் இணைப்பில் சேர்த்துள்ளேன்.

கோவிலூர் P.O.
திண்டுக்கல் வழி
624 706

**அரங்க. சீனிவாசன்**

## இந்நூல் உருவாகத் துணையாகிய நூல்கள்

திருவாய்மொழி
பெரிய திருமொழி
பெரிய திருவந்தாதி
முதல் திருவந்தாதிகள்
திருச்சந்த விருத்தம்
பெரியாழ்வார் திருமொழி
திருப்பாவை
அமலனாதிப் பிரான்
கண்ணி நுண் சிறுத்தாம்பு
சப்த காதை
திருமந்திரம்
கொன்றை வேய்ந்தான்
பட்டினத்தார் பாடல்
திருக்குறள்
நாலடியார்
ரமணர் வரலாறு
ஜகதீஷ் சந்திரர் வரலாறு
நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்
சிலப்பதிகாரம்
சீவக சிந்தாமணி
பரிபாடல்
ஐன்ஸ்டீன் வரலாறு
அகழ்வாய்வுகள்
விவேகானந்தர் வரலாறு
முமுட்சுப்படி
ஸ்ரீவசன பூஷணம்
ஆசார்ய இருதயம்
அஷ்டாதசரகசியம்
ஆறாயிரப்படி குருபரம்பரை
திருவாய்மொழித் திருவாசக மாலை
நம்பிள்ளை ஈடு
பகவற் கீதை
கீதைப் பேருரை
வார்த்தா மாலா
வைணவத் தத்துவஞான அடிப்படைகள்
அருள்விளக்கு அரிவையர்
திருவாய்மொழியும் பிரம சூத்திரமும்
—கோ. கிருபாநிதிப் பிள்ளை
ஓ' நீல் என்ற ஆங்கிலக் கவிஞர் கவிதை
Artha Panchaha (இந்தி)
சிவஞான போதம்
தாயுமானவர் பாடல்
அர்த்த பஞ்சகசாரசங்கிரகம்
விவேகானந்தரின் இராஜ யோகம்
ஞானாமிருதம்
ஸ்ரீ சித்தாந்தத் திரய சங்கிரகம்
பாரதி பாடல்கள்
தத்துவத் திரயம்
குருகேச ராமானுச ஏகாங்கி சுவாமிகள் பாடல்
புதுவை மு. ராதாகிருஷ்ணன் தலைமையுரை
விஜய பாரதம் (வாரஇதழ்)
நாடோடிக் கதைகள்

# வைணவ சமயத்தின் சாரம்

உயிர்களோடும் உயிர்இல் பொருள்களோடும் என்றும் பிரியாமல் அவற்றை உடலாகக் கொண்டு உயிராக இறைவன் உள்ளான். ஆதலால் வைணவம் விசிஷ்டாத்வைதம் எனப் படுகிறது. அத்வைதம் என்றால், தனக்கு ஒப்பாக இரண்டாவது பொருள் அற்றது. விசிஷ்டம் என்றால் (சித்து, அசித்துக்களுடன்) கூடியிருப்பது. ஆக விசிஷ்டாத் வைதம் என்றால் சித்து, அசித்துக்களுடன் கூடிய தனக்குவமையில்லாத இறைவனைக் கொண்ட சமயம் என்பது சுருக்கமான பொருள்.

**இச்சமயத்தின் சாரமான கொள்கைகள் :**

உலகம்—என்றுமுள்ளது; உண்மையானது.
உலகமுதல்வன்—திருமகளுடன் கூடிய நாராயணன்
அவனே பரப்பிரமம்
அவன் சேதன, அசேதனங்களை உடலாகக் கொண்டவன்
அவன் உயிர்களினின்றும் வேறுபட்டவன்
அவன் படைத்த சம்சாரம் உண்மையானது
பக்தியோகம் முதலிய வழிகளால் பரமபதம் ஆகிய
ஸ்ரீ வைகுண்டத்தில் அந்த இறையனுபவம்; அதாவது
பரப்பிரமத்தை அடைவதுதான் வீடுபேறு.

வைணவ சமயத்தைச் செழுமையும் முழுமையும் செய்தவர் இராமாநுஜர்.

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகிநஸ்து புவநம்
ஸத்யம் ததீச : ஸ்ரீய
காந்தோ ப்ரஹ்ம ஸ .ஏவ ஸோZகிலதனு .
பிந் நாஸ் தத : சேதநா : |
ஸத்யா ஸம்ஸ்ருதிரீச நிக்ரஹக்ருதா
முக்திஸ்து பக்த் யாதிநா
தத ப்ராப்தி : பரமே பதே
தத்நுபூத் யாக்யேதி ஸஞ்சக்ஷதே ||

இந்த ஸ்லோகம் மேலே காட்டிய பொருள் அனைத்தையும் கொண்டது.

# இறை

இறைவன் ஆகிய திருமால், பெரிய பிராட்டி, பூமிப் பிராட்டி, நீளாதேவி ஆகிய முத்தேவியர்க்கும் நாயகன்; அறிவும் இன்பமுமே வடிவானவன்; நற்குணம் அனைத்துக்கும் நிலையம் ஆனவன்; சரணம் என்று தன்தாள் அடைந்தார்க்கு வசப்படுபவன்; உலகம் யாவையும் உள ஆக்குபவன்; நிலை பெறுத்துபவன்; நீக்குபவன்.

இறைவனுக்கு எண்ணில்லாத ஆற்றல்கள் உண்டு. அவற்றுள் மூன்று முதன்மையானவை. அவை அருள், பொறுமை, இன்பம் என்பன. இந்த மூன்று குணங்களும் முத்தேவியர் வடிவின. அதாவது பெரிய பிராட்டியாரின் தலைமைக் குணம் அருள் பூமிப் பிராட்டியாரின் முதன்மைக் குணம் பொறுமை. நீளா தேவியின் இயல்புக்குணம் இன்பம்.

1. **பெரிய பிராட்டி :** அருளே வடிவான பெரிய பிராட்டி, மலரும் மணமும் போலவும் மணியும் ஒளியும் போலவும், கதிரவனும் கதிரும் போலவும் இறைவனுடன் ஒன்றியிருப்பதால், அவன் 'திருமால்', 'மாதவன்' என்னும் திருநாமங்களைப் பெற்றுள்ளான்.

அவள் உலகங்கட்கெல்லாம் அன்னை. ஏன் என்று கேட்பாரை இல்லாத இறைவனது தலைமையையும், சேதனனது குற்றங்களையும் நோக்கி, சேதனனை இறைவன்

தண்டித்து விடக் கூடாதே என்ற அருளால் ''அகலகில்லேன் இறையும்'' என்று அவன் அணிமார்பை விட்டு அகலாதவள்.

இறைவன், உலகங்களைப் புரக்கும் பொருட்டுத் தன் விருப்பப்படி எடுத்துக் கொள்ளும் திரு அவதாரங்களுக்குத் தகுதியாகத் தானும் திரு அவதாரம் செய்வது பெரிய பிராட்டியின் இயல்பு.

இறைவன் வழியாகும்போது, பரிந்துரைப்பவளாக இருந்து அவனுக்கும் அருளை வளர்ப்பாள்.

அவன் பலனாகும்போது, தானும் பலன் ஆவதோடு கைங்கர்யச் செல்வத்தை வளர்த்தருளுவள்.

அவன் உலகுக்குக் காரணமாகும்போது, படைப்புத் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பள்.

அவன் உலகையெல்லாம் விளையாட்டாக அனுபவிக்கும் போது, அந்த இன்பத்தை உடன் அனுபவிப்பள்.

அவனுடைய பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை யாகிய நிலைகள் அனைத்திலும் அவனைவிட்டுப் பிரியாது கூடியிருப்பள்.

ஆகையால் மீனின் வடிவம் நீரின் மயமாயிருப்பது போலே எம்பெருமான் வடிவம் பெரிய பிராட்டியாகிய திருவின் மயமாயிருக்கும் என்பர் பெரிய முதலியார் ஆன நாதமுனிகள்.[1]

சேதனனின் குற்றங்களைக் கண்டு, இறைவன் சீறிக் கைவிடாதபடி, அறிவுரையாலும் அழகாலும் திருத்திக்

1 ''மத்ஸ்யத்தினுடைய ஆகாரமெல்லாம் ஜலமாயிருக்கிறாற் போலே ஸ்ரீமானுடைய வடிவித்தனையும் ஸ்ரீமயமாயிருக்கும் என்று பெரிய முதலியார் அருளிச் செய்வர்''
—வார்த்தாமாலா 136ஆம் வார்த்தை

''குற்றங்களைப் பொறுத்தருள்க'' என்று மன்றாடி அவனிடம் இயல்பாக உள்ள கருணை, வாத்சல்யம், சௌசீல்யம் முதலிய குணங்களைச் செயல்படச் செய்யும் புருஷகார பூதை. சேதனராகிய நமக்காகப் பரிந்துரை செய்பவள்.

பரிந்துரைக்கே உரிய குணங்களைக் குறைவறக் காட்டுகின்ற 'ஸ்ரீ' என்னும் தனிப் பெயரினள். தன் கடைக்கண் பார்வையாலேயே அனைத்துச் செல்வங்களையும் அளிப்பவள். மங்கள தேவதையாகிய அவள் இறைவனுக்கு அருள் தேவி ஆவாள்.

**2. பூமிப்பிராட்டி :** செல்வம் விளையும் பூமிக்கு அதிதேவதை பூமிப் பிராட்டி. ''குற்றம் பார்ப்பான் ஏன்? பொறுப்பான் ஏன்?'' என இறைவனுக்கு அறிவுரை கூறித் திருத்தி உயிர்களைப் பாதுகாப்பவள் அவள், இந்தப் பூமிப் பிராட்டியே பொறுமைத் தேவியாவாள்.

**3. நீளாதேவி :** ''குற்றம் என்பது ஒன்று உண்டோ? பொறுப்பது என்று ஒன்று உண்டோ?'' என்று எடுத்துக் கூறி, சேதனரின் குற்றங்களைக் காணாதபடி, இறைவனுக்குத் தன் வடிவழகால் மயல் ஏற்றித் திருத்திக் காக்கும் நீளாதேவி இன்பத்தேவி ஆவாள். இவளுக்கு நப்பின்னை என்ற திருப் பெயரும் உண்டு.

இந்த முப்பெருந் தேவியரையுமுடைய இறைவன், குணங்கள் அனைத்துக்கும் இருப்பிடமாய்த் தானே ஒளிரும் ஒளிமயமான சுத்த சத்துவத் திருமேனியுடைமையால், ஞான ஆனந்த வடிவன் ஆகின்றான்.

''தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற சுடரே'' என்ற கம்பன் வாக்குப்படி அசித்து சித்து ஆகிய அனைத்துப் பொருள்களிலும் அந்தாயாமியாக இருப்பினும், அந்த அசித்து, சித்துக்களின குறைபாடுகள் ஒட்டாமல் இருப்பான் இறைவன்.

இருட்டுக்கு வெளிச்சம் போலவும் பாம்புக்குக் கருடன் போலவும் இருப்பதால், இறைவனிடம் எவ்வகைக் குற்றமும் ஒட்டுவதில்லை.

வினையால் கட்டுப்பட்டு உடல் எடுப்பதால், அறியாமை முதலிய உயிர்களின் குற்றங்களும், உலகியல் தொடர்பு துறப்பதற்குமுன் பிணைந்திருந்து, சேறுபூசிக் கழுவியது போன்று விலகிய முத்தரின் குற்றங்களும், கைங்கரியம் செய்வதால் தமக்கே இன்பம் என்றும் தமக்கும் இறைவனுக்கும் இன்பம் என்றும் எண்ணுகின்ற நித்தர்களின் குற்றங்களும் போன்றவைக்கு அப்பாலவன் எங்கள் ஆயர் கொழுந்து. இதிலிருந்து வினையால் கட்டுப்பட்ட பெத்தர், முத்தி விரும்பும் முமூட்சுக்களாகிய முத்தர். நித்திய விபூதி என்னும் பரமபதத்தில் நிரந்தரவாசம் செய்யும் நித்தர் ஆகிய மூவகைச் சேதனருமே குற்றம் உடையவர் என்பது தேறுகின்றது.

சத்துவம், மிசிர சத்துவம், சத்துவ சூனியம்[1] ஆகியவை நித்திய விபூதி.[2] லீலா விபூதி,[3] காலம் என்னும் மூவகை அசேதனங்களின் குற்றங்கள் என்பர். இவை ஒட்டாமல் அவற்றுக்கு எதிர்த்தட்டாக இருக்கும் நிலையே இறைவனின் தீதுஅவம்[4] இல்லாத நிலையாகும்.

---

1 சத்துவம், இராசசம், தாமசம் என்பன முக் குணங்கள். இவை தனித்தனியே இரா. ஒன்றோடு ஒன்று கலந்தே இருக்கும். சத்துவம் என்பது கலப்பில்லாத தனிச்சத்துவம். மிசிரசத்துவம் என்பது இராசச, தாமசங்களுடன் கலந்துள்ள சத்துவம். சத்துவ சூனியம் என்பது, சத்துவம் சிறிதும் கலவாத இராசச, தாமசங்கள்.

2 நித்திய விபூதி—பரமபதம். விபூதி—செல்வம்.

3 லீலா விபூதி—இறைவன் அவதாரம் செய்து விளையாடும் இடம்; இவ்வுலகம். லீலை – விளையாட்டு.

4 தீது அவம் இல்லாமை—அகில ஹேயகுண பிரத்தியனீகம். அதாவது அனைத்துத் தீயகுணங்களுக்கும் எதிர்த் தட்டாக இருப்பது; தீமையே கலவாமல் இருப்பது.

உயிர், உயிர்இல் பொருள்களுள் அந்தர் யாமியாக இருக்கும் இறைவனுக்கு அவற்றின் குற்றங்கள் ஒட்டாமல் இருப்பது எப்படி? என ஓர் ஐயம் எழலாம்.

உடலைத் தனக்கு உரிமையாகக் கொண்டு அதனுள் தங்குகின்றது உயிர்.

உடலுக்குப் பிறத்தல், பிறந்து இருத்தல், வளர்தல், பெருத்தல், சிறுத்தல், நசித்தல் என்னும் ஆறுவகை மாற்றங்கள் உண்டாயினும், அவை அதனுள் இருக்கும் உயிரை ஒட்டுவதில்லை.

''ஊறுபட ஒன்றின் உள்ளே பிறத்தல் பிறந்து உளவாதல்
வேறுபட வளர்தல் வளர்ந்து அயல் ஒன்றாய்
விளைந்தமைதல்
மாறுபடத் தேய்தல் அற மாய்தல் என வருகின்ற
ஆறுஇயல்பும் உடம்பு அன்றி உயிர் அடையா''

என்பது பகவற் கீதை கூறும் விளக்கம்.

அதன்படி உடலுக்குப் பிறத்தல் முதலிய விகாரங்கள் ஒட்டுவதில்லை என்பது தெளிவாகின்றது. அதைப்போல், உயிர், உயிர்இல் பொருள்களில் உள் உயிராக இருக்கும் இறைவனுக்கும் அவற்றின் குற்றங்கள் எள்ளளவும் ஒட்ட மாட்டா.

''ஆவிசேர்[1] உயிரின் உள்ளால்
ஆதும்ஓர் பற்று இல்லாத
பாவனை அதனைக்[2] கூடின்
அவனையும்[3] கூட லாமே''

என்பது ஆழ்வார் வாக்கு

---

1 ஆவி—உடல். 2 அதனை—உயிரை. 3 அவனை—இறைவனை,

உடலினுடைய பிறத்தல் முதலிய விகாரங்கள் ஒன்றிலும் தொடர்பில்லாமல் இருக்கிற பாவனையானது, அந்த உடலோடு கூடியிருக்கிற உயிருக்கு இயல்பாகுமானால், உயிருக்கு உயிராகிய இறைவனிடத்திலும் அந்த உயிரினுடைய குற்றங்கள் சாரமாட்டா என்பது சொல்லியா தெரிய வேண்டும்? என்பது மேலே கண்ட பாசுரப் பகுதியின் திரண்ட பொருள்.

உடலோடு கூடிய உயிருக்கு உடலினுடைய பிறத்தல் முதலிய விகாரங்கள் சேரா எனினும், உடல் தொடர்பு காரணமாக அறியாமையும் இன்பதுன்பமும் அந்த உயிர் அனுபவிக்கின்றதன்றோ? அதுபோல், உயிர்களை உடலாகக் கொண்டு உள் உறையும் இறைவனுக்கும் சில விகாரங்கள் உண்டாகலாமே! என இன்னோர் ஐயம் எழலாம்.

உயிரானது வினைப்பயன் காரணமாக உடலில் புகுவதால் அந்த உயிர்க்கு அறியாமையும் இன்பமும் துன்பமும் உள்ளனபோலத் தோன்றுகின்றன. ஆனால், இறைவன் உயிர்கள்பால் கொண்டுள்ள அருளால், அறம் தலை நிறுத்தும் பொருட்டுத் தன் விருப்பத்தால் உடல் எடுப்பதால், சித்து அசித்துக்களுக்கே உரிய விகாரங்கள் அவனைச் சாரா என்பது அந்த ஐயத்துக்கு ஆன்றோர் அருளிய விளக்கம்.

என்றும் உள்ளனவும் முடிவு காண ஒண்ணாதனவும் எண்ணிறந்தனவும் (இறைவனுக்கே) இயல்பாயினவும் குற்றமே] இல்லாதனவும் ஒப்பும் உயர்வும் இல்லாதனவும் ஆகிய வாத்சல்யம் (தாயன்பு), சௌசீல்யம் (சமமாகப் பழகுதல்), சௌலப்யம் (எளிமை), கருணை, பொறுமை, சௌகார்த்தம் (நட்பு), ஆர்ஜவம் (நேர்மை) முதலிய குணங்களையுடையவன் இறைவன். இக்குணங்கள் சரணம் அடைந்தவரைக் காக்கும் பொருட்டே உள்ளன.

சௌர்யம் (வீரம்), பராக்கிரமம் (வலிமை) முதலிய குணங்கள் அன்பர்களின் தடையைப் போக்குவதற்குப் பயன் படுவன.

இக்குணங்களுக்கெல்லாம் ஊற்றுக்கோலாக இருப்பன ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜசு ஆகிய ஆறு குணங்கள் ஆகும். இவற்றுக்கு,

1 ஞானம்—எல்லாவற்றையும் எக் காலத்தும் அறிவது.

2 சக்தி—அகடிதகடனா சாமர்த்தியம்; சேராதன வற்றையும் சேர்ப்பது.

3 பலம்—எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருப்பது.

4 ஐசுவரியம்—உள்ளிருந்து நியமிப்பது.

5 வீரியம்—விகாரம் இன்மை.

6 தேஜசு—பிறர் நெருங்க இயலாதது.

என்று பொருள் உரைப்பர். இந்த ஆறு குணங்கள் உடைமை யால், பகவன் எனப் பெயர் பெறுகின்றான். பகம் என்ற சொல்லிலிருந்தே பகவன் என்ற பெயர் வந்துள்ளது. பகம் என்பதற்கு, அவாவின்மை, இறைத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் என்பது அகராதி தரும் பொருள்.

இங்குக் காட்டிய குணங்கள் மட்டுமல்ல. இன்னும் எண்ணில்லாத குணங்கள் இறைவனுக்கு உண்டு.

இந்தக் கல்யாண குணங்கள் அனைத்தும் உயிர்கள் துன்புறுங்கால் ''ஐயோ!'' என்று இரங்கி அவற்றுக்கு நன்மை செய்யப் பயன்படுகின்றன.

இறைவன் தன்னை அடைந்தவர்களிடம் பிறப்பால், அறிவால் உண்டாகும் உயர்வு இழிவுகளைப் பாராது, எல்லோரையும் சரிசமமாகக் கருதிக் காப்பான்.

தமக்குத் தாமோ, பிறரோ தஞ்சமாகாத போது, இறைவன் தானே உயிர்களுக்குத் தஞ்சமாவான்.

நெடுங்காலத்துக்கு முன் கடலுள் மாய்ந்த சாந்தீபினி முனிவரின் பிள்ளையையும், பிறந்தவுடனே காணாமற்போன வைதிகன் பிள்ளைகளையும் மீட்டுத் தந்ததுபோலப் பற்பல செயற்கருஞ் செயல்களை அடியார் பொருட்டுச் செய்வான்.

துருவ பதவிபோல் முன்பு இல்லாதவற்றைப் புதுவதாகப் படைத்து, அடியார்களின் விருப்பத்தை நிறைவேற்றுவான்.

அடியார்கள் தம் உடைமைபோல், பயன்படுத்திக் கொள்ளும்படி, தன்னையும் தன் உடைமைகளையும் தருவான்.

அடியார்களுக்கு உதவும்போது, அவர்கள் அதனை விலக்காமல் இருப்பதே தனக்குச் செய்யும் உபகாரமாக எண்ணி நன்றி பாராட்டுவான்,

வணக்கம் என்றோ சரணம் என்றோ வாய் வெருவிக் கூறினும், அதையே காரணமாகக் கொண்டு, நன்மைகள் அனைத்தும் செய்வான்.

தான் செய்த நன்மைகளை ஒரு பொருட்டாக மதியாமல், அடியார்கள் செய்த வணக்கம் ஒன்றனையே எப்பொழுதும் எண்ணுவான்.

வணக்கம் என்றவனுக்கு ஏதும் செய்திலமே என்று பதறி வருந்தி, எல்லா நிலைகளிலும் இனியன் ஆவான்,

''ஒன்று உண்டு—செங்கண்மால்! யான் உரைப்பது. உன் அடியார்க்கு
என்செய்வன் என்றே இருத்திநீ—நின்புகழில்
வைகும்தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு
வைகுந்தம் என்று அருளும் வான்''

என்ற ஆழ்வாரின் அமுத மொழியின்படி, அடியார்க்கு இன்னும் என்ன செய்யலாம் என்று எண்ணி ஆய்ந்து கொண்டே இருப்பான்.

தம் மனைவியும் மக்களும் குற்றம் செய்தாலும் கண்டு கொள்ளாமல், அவர்களுக்கு நலமே செய்யும் உலகினர் போலவே, அடியார் குற்றம் செய்யினும் அதனைத் திருவுள்ளத்திலும் நினைக்கமாட்டான்.

> ''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாள்
> ஆகிலும் சிதகுரைக்கு மேல்,
> 'என் அடியார் அது செய்யார் செய்தாரேல்
> நன்றுசெய்தார்' என்பர் போலும்''

என்றபடி குற்றங்களைப் பொறுப்பித்துச் சேரவிடும் பெரிய பிராட்டியே, அடியவரின் குற்றங்களைச் சுட்டிக் காட்டினாலும் அதை ஏற்காமல், அவளை மறுத்துப்பேசி உறுதியுடன் காப்பான்.

காதலியரின் அழுக்கை உகக்கும் காமுகர் போலே, அடியாருக்கு உடல் தொடர்பால் வரும் குற்றங்களையே குணங்களாக ஏற்பான்.

உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றாலும் செவ்வைக் கேடரான—குற்றம் செய்த—அடியார் பக்கல், நீர் ஏறாத மேட்டிலே ஏதோ ஓர் உபாயத்தினால் நீர் ஏற்றுவாரைப் போலே அருளைப் பாய்ச்சுவான்.

தன்னைப் பிரிவதனால் அடியார்கள்படும் துன்பமானது குளப்படிநீர்[1] மாத்திரமே யாகும் என்னும்படி, அவர்கள் பிரிவால் தான் கடல் போன்ற பெருந் துன்பம் உறுவான்.

---

1 குளப்பு அடிநீர்—மாடு முதலிய விலங்குகளின் கால் பதிந்த குழியில் தேங்கும் மிகச் சிறிதளவான நீர்.

தாழ்வுக்கு முடிவெல்லையான அடியார்க்காக, உயர்வுக்கு எல்லை நிலமான இறைவன் கழுத்திலே ஓலை கட்டித் தூது நடப்பான்; சாரதியாய்த் தேரோட்டுவான்; இராய சூய வேள்வியில் முதன்மைப் பூசனை ஏற்ற அவன், விருந்துண் பவரின் எச்சில் இலைகளை அள்ளி அப்புறப்படுத்துவான்; இரவு முழுவதும் குதிரைகளைக் குளிப்பாட்டிக் கொள் ஊட்டி, உடலைப் பிடித்துவிடுவான்.

ஆயர் கொழுந்தாய் அவரால் புடையுண்பான். அதாவது மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரஇடை கட்டுண்பான்; அடியும்படுவான்.

பசு, அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கி, முன்னைய கன்றையும் பழகியவர்களையும் புல்லிட்டவர்களையும் கொம்பினால் முட்டி, காலால் உதைப்பதுபோல், பரமபதத்து நித்திய சூரிகளையும் முத்தர்களையும் பெரிய பிராட்டி தொடக்கமான நாய்ச்சிமார்களையும் வெறுத்துப் புத்தடியார்பால் பாசம் விஞ்சியிருப்பான்.

"தேவர், மனிதர், விலங்கு, தாவரம் ஆகிய உயிர்கள் உண்டாவதற்கும், காக்கப்படுவதற்கும், பிரளய காலத்தில் அவை ஒடுங்குவதற்கும் காரணமான பொருளே பிரமம்" என்று தைத்திரிய உபநிடதம் கூறுகின்றது.

"முதன் முதலாக நான்முகனைப் படைத்து, அவனுக்கு வேதங்களைக் கற்பித்தவனே பிரமம்" என்பது சுவேதாச்வதர உபநிடதம்.

"காணும் கண்ணும் காணப்படுகின்றவனும் நாராயணன். கேட்கும் காதும் கேட்கப்படுபவனும் நாராயணன். திக்குக் களும் விதிக்குக்களும்[1] நாராயணன்" என்பது சுபாலோப நிடதம்.

1 விதிக்கு—திக்கு அல்லாத ஆகாசம் முதலியன.

“பரப்பிரமம் என்ற சொல்லுக்குப் பொருளாக இருப்பவனும் நாராயணன். பரதத்துவமும் நாராயணன். பரஞ்சோதியும் நாராயணன். பரமசேதனனும் நாராயணன். இவ்வுலகில் காண்பனவும் காதால் கேட்பனவும் ஆகிய பொருள்கள் அனைத்திலும் உள்ளும் புறமும் பரவி உள்ளுயிராய் நிற்கின்றவ'னும் நாராயணன்” என்று உபநிடதம் அனைத்துக்கும் சாரமான நாராயண அனுவாகம் கூறுகின்றது.

உயிரையும் உயிர் இல் பொருளையும் உடலாகக் கொண்டவன்; அனைத்துப் பூதங்களுக்கும் உள்ளுயிரானவன்;[2] உயிர். உயிர்இல் பொருள்களை உடலாகக் கொண்டிருப்பினும், அவற்றின் குற்றங்கள் ஒட்டாதவன்; நித்திய விபூதியாகிய பரமபத நிலையன்; திவ்வியத் திருமேனியினன்; விளையாடும் இடமாகிய இவ்வுலகை உடைமையாக உடையவன்; மேல் ஒரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் எவனோ அவனே நாராயணன் என்று அந்தர்யாமிப் பிராம்மணம் முழங்குகின்றது.

---

2 உயிரில் இறைவன் இருப்பதால் அந்த உயிரின் உடல்கள் இயங்குவதை நாம் காண்கின்றோம். உயிரில் பொருளிலும் இறைவன் உள்ளான். என்றால், அவையும் இயங்க வேண்டுமே! அவை இயங்குவதாகத் தெரியவில்லையே! என ஓர் ஐயம் எழலாம்.

பருப்பொருளின் இயக்கம் நம் கண்ணுக்குப் புலனாகின்றது. நுண் பொருளின் இயக்கம் புலனாவதில்லை. புலனாகாமையால் அவற்றுள் இயக்கம் இல்லை என்று கொள்ள இயலாது. உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் அணுவினைச் சதகூறிட்டகோணும் இயங்கிக் கொண்டுதான் உள்ளன என்று அறிவியலார் சில கருவிகளால் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஆதலால் உயிர்ப்பொருள் மட்டுமல்ல; உயிரில் பொருள்களும் இறைவனுக்கு உடலாக இருப்பதால், அனைத்தும் இயங்கிக்கொண்டுதான் உள்ளன என்பது உறுதி, உயிரில் பொருள்களும் இயங்குவதால்தான் அணுவைப் பிளந்தால் பேராற்றல் வெளிப்படுகின்றது.

"நாராயணன் ஒருவனே இருந்தான், பிரமனும் இல்லை. ஈசானனும் இல்லை, வானமும் இல்லை. உலகமும் இல்லை. விண்மீன்களும் இல்லை. நீரும் இல்லை. நெருப்பும் இல்லை. சந்திரனும் இல்லை. ஆதவனும் இல்லை." என்று மஹா உபநிடதம் விரித்துரைக்கின்றது.

வேதத்தால் புகழப் பட்டவர் பராசரர். "பர தத்துவத்தை நன்கு அறியக் கடவீர்!" எனப் புலத்தியர் அவருக்கு வரம் அளித்தார். "புலத்தியர் சொன்னவாறு நிகழக் கடவது" என்று வசிட்டரும் அவருக்கு வரம் அளித்தார்.

இத்தகு சிறப்பு வாய்ந்த பராசர பகவானை மைத்திரேய பகவான் அடுத்து, "சர அசர மயமான உலகம் எங்கிருந்து உண்டானது? எதனால் காக்கப்படுகின்றது? எங்கு ஒடுங்கு கின்றது?" என்று பொதுவாகக் கேட்டார்.

கலைகளாலும் யோகங்களாலும் உண்டான பேரறிவும் ஞானிகளின் திருவருளும் பெற்ற பராசரர், "இந்த உலக மானது திருமாலி (விண்டுவி)னிடமிருந்து உண்டானது. அவனாலே காக்கப்படுகின்றது. அவனிடமே ஒடுங்கு கின்றது" என்று கூறினார்.

இச்செய்தி விண்டு புராணத்தில் உள்ளது.

மேலும் பற்பல சுருதி, மிருதி, இதிகாச, புராணங்களும் ஸ்ரீமந் நாராயணனே படைப்பு, காப்பு, அழிப்புக்குக் காரணன் என்கின்றன.

இறைவன் இவ்உலகைப் படைப்பது ஏன்?

விரும்பும் இன்பத்துக்குக் காரணமான அறிவு பின்னிட்டு, வினைப்பயன் முதன்மை பெறுவதே தேவர், மனிதர் ஆகியோரின் பிறப்புக்குக் காரணம்.

அறியாமை முன்னிட்டு, வினைப்பயன் பின்னிடுவதே விலங்கு, பறவைகளின் பிறப்புக்குக் காரணம்.

பிரமன் முதலியோர் பிறப்புக்குக் காரணம் இறைவன் ஆணையே ஆகும்.

இவ்வகைக் காரணம் ஏதும் இன்றி, இறைவன் தன் விருப்பத்தாலேயே (விளையாட்டுக்காகவே) உலகைப் படைக்கின்றான்.

இறைவன் தன் நினைவினாலேயே உலகைப் படைப்ப தால் அதனால் அவனுக்கு ஏதும் சோர்வு நேர்வதில்லை.

உலகைப் படைப்பதால், இறைவனுக்குப் பயன் ஏதும் இல்லை. மணல் வீடு கட்டி விளையாடுவதால், சிறுவர்க்கு ஏதும் பயன் உண்டா? விளையாட்டுத்தானே பயன்! அதைப் போல் படைப்புத் தொழிலால் இறைவன் பெறுவது அலகிலா விளையாட்டுப் பயனே!

மணலால் கட்டிய வீட்டை அழித்து விடுவதும் சிறுவர் களுக்கு விளையாட்டு ஆவதுபோல், உலகைத் தன்னுள் ஒடுக்குவதும் இறைவனுக்கு விளையாட்டே ஆகும்.

ஒரு பொருள் படைக்கப்படுவதற்கு மூன்று காரணங்கள் வேண்டும். அவை உபதான காரணம், சக காரி காரணம், நிமித்த காரணம்[1] எனப் பெயர் பெறும்.

குடம் செய்வதற்கு மண், முதற் காரணம். குடம் செய்வதற்குப் பயன்படும் தண்டம் சக்கரம் ஆகியன துணைக் காரணம். குடத்தை இன்ன பயனுக்காக என்று கருதிச் செய்யும் குயவன், நிமித்த காரணம். அதாவது பயன் பெறுபவன்.

---

1 உபதான காரணம்—முதற் காரணம். சககாரி காரணம்—துணைக் காரணம். நிமித்த காரணம்—அதனால் வரும் பயன்.

காரணம் இன்றி எந்தக் காரியமும் உண்டாவதில்லை. இதைச் சற்காரியவாதம் என்று தத்துவ ஞானிகள் கூறுவர். சத்காரியம் என்பது, உள்ள ஒன்றிலிருந்தே இன்னொன்று பரிணாமம் ஆகும் எனப் பொருள்படும்.

உலகம் ஒரு காரியம். அந்தக் காரியத்துக்கு அவசியமாக ஒரு காரணம் வேண்டும்.

அந்தக் காரணம் மூவகைப்படும் என்று கண்டோம். அந்த மூவகைக் காரணமுமாக அமைபவன் இறைவனே ஆவன்.

பிரளய காலத்தில் பருப் பொருள்களாகிய உயிர், உயிர்அல் பொருள்களை நுண் பொருள் ஆக்கித் தன்னுள் ஒடுக்கிக் கொள்கின்றான் இறைவன்.

பிரளயம் முடிந்தவுடனே தன்னுள் நுண் பொருளாய் இருந்த உயிர், உயிர்இல் பொருள்களைத் தன்னிலிருந்தே பருப் பொருளாக வெளிவிடுகின்றான்.

சித்தும் அசித்தும் நுண்மையாக இருக்கும் நிலையில், உலகப் படைப்புக்குமுன் அவற்றுக்குள் அந்தரியாமியாய் நிற்கும் நிலையையே இறைவன் உலகிற்கு முதற் காரணம் என்றும், நுண்ணிய நிலையில் உள்ள சித்து அசித்துக்களை வெளிப்படுத்தி உலக உற்பத்தி செய்வோம் என்று இறைவன் எண்ணுகின்ற நிலையையே அவன் உலகிற்கு நிமித்த காரணன் என்றும், அவனுடைய ஞானம் சக்திகளே துணைக் காரணம் என்றும் இம்முறையில் இறைவன் ஒருவனே உலகத் தோற்றத்துக்கு முக்காரணங்களுமாய் உள்ளான் என்பது ஆன்றோர் முடிபு.

உயிர், உயிர்இல் பொருள்களைத் தன்னின் வேறாகப் பிரியாத விசேடணமாக[1]வுடைய இறைவன், தானே உலக மாக மாறும்போது விசேடிய[2]மான அவன் வடிவத்துக்கு மாறுபாடு நேர்வதில்லை. "நினைந்த எல்லாப் பொருள் கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே" என்று இந் நிலையையே ஆழ்வார் குறிப்பிடுகின்றார்.

"உலகம் தான் ஆகிச் செஞ்செவே நின்ற நன்றுஆய ஞானத் தனிக் கொழுந்து" என்று கம்பர் பெருமான் இதனையே எதிரொலிக்கின்றார்.

---

1 விசேடணம்—அடைமொழி. கரியகுதிரை என்பதில் 'கரிய' என்பது குதிரைக்கு அடைமொழி. குதிரையி லிருந்து 'கரிய' என்ற அடைமொழியைப் பிரிக்க இயலாது. அதைப் போல் இறைவனிலிருந்து உயிர், உயிர்இல் பொருள்களைப் பிரிக்க இயலாது. ஏனெனில் அவை அவனுக்கு உடலாக உள்ளன.

2 விசேடியம்—அடைமொழியோடு கூடியது. கரிய குதிரை என்பதில் உள்ள 'குதிரை' விசேடியம். கரிய என்ற விசேடணத்திலிருந்து குதிரை என்ற விசேடியத்தைப் பிரிக்க இயலும். அடைமொழியோடு கூடியது 'அடை கொளி' எனப்படும். குதிரையாகிய அடை கொளியி லிருந்து 'கரிய' என்ற அடைமொழியைப் பிரித்தால், அந்த அடைமொழி பொருளற்ற சொல்லாகிவிடும். அடைகொளி— உயிர். அடைமொழி—உடல். உயிர் பிரிந்தால் உடல் பயன்படுமா? அடைகொளியால்தான் அடைமொழிக்கு வாழ்வு உண்டு. இறைவனால்தான், உயிர், உயிர்இல் பொருள்களுக்கு இருப்பு உண்டு. அடை கொளி—தாங்கும் பொருள். அடைமொழி—தாங்கப் படுவது. தாங்கும் பொருள் இல்லையேல், தாங்கப்படும் பொருளுக்கு இருப்பு ஏது?

கரிய என்ற அடைமொழி கருநிறத்தைக் குறிக்கும். அது குதிரையோடு சேர்ந்தால்தான பொருள்படும். குதிரை, கருநிறத்தைத் தாங்கும் பொருள். கருநிறம், குதிரை யால் தாங்கப்படுவது. குதிரையைப் பிரிந்து கரு நிறத்துக்கு இருப்பு இருக்க இயலுமா? இறைவனைப் பிரிந்து உயிருக்கு இருப்பு ஏது?

உலகமாக மாறினாலும், அவனிடம் மாறுபாடு நேராமையால் அவன் மாறுபாடு அற்றவன் (நிர் விகாரன்) எனப்படுகின்றான்.

தூயவனாகிய இறைவன் மனிதன் பெற்ற அசுத்த உடம்பிலே எவ்வாறு கலந்திருப்பான்? நம் உடல் சீழ், வழு, தசை முதலிய அசுத்தங்களுக்கு இருப்பிடமாக உள்ளதை உயிர் அறியாமல் இல்லை. ஆயினும் உயிரானது இந்த அழுக்குடம்பை எனது என்று அதில் வெறுக்காமல் தங்கி யுள்ளதன்றோ? அதைப்போன்றே வினையழுக்குக் கலந்த உயிரை வெறுக்காமல் அதனை உடலாகக் கொண்டு இறைவன் தங்கியுள்ளான் என்று கொள்ளல் வேண்டும்.

மனிதன் ஒருவன் என்று நோக்கும்போது, அபேதம் (ஒன்று) ஆகவும் உயிர்வேறு உடல்வேறு என்ற இயல்பு உணரும்போது பேதம் (இரண்டு) ஆகவும் உயிரிலும் இறைவன் உறைகின்றான் என்று ஏற்கும் போது, 'விசிஷ்டாத்வைதம்' (உயிர், உடல்களோடு ஒன்றுபட்ட நிலை) என்றும் கொள்ளுதல் வேண்டும்.

சிலந்திப் பூச்சி சிறு பிராணி. அது தன் வாயிலிருந்து ஊறும் பசையால் நூல் நூற்று வலை பின்னுகின்றது, தன் வாய்ப்பசை வலையாக மாறும் போது, அதன் முழுமையில் குறைவு நேரலாமே! இப்படி நாம் எண்ண நேரும். ஆனால் அது, முன்போலவே முழுமையாகவே உள்ளது. அதன் உடலே அதற்கு விசேடணம், சிலந்தி அந்த விசேடணத் துடன் கூடிய விசேடியம்.

சிலந்தி தன் உடலாகிய விசேடணத்தின் மூலம் நூலாகிய காரியத்தை உண்டாக்கித் தானே அதற்கு முதற் காரணம் ஆகின்றது.

அதைப்போல், அனைத்து ஆற்றலும் உடைய இறைவனும் உலகமாகிய காரியத்திற்கு வித்தாய், தன்

முழுமையில் குறையாமல் (முதலில் குறையாமே) முதற் காரணமாதல் கூடும் என்பது தேற்றம் அன்றோ?

ஒரு பூரணம். அந்தப் பூரணத்திலிருந்தே எல்லாம் தோன்றுகின்றன. எல்லாம் தோன்றிய பின்பும் அது குறைவிலா நிறைவாகவே (பரிபூரணமாகவே) உள்ளது என்று உபநிஷதம் கூறுகின்றது.

பிரளய காலத்தில் உயிர்இது, உயிர்இல் பொருள் இது என்று பகுத்தறிய ஒண்ணாதபடி உயிர்கள் அதி நுட்பமாய்க் கலந்திருக்கும். நீரில் கலந்த உப்புப்போல, இறைவனுடன் பிரிக்க இயலாதபடி ஒன்றாய்க் கலந்து கிடக்கும்.

பிரளயம் கழிந்தவுடனே இறைவன் உலகைப் படைக்க விரும்புகின்றான். தன்னுடன் இரண்டறக் கலந்து கிடக்கும் உயிர், உயிர்இல் பொருள்களைத் தன்னிடத்தினின்றும் வேறு ஆக்கி தனிப்படைப்பாகவும்[1] தொகைப் படைப்பாகவும்[2] காரியப்படுத்துகின்றான்.

அப்படி உலகங்களைப் படைக்கும்போது, இம்மை இன்ப துன்பங்களை நுகர்வதற்கும் வீடுபேறு பெறுவதற்கும் கருவி களாகிய உடலையும் உறுப்புக்களையும் (கரணங்களையும்) உயிர்களுக்கு அளிப்பான்.

உயிர்களுக்கு அதுகாறும் சுருங்கியிருந்த அறிவானது அந் நிலையில் விரிந்து விளக்கமடையும்.

இதுவே இறைவனின் படைப்புத் தொழில் எனப்படும்.

மேலே கண்டபடி இறைவன் நுட்பமாகத் தன்னுடன் கலந்திருந்த முடிவில் பெரும்பாழாகிய மூலப் பகுதியைத்[3]

1 தனிப்படைப்பு—வியஷ்டி.
2 தொகைப்படைப்பு—சமஷ்டி.
3 மூலப் பகுதி—பிரகிருதி. இதனை விண் என்றும் பாழ் என்றும் நம்மாழ்வார் குறிப்பிடுவார்.

தன்னில் வேறாகப் பிரித்து, அதில் மகத்து என்ற தத்துவத்தைத் தோற்றுவிப்பான்.

அந்த மகத்திலிருந்து, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் நுண் பூதங்களாகிய பொறிகளின் மூலங்களையும் (தன்மாத்திரைகளையும்) நிலம் நீர் நெருப்பு காற்று வான் என்னும் பருப் பொருளாகிய ஐம்பூதங்களையும் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிபொறிகள் ஐந்து, வாக்கு பாதம் பாணி (கை) எருவாய் கருவாய் என்னும் செயற் பொறிகள் ஐந்து, மனம் ஒன்று ஆகிய பதினொரு பொறி களையும் உண்டாக்கி, அவற்றைக் கொண்டு அண்டத்தைப் படைத்து அதற்குள் நான்முகனைப் படைப்பது தொகைப் படைப்பு (சமஷ்டிப் படைப்பு) எனப்படும்.

அந்தப் பிரமன் மூலமாக அண்டத்துக்கு உட்பட்ட பதினான்கு உலகங்களில், தேவர், மனிதர், விலங்கு, தாவரம் ஆகிய தனித்தனிப் பொருள்களைப் படைப்பது தனிப் படைப்பு (வியஷ்டிப் படைப்பு) எனப்படும்.

பயிருக்குக் காப்பாகவும் வளர்ப்பதாகவும் இருக்கும் நீர் நிலை போலே, தன்னால் படைக்கப்பட்ட பொருள்களுக் குள்ளே நுழைந்து காப்பதும் உயிர்களது தகுதிக் கேற்பப் பகையைப் போக்கி விருப்பங்களை ஈவதும் காப்புத் தொழிலாம்.

உலகில் அன்னை, தந்தை முதலியோர் தங்கள் மக்களைக் காப்பதாகக் கருதுகின்றோம். ஆனால், அவர்கள் உண்மை யான பாதுகாவலர் அல்லர். தம் இளமைக்குக் கேடாக இக் குழந்தை பிறந்துவிட்டதே என்று வெறுப்பதும் இக்குழந்தை பிறந்த நேரம் சரியில்லை என்று அக்குழந்தையின் இறப்பினை எதிர்நோக்குவதும் பஞ்சம் வந்த காலத்திலே யாரும் அறியாதபடி புதரிலே எறிந்து விடுவதும் ஆபத்துக்

காலத்திலே கைவிடுவதும் பொருள், நிலம் காரணமாக விற்பதும் கொல்வதும் உலகில் காண்கின்றோம்.

சாலினி என்னும் பார்ப்பனி, பழிக்கு அஞ்சி ஆபுத்திரனைக் காட்டில் துறந்ததும், குந்திதேவி கர்ணனை நதியில் விட்டதும், அரிச்சந்திரன் மகனை விற்றதும், கோசிகனின் தங்கையும் அவள் கணவனும் பொன்னுக்காகத் தங்கள் மகனை உயிர்ப்பலி தருவதற்காக விற்றதும் ஆகிய வரலாறுகளால் தாய் தந்தையர் காப்பவர் அல்லர் என்பது தெளிவாகின்றது.

இன்னும் வீடுமனைப் பெற்ற கங்கை, சகுந்தலையைப் பெற்ற மேனகை, கள்ளக்காதலில் பெற்ற கன்னியர், விதவையரிடம், தாய் காப்பவள் அல்லள் என்பதை நன்கு உணரலாம்.

மகனைக் கொல்ல முயன்ற இரணியன் முதலியோரிடம், தந்தை காப்பவன் அல்லன் என்பதை அறியலாம்.

பரசுராமன், பரதன், பிரகலாதன், கம்சன் முதலியோரால், பெற்ற மக்கள் காப்பவர் அல்லர் என்பதனைக் காணலாம்.

இராவணன், வீடணன், வாலி, சுக்கிரீவன், சுந்தன், உபசுந்தன் ஆகியோரிடம் உடன் பிறந்தார் காப்பவர் அல்லர் என்பதை உணரலாம்.

நளன், பாண்டவர் ஆகியோரிடம் கணவன்மார் காப்பவர் அல்லர் என்பதனைத் தெளியலாம்.

கைகேயி முதலானவரிடமிருந்து, மனைவி காப்பவள் அல்லள் என்பதனை அறியலாம்.

தாய், தந்தை, உடன் பிறந்தார், கணவன், மனைவி இவர்களே காப்பவர் ஆகாதபோது, பிறரைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?

கண் கண்ட தெய்வங்கள் என்று கருதப்படும் சூரியர்—சந்திரர், இறைவன் ஆணைக்கு அஞ்சி நாழிகை தவறாமல் தோன்றுவதும் மறைவதுமாகி வருவதன்றி, தம் விருப்பப்படி உலாவப் பெறாமையாலும் இராவணன், இரணியன் முதலியோருக்கு ஏவல் தொழில் செய்து திரிகையாலும் அவர்கள் நமக்குக் காப்பாக மாட்டார்கள்.

துர்வாசன் சாபத்தால் மெலிந்து வருந்தியும், மாவலியிடம் செல்வம் பறிகொடுத்தும், மேகநாதனிடம் கட்டுண்டும் திரிவான் ஒருவன் ஆகையாலே வான் ஆளும் இந்திரனும் காப்பாக மாட்டான்.

உருத்திரன் அழிக்கும் தொழிலினன். அழல் வண்ணன். தன்னைச் சரண் அடைந்த வாணனுடைய கைகளைத் தன் கண் எதிரிலேயே கள்ளிக் காட்டை வெட்டுவதுபோல, கண்ண பெருமான் வெட்டித் தள்ளக்கண்டு, நெற்றிக் கண்ணைப் புதைத்துச் செயலிழந்து ஓடினவன். உலக குருவும் தன் பிதாவுமான பிரமன் தலையைக் கிள்ளிக் கையும் கபாலமுமாய் இரந்து திரிந்தவன் ஆதலால், அவன் காப்பவன் ஆகான்.

பிரமனோ மது கைடவரிடம் மறைகளைப் பறிகொடுத்து வருந்தியவன். உருத்திரனால் தலை அறுப்புண்டவன், ஆதலால் அவனும் காப்பவன் ஆகமாட்டான்.

தாய், தந்தை, மனைவி, மக்களைக் கைவிட்டாவது உலகர் பொருள் தேடுவர். அப்பொருளையும் கள்வர் கவர்வர்; அரசர் அபகரிப்பர்; உறவினர் உறிஞ்சுவர்; வியாதிகள் விழுங்கிவிடும். அந்தக் கைப் பொருள் தன்னை விட்டுப் போய் விட்டால், நஞ்சு தின்று நஞ்சு[1] சாக நேரும். ஆதலால் கைப் பொருளும் காப்பு ஆகாது.

---

1 நஞ்சு—நைந்து,

தாய் தந்தையர் கைவிட்டபோதும், தன் உரு மாற்றி வேற்றுருக் கொண்டு முகம்காட்டி இன்சொல் சொல்லிக் காப்பான் இறைவன் மட்டுமே.

உடன் பிறந்தாரும் கணவன்மாரும் கைவிட்ட அன்றும் தான் கைவிடாமல் தஞ்சம் ஆவான்; கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு தூது போவான்; கருத்தறிந்து தேரை ஓட்டுவான். செத்தவரை மீட்டுக் கொடுப்பான். அகவாயை விடாது, உடன் கேடனாய்[1] உள்ளிருந்து காத்தருளுவான் அவன்.

ஆதலால் ஓங்காரத்தில் உள்ள அவரட்சணே என்ற வேர்ச் சொல்லினால் குறிப்பிடப்படும் காப்பாளனும் 'நாராயண என்ற சொல்லில் உள்ள 'அயன' என்பதால் பெறப்படும் அனைத்து வகை உறவினனுமான திருவுடைய தேவதேவனே காத்தற்குரியவன் என்னத் தட்டில்லை,

உடற் பற்றுடன் புலன் இன்பத்திற்கு ஆட்படும் உலகினர்க்குப் பகைவரால் வரும் இடையூறுகள், உடற் பிணிகள், மனத்தாபங்கள் ஆகிய பகைளைப் போக்கிச் சோறு கூறை (உடை) பெண்டு பிள்ளை பொருள் முதலிய விருப்பங் களை நிறைவேற்றுபவன் திருமால் ஒருவனே!

வீடு பேற்றில் விருப்பமுடைய முமுட்சுக்களுக்கு உலகப் பற்றாகிய பகையைப் போக்கிப் பரமபதப்பயனும் தருவான்.

நித்திய சூரிகளுக்கும் முத்தருக்கும் உரிய இயல்பு கைங் கரியம் (தொண்டு) ஒன்றே. அந்தக் கைங்கரியத்துக்கும் ஒரு வகை இடையூறு உண்டு. இறைவனின் பேரழகுதான் அந்த இடையூறு. கைங்கரியம் செய்யும்போது அந்த அழகிலே சொக்கி எனக்கு இந்தக் கைங்கரியத்தால் இன்பம் உண்டா கின்றது என்ற எண்ணம் உண்டாகலாம்.

---

1 உயிர்க்குக் கேடு வருமாயின் தானும் அக்கேட்டில் பங்கு பெறுபவன்.

''தனக்கே ஆக எனைக்கொள்ளும்'' என்றபடி இறைவன் உகப்புக்காகவே கைங்கர்யம் செய்தல் வேண்டும் என்ற இயல்புக்கும் தன் அடிமைத் தன்மைக்கும் என் உகப்புக்காகச் செய்கின்றேன் என்ற நினைவு பகையாகும்,

''இறைவனைக் கண்ணெடுத்துப் பார்த்தால், அந்த அழகு நம்மை மெய்ம் மறக்கச் செய்துவிடும். அதனால் இறையடியான் ஆகிய பரதனுக்குச் செய்யும் தொண்டுக்குத் தடை நேரலாம்'' என்று சத்துருக்னன் இராமனை ஏறிட்டுப் பார்க்கவே மாட்டானாம். அவனைப் பொறுத்தமட்டில் இராமனின் அழகு, பரதன் பணிக்குப் பகை என்று கருதினான். உலகில் யாராலும் வெல்ல இயலாத இராம செளந்தரியம் என்ற பகையை வென்றவன், சத்துருக்னன். சத்ருக்னன் என்றால் பகையை வென்றவன் என்று பொருள். அவன் வரலாற்றில் வேறு எப்பகையும் வென்றதாக அறிகிலோம். அப்படியானால், சத்ருக்னன் (பகையை வென்றவன்) என்ற பெயர் இடுகுறிப் பெயர்தானா? இல்லை; இல்லை காரணப் பெயர்தான். தன் கைங்கரியத்துக்குப் பகையான இராமன் அழகாகிய பெரும் பகையை வென்றமையால், அப்பெயர் அவனுக்குக் காரணப் பெயராயிற்று. எதிர்காலம் உணர்ந்த வசிட்ட பகவன், சத்ருக்கனின் பெருமையை அறிந்தே அவனுக்குக் காரணப் பெயரைச் சூட்டினார்.

கைங்கரியத்துக்குப் பகையாகிய இறைவன் அழகில் மனம் செல்லாதபடி செய்து கைங்கரியத்திலேயே ஈடுபடச் செய்வதும் இறைவன் திருவருளேயாகும்.

இறைவன் காப்புத் தொழிலை நான்கு வகையில் மேற்கொள்வான்.

1. தேவர், மனிதர், விலங்கு, தாவரம் (குட்டை மா மரம்) முதலியனவாக அவதரித்து அடியாரைக் காப்பான்.

2. யாக்ஞவல்கியர், வியாசர், பராசரர், வான்மீகி, மனு முதலான மேதைகளினுள் இருந்து, மிருதி, இதிகாசம், புராணம் ஆகியவற்றைக் கற்பித்து நல்வழி காட்டுவான்.

3. காப்புக்குப் பயன்படும் காலத்துக்கும் உள்ளுயிராய் இருந்து காப்பான்.

4. ஒன்றுக்கொன்று காப்பாகும் அனைத்து உயிர்களுக்கும் உள்ளுயிராய்ச் சத்துவ குணம் ஊட்டிக் காப்பாற்றுவான்.

ஆணைக்கு அடங்கி நல்வழி நடவாத மகனைத் தந்தையானவன் விலங்கிட்டு வைப்பான் அன்றோ? அதுபோல் இறைவனும் தன்னை வழிபட்டு உய்வதற்குச் சாதனமாகக் கொடுத்த ஆக்கை வழியே ஐம்பொறிகட்கு ஆட்பட்டு, உலக இன்பங்களில் மண்டி விரும்பிச் செல்கின்ற கரணங்களை ஒடுக்கி வைப்பான். இந்த நிலையே அழிப்பு எனப்படும்.

இறைவன் அழிப்புத் தொழிலை நான்கு வகையாக மேற்கொள்வான்.

1. அழிப்புத் தொழிலுக்குத் தலைவனான உருத்திரனுக்கும்,

2. அவனுக்கு அடங்கிய தீக்கடவுள், இயமன் முதலியோருக்கும்,

3. அழிப்புக்குப் பயன்படுகின்ற காலத்துக்கும்,

4. ஒன்றுக்கொன்று அழித்துக் கொள்கின்ற அனைத்து உயிர்களுக்கும் அந்தர்யாமியாய்த் தமோ குணத்தோடே கூடி அழிப்பான்.

**திருமேனி அழகு :** திவ்விய ஆத்ம சொரூப கல்யாண குணங்களைக்[1] காட்டிலும் மிகவும் விருப்பம் தருவதாக இறைவன் திவ்விய மங்களத் திருமேனி இருக்கும்.

அஃது என்று முள்ளது; மாறுபாடு அற்றது; சுத்த சத்துவ மயமானது.

மாணிக்கச் செப்பிலே பொன்னையிட்டு வைத்தால், வெளியே தெரியும் அன்றோ! அதுபோலே பொன்னுருவான திவ்விய ஆத்ம சொரூபத் திருமேனி, நிழலெழ ஒளிர்ந்து கொண்டிருக்கும். அது அளவற்ற சுடர் வடிவானது.

''திருமகளின் அழகிய மார்பில் அணிந்த மணி வடத்தில் இறைவன் திருமேனியின் அழகிய நிழல் படியும். அவ்வாறே திருமாலின் அழகிய மார்பணியான கவுத்துவ மணியில் திருமகளின் திவ்வியத் திருமேனியின் நிழல் படியும். இக் காட்சி எப்படி இருக்கின்றதென்றால், திருமால் உள்ளத்தில் அகலகில்லேன் இறையும் என்று திருமகள் வீற்றிருக்கின்றாள். திருமகளின் திருவுள்ளத்தில் என்றும் பிரியாமல் திருமால் குடி கொண்டுள்ளான். அவர்கள் இருவரின் திவ்வியத் திருமேனி களும் சுத்த சத்துவ மயமானபடியால், மாணிக்கச் செப்பில் இட்ட பொன்னின் நிழல் வெளியே தெரிகின்றது போலும் என்று கருதும்படியாக உள்ளது'' என்று 'ஆமுக்த மால்யத' வில் கிருஷ்ணதேவராயர் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் தம் கற்பனைக் கொடியைப் படரவிட்டுள்ளமை இங்கே நினைக்கத் தகும்.

''முடிச்சோதி யாய்உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும் பல் கலனாய் நின்பைம்
பொன்
கடிச்சோதி கலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே!''

---

1 தெய்விகமாகிய இறைவனுக்கு இயல்பான மங்கள குணங்கள்.

என்று இறைவன் சுடர்வடிவை உட்கண்ணால் கண்டு, உரை தழுதழுக்கப் பரவசம் ஆகின்றார் ஆழ்வார்.

அழகு, இளமை, மென்மை, நறுமணம் முதலிய கல்யாண குணங்களுக்குக் கொள்கலமானது இறைவன் திருமேனி. அது பரம யோகிகளின் தியானத்துக்கு உரியது; மானுடவர் அனைவரின் மனங்களையும் கவர்வது; தன்னை (இறை வடிவை) ஒழிந்த புலன் இன்பங்களைக் காறி உமிழ்ந்து வெறுக்கும் மன உறுதியைத் தருவது;

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணாவே!"

என்று வாய்வெருவச் செய்வது; நித்தரும் முத்தரும் "கண இமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே" என்னும்படி எப்போதும் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பது; அனைத்துத் தாபங்களும் தீர்ப்பது; முடிவில்லாத அவதாரங் களுக்கு எல்லாம் மூலமாவது; நித்திய விபூதி, லீலா விபூதி[1] ஆகிய இரு வேறுலகங்கட்கும் புகலிடமானது; திவ்விய ஆயுதங்கள், திவ்விய அணிகலன்களால் அலங்கரிக்கப்பட் டிருப்பது இறைவனது சுத்த சத்துவத் திருவடிவம்.

இத்தகைய திவ்விய மங்கள விக்கிரகத்தையுடைய இறைவன், பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என ஐந்து நிலைகளை உடையவன்.

1. பரம் : இந்தப் பூமண்டலத்துக்கு மேலானது பரமபதம். பூமியைவிடப் பரமபதம் மூன்று மடங்கு

---

1 நித்திய விபூதி—பரமபதம். லீலாவிபூதி—இவ்வுலகம்; விளையாடும் இடம். விபூதி—செல்வம்; இருப்பிடம்.

பெரியது. ஆதலால் அது திரிபாத விபூதி[1] எனப்படும். அது விரசை என்னும் அமுத ஆற்றுக்கு அக்கரையில் உள்ளது; உருத்திரன், பிரமன் ஆகியோர்க்கும் எட்டாதது; சனகன் முதலிய முனிவர் நெஞ்சால் நினைப்பதற்கும் நிலமல்லாதது; காலம் என்ற தத்துவம் அங்கு நடையாடாது; அது சுத்த சத்துவமயமானது; பஞ்ச சக்திமயமானது; என்றும் உள்ளது; இன்பத்துக்கு இருப்பிட மானது.

பலகோடி சூரியர் ஒரே போதில் உதித்தாற்போன்ற ஒளியுடையது. அங்குப் பிரகிருதித் தொடர்பு[2] இல்லாத மலர்கள் நிறைந்த சோலைகளும் கற்பகப் பொழில்களும் சூழ்ந்திருக்கும். அந்த மலர்களில் தெய்வ வண்டுகள் மட்டுமே படிந்து தேன் உண்ணும். திவ்வியமான தேன் வெள்ளமிடும்.

அந்தத் திவ்வியதேசம், பற்பல மதில்களால் அலங்கரிக்கப் பட்டு விளங்கும். அங்குச் சென்றவர் மீட்சி பெற விரும்பாத - இயலாத—நலமந்தம் இல்லதோர் வைகுந்த நகரம் அங்கு உண்டு.

அங்கு ஒரு திவ்வியத் திருமாமணி மண்டபம். இரு விபூதியினர் அனைவரும் திரண்டாலும் ஒரு மூலைக்கே போதாது என்னும்படி விரிவானது அது; தனக்கு மேல் ஒன்று இல்லாத இன்பமயமானது.

அந்தத் திருமாமணி மண்டபத்திலே அற்புதமான கோப்புடைய சீரிய சிங்காசனம்.

அதன்மேல் பன்னிரண்டு இதழ்களையுடைய நானா சக்தி மயமான திவ்வியப் பொற்றாமரை. அதன் பொகுட்டிலே

---

1 திரிபாதம்—மூன்று கால் பங்கு. விபூதி—இறைவனுக்கு உடைமையான இடம்; ஈசுவரன் பொருள்கள் தோறும் பரவி நிற்கும் தன்மையன் என்றும் பொருள் உண்டு.

2 பஞ்சபூதத் தொடர்பு,

(நடு இடத்திலே) விசித்திரமான தெய்விகயோகப் பரியங்கம்.[1]

அந்தப் பரியங்கத்தின்மேல் அனந்தன் என்னும் மெல்லணை பல்லாயிரம் பனிமதிகளை உருக்கி வார்த்தாற் போலக் குளிர்ந்த புகரை (ஒளியை)யுடைய திருமேனியினன் அனந்தன்.[2]

கல்யாண குணங்களை முடிவில்லாமல் பெற்றுள்ளமை யால், அனந்தன் என்று அவனை அழைப்பர். பிரளய காலத்தில் இறைவன் தனித்திருப்பான். அப்போதும் தொண்டு செய்யும் விருப்பத்தால் அழியாமல் இருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம்.

''சென்றால் குடையாம்; இருந்தால்சிங் காசனமாம்;
நின்றால் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்
புணையாம்; மணி விளக்காம்; பூம்பட்டாம்; புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு''

என்றபடி எவ்வகைத் தொண்டும் மேற்கொண்டு, தொண்டு செய்பவர்க்கெல்லாம் எடுத்துக்காட்டாயிருத்தலால், ஆதி சேடன்[3] என்ற திருப்பெயரும் அவனுக்கு உண்டு. சேடன் என்பதற்குத் தொண்டன் என்றும் அனைத்தும் அழிந்த காலத்தும் தொண்டு செய்யும் ஆர்வத்தால் 'அழியாமல் எஞ்சியிருப்பவன்' என்றும் பொருள் உண்டு.

இறையனுபவம் பெறுவதற்கு வாய்ப்பாகப் பல வாய்களும் பல தலைகளும் உடையவன் அனந்தன். குளிர்ச்சி, மென்மை, நறுமணம் முதலிவற்றுக்குக் கொள்கல மானவன்.

---

1 பரியங்கம்—கட்டில்,

2 அந்தம்—முடிவு. அநந்தம்—முடிவில்லாமை. அநந்தன்—முடிவில்லாதவன்.

3 சேடம்—தொண்டு; மீதி,

அந்த ஆதிசேடனாகிய அரவணையிலே, வெள்ளி மலையின்[1] உச்சியில் பல கோடி சூரியர்கள் உதித்தாற்போல் விளங்குகின்ற ஆயிரம் பணா மண்டலமாகிய சோதி மண்டலத்தின் அடியிலே இறைவன் இருப்பான். வலப்பக்கம் அருள் தேவியான பெரிய பிராட்டியும் இடப்பக்கம் பொறுமைத் தேவியான பூமிப்பிராட்டியும் அவர்களுக்கு நடுவே இன்பத் தேவியான நீளா பிராட்டியும் இருப்பர். அவர்களுடனே மூன்று மின்னற் கொடிகளோடு கூடிய கருமுகில் தாமரைக் காடு பூத்து ஒரு வெள்ளி மலைமேல் படிந்ததுபோல், திவ்விய படைக்கலன்கள், திவ்விய அணிகலன்கள் பூண்டு, அழகும் இளமையும் மணம்கமழ் தெய்வத்து இள நலமும் விளங்க, அடியார்களின் அனைத்துத் தாபங்களும் ஆறும்படியாகச் சுழிபட்டோடும் சுடர்ச் சோதி வெள்ளத்துத் தோன்றும் ஆதியஞ்சோதிக் கரிய கோலத் திருவுருவத்தோடு நித்தர் முத்தர்[2] அனுபவிக்கும்படி எழுந்தருளியிருக்கும் பரவாசு தேவநிலை பர நிலையாகும்.

**2. வியூகம் :** திருவிளையாடலுக்கு இடமாகிய உலகத்தின் படைப்பு, காப்பு, அழிப்புக்களைச் செய்வதற்காகவும், செல்வம் முதலிய போகங்களில் விருப்பம் கொண்ட புபுட்சுக்களுக்கு[3]த் தடைகளைப் போக்கி, வேண்டுவன

---

1 "அணிவிளங்கும் உயர் வெள்ளை அணை" என்று ஆழ்வார்கள் கூறியுள்ளமையால் ஆதி சேடனுக்கு வெள்ளிமலை உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

2 நித்தர்—என்றுமே இறைவனுடன் பிரியாதிருந்து கைங்கரியம் செய்பவர். முத்தர்—உலகில் பிறந்து, முக்தியில் விருப்புற்று அவன் அருளாலே அவனையே உபாயமாகக் கொண்டு இறையனுபவம் பெற்றவர். இவர்கள் முமுட்சுக்கள் எனப்படுவர்.

3 புபுட்சுக்கள்—இம்மை இன்பங்களுக்காக இறைவனை வழிபடுபவர்.

வேண்டியாங்குத் தருவதன் பொருட்டும் முக்தியை விரும்புகின்ற முமுட்சுக்களுக்குப் பயன் தருவதன் பொருட்டும் ஆமோத, சம்மோத, பிரமோதப்[1] பிரதேசங்களிலும திருப்பாற்கடலிலும் சங்கருடணன், பிரத்தியும்னன், அநிருத்தன், வாசுதேவன் ஆகிய நால்வகை மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் நிலை வியூகமாம்.

**1. சங்கருடணன் :** மூலப் பகுதியிலே, மெழுகில் ஒட்டிய பொன் துகள் போல உருமாய்ந்து கிடக்கும் உயிர்த் தத்துவத்தைப் பெயர், வடிவம் ஆகிய வேறுபாடுகளுக்கு உரியதாகும்படி தன் வயமாக்கி, பிரகிருதியினின்று பிரித்து, வேதம் முதலிய கலைகளை விரித்து உலகத்தினை அழிக்கின்ற வியூகமூர்த்தி சங்கருடணன் ஆவான்,

**2. பிரத்தியும்னன் :** அறிவுக்கு வாயிலான மனமாகிய தத்துவத்தைத் தன்வயமாக்கி, வேத முதலிய கலைகளை நடைமுறையில் காட்டும் அறங்களை விளக்கி, நான்கு வகைப் பட்ட[2] மனு தொடக்கமான தூயவருக்கமாகிய படைப்பினைச் செய்பவன் பிரத்தியும்னன்.

இறைவனுடைய முகம், புயம், துடை, அடிகளிலிருந்து முறையே பிறந்தவர்கள் அந்தணர், அரசன், வைசியர்,

---

1 ஆமோதம், சம்மோதம், பிரமோதம், திருப்பாற்கடல் என்பன சங்கருடணன், பிரத்தியும்னன், அநிருத்தன், வாசுதேவன் ஆகிய வியூகமூர்த்திகள் முறையே தங்கும் இடங்கள். பர நிலையில் இருக்கும் பரவாசுதேவனும் வியூகவாசு தேவனும் வேறு வேறு ஆவர். ஆமோதம்—மகிழ்ச்சி. சம்மோதம்—பெருமகிழ்ச்சி, பிரமோதம்—மிகப் பெரு மகிழ்ச்சி. கண்ணன், அநிருத்தன், மகரத்துவன், இரௌகிணேயன் என்று வியூகமூர்த்திகளைச் சைவ சமயத்தார் குறிப்பிடுவர்.

2 நான்கு வகைப்பட்ட படைப்புக்கள்; பிரமா, பிரஜாபதி, காலம், உயிர்கள் ஆகியவர்களுக்கு இறைவனே அந்தர்யாமியாக இருந்து படைப்பது.

உழைப்பாளர் ஆகிய நால்வகைப்பட்ட மனுக்கள். அந்த மனுக்களிலிருந்து ஆண் பெண் உறவால் தோன்றியவர், நான்கு வருண வேற்றுமையுடைய மானவர்.

அந்த மானவரிலிருந்து ஆண் பெண் உறவால் பிறந்த நால்வருணத்தார் மானவ மானவர்.

அந்த மானவ மானவரிலிருந்து ஆண் பெண் உறவால் பிறந்த நால்வருணத்தாரே மனிதர்கள்.

இவர்கள் சுத்த சத்துவ குணத்தோடு பயனில் விருப்பம் இன்றி, இறைவன் வழிபாடாகிய செயல்களைக் கடைப் பிடித்து வேதாந்தமாகிய உபநிடதங்களின் வழிநின்று இந்த உடலின் முடிவில் இறையனுபவம் பெறுவார்கள்.

3. அநிருத்தன் : அளவிறந்த அண்டங்களில் உள்ள அனைத்து உயிர்களையும் மேருமலை அணுவைத் தரிப்பது போல், அந்தர்யாமியாகத் தரித்து நின்று பாதுகாத்து உய்வதற்கு உபாயமான மெய்யுணர்வை அறிவித்து, துடி முதல் பரார்த்தம் ஈறான காலத்தின் படைப்பையும் கலப்புப் படைப்பையும் செய்பவன் அனிருத்தன்.

முன்பே கூறியபடி இறைவனுடைய முகம், புயம், துடை, அடிகளில் முறையே அந்தணர் முதலியோராகப் பிறந்த இராசச, தாமச குணங்களையுடையரான சேதனர் களைப் படைத்தல் கலப்புப் படைப்பாம். இவர்களுள் இரசோ குணமுடையார், வேதங்களின் கர்மப் பகுதியை அனுட்டிப்பவராவர்; பிரமன், உருத்திரன், இந்திரன் முதலியோரைத் தஞ்சமாக எண்ணுவர்; பயனில் விருப்பம் வைத்து கர்மங்களில் ஈடுபட்டு, உடல் பிரியும் காலத்தில் சொர்க்கம் முதலிய போக பதவிகளை அடைவார்கள்.

தமோ குணம் உடையவர்கள், வேதம், கலை ஆகிய வற்றில் வீண் விவாதம் செய்வர். இறைவன், இறையடி

யாரைப் பழித்துப் பேசுவர்; காமத்தில் மனத்தைச் செலுத்தி' உலகியலில் ஈடுபட்டு, உடல் விடும்போது, நரகத்தை அடைவார்கள்.

இனி மேலே கூறப்பட்ட துடி முதல் உள்ள காலத்தின் அளவினைச் சிறிது காண்போம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துடி | 100 | வேதை | நாழிகை | 60 | நாள் |
| வேதை | 3 | லவம் | நாள் | 15 | பக்கம் |
| லவம் | 3 | நிமிடம் | பக்கம் | 2 | மாதம் |
| நிமிடம் | 3 | கணம் | மாதம் | 2 | இருது |
| கணம் | 5 | காஷ்டை | | | (பருவம்) |
| காஷ்டை | 15 | லகு | இருது | 3 | அயனம் |
| லகு | 15 | நாழிகை | அயனம் | 2 | வருடம் |
| நாழிகை | 30 | பகல் அல்லது இரவு | பரார்த்தம் | — | பேரளவினது. |

360 மானுடஆண்டு 1 தேவவருடம்.
12000 தேவவருடம் 1 சதுர்யுகம்.
2000 சதுர்யுகங்கள் பிரமாவின் 1நாள்.

''பரவிய காரே, கூதிர், முன்பின்னிற் பனிக ளோடு
விரவிய இளைய வேனில், விரைந்திடு முதிர்ந்த வேனில்
மருவும்ஆ வணியே ஆதி மற்றிரண்டு இரண்டு மாதம்
பருவம்மூ விரண்டும் ஆய்ந்து பார்த்தனர் வாய்த்த
நூலோர்.''

என்ற நிகண்டுப்படி ஆவணி, புரட்டாசி—கார்ப்பருவம். ஐப்பசி, கார்த்திகை—கூதிர்ப்பருவம். மார்கழி, தை—முன் பனிப்பருவம். மாசி, பங்குனி—பின்பனிப்பருவம். சித்திரை, வைகாசி—இளவேனிற்பருவம். ஆனி, ஆடி—முதுவேனிற் பருவம்.

**5. வாசுதேவன் :** உழவன் தான் செய்த பயிருக்கு விலங்கு முதலியவற்றால் கேடு நேராதபடி காக்கும் பொருட்டு, பயிர் அருகே குடில் அமைத்துக் கொண்டு காவல் இருப்பான். அதுபோல் தன்னால் படைக்கப்பட்ட உயிர் களைக் காக்கும் பொருட்டும் தேவர், முனிவர்கள் தங்களுக்கு நேர்ந்த கேடுகளைச் சென்று அறிவிப்பதற்கு ஏதுவாகவும் அவதாரங்களுக்கெல்லாம் நாற்றங்காலான திருப்பாற்கடலில், திருஅனந்தாழ்வான்மேல், உலகைக் காப்பதில் கருத்துள்ள வனாய் அறிதுயில் கொண்டருளும் வியூகமூர்த்தி வாசுதேவன்.

**4. வியூகமூர்த்திகள் வகை :** மேலே சொன்ன சங் கருடணன், பிரத்தியும்னன், அனிருத்தன், வாசுதேவன் என்ற நான்கு வியூகமூர்த்திகள் ஒவ்வொருவரிடமிருந்தும் மும்மூன்று மூர்த்திகள் தோன்றி வியூகமூர்த்திகள் ($4 \times 3 = 12$) பன்னிருவர் ஆவர் என்பதும் உண்டு.

இதனைக் கீழே அட்டவணையிட்டுக் காட்டுவோம்.

| வியூகமூர்த்திகள் | அவர்கள்பால் தோன்றிய மூர்த்திகள் |
|---|---|
| சங்கருணன் | கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன் |
| பிரத்தியும்னன் | திரிவிக்கிரமன், வாமனன், சீதரன் |
| அனிருத்தன் | இருடிகேசன். பத்மநாபன், தாமோதரன் |
| வாசுதேவன் | கேசவன், நாராயணன், மாதவன் |

அடியார்களின் திருமேனியில் பல இடங்களிலும் இந்தப் பன்னிரு வியூகமூர்த்திகளும் தத்தம் ஆயுதங்களுடனும் பிராட்டிமாருடனும் வீற்றிருந்து காப்பர் என்பது வைணவக் கொள்கை. வியூகமூர்த்திகள் பால் தோன்றிய பன்னிருமூர்த்தி களின் திருப்பெயர்களை அமைத்து ஆழ்வார் ஒரு பதிகம் பாடியுள்ளார். அதற்குத் திருநாமப்பாட்டு என்றே பெயர்.

இனி அந்தப் பன்னிரு மூர்த்திகளின் இடம், திறம், ஆயுதம், பிராட்டிமார் முதலிய செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டுவோம்.

| | வியூகப்பெயர் | இடம் | நிறம் | ஆயுதம் | பிராட்டிபெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | கேசவன் | நெற்றி | பொன்ஒளி | 4 சக்கரம் | சீதேவி |
| 2. | நாராயணன் | வயிறு | நீலமேகம் | 4 சங்கு | அமிழ்த உற்பவை[1] |
| 3. | மாதவன் | மார்பு | இந்திர நீலம் | 4 கதை | கமலை |
| 4. | கோவிந்தன் | கழுத்து | சந்திரன் சோபை | 4 சார்ங்கம் | சாதுசேவி; சந்திரசோபினி |
| 5. | விஷ்ணு | வலவயிறு | தாமரைப் பூந்தாது | 4 மேழிகள் | விஷ்ணு பத்னி |
| 6. | மதுசூதனன் | வலதுபுயம் | தாமரைப் பூவின் ஒளி | 4 உலக்கை | வைணவி |
| 7. | திரிவிக்கிரமன் | வலக்கழுத்து | அக்கினி ஒளி | 4 கட்கம் | வராரோகிணி |
| 8. | வாமனன் | இடவயிறு | இளஞாயிறு | 4 வச்சிரம் | அரிவல்லபை; அரிப்பிரபை |
| 9. | சீதரன் | இடப்புயம் | தாமரைஒளி | 4 பட்டசவாள் | சார்ங்கினி |
| 10. | இருடிகேசன் | இடக்கழுத்து | மின்னல்ஒளி | 4 உழலைத் தடி[2] | தேவதேவி |
| 11. | பற்பநாபன் | முதுகு | சூர்ய ஒளி | 4 ஐம்படை | மகாலட்சுமி |
| | தாமோதரன் | பிடரி | இந்திர கோப ஒளி[3] | 4 பாசம் | சர்வலோக சுந்தரி சர்வாங்க சுந்தரி |

1. அமிழ்த உற்பவை—அமிழ்திற் பிறந்தவள். 2. உழலைத்தடி—கணையமரம். 3. இந்திர கோபம்—தம்பலப்பூச்சி. முதன் மழையின்போது தோன்றும் செக்கச்சிவந்த வடிவினது.

3. விபவம் : அவதார நிலை. அவதாரங்கள் 'நிலை வரம்பு இல பல பிறப்பு' என்றும் 'எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்' என்றும் கூறியபடி ஒரு வரன் முறையும் அளவும் இல்லாதனவாகும். அவதாரங்களை முக்கியம், கௌணம் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. முக்கிய அவதாரம் : 'ஆதியஞ்சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த' என்றபடி பரத்துவ நிலையில் பெற்றுள்ள ஆற்றல் முதலிய அனைத்துத் திருக்கல்யாண குணங்களும் இங்கும் நிறைவாக விளங்கும்படி சுத்த சத்துவத் திருமேனியுடன் தோன்றுவது முக்கிய அவதாரம். அது தேவ, மனித, விலங்கு, தாவரங்கள் என நான்கு வகைப்படும்.[1]

ஒரு விளககில் கொளுத்தின மற்றொரு விளக்கு தனக்குக் காரணமான முன்னைய விளக்கின் ஒளி முதலியவற்றில் குறைவற்று ஒளிர்வதுபோல், முக்கிய அவதாரமும் தனக்குக் காரணமான வியூகத்தின் குணங்களை முழுமையாகப் பெற்றிருக்கும்,

2. கௌண அவதாரம் : ஒரு செயலின் பொருட்டு, முன்பே பிறந்துள்ள ஒரு சேதனனிடத்து உட்புகுந்து (ஆவேசித்து) நிற்பது ஆவேச அவதாரம் அல்லது கௌண அவதாரம் எனப்படும். தனியாகத் தானே அவதாரம் எடுக்காமல், ஏதோ ஓர் சேதனனிடத்துத் தன் குணங்களை மட்டும் ஏறிடுவது கௌணம். குணம் என்ற சொல்லிலிருந்தே

---

1 பிரம, உருத்திரர்க்கு நடுவே அவதரித்த விஷ்ணு, இந்திரன் தம்பியான உபேந்திரன், அதிதியிடம் பிறந்த திரிவிக்கிரமன் முதலியன தேவ அவதாரங்கள். நர, நாராயண, இராம, கிருட்டினன் முதலியன மனித அவதாரங்கள். அயக்கிரீவ, மச்ச, கூர்ம, வராக, நர சிங்கம் முதலியன விலங்கு அவதாரங்கள். நைமிச வனத்தில் குட்டை மாமர (குப்ஜ ஆம்ர)மானது தாவர அவதாரம்.

கௌணம் என்பது பிறந்தது. அதற்கு குணத்தை மட்டும் ஏற்ற அவதாரம் என்று பொருள்.

கௌண அவதாரமாகிய ஆவேச அவதாரமும், சக்தி ஆவேசம், சொரூப ஆவேசம் என இருவகைப்படும்.

1. தன் ஆற்றலை மட்டும் ஒரு சேதனனிடம் செலுத்துவது சக்தி ஆவேசம்.

2. தன் குணங்களை மட்டும் ஒரு சேதனனிடம் செலுத்துவது சொரூப ஆவேசம்.

பரசுராமன், பலராமன் ஆகியோரிடம் இறைவன் தன் குணங்களை மட்டும் செலுத்தினான். ஆதலால் அவை சொரூப ஆவேசங்கள்.

பிரமன், சிவன், நெருப்பு, வியாசன், குபேரன் முதலானோரிடம் தன் ஆற்றலை மட்டும் செலுத்தினான். ஆதலால் அவை சக்தி ஆவேசங்கள். சொரூபம் என்பது குணம் என்றும், சக்தி என்பது ஆற்றல் என்றும் பொருள்படும். ஆவேசம் என்பது செலுத்துவது; ஏறிடுவது. சேதனன் என்பது உயிர்.

முக்தியை விரும்பும் முமுட்சுக்கள் முக்கிய அவதாரங்களையே வழிபடல் வேண்டும்.

ஏதோ ஒரு செயலுக்காக இறைவன், ஏதோ ஒரு சேதனனில் தன் குணங்களைத் தாற்காலிகமாகச் செலுத்துவதால், அந்தச் சேதனன் அகந்தையுடன் கூடியிருக்கக் கூடுமாதலால், கௌண அவதாரங்கள் முமுட்சுக்களின் வழிபாட்டுக்கு உரியன அல்ல என்பது ஆன்றோர் கொள்கை[1].

---

1 சங்ககாலத்தில் பெரும்பான்மையாக வழங்கி வந்த 'பலராம' வழிபாடு பின்னாளில் முழுவதும் மறைந்து போனதற்கு இதுவே காரணம் ஆகலாம். 'பூரி'யில் 'பலராம' வழிபாடு இன்றும் இருப்பினும், சீவைணவர் அந்தத் திருப்பதிக்குச் சென்று வழிபடும் வழக்கம் குறைந்து விட்டது.

கௌண அவதாரங்கள் உலக இன்பங்களில் விருப்பம் உடைய புபுட்சுக்களுக்கு மட்டுமே வழிபடத் தக்கனவாகும்.

உயிர்கள் பிறப்பதற்கு வினைப்பயனே காரணம். ஆனால் இறைவன் அவதரிப்பதற்கு வினைப்பயன் காரணம் அன்று. ஏனெனில் அவன் வினைப்பயன்களைக் கடந்தவன். அவன் தன் விருப்பமே காரணமாக அவதரிககின்றான்.

"பிருகு முனி சாபத்தால் இறைவன் பிறப்பெடுத்தான் என்று இதிகாச, புராணங்கள் சொல்கின்றனவே! அவ்வாறு ஆயின் இறைவன் தன் விருப்பின் காரணமாக மட்டுமே பிறக்கின்றான் என்பது எப்படிப் பொருந்தும்?" என ஓர் ஐயத்துக்கு இங்கு இடம் உண்டு.

பிருகுமுனி சாபத்தால் இறைவன் பத்துப் பிறப் பெடுத்தான் என்பது அறியாமையாகும்.

சாபத்தால் பிறப்பெடுத்தான் என்பது உண்மையானால், ஒவ்வொரு பிறப்புக்கும் தாய் தநதையர் இருத்தல் வேண்டுமே!

மதுகைடவரைக் கொல்வதற்காக எடுத்த மீன் அவதாரத்துககுத் தாய் யாா? தந்தை யார்?

கடலைக் கடைந்த போது எடுத்த ஆமை அவதாரம் எந்த ஆமையின் முட்டையிலிருந்து தோன்றியது?

கடலில் மூழ்கிய இவ்வுலகை மேலே ஏந்திய வராகத்தை எந்தப் பன்றி ஈன்றது?

இரணியனைக் கொல்லத் தோன்றிய நரசிங்கத்துக்குத் தூண் தாயின் கருப்பையா?

"மாதம்பத் துக்கொங்கையும் அல்குல் தேடும் வயிறும்
இல்லை.
மாதம்பத் துக்குறியும் கண்டிலேம் வந்துதோன்றினை! பூ
மாதம்பத் துக்குஎதிர் மார்பா! அரங்கத்து வாழ்பரந்தா
மா'தம் பத்துக் கருத்து இல்லார் பிறப்பு என்பர்
வையகத்தே"

என்ற திவ்விய கவியின் வாக்கு இங்கு நினைக்கத் தகும்.

பிறக்கும்போதே ஐம்படையும் நால் தடந்தோளும் பொன்னாடையும் அரவிந்தப் பாவை வாழும் மார்பும் கொண்ட தனித்தன்மை கொண்ட திருவுருவம் காட்டிப், பெற்றோர் வேண்டியமையால் சாதாரணமான சிறு குழவியாக மாறிய கண்ணனை வினைப்பயனால்—சாபததால்—பிறந்தான் என்பது எங்ஙனேயோ?

பக்தவத்சலனான இறைவன், உலகினர் விருப்பத்தின் பொருட்டே பிருகுமுனியின் சாபத்தை ஏற்றருளினான்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் அவதாரம் தன் விருப்பின்படி ஆனது. பிருகு சாபம் என்பது ஒரு போக்குரை (வியாஜம்) மட்டுமே அவதார காரணம், அவன் திருவிளையாடலே என்பது விளங்கும். இலிங்க புராணம் இதனை விளக்கமாகக் கூறுகின்றது.

"பரந்து எங்கும் கரந்து உளன் ஆன இறைவன் ஒரு வடிவை ஏற்றது, வினைப்பயனால் துன்புற்று எடுத்த விலங்கு. தாவரங்கள் போல் அன்று. இன்பத்துக்குக் காரணமான தேவ உடல் போலும் அன்று. இன்பமும் துன்பமும் விரவிய மனித உடல் போலும் அன்று. உலகைக் காப்பதன் பொருட்டே உடல் எடுக்கின்றான்" என்று விஷ்ணு புராணம் விரிவாக விளக்குகின்றது.

"இறைவன் பிறப்புக்குக் காரணம் அவன் விருப்பமே. பிறப்பிலியானவன் (தன் விருப்பத்தால்) பல

பிறவி எடுக்கின்றான்'' என்று வேதங்களும் ''பிறப்பு இல் பல் பிறவிப் பெருமான்'' என்று தமிழ் வேதமும் குறிப்பிடுகின்றது.

''வசுதேவ புத்திரனை மனிதன் என்று எண்ணி ஒரு போதும் அவமதித்து விடாதீர்கள். அவனே பரம ரகசியப் பொருள், பரமபதம், பரப் பிரம்மம், அட்சரம், அவ்யக்தம், சனாதனம், பரஞ்சோதி, பரமசுகம், பரம சத்தியம். எந்த மூடர் இருடி கேசனை மனிதன் என்று கருதுகிறார்களோ அவர்கள் மக்கட் பதடிகள் ஆவர்'' என்று பிரமன் தேவர்க்குக் கூறினான் என்று மகாபாரதம் விளக்குகின்றது.

''நான் பிறப்பிலியாய் அழிவற்றவனாய் உயிர்களுக் கெல்லாம் தலைவனாயிருந்தும் என் விருப்பத்தினாலேயே, என்னுடைய தனித்துவம் வாய்ந்த திருவுருவை வேறு ஒரு திருவுருவில் புகுத்திக் கொண்டு பிறக்கிறேன்'' என்றும்,

''எவ்வெக் காலங்களில், அறத்துக்கு தாழ்வும் மறத்துக்கு வாழ்வும் உண்டாகின்றனவோ, அக்காலங்களில் என்னை நானே படைத்துக் கொள்கின்றேன்'' என்றும்,

''என் பிறப்பும் செயலும் தெய்வீகமானவை; வினை வயப்பட்டதன்று என்று எவன் உண்மையாக அறி கின்றானோ, அவன் உடலைவிட்டு மறு பிறப்பை அடை வதில்லை. என்னையே அடைகின்றான்'' என்றும், கீதையில் இறைவன் அருளிச் செய்கையாலும் அவன் அவதாரத்துக்குக் காரணம் வினைப்பயன் அன்று; விருப்பம் மட்டுமே என்பதை அறியலாம்.

இவ்வாறு பிறப்பிலியான பெருமான் எல்லாவகைப் பிறப்பிலும் பிறப்பதற்குப் பயன் யாது?

''நல்லாரைக் காக்கவும் அல்லாரைப் போக்கவும் அறம் தலை நிறுத்தவும் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்'' என்று இறைவன் தானே கீதையில் அருளிச் செய்துள்ளான்.

அதன்படி ஆராத காதலுடன் தன்னைக் கண்ணாரக் கண்டு அனுபவிக்க விரும்பும் நல்லோர்க்குத் தன் வடி வழகையும் அற்புதச் செயல்களையும் காட்டிக் காப்பதும், அவர்களின் பகைவரை மாய்த்தொழிப்பதும் நிலையழிந்து கிடக்கும் வேத நெறி தழைததோங்கச் செய்வதும் அவன் பிறவி எடுப்பதன் பயனாம்.

அறத்தை நிலை நாட்டும் பொருட்டு கண்ணனாக அவதரித்துபோது, ஐம்பெரும் பாவங்களில் ஒன்றான பிறன் மனை நயத்தல் செயதான் என்று சிலர் கூறுகின்றார்களே! அது, இறைவன் இயல்புக்கு எப்படிப் பொருந்தும்?

அனைத்துக்கும் அந்தர்யாமியாய் இருப்பவன் இறைவன். அனைத்துத் தீவினைகளுக்கும் எதிர்தட்டாக—அப்பாற்பட்ட வனாக—இருப்பவன் அவன். அவன் பிறன்மனை நயத்தல் செய்வானோ? அவன் சக்கரவர்த்தித் திருமகனாக அவ தரித்துத் தந்தை சொல் காக்கத் தண்டகாரணியம் எழுந் தருளினான்.

''வாராக! வாமனனே! அரங்கா! வட்ட நேமிவல
வா! ராகவா! உன் வடிவுகண்டால் மன்மதனும்மட
வார் ஆக ஆதரம் செய்வன் என்றால், உய்யும் வண்ணம் எங்கே!
வார் ஆக வாச முலையேனைப் போல் உள்ள மாதருக்கே''

என்ற திவ்வியகவியின் வாக்குப்படியும் ''ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!'' என்ற கம்பர் காவியப் படியும் ஆடவரையும் பெண்உடை உடுக்கும்படி ஆசை கொள்ளச் செய்யவல்ல இறைவனது பேரழகுப் பெருங்கடலுள் அழுந்தி, அந்த வனவாசிகளான அருந்தவ முனிவர், தம்மைப் பெண்ணாகவும் அவனை ஆணாகவும் கருதி அனுபவிக்க ஆசைப்பட்டனர்.

விரும்பியார் விரும்பிய வண்ணம் அருளும் பெருங் கருணைக் கடலான இறைவன், "முனிவீர் ஆசையை முனிவீர்![1] நான் அடுத்துக் கண்ணனாக அவதரிப்பேன். அப்போது நீவிர், ஆயர் மங்கையராக அவதரிப்பீர். அப்போது நீங்கள் பிடிக்கவும் கட்டவும் அணைக்கவும் எளியனாகி, உம் தாபம் தீர்ப்பேன்" என்றான். அவன் வரம் அளித்தவாறு வெண்ணெய்க் களவைக் காரணமாக்கி அவர்கள் திட்டவும், கட்டவும் எளியனாக அவர்களுடன் விளையாடி அவர்கள் விருப்பம் நிறைவேற்றினானே தவிர, வேறு தகாத செயல் செய்தான் என்பது அறியாமையாகும்.

ஆயர் மாதருடன் எம்பெருமான் விளையாடிய பருவம் ஏழு என்று பாகவதம் கூறுகின்றது. ஏழு வயதுச் சிறுவன் காம இன்பம் துய்த்தான் என்றால் கைகொட்டிச் சிரியாரோ?

பரந்த தண் பரவையுள் நீர் தொறும் பரந்த அண்டம் இது எனப் பரந்து, கரந்த சில் இடந்தொறும், இடம் திகழ் பொருள் தொறும் பரந்து கரந்து உறையும் அந்த அமலன் காண்கிலாத உறுப்பும் உண்டோ? மாயையாம் கயிறு கொண்டு உயிர் யாவையும் கட்டும் மாயப் பெருமானை மாயை என்ன செய்யும்! காமம் அருகில் நெருங்காமல் காத தூரம் ஓடிப் போகாதா?

உடல் முழுவதும் பரவி ஒளித்து உறையும் அப்பன் உலகினைக் காக்க மனித உருவாய் வந்து, ஆய்ச்சியர் உடலைத் தொட்டு விளையாடியது குற்றமாகுமா? முக்தி நிலையில் அவன் முக்தர்களையும் முக்தர்கள் அவனையும் அனுபவிப்பர் என்றுதானே ஆழ்வார்களின் அருளிச் செயலால், நாம் யூகித்து அறிகின்றோம்.

சரணம் அடைந்தவர்க்கு ஆட்பட்டவனான அவன் அவதார விளையாட்டை அறிகிற்பார் யார்?

---

1 முனிவீர்—வெறுங்கள்.

உத்தரை ஈன்ற கரிக்கட்டையைத் தேவரும் முனிவரும் யாவரும் அறிய "நான் நித்திய பிரமசாரியாவது உண்மை யாயின், இந்தக் கரிக்கட்டை குழவி ஆகுக!" என்று திரு வடியால் தீண்டியபோது அது உயிர் பெற்று உருப்பெற்று அரசர்க்கு அரசன் ஆனதே! அவன் ஆய்ச்சியருடன் தகாத செயலில் ஈடுபட்டிருந்தால் இந்த அற்புதம் நிகழ்ந்திருக்குமா?

பங்கிம் சந்திர சட்டர்ஜி என்பவர் வங்கம் தந்த தங்கம் வந்தேமாதரம் என்ற மந்திரத்தை முதல் முதலில் முழங்கிய முனிவர். அவர் பிரம்மமாஜம் என்ற புதுச் சமயத்தைக் கைக் கொண்டவர். அந்த சமாஜத்தார் உருவ வழிபாட்டை ஒப்புவதில்லை. வேதம் முதலிய நூல் பிரமாணங்களையும் ஏற்பதில்லை. இராமனையும் கண்ணனையும் இறைவன் அவதாரங்கள் என்று நம்புவதில்லை.

ஆயினும் பங்கிம் சந்திரர் கண்ணன் வரலாற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பல ஆண்டுகள் பல நூறு நூல்களை ஆய்ந்து "கிருஷ்ண சரித விமரிசம்" என ஓர் அரிய நூல் எழுதினார்.

அதில் கண்ணன் செய்ததாகக் கூறும் பொய், களவு, பரதாரகமனம் முதலியவற்றுக்கு ஆதாரம் எங்குமே இல்லை என்று நிறுவியுள்ளார். கண்ணன் ஆயர் பாடியிலிருந்து வட மதுரை சென்றபோது அவனுக்கு வயது பதினான்கு என்று அனைவரும் ஒப்பும்படி பணித்துக் காட்டுகின்றார் "வந்தே மாதரம்" என்ற தேசபக்தி மந்திரம் தந்த பங்கிம்.

வயது வந்த ஆய்ச்சியர்கள் தாம் பெற்ற மகன் வயதுடைய சிறுவனுடன் அன்பு ததும்ப ஆர்வத்துடன் விளை யாடி மகிழ்ந்திருப்பரே தவிர, வேறு விபரீத எண்ணத்துடன் பழகியிருப்பரோ? என்று வினவுகின்றார் பங்கிம்.

விரும்பும் பொருள் இனி ஏதும் இல்லை என்னும்படி அனைத்துச் செல்வங்களையும் இன்பங்களையும் பெற்ற

இறைவனுக்குக் களங்கம் கற்பிப்பவர், நரகத்து அழுந்துவர் என்பது திண்ணம்.

**4. அந்தர்யாமித்வம் :** உயிர்களுக்குள் உயிராகப் பரவி அவற்றின் செயல்களை நியமிப்பவனாக இருத்தல் இறைவனின் அந்தர்யாமித்வமாம்.

சொரூப வியாப்தி[1] என்றும் விக்கிரக வியாப்தி[2] என்றும் அந்தர்யாமித்வம் இருவகைபபடும்.

**1. சொரூப வியாப்தி :** நல்வினை காரணமாக வரும் சொர்க்கமும் தீவினை காரணமாக வரும் நரகமும் நல்வினை, தீவினையாகிய இருவினை காரணமாக வரும் பிறப்பும் ஆகிய நிலைகளை உயிர்கள் அடையும். இந்த மூன்று நிலைகளிலும் உயிர்களுக்குத் துணையாய், எப்போதும் விடாதே அந்தர் யாமியாய்ப் பரவி அதன் இருப்பையே நோக்கிக் கொண் டிருக்கும் நிலை சொரூப வியாப்தியாம்.

**2. விக்கிரக வியாப்தி :** சேதனருடைய நெஞ்சத் தாமரையில் புகையில்லாத சுடரைப் போல பெருவிரலள வான இறைவன் பொலிந்துள்ளான் என்று கடோபநிடதம் கூறுகின்றது.

''புந்தியில் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகன்'' என்று அருளிச் செயல் பேசுகின்றது,

பெருவிரலளவான அழகிய திருவுருவுடன் உயிர்களுக்குத் தியானத்தில் விருப்பம் உண்டான போது, தியானம் செய்வதன் பொருட்டும் புத்தி முதலியவற்றை நியமிப் பவனாய்க் காப்பதன் பொருட்டும் பெரிய பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் நிலை விக்கிரக வியாப்தி எனப்படும்.

---

1 சொரூப வியாப்தி—குணங்களில் பரவுதல்.
2 விக்கிரக வியாப்தி—உடலில் பரவுதல்.

5. அர்சை :

''தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர்—தமர் உகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்''

என்று ஆழ்வாரும்

''ஆள் ஆனவர் கண் களி கூர் அரங்கத்து அரவணைமேல்
காளாசலம் எனக் கண்டு கொண்டேன்—மறை காணல் ஒண்ணா
தாள் ஆயிரம் செழும் பொன்முடி ஆயிரம் தாம நெடுந்
தோள் ஆயிரம் திருக் கண்ஆயிரம்கொண்ட சோதியையே''

என்று திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் கூறிய படி, தனக்கென ஓர் உருவம் தனக்கென ஒரு பெயரும் இல்லாத இறைவன், தன் அடியார்கள் பொன், வெள்ளி, செம்பு, மரம், கல், சுதை, மண் முதலியவற்றுள் எதனால் எவ்வுருவை ஏறி யருளச் செய்து வழிபடுவார்களாயினும், அவ்வுருவில், தனித்தன்மை வாய்ந்த தன் திவ்யமங்களத் திருமேனியில் பண்ணும் விருப்பத்தைப் பண்ணி, அதுவே தனக்குத் திருமேனியாகவும், அடியார் உகந்து வைத்த பெயரே தனக்குப் பெயராகவும் ஏற்றுக் கொள்வான்.

அனைத்தையும் ஒரே காலத்தில் அறியும் அறிவுடையனாக இருந்தும் ஒன்றும் அறியாதவனைப் போலவும் எல்லாம் செய்யவல்ல ஆற்றலுடையவனாக இருந்தும் ஒன்றும் செய்ய மாட்டாதவனைப் போலவும் விரும்பியன அனைத்தும் அடைந்தவனாக இருந்தும் ஒனறும் இல்லாதவனாய் ஏதேனும் ஒன்றைத் தருபவருடைய சமயத்தை எதிர் பார்த்திருப்பவனைப் போலவும் எல்லாவற்றையும் காப்பவனாக இருந்தும் அடியாரால் காக்கப்படுபவன் போலவும் இருப்பான்.

தான் உடையவன், அடியார் தன்உடைமை என்னும் உண்மை நிலைக்கு மாறாக, அடியார் உடையவராய்த் தான் அவர்க்கு உடைமையாய் அவர்கள் விருப்பம்போல் செய்து கொள்ளும்படி, உரிமையற்றவனாய்த் தன்னை மாறாடி வைத்துக் கொள்வான்.

கண்ணுக்குப் புலனாகாமையால், 'கட்கிலி' எனப்படும் தான் அடியார்களின் கண்களுக்கு இலக்காகி இருப்பான்.

அடியவர் செய்யும் குற்றங்களைக் காணாக் கண்ணிட்டு எல்லா வகையிலும் எளியவனாய் இருப்பான்.

அவன் கோவில் கொள்ளும் இடங்கள் நான்கு வகைப் படும். தானாக உண்டானது, தேவர்கள் படைத்தது, முனிவர் அல்லது சித்தர் அமைத்தது, மானுடர் நிறுவியது என்பன அவை. அவை முறையே சுயம் வியக்தம், திவ்யம், ஆர்ஷம் அல்லது சைத்தம், மானுடம் எனப் பெயர் பெறும்.

அவை தவிர, அடியார்களின் திருமாளிகைகளிலும் சிறு குடில்களிலும் எழுந்தருளியிருப்பான். அவ்வாறு எழுந் தருளும்போது, இன்ன இடம், இன்ன காலம், இன்ன தகுதி, இன்ன முறைமைகள் கண்டு தான் எழுந்தருளவேண்டும் என்று எண்ண மாட்டான். எங்கும் எப்போதும் எவர் மனையிலும் எம்முறையிலும் எழுந்தருளுவான்.

இந்த அர்ச்சாவதாரமானது, வாத்சல்யம் (தாயன்பு), தலைமைத் தன்மை,[1] யாருடனும் சமமாகப் பழகும் இயல்பு[2] எளிமை என்னும், அடியடைந்தார்களின் வாய்ப்புக்குத் தடை நேராத குணங்கள் நிரம்பியிருக்கும்.

அறிவு, ஆற்றல், பயன், நிறைவு என்னும் அடியார்களின் செயலுக்குத் தடையாகாத குணங்களும் குறைவற்று

1 சுவாமித்வம். 2. செளசீல்யம்.

இருக்கும். மேலும் நேர்மை, கருணை முதலிய கணக்கற்ற குணங்களும் மண்டியிருக்கும்.

அறநூல் கற்பித்துத் திருந்த இயலாதபடி புலன் இன்பங்களில் ஈடுபாடு கொண்டவராய், இறைவனாகிய தன் பக்கல் முகம் கொடாத சேதனருக்கும் வெறுப்பை விலக்கி, விருப்பை உண்டாக்குவதாகவும் இருக்கும் அர்ச்சை.

விருப்பம் உண்டானால் இறைவன் ஆகிய தன்னைப் பற்றுவதற்கு வேறு வழி தேடாமல், தானே வழியாகவும் அது இருக்கும்.

அவ்வாறு வழியாகப் பற்றினால், பலனை அனுப்பவிப்பதற்கும் பரமபதம் முதலிய வேறு இடங்களுக்குப் போக வேண்டியதில்லை.

''அணி அரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே'' என்றபடி அனுபவிக்கும் பயனும் தானேயாய் இருப்பது அர்ச்சை.

## இறை

அமலன்அவி யாதசுடர் அளவில்லா ஆரமுதம்
அமலஉரு, குணங்கள், அணி ஆயுதங்கள், அடியவர்கள்,
அமலஅழி யாதநகர் அழிந்துஎழும்கா வுடன்எல்லாம்
கமலையுடன் அரசாளும் கரிகிரிமேல் காவலனே.

உள்ளபொருள் அனைத்துக்கும் உருவநிலை கருமங்கள்
தெள்ளிசைவின் வசமாக்கித் திகழ்ந்துஉயிராய்
உறைகின்றான்
நள்ளிருள்தீர்த்து அடியவர்க்கு நலம்கொடுக்கும்
திருவுடனே
வள்ளல் அருளாளன் எனும் வாரண வெற்பு இறையவனே!

—அருத்தபஞ்சகம், தேசிகப் பிரபந்தம்.

தன்னை இறையைத் தடையைச் சரண் நெறியை
மன்னுபெரு வாழ்வைஒரு மந்திரத்தின்—இன்னருளால்
அஞ்சிலும்கேடு ஓட அளித்தவன்பால் அன்பிலார்
நஞ்சிலும்கேடு என்று இருப்பன் நான். —சப்த காதை.

இதுகாறும் கூறியவற்றின் சாரமாக நம் பிள்ளை ஈடு குறிப்பிடுவது இங்கே நினைத்தல் தகும்.

பரம்பொருளின் இயல்பு, எல்லாக் குற்றங்கட்கும் எதிர்த் தட்டாய் இருப்பது.

மங்களம் பொருந்திய நற்குணங்களுக்கு எல்லாம் இருப்பிடமாய் இருப்பது.

தன்னின் வேறான எப்பொருளுக்கும் வேறுபட்டிருப்பது.

எங்கும் நிறைந்திருப்பதனால், இன்ன இடத்தில் இருப்பது என்று இடத்தாலும், என்றும் உள்ளதாதலின் இன்ன காலத்தில் இருப்பது என்று காலத்தாலும், எல்லாப் பொருள் களும் தனக்கு உடலாகவும் தான் உயிராகவும் தனக்கு வேறு ஓர் உயிர் இல்லாமையாலே வேறு ஒரு பொருளைக் கொண்டும் அறிய முடியாதது.

அறிவு, இன்ப வடிவாய், ஞானம், பலம், ஐசுவரியம், சீலம் முதலான எல்லை இல்லாத நற்குணங்கட்கு எல்லாம் பெருங் கடல் போன்றது.

திருமகள் கேள்வனாய்த் தன்னின் வேறுபட்ட எல்லாப் பொருள்களிலும் பரவுமிடத்தில் பிரகிருதித் தொடர்பு பெறாதது.

சுத்த சத்துவ மயமாய்த் தனக்கே உரிமையுடையது.

மலரின் மலர்ச்சியினுடைய இள நலம் உடையது.[1]

தெய்வத் தன்மை பொருந்திய தன் நறுமணத்தால் நிறைந்த எல்லை இல்லாத திசைகளை உடையது,

எல்லோர்க்கும் பற்றுக்கோடாய் இருக்கும் திவ்விய விக்கிர கத்தைப் போன்று பரவி எல்லோரையும் தாங்கிநியமிப்பது,

இப்படி எல்லாப் படியாலும் காப்பவனாகித் தலைவ னாக இருப்பது.

---

1 ''மணம்கமழ் தெய்வத்து இளநலம்'' என்ற திருமுரு காற்றுப்படைத் தொடர் ஒப்புநோக்கத் தகும்.

# உயிர்

உடல், பொறிகள், மனம், பிராணன், அறிவு ஆகியன ஏதும் அல்லாதது உயிர்.

அறிவு. இன்ப மயமானது அது. என்றும் உள்ளது. தோற்றமும் கேடும் இல்லாதது. கட்புலனுக்குத் தோற்றாதது. சிந்தனைக்கு எட்டாதது. உறுப்புக்கள் இல்லாதது, மாறுபாடு அற்றது. தீயால் வேகாதது. காற்றால் உலராதது. நீரால் நனையாதது. படைக்கலங் களால் சிதைக்கப் படாதது. இறைவனால் செயல்படுவது. இறைவன் ஒருவனுக்கே ஆட்பட்டது. தனக்கோ பிறர்க்கோ உரிமையாகாதது.

உயிருக்கு இருப்பிடமாயிருப்பது உடல். அந்த உடல் பரு உடல், நுண் உடல் என இரு வகைப்படும்.

**1. பரு உடல்:** நிலம் நீர் தீ காற்று வான் என்னும் ஐம்பூதக் கலப்பால் ஆனது. "பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம்" என்பர் கம்பர். அது ஐம்பொறிகளின் வசப்பட்டது. தோல், உதிரம், ஊன், நிணம், எலும்பு, நரம்பு, சுக்கிலம் என்னும் ஏழு தாதுக்க ளால்[1] ஆனது. அதில் எழுபத்து ஈராயிரம் நாடிகள் உள்ளன.

**2. நுண்ணுடல்:** மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கு கரணங்கள், உயிர்க்காற்று மாசுக் காற்று தொழிற் காற்று ஒலிக்காற்று விரவுக்காற்று[2] என்னும் ஐந்து காற்றுக்கள், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து தன்மாத்திரைகள்[3] ஆகியவற்றால் உண்டாவது நுண்ணுடல். வினைப்பயனுக்கு ஏற்ப எடுக்கும் ஒவ்வொரு பிறப்பின்

---

1 தாது—மூலப்பொருள்.
2 பிராணன், அபானன், வியானன், உதானன். சமானன்.
3 தன்மாத்திரை—மூலப் பொருள்.

முடிவிலும், முன் உடலைவிட்டு மற்றொரு புத்துடலில் புகுவது, நுண்ணுடல், இப்படியே வீடு பெறும் வரை, பிறவியில் சுழல்வது—உழல்வது—அது.

1. **அகக்கரணம் :** கரணங்கள் என்பன, அகக்கரணம், புறக்கரணம் என இரு வகையின.

மனம் அகக்கரணம். அஃது அந்தக் கரணம் என்றும் அழைக்கப் பெறும். அது, புத்தி, அகங்காரம், சித்தம் எனச் சில நிலைகளை அடைவது; உடலில் கழுத்துக்கும் கீழ்ப் பகுதியை இடமாகக் கொண்டது.

அறிவுப் பொறிகள் ஐந்தும் செயற் பொறிகள் ஐந்தும் செயல்பட உதவுவது அகக்கரணம். அவன், அவள், அது என்று சுட்டிக் கூறப்படுகின்ற இருதிணை முப்பால் பொருள் களில் தாவித் தாவி எழுந்து நோக்குவது. ஒரு நிலையில் நிற்காத சங்கற்ப, விகற்பங்களை விளைவிப்பது அது.

முகத்தை இடமாகக் கொண்டு அனைத்துப் பொருள் களின் உருவங்களையும் குணங்களையும் உறுதிப்படுத்துவது மனத்தின் மற்றொரு நிலையாகிய புத்தி.

இதயத்தை இடமாகக் கொண்டு, பிறப்பு முதலிய துன்பங்கள் அனைத்துக்கும் அடிப்படையாய் 'நான், எனது' என்னும் செருக்கை வளர்த்துக் கொண்டிருப்பது மனத்தின் இன்னொரு நிலையாகிய அகங்காரம்.

உந்தியை இடமாகக் கொண்டது சித்தம். இதுவும் மனத்தின் மற்றொரு நிலையே ஆகும். மனத்தின் சங்கற்ப விகற்பங்களாகிய உறுதிப்பாடு, உறுதிப்பாடுஇன்மைகளை ஆராய்ந்து உறுதிப்படுத்துவது அது.

---

1 சங்கற்பம்—நினைவு. விகற்பம்—பெயர், சாதி, குணம், தொழில், பொருள் என்ற ஐந்தொடும் நினைவை வைத்துக் காண்பது.

மனத்தில் தோன்றும் 'நான், எனது' என்னும் அகப்பற்று, புறப்பற்றுக்களையும்[1] நினைந்து வருந்தித் தெள்ளிய ஞானத்தையும் தந்து, நன்மை தீமைகளைச் சிந்திக்கச் செய்து, உய்திக்குத் துணையாவதும் சித்தமே யாகும்.

**2. புறக்கரணம் :** மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிவுப் பொறிகள்[1] ஐந்தும் வாக்கு, பாதம், கை· எருவாய், கருவாய் என்னும் செயற் பொறிகள்[2] ஐந்தும் புறக் கரணங்கள் எனப்படும்.

இவற்றுள் மெய் என்பது. உடல் முழுவதையும் இடமாகக் கொண்டு, ஊறு (தொடு உணர்வினை) அறியும்.

வாய். நாவின் நுனியை அடைந்து, சுவையை அறியும்,

கண், கருவிழியின் நுனியை இடமாகக் கொண்டு, ஒளியை (உருவங்களை) அறியும்.

மூக்கு, மூக்கின் நுனியை இடமாகக் கொண்டு, மணத்தை அறியும்.

செவி, செவித் தொளையை இடமாகக் கொண்டு, ஒலியை அறியும்.

செயற் பொறிகள் ஐந்தனுள் வாக்கானது, மார்பு கழுத்து உச்சி கீழ்மேல் உதடுகள் நாக்கு பல் அண்ணம் ஆகிய வற்றை இடமாகக்கொண்டு, ஒலியை உண்டாக்கும்.

பாதமானது, உள்ளங்காலை இடமாகக் கொண்டு நடத்தல், ஓடுதல், ஆடுதல் முதலிய செயல்களைச் செய்யும்.

கை (பாணி), உள்ளங்கையை இடமாகக் கொண்டு கொடுப்பது, கொள்வது, அடிப்பது, பிடிப்பது முதலிய செயல் களைச் செய்யும்.

---

1 ஞானேந்திரியம்.
2 கன்மேந்திரியம்,

எருவாய் (பாயு), ஆசனத்துளையை இடமாகக் கொண்டு, கழிவுகளை வெளியே தள்ளும்.

கருவாய் (ஆண்குறி அல்லது பெண்குறி) சிறுநீர், சுக்கிலம்; சுரோணிதங்களை வெளியேற்றும்.

**காற்றுக்கள் :** உயிர்க்காற்று. மாகக் காற்று, தொழிற் காற்று, ஒலிக்காற்று, விரவுக்காற்று, எனக் காற்று ஐந்து என்பர். இதனுடன் விழிக்காற்று வீங்கற் காற்று, இமைக் காற்று, தும்மற் காற்று, கொட்டாவிக் காற்று என ஐந்தையும் கூட்டிப் பத்து என்பாரும் உள்ளனர். இவற்றைத் துணைக் காற்று என்பர்.

> "முத்தொடு பவளமும் பச்சையுமாய்
> முழுச்சுடர் ஒளிமணி விளக்கம் எனும்
> சுத்த அற் புதவித தசநாதம்
> தொனிக்குது எனக்குள்சுதி லயத்துடனே"

என்ற கருணையானந்த சுவாமிகள் பாடல் தசநாதம் (பத்துக் காற்று) என்றே கூறுகின்றது.

இவற்றுக்கு முறையே பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், தனஞ்சயன், கூர்மன், கிருகரன், தேவதத்தன் என்று வடநூலார் பெயரிடுவர்.

**1. உயிர்க்காற்று :** உந்தியை இருப்பிடமாகக்கொண்டு மேலெழுந்து, மூச்சுஆகி, உறக்கம் முதலிய நிலைகளில் உடலுக்குக் கேடுவாராமல் காத்து நிற்கும்.

**2. மாகக்காற்று :** கழுத்து முதல் எருவாய், கருவாய் வரை இடமாகக் கொண்டு, உண்ணும் சோறு, பருகும் நீர் முதலியவற்றைச் செரிக்கச்செய்து பசியை எழுப்பிக் கழிவு, சிறுநீர் ஆகியவற்றை வெளியேற்றும்.

**3. தொழிற்காற்று :** உடல்முழுதும் பரவிநின்று, பொறி களுக்கு ஆற்றலைக் கொடுத்து, உடலுக்கு உரமேற்றி,

உந்தியிடத்தினின்று உணவுகளை இழுத்துச் சென்று, அனைத்து நாடிகளிலும் செலுத்தும்.

4. **ஒலிக்காற்று :** கழுத்தை இடமாகக் கொண்டு, விழிப்பு நிலையில் பொறிகளைத் தத்தம் இடங்களில் நிறுத்தும். கனவு நிலையில் பொறிகளை ஒடுக்கி வைக்கும். இறப்புக் காலத்தில் பொறிகளைப் பல உலகங்களிற் கொண்டு போய்ப் பலனாக நிறுத்தி உள்ளிருந்து தரிப்பிக்கும்.

5. **விரவுக்காற்று :** உந்தியை இடமாகக் கொண்டு உடல் முழுதும் பரவி, சோறு, நீர் முதலியவற்றை வெவ் வேறாகப் பிரித்து, வைசுவானரம்[1] என்னும் பசித் தீயில் அவி சொரிந்து, அதனுடன் உண்டிகளைச் செரிப்பித்து, உடலுக்கு உரமூட்டி அனைத்துக்கும் ஆதாரமாகும்.

6. **விழிக்காற்று :** வயிறு, மயிர் ஆகிய இடங் களிலிருந்து விக்குள், மயிர்ச்சிலிர்ப்பு, வாந்தி, வேர்வை முதலியவற்றை உண்டாக்கும்.

7. **வீங்கற்காற்று :** எழுபத்து ஈராயிரம் நாடிகளிலும் நுழைந்து, உடலில் மாறுதல்களைச் செய்து, இறப்புக்குப் பின்பு உடலை வீங்கும்படி செய்யும். முன்னைய அனைத்துக் காற்றுக்களும் உடலினின்று நீங்கிய பின்பும், தான் மட்டும் எஞ்சியிருந்து உடலைப் பிளந்து கொண்டு வெளிப்படும்.

8. **இமைக்காற்று :** நெற்றியிலிருந்து இமைத்தல், இமைக்காமை முதலியவற்றைச் செய்யும்

9. **தும்மற்காற்று :** மூக்கிலிருந்து தும்மல், இருமல் முதலியவற்றைச் செய்யும்.

---

1 வைசுவானரம் என்பது, உண்ணல், தின்னல், விழுங்கல், பருகல் ஆகிய நால்வகை உணவுகளையும் செரிக்கச் செய்யும் பசித் தீ. கீதையில் இச்சொல் வந்துள்ளது.

**10. கொட்டாவிக்காற்று :** இடையை இடமாகக் கொண்டு சோம்பல் முரித்தல், சிரித்தல், பேசுதல், கொட்டாவி விடுதல் முதலியவற்றைச் செய்யும்.

**நிலைகள் :** உடலோடு கூடிய உயிர் அடையும் நிலைகள் ஐந்து என்பர். அவை விழிப்பு, கனவு, உறக்கம், தன்மய நிலை, தன்மயம் கடந்த நிலை.

நிலை என்பதனை அவஸ்தை என்பர் வட நூலார். இவை முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று வடநூலார் அழைப்பர்.

"யாவரும் எவையும் தானாய்
அவரவர் சமயந் தோறும்
தோய்விலன்"

என்ற பாசுரத்தில் ஆழ்வார் இந்த நிலைகளைச் சமயம் என்று குறிப்பிடுகின்றார்[1].

**1. விழிப்பு :** மெய் வாய் கண் மூக்குச் செவி என்ற பருப்பொறிகள் ஐந்தும் மனத்துடன் சேர்ந்து, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற புலன்கள் மூலம் இன்ப துன்பம் துய்க்கும் நிலை.

**2. கனவு :** உறக்கத்தில் பருப் பொறிகள் ஒடுங்கிய பின், நுண்பொறிகள் மனத்துடன் சேர்ந்து, விழிப்பு நிலையில் துய்த்தவற்றையும் அவற்றுக்குச் சமமான வற்றையும் பெற்று நிற்கும் நிலை.

---

1 "கனவின் கண் கண்டவற்றைப் புறத்து விடயங்களை அறிந்து வந்த நனவின் கண்ணே விளங்க அறிந்தவன், அப்போது அவற்றில் தொடக்குண்ணாதவாறு போலும், கற்ற நூல் சொல்லும் பொருளும் உள்ளத்தில் தோன்றி மிடத்து உள்ளம் அவற்றில் தொடக்குண்ணாதவாறு போலும் பிரபஞ்சத்தைக் கரணத்தால் படையாது, காவாது காத்து அழியாது அழித்தலால் அந்த அமலனுக்குப் பந்தம் இன்றாகும்" என்ற சிவஞானபோத உரைப்பகுதி ஒப்பு நோக்கத் தகும்.

3. **துயில் :** நுண் பொறிகளும் மனமும் ஒடுங்கி, உயிர்க்காற்று மட்டும் இயங்கிக் கொண்டிருக்க, உயிரானது பரம் பொருளுடன் கூடி இன்பம் துய்க்கும் நிலை.

4. **உறக்கம் :** உயிர்க் காற்றும் ஒடுங்கி, நுண்ணியதாக இருக்கும் மூர்ச்சை, தன்மயமான நிலை. இது துரியம் எனப்படும்.

5. **பேருறக்கம் :** நுண்ணிய உயிர்க் காற்றும் வெளி யேறிய இறப்பு நிலை. இது துரியா தீதம் ஆகும்[1].

**உயிரின் இயல்பு :** உடலே உயிர் என்பார் சிலர். பிராணனே உயிர் என்பார் சிலர். பொறிகளே உயிர் என்றும் மனமே உயிர் என்றும் அறிவே உயிர் என்றும் சாதிப்பார் சிலர்.

---

1 நம் உடம்பு உருவுடம்பு (தூல உடம்பு), அருவுடம்பு (சூக்கும உடம்பு), கருவுடம்பு (புரியட்டக உடம்பு) நுண்ணுடம்பு (கஞ்சுக உடம்பு), காரண உடம்பு என ஐந்து வகையாக அகக் கரணம், புறக் கரணங்கள் ஆகிய தததுவங்களைக் கொண்டு பருத்துக் காணப்படுகின்றது. இவை நம் உடம்புள் ஒன்றிற்கொன்று நுட்பமாய் அமைந்துள்ளன.

உருவுடம்பு தொழிற்படுங்கால் புருவ நடுவிலும் சுக்கும உடம்புக்குச் செல்லுங்கால் கழுத்திலும், புரியட்டக உடம்புக்கும் செல்லுஙகால் இதயத்திலும். கஞ்சுக உடம்பில் உந்தியிலும், காரண உடம்பில் உந்தியின கீழ் மூலா தாரத்திலும் நிற்கும். புருவ நடு முதலிய இடங்கள் உயிருக்கு உணர் வெல்லையாகும். புருவ மத்தியில் நிற்கும் நிலை சாக்கிரம் (விழிப்பு). கழுத்தில் நிற்கும் நிலை சொப்பனம் (கனவு), இதயத்தில் நிற்கும் நிலை சுழுத்தி (துயில்), உந்தியில் நிற்கும் நிலை துரியம் (உறக்கம்) மூலாதாரத்தில் நிற்கும் நிலை துரிய அதீதம் (பேருறக்கம்) எனப்படும்.

மேலே கூறிய ஐவகை நிலைகளும் அவத்தைகள் எனப் படும். ஆன்மா அஞ்சு அவத்தைத்து என்பது சிவஞானபோதம். அவத்தைத்து—அவத்தைகளை உடையது.

ஆழ்ந்து சிந்தித்தால், உடல், பிராணன், பொறிகள், மனம், அறிவு ஆகியவற்றினின்று முற்றும் வேறானது உயிர் என்பதனை எளிதில் உணரலாம்.

என் உடல், என் பிராணன், என் மனம், என் பொறிகள், என் அறிவு என்று பலரும் பலகாலும் கூறக் கேட்கின்றோம். இதனால், என் என்பது நான் என்ற உயிரைக் குறிப்பதையும் உடல் முதலியன அதன் உடைமைகளாகவும் வேறாகவும் இருப்பதையும் எளிதில் உணரலாம்.

மேலும் இந்த உடல் முதலியன விழிப்பு, கனவு நிலைகளில் மட்டுமே தோற்றுகின்றன. உறக்கம், மூர்ச்சை நிலைகளில் காணப்படுவன அல்ல.

ஆனால் உயிர் மட்டுமே எக்காலத்தும் எந்நிலையிலும் "நான்" என்று, தான் இருப்பதை உணர்த்திக் கொண்டே உள்ளது. ஆதலால், உடல் முதலியவை உயிர் அன்று. அவற்றினும் வேறாக இருப்பது உயிர் என்பது உறுதியாகின்றது.

பிறப்பு இறப்பு முதலியன உடலுக்கே உரியன. உயிர்க்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை என்று பகவான் பகவற்கீதையில் தெளிவாகக் கூறியுள்ளமையால், உயிர் அழியாத தத்துவம் என்பதனை அறியலாம்.

உயிர் இன்ப வடிவானது என்பர். 'கைவல்ல முக்தி நிலை' என ஒன்று உண்டு. பரமபதத்துக்கும் இடைப் பட்ட நிலை அது. அந்நிலை ஞான யோகத்தால் கிட்டுவது. அந்நிலை அடைந்தவர் பரமபதமாகிய இறையனுபவம் பெறவே இயலாது. ஞான யோகம் மேற்கொள்வதால், பிறவித் துயர் நீங்கும். ஆனால் இறையனுபவம் கிட்டாது. கைவல்ய நிலையில் உயிரானது தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டு இன்ப நிலையில் என்றென்றும் இருக்கும். ஆதலால், உயிர் இன்ப வடிவானது என்பதனை இதனால் அறியலாம்.

"நான் அறிகின்றேன்" என்று கூறுவதால், உயிரானது அறிவுக்கு இருப்பிடமாக - அறிபவனாக—உள்ளது என்று தேறுவதால் உயிரை அறிவு மயமானது என்பர்.

இவ்வாறு அறிவு, இன்ப மயமாக—ஞான ஆனந்த மயமாக—இருப்பதால், ஒருவாறு இறைவனுக்கு ஒப்பாக உயிரைக் குறிப்பிடுவதுண்டு.

ஆனால் உயிரின் அறிவு, இன்பங்களுக்குச் சுருக்கமும் விரிவும்—மலர்தலும் கூம்பலும்—உண்டு. இறைவனுடைய அறிவு, இன்பங்கள், மலர்தலும் கூம்பலும் இல்லாமல் என்றும் ஒருபடிப் பட்டிருக்கும். இதுவே இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாடு.

தான் அடிமை என்றும், இறைவன் தலைவன் என்றும், தன் இயல்பை அறியாமையே அன்றி, அறிந்தவற்றையும் மறந்து மறந்து அறிவதும் உயிருக்கு இயல்பு. முதல்வன் அவ்வாறு மறத்தலும் உணர்தலும் இலன். யாவையும் அறிந்த வாறே இருப்பது அவனுக்கு இயல்பு என்பது சிவஞான போதம்.

இத்தகைய உயிருக்கு அறியாமை, வினைப்பயன் பழக்கம், வழக்கம் (வாசனை, ருசி) ஆகியன இயல்பானவை அல்ல. இடை நடுவே வந்து ஒட்டியனவே! வந்தேறி களே!

நீர் மாறுபாடு அற்றது. குளிர்ச்சியே இயல்பாக உடையது.

> "ஒருபா னைக்கீழ் அக்கினி மண்டிடில்
> நிறைநீர் உட்ணா திக்கம்எ ழுந்திடும்"

என்ற குரலை இராமாநுசதாசர் வாக்குப்படி, அந்த நீரிலே முன்பு இல்லாத வெப்பமும் கொதிப்பதால் ஒலியும் உண்டா வதைக் காண்கின்றோம்,

அதுபோல் அறிவும் இன்பமுமே இயல்பாகக் கொண்ட உயிர், முக்குணங்களுக்கு இருப்பிடமான உடலாகிய அசித்தின்[1] தொடர்பால், அறியாமை முதலியவற்றைச் செயற்கையாகப் பெறுகின்றது.

அறியாமை : அறியாமை மூன்று வகைப்படும். 1. அறியாமை, 2. ஐயம், 3. திரிபு என்பன அவை. அறியாமையை அவித்யை என்பர்.

1. அறியாமை : இயல்பாக உள்ள அறிவு, வினைப் பயனால் வெளிப்படாமல் இருப்பது. அது 'ஞான அனுதயம்'[2] எனப்படும். அறிவு வெளிப்படாமை என்பது அதன் பொருள்.

2. ஐயம் : இது 'அன்யதா ஞானம்' எனப்படும். ஒரு பொருளைக் கண்டவுடன், இது இன்னதுதான் என்று துணிவு பிறவாமல் நிற்றலாகிய பலதலை உணர்வு. (அன்யதா—மாறுபட்ட).

தூரத்தே ஒரு பொருளைக் கண்டு, அது "மரமோ, மனிதனோ!" என்று தெளிவாக உணராமல் ஐயமுறுவது ஐயம்.

3. திரிபு : இது 'விபரீத ஞானம்' எனப்படும்! (விபரீதம்—மாறுபாடு), ஒரு பொருளை உள்ளபடி உணராமல், வேறு ஒரு பொருளாகத் துணியும் உணர்வு. கானலை நீர் என்றும் இப்பியை வெள்ளி என்றும் துணிவது திரிபு.

இருவினை : சொல் மனம் உடல் ஆகிய முக்கரணங்களால் செய்யப்படும் நல்வினை, தீவினை இருவினை எனப்படும்.

---

1 அசித்து—உயிர் இல் பொருள். பிரகிருதி, அசேதனம் என்பதும் அதுவே. அப்ரகாசம் என்பர் சைவர்.

2 அனுதயம்—(அன் + உதயம்) உதயம் ஆகாத நிலை.

1. **நல்வினை :** பலவகையான இம்மை மறுமை இன்பங்களுக்குச் சாதகமாக அமைவது நல்வினை.

2. **தீவினை :** செய்யத் தகாத தீய ஒழுக்கங்களை மேற்கொள்ளல், செய்ய வேண்டிய கடமைகளைப் புறக் கணித்தல், பகவனிடம் குற்றப்பாடு, அடியாரிடம் குற்றப் பாடு, பிறர்பால் பொறாமையாகிய குற்றப்பாடுகள் தீவினை எனப்படும்.

**பழக்கம் வழக்கம் :** புலன் இன்பங்களில் அறிந்தே ஈடுபடும் விருப்பம் பழக்கம். இதனை 'ருசி' என்பர்.

முன்பு செய்து பழகிய—செய்து பழகிப் போன—செயல் களைத் தாம் அறியாமலேயே மீண்டும் செய்யத் தூண்டுவது வழக்கம். இது வாசனை எனப்படும். இது பழக்கத்தின் முதிர்ந்த நிலை.

ஒருவன் முதன் முதலில் மூக்குப் பொடி போட விரும்பு கின்றான். விரும்பிப் போடுகின்றான். ருசியால் அவன் செய்யும் செயல், பழக்கமாக வளர்கின்றது. பழக்கம் முதிர்ச்சியாகி பின்பு, தன்னை அறியாமலேயே அவன் கை அச் செயலைச் செய்கின்றது. வேண்டா என்று முயன்றாலும் அச்செயல் தொடர்கின்றது. அந்தத் தொடர்ச்சி தான் வழக்கம்; அதுதான் வாசனை. வாசனையை வாதனை என்று தமிழில் எழுதுவர். வாதனை என்பதற்குத் துன்பம் என வேறு ஓர் பொருளும் உண்டு. முதலில் ருசிக்குத் தொடங்கிய செயல் வாசனையாக முதிர்ந்து, பின்னர் துன்பமாக உருவெடுக்கின்றது. ஆதலால் முதலிலேயே பின் விளையப் போகும் தீமையை எண்ணி விழிப்பாக இருப்பது நலம் பயக்கும்.

இந்த வழக்கம், அறியாமையால் நேருவது, ஆசையால் நேருவது, உலக இன்பத்தின் அவாவால் நேருவது என மூன்று வகைப்படும். இவை முறையே அவித்யா வாசனை, காம வாசனை, பிரகிருத வாசனை எனப்படும்

அடிமைத்தன்மை : உயிர்கள் அனைத்தும் எம் பெருமானுக்கே அடிமைகள். உயிர்களிலிருந்து பிரிக்க முடியாத இயல்பு, அடிமைத் தன்மையே என்று திரு மந்திரத்தின் முதற் பதமான ஓங்காரம் விளக்குகின்றது.

சந்தனம், பூசிக் கொள்பவர்க்கும் மலர், சூடுகின்றவர்க்கும் தாம்பூலம், நுகர்கின்றவர்க்கும் ஆடை, அணிபவர்க்கும் அணி கலன், அலங்கரிப்பவர்க்கும் மட்டுமே பயன்படுவன.

அவற்றைப் பயன்படுத்துவோர், தாம் விரும்பிய யாருக்கும் அவற்றை உரிமை ஆக்கலாம். சந்தனம் முதலிய வற்றுக்குத் தனியான விருப்பம் இல்லை. சந்தனம் முதலிய வற்றின் இயல்பு, பிறர்க்குப் பயன்படுவன அன்றித் தமக்குத் தாமே பயன்படுவன அல்ல.

அதைப்போல உயிரானது அறிவுடையதாயிருப்பினும், தலைவன் (சேஷி) ஆன இறைவன் தொண்டுக்கே பயன்படும் இயல்புடையது. அவன் விரும்பினால், தன் அடியார்க்குப் பணி செய்யவும் ஆளாக்கி விட இயலும். இறைவன் செயலை மறுக்கும் உரிமை உயிருக்கு இல்லை.

உயிர் பலவே : உலகில் உயிர் ஒன்றே என்று வேதாந்திகள் கூறுவர். ஆதலால் அவர்கள் 'ஏக ஆன்ம வாதிகள்' என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால், உயிர்கள் பல என்பதே வைணவரின் உறுதியான கொள்கை. சைவரும் அப்படியே கொள்கின்றனர்.

சில நூல்கள் உயிர் ஒன்றே என்று கூறுவதாகத் தெரி கின்றதே! உயிர்கள் பல என்பதற்குச் சான்று யாது?

பலவாயுள்ள உயிர்கள் அறிவு, இன்பம், அடிமைத் தன்மை முதலியவற்றால் வேற்றுமையின்றிச் சமமா யிருப்பதால், உயிர் ஒன்றே என்று சில நூல்கள் கூறுகின்றன

என்று கோடல் வேண்டும். உயிர் ஒன்றே என்பதற்கு, உயிர்கள் ஒரே இயல்பை உடையன என்பதே அந்த நூல்கள் கருதிய பொருள்.

இவ்வாறு பொருள் கொள்ளா விடில், ஓர் உயிர் இன்ப முறும் காலத்தில் மற்றோர் உயிரும் இன்பமுறல் வேண்டுமே அன்றித் துன்பமுறல் ஆகாது அன்றோ?

"ஓர் உயிர் இன்புறும்போது, மற்றோர் உயிர் துன்புறு வதற்குக் காரணம் உயிர் பல என்பதால் அன்று. உடல் வேறுபாட்டாலேயே" என்றும் சிலர் வாதிடக் கூடும்.

இன்புறுவதும் துன்புறுவதும் உடல் வேறுபாட்டாலே யாகில் ஒரு கையை நெருப்பிலும் ஒரு கையை நீரிலும் வைத்தால் ஒரே காலத்தில் வெப்பமும் குளிர்ச்சியும் உணர்வது போல், ஓர் உயிரின் இன்ப துன்பங்கள் பிறி தொன்றற்கும் உண்டாதல் வேண்டும்.

சௌபரி என்பவருக்கு ஐம்பது மனைவியர். ஒரே காலத்தில் ஐம்பது உடல்களை எடுத்துக் கொண்டு ஐம்பதின் மனரயும் இன்புறுத்துவார். அப்போது அந்த ஐம்பது உடல் களிலும் உண்டாகும் இன்ப துன்பங்களை அவர் அறிந்து கொண்டிருப்பார் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது.

அந்தச் சௌபரியைப் போலே,ஓர் உயிர் துய்க்கும் இன்ப துன்பங்களை மற்றோர் உயிர் அறிதல் வேண்டும். அவ்வாறு இல்லாமல், இன்ப துன்பங்கள் உலகில் ஒவ்வோருயிர்க்கும் வெவ்வேறாக இருப்பதால், உயிர் ஒன்றே என்பது பொருந்தா வாதம் ஆகும்.

உயிர் பலவாக இல்லாவிட்டால், ஒருவன் சம்சாரி யாவதும் ஒருவன் முக்தன் ஆவதும் ஒருவன் மாணாக்கன் ஆவதும் ஒருவன் ஆசார்யன் ஆவதும் பொருந்தாது.

அதுவும் அல்லாமல் ஒரே உயிரை இன்பம் துய்க்கும் தேவனாகவும், இன்பமும துன்பமும் மாறி மாறி அனுபவிக்கும் மனிதனாகவும் துன்பத்தை மட்டுமே அனுபவிக்கும் விலங்கு, பறவைகளாகவும், வேறுபட இறைவன் படைக்க மாட்டான். ஓர் உயிரை ஒருவகையாகத்தான் படைக்க இயலும்.

இறைவன் அவ்வாறு பல வகையாகப் படைப்பதற்குக் காரணம், உயிர்கள் பல ஆவதும் வினைப் பயனின் ஏற்றத் தாழ்வுகளுமே யாகும். மன்னுயிர்ப் பன்மை என்பது சங்கப் புலவர் வாக்கு. மன்னுயிர் எல்லாம என்பர் வள்ளுவர். ஆதலால் உயிர் பல எனபதே முன்னோர் கொள்கை என்பது தெளிவாகின்றது.

"எண் பெருக்கு அந்நலத்து ஒண் பொருள் ஈறு இல" என்ற ஆழ்வார் வாக்குக்கு, "எண்ணாலே மிக்கு (மிகப் பலவாய்) இருப்பனவாய். அறிவுக்கு நிலைக்களனாய் அறிவு மயமாய் அழிவு அற்றனவாய், இருக்கின்ற உயிர்கள்" என்று ஆன்றோர் கண்ட உரை இங்கு நினைக்கத் தகும்.

"நித்தியனாய் அறிவு மயமானவனாய் ஒரு தான் ஆகி உள்ள ஒருவன் யாவன் அவன். நித்தியமாய் அறிவு மய மானவையாய். பல வாயுள்ள உயிர்கள் வேண்டுவன வற்றைத் தருகின்றான்" என்று வேதங்கள் கூறுவதாலும் உயிர்கள் பலவே என்பது உறுதியாகின்றது.

"பரமபதம் அடையும்போது உயிர்கள் தம்முட் பேதம் கழிந்து சமமாய் இருக்குமே! அப்போது உயிர் ஒன்று என்று கொள்ளலாமே!" என்பது ஒரு வாதம்.

முக்தி நிலையில் உயிர்கள் உருவம், குணம் ஆகியவற்றில் வேறுபாடுகள் அற்று ஒருபடிப்பட்டவனாகத் தோன்றினும் அவை ஒரே உயிர் ஆக மாட்டா.

அளவும் நிறையும் வடிவும் ஒத்துள்ள பொற்குடம், நெல், மணிகளும் வேறு வேறாகவே உள்ளன. அதுபோல் உயிர்கள் எந்நிலையிலும் வேறு வேறானவையே என்பது உறுதி.

இத்தகைய உயிர்கள் நித்தர், முத்தர், பெத்தர், கேவலர், முமுட்சுக்கள் என ஐந்து வகைப்படும்.

1. நித்தர் : என்றென்றும் உலகியல் வாதனையே இல்லாத உத்தமர். இறையனுபவத்தை ஏகபோகமாக அனுபவிக்கும் உரிமையர். வான் இளவரசு, வைகுந்தக் குட்டன், வாசுதேவன் என்கிற படியே வைகுந்தத் திருநகரில் யுவ குமாரனாய் இளவரசனாய் எழுந்தருளியுள்ள பரவாசுதேவனுக்கு மகுடம் சூட்டும் உரிமை பெற்ற விண்ணாட்டவர் மூதுவரான அமைச்சர்கள். இறைவன் ஏவலால் முத்தொழிலும் செய்ய வல்ல மூர்த்திகள். விபவ, வியூக, அர்ச்சை நிலைகளிலும் தொடர்ந்து தொண்டு செய்பவர். என்றும் குறைவற்ற இறைஞானம் உடையவர். இறையனுபவம் இடையீடுபட்டால் மரிக்கும் தன்மையர். அவர்கள் அனந்தன், கருடன், சேனை முதலியார் முதலியோர் ஆகிய எண்ணிலர் ஆவர்.

2. முக்தர் : முக்திக்குப் பகை வினைப்பயன், அதனால் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து வருந்துபவன் சேதனன். அவனுக்கு முக்தியில் விருப்பம் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுட் சில வருமாறு :

1. இறைவனின் காரணம் பற்றாத கடைக்கண் அருள் நோக்கம். இதையே மதி நலம் அருளினன் என்று ஓதினார் நம்மாழ்வார்.

2. கர்ம, ஞான யோகங்களில் ஈடுபடுவதால், அதன் அடிப்படையில் உண்டாகும் பக்தி யோகம்.

3. யாத்ருச்சிகம், பிராசங்கிகம், ஆநுசங்கிகம் ஆகிய வற்றால் இறைவன் நினைந்தருளி, வெறுக்காமை, மறுக்காமைகளை உண்டாக்கி நல்லாசாரியனிடம் சேர்ப்பித்தலால், அவன் கற்பிக்கும் ஞான யோகம்.

4. வேறு நெறிகளைத் துறந்து, முழு நம்பிக்கையுடன் இறைவன் திருவடிகளே உய்யும் நெறி எனப் பற்றும் பிரபந்தி யோகம்.

இத்தகைய காரணங்களால் உலகில் துன்பத் தொடர்பு நீங்கி, இறைவன் இயல்பு, உருவம், குணம் அவதார விளையாடல்கள் முதலியவற்றை அனுபவித்து, அதனால் வரும் அகமகிழ்ச்சி அடங்காமல் வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் வாயாரப் பாடியும் மனத்தினால் நினைந்தும் போது போக்குவான் முக்தி விரும்பும் சேதனன்.

சிந்திப்பனவும் துதிசெய்வனவும்
தெரிசிப்பனவும் துரிசற் றிடவே
வந்திப் பனவும் பூசிப்பனவும்
வாஞ்சிப்பனவும் யாம்செப் புவமால்
தந்திக்கு இமையோர் பந்திக்கு அளையின்
தாழிக்கு அருள்கூர் ஆழிக் கடவுள்
கந்தித்துளமுழு உந்தித் திருவேங்
கடமால் சரணத் தடமா மலரே

என்ற திருவேங்கடக் கலம்பகப் பாடலை இங்கு நினைவு கூர்க!

இறுதியில் உடல் துறந்து அர்ச்சிராதி வழியிலே மீட்சி இல்லாத பொருவரு வைகுந்தப் பொன்னகரம் புகுந்து' "அந்தமில் பேரின்பத்து அடியாருடன் கூடுவது என்று கொலோ" என்று தவித்த தாபம் ஆறும்படி, இனிது மகிழ் கின்ற சேதனர்களே முத்தர்கள்.

மேலே குறிப்பிட்ட யாத்ருச்சிகம், பிராசங்கிகம், ஆநு சங்கிகம் என்பனவற்றின் பொருளை ஓரளவு தெரிந்து கொள்ள முயல்வோம்.

ஒருவன் சூதாடவும் சொக்கட்டான் ஆடவும் தன் வீட்டு முற்றத்தில் புறந்திண்ணை கட்டியிருந்தான். ஒரு நாள் ஒருவர் இறையடியார், மழையில் நனைந்து குளிரில் நடுங்கி அவ்வழியே வந்தார். அந்தப் புறந்திண்ணை மழையில் நனையாமலிருக்க ஏற்றதாயிருந்தமையால், அதிலே ஒதுங்கினார். மழை நின்ற பின்பு தம் வழியே சென்று விட்டார். "என் அடியார் ஒதுங்க நிழலைக் கொடுத்தான் இவன்" என்று இறைவன் அவன் தன்னலத்துக்காகச் செய்த செயலை, அடியார் பொருட்டுச் செய்த புண்ணியமாகக் கருதி, அவனுக்கு அருள் பாலித்தான். இவ்வாறு நிகழ்வது யாத்ருச்சிகம்.

புண்ணியம் என்று நினையாமல் தன்னலத்துக்காகச் செய்தது கூட இறைவன் நினைவில் புண்ணியமாகப்படுவது அது.

ஒருவன் கொலையும் களவுமே தொழிலாகக் கொண்டிருந்தான். ஒருகால் எங்கோ அரிசி திருடி வந்து, "இது திருவரங்கத்து அரிசி"[1] என்று விற்றான். அதுவே காரணமாக "இவன் திருவரங்கம் என்று என் ஊரைச் சொன்னான். 'அரி—சி' என்று என் பெயரையும் திருமகள் பெயரையும் சொன்னான்" என்பன போன்ற சிலவற்றை, இறைவன் தானே கற்பித்துக் கொண்டு, அந்தக் கொலைகாரனுக்கு அருள் செய்கின்றமை பிராசங்கிகம். சேதனன் அறியாமலே செய்வது இது.

---

1 அரி—நாராயணன். சி—திருமகள். அரிசி—திருமகளோடு கூடிய இறைவன் என்பது இறைவன் கொண்ட பொருள்.

ஓர் அடியார் காட்டு வழியே போகின்றார். அப்போது சில திருடர், அவரை வருத்திக் கைப் பொருள் கவர்வதற் காகப் பின் தொடர்கின்றனர். அப்போது, வேறு ஏதோ ஒரு செயலுக்காக அரச காவலன் ஒருவன் எதிர்ப்படு கின்றான். அவனைக் கண்ட திருடர், அஞ்சி அப்பால் போய் விடுகின்றனர். அதுவே காரணமாக "இந்த அரச காவலன் என் அடியாரைப் பாதுகாத்தான்" என்று இறைவன் தானே முடிவு செய்து கொள்ளும் நன்றி ஆனுசங்கிகம். அறிந்து செய்யாமல் தானாக நிகழும் புண்ணியம் அது.

3. **பெத்தர் :** உலகியல் அவாவில் கட்டுப்பட்டவர்கள் பெத்தர் எனப்படுவர். பத்தர் என்பதும் உண்டு.

என்னினுள் எண்ணெயும் மரத்தினுள் நெருப்பும் மறைந் திருப்பதுபோல், மாயை என்னும் உலகியலால் மறைக்கப் பட்டவர்கள் இவர்கள். அந்த மாயை, பிரிக்க முடியாத முக்குணங்களோடு கூடியது; கடத்தற்கரியது; தொடக்கம் இல்லாதது.

அறியாமையால் தேடிக் கொண்ட இருவினைகளுக்கு ஈடாக நால்வகை யோனியில், எண்பத்து நான்கு இலக்கம் முகபேதமுடைய எழுவகைப் பிறப்பினுள் மாறி மாறிப் பிறப்பவர்கள் பெத்தர்கள்.

பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கமே உடல். ஐம்பூதங்களில் ஒன்றின் செம்பாதியும் மற்ற நான்கின் ஒவ்வொன்றின் அரைக்கால் பங்கும் (நாலு அரைக்கால்—பாதி) சேர்வது பஞ்சீகரணம் எனப்படும். அந்தப் பூதங்களின் பஞ்சீகரணப் பரிணாமமே இந்த உடல், இது நிலையில்லாதது; இன்பம்—துன்பம் துய்ப்பதற்குக் கருவி; உயிர் பிரிந்த அளவில் காண்பதற்கும் தொடுவதற்கும் தகுதியில்லாத அழுக்கின் திரட்சி,

அறியாமை, ஐயம், திரிபு ஆகியவற்றிற்கு விளை நிலம் இவ்வுடல்.

உயிருக்கு வேறு ஆகிய இந்த உடலையே தான் என்றும், உடல் தொடர்பான பொருள்களைத் தம்மது என்றும் மாறுபட உணர்பவர் பெத்தர். பெத்தர்—கட்டப்பட்டவர்.

இந்தப் பெத்தர்கள், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய புலன் இன்பங்களில் ஆழ்வதற்கு ஏதுவான உடலை வளர்ப்பதே தம் கடமை என்று மயங்குவர்.

புலன் இன்பங்களுக்காகத் தத்தம் குலக்கடமைகளைக் கைவிடுவர். "மாரி அனைய கை மால்வரை ஒக்கும் திண் தோள் என்று பாரில் ஓர் பற்றையைப் பச்சைப் பசும் பொய்கள்" பேசிக் கைப் பொருளுக்காக வழி படுவர்.

உயிர்க் கொலை, புலால் உண்ணல், பிறன்மனை விழைதல், பிறர் பொருள் கவர்தல் முதலிய செயல்களில் ஈடுபடுவர். உலகியலில் விருப்பமுள்ளவராய் இறைவன் பால் அன்பு இல்லாதவராய் இன்ப துன்பங்களை மாறி மாறித் துய்த்து உழலுவர்.

முக்குணங்கள் : சாத்விகம், இராசசம், தாமசம் எனக் குணங்கள் மூன்று வகைப்படும்.

சாத்விகம் என்பது சத்துவம் என்றும் அழைக்கப்பெறும், அது, அறிவும் இபன்மும் பெறுவதற்கு ஆவலைத் தூண்டும்.

இராசசம் என்பது, காமத்தையும் புலன் இன்பத்தில் ஆசையையும் தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும் உள்ள பாசத்தையும் செயல்களில் ஊக்கத்தையும் உண்டாக்கும்.

தாமசம் என்பது, மெய்ப்பொருள் அறிவுக்கு எதிர்மறையான திரிபு உணர்ச்சியையும் விழிப்பு இன்மையையும் சோம்பலையும் உறக்கத்தையும் விளைவிக்கும்.

நால்வகை யோனிகள் :

1. முட்டையில் தோன்றுவன. அண்டசம்.
2. வேர்வையில் தோன்றுவன, சுவேதசம்.
3. வித்து. கிழங்கு, வேர், கொம்பு, கொடி முதலிய வற்றில் மேலே பிளந்து தோன்றுவன, உத்பீசம்.
4. கருப்பையில் தோன்றுவன சராயுசம்.

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புக்களில், முட்டையில் பிறப்பன பறவை, ஊர்வன, நீர் வாழ்வன முதலியனவாம்.

வேர்மையில் உதிப்பன, கிருமி, கீடம், பேன் முதலிய ஊர்வனவும் விட்டில் முதலிய சில பறவைகளுமாம்.

வித்து, வேர், கிழங்கு முதலியவற்றில் தோன்றுவன மரம், செடி, கொடி, பயிர், புல், பூண்டு முதலியனவாம்.

கருப்பையில் உண்டாவன, தேவரும் மனிதரும் நாற்கால் விலங்குகளும் முதலியனவாகும்.

இவற்றுள் தேவர்களின் வகை பதினான்கு நூறாயிரம். மனிதர்களின் வகை ஒன்பது நூறாயிரம். விலங்கு வகை பத்து நூறாயிரம். பறவை வகை பத்து நூறாயிரம். ஊர்வன வகை பதினொரு நூறாயிரம். நீர் வாழ்வன வகை பத்து நூறாயிரம். தாவர வகை இருபது நூறாயிரம். ஆக எண்பத்து நான்கு நூறாயிரம் உயிர்க் கூட்டங்கள் என்று கணக்கிட்டுள்ளனர்.

இவ்வகை எழுவகைப் பிறப்பினுள்ளும் பெறுதற்கு அரியது மானுடப் பிறப்பே ஆகும். 'மானிடர் ஆகல் அரிது' என்பது திவ்வியகவி வாக்கு.

அகண்ட பரிபூரண சத், சித், ஆனந்த அருட் பெருந் திருவாளனான எம்பிரானை அறிந்து வணங்கி வழிபட்டு முடிவில்லாத இன்பம் எய்தி, உய்தி பெறுவதற்கு வாய்ப்பான மனிதப் பிறப்புக்கு இணை ஏதும் இல்லை.

**4. கேவலர் :** ஒருவன் பாலைவனத்தின் நடுவே அகப் பட்டுக் கொண்டான். மிக்க பசி. நா உலறும் விடாய். உண்ணவோ பருகவோ ஏதும் கண் எதிர்ப்படவில்லை. என்ன செய்வான்? பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் அன்றோ !

இந்நிலையில் அவன் உடம்பை ஒரு முள் கீறிவிட்டது. கீறிய புண்ணிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியது. பசியால் வாடிய அவன் உண்பன இவை. உண்ணாதன இவை என்ற பகுத்தறி விழந்தான். ஆதலால் அந்தப் புண்ணிலிருந்து வடிந்த குருதியைச் சுவைக்கலானான். குருதி ஒழுக்கு நின்ற பின்பு, தன் ஊனையே சுவைக்கத் தொடங்கி விட்டான். அதனால் பசியும் விடாயும் ஓரளவு தீர்ந்தது போல் தோன்றியது. வேதனையைக் காட்டிலும் பசிவாதனை தீர்வதுவே அவனுக்கு நன்று என்று தோன்றியது. ஆதலால் தன் ஊனையே சுவைத்துக் கொண்டு அங்கேயே கிடக்கலானான்.

அதுபோல உலகியலாகிய காட்டுத் தீயினால் சூழப்பட்ட சிலர் அந்த வெப்பத்திலிருந்து மீள வகை அறியாது திகைக் கின்றனர். தீயினால் சுறுநாறும் தம் உடலையே சுவைக்கலாமே என்று தோன்றுகின்றது.

ஆனால், அவர்கள் உலக நூல் மட்டும் கல்லாது, அறிவு நூல் கற்றவர்கள், அந்நூலின் பயிற்சியால், உடல்வேறு, உயிர்களாகிய தாம் வேறு என்று அறிந்தமையால், ...ிவை எண்ணுகின்றவர்கள்,

அழியக் கூடியது உடல், கருப்பம், பிறப்பு, இளமை வாலிபம், முதுமை, இறப்பு, நரகம் என்னும் ஏழு நிலைகளுக்கு அடிப்படையானது அது. மலம், மூத்திரம், ஊன் முதலிய அழுக்குப் பொருள்களின் கூட்டாக இருப்பது அது என்று நன்கு அறிந்தவர்கள்.

உயிரானது, இருபத்து ஐந்தாவது எழுத்தான மகாரத்தின் பொருளாய், அறிவு வடிவமாய், தானே ஒளிர்வதாய், இன்பமே இயல்பானதாய், அழிவில்லாததாய் இருக்கிற படியையும் தெளிந்தவர்கள்.

ஊழி ஊழியாகத் துய்த்த துன்பச் சுமையால், உயிரை அனுபவிப்பதாகிய சிற்றின்பத்தில் கால் தாழ ஊன்றி நின்று, உணர் முழுநலமான இறையனுபவமே உயிர் அடைய வேண்டிய பயன் என்னும் பகுத்துணர்வு இல்லாமல், இறையனுபவமாகிய பேரின்பத்தைச் சோரவிட்டு, உயிரையே அனுபவிப்பதற்குக் காரணமான ஞான யோகத்தில ஈடுபட்டு, யோக அனுபவத்தில் ஒன்றி நின்றவர்கள்.

ஒரு கைம்பெண், தன் தனங்கள் முதலிய போகத்துக்கு உரிய உறுப்புக்களைத் தன் கைகளால் தானே தொட்டு இறுக்கி, அதனால் உண்டாகும் இன்பதனைத் துய்த்து, தனக்குத் தானே களிப்பதுபோல், அல்பசாரமாகிய உயிர் இன்பத்தையே பெறற்குரிய பேறு ஆக அனுபவிக்கத் தொடங்கி விட்டால், பின்பு உலகியல் வாழ்வுக்குக் காரணமான பருவுடல் தொடர்பும் இறையனுபவமும் இழந்து விடுவார்கள்.

இந்த உலகியல் மண்டலத்துக்கு மேலே, விரசை என்னும் அமுத நதிக்கு அக்கரையில், தனியே ஒரு பிரதேசம் உண்டு. அதன் பெயர் கைவல்யம். அதை அடைந்தவர் கைவல்ய முக்தர். இறையனுபவம் பெற உரிமையிருந்தும், தம் நிலை

மறந்தமையால், அந்தக் கைவல்யப் பிரதேசம் அடைந்து, அணுவளவான உடல் அனுபவத்தைப் பெற்று என்றென்றும் மீட்சியில்லாது அங்கேயே வாழும் அவர்களே கைவல்யர் (கேவலர்) ஆவர். கேவலம் என்பது (அது) மட்டும் என்று பொருள்படும். உயிர் அனுபவம் மட்டும் என்றென்றும் துய்த்து, இறையனுபவத்தை நிரந்தரமாக இழப்பவர் கேவலர். கேவல நிலை (முக்தி), கைவல்யம் எனப்படும்.

கேவலர் நுண்ணுடல் பெற்றிருந்தாலும், அவ்வுடல் இறையனுபவத்துக்குத் தகுதி வாய்ந்தது அன்று ஆகலின், அவர்கள் உடலே இல்லாத அசரீரிகள்[1] என்றே கூறப் பெறுவர். அவர்களுக்கு மறு பிறப்பும் இல்லை. பிறப்பு இருந்தாலாவது வேறு ஒரு பிறப்பிலாவது இறையனுபவம் பெற வாய்ப்புப் பெறலாமே!

"ஐயோ! அறவனை ஆழிப்படை அந்தணனை மறவியை இன்றி மனத்து வைத்து, அனுட்டிக்கக் கடினமான ஞான யோகத்தில் நின்று பிறவித்துயர் அறும்படி முயன்றவர்கள், அந்த முயற்சிக்குப் பயனாக இறையனுபவம் பெறாமல், துறவிச் சுடர் விளக்கமாகிய தன்னையே அனுபவிக்கும் அல்பப் பயனைப் பெறுகின்றார்களே!" என்று நம்மாழ்வார் அவர்களுக்காக இரங்குகின்றார்.

அந்தக் கைவல்ய நிலையைப் 'பெருந்துன்பம்' என்றும் 'இறப்பு' (மரணம்) என்றும் ஆழ்வார்கள் இகழ்ந்து ஒதுக்கி யுள்ளனர்.

முமுட்சுக்கள் : முக்தியிலே விருப்பமுள்ளவன் முமுட்சு ஆவான். முக்தி என்பது நலம் அந்தம் இல்லதோர் வீடு என்றும் முற்றவும் விடுதல் என்றும் இருபொருள்படும். இங்கு முக்தி என்பது விடுதல் என்ற பொருளிலேயே

1 அசரீரி—உடல் இல்லாதவர்;

கையாளப்படுகின்றது. நலம் அந்தம் இல்லதோர் வீடு என்று பொருள் கொள்ளாமல், விடுதல் என்ற பொருளை மட்டும் ஏன் கொள்ளல் வேண்டும்?

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும் பெரும் பாழ்
உலப்பில் அதனை உணர்ந்துஉணர்ந்து
சென்றுஆங்கு இன்ப துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்
அன்றே அப்போ தேவீடு
அதுவே வீடு வீடாமே"

என்ற ஆழ்வார் அமுத வாக்கின்படி, வீடு என்னும் முக்தி யானது எங்கோ உள்ள ஒரு பிரதேசம் அன்று. "அற்றது பற்று எனில் உற்றது வீடு உயிர்" என்றும் "பசை அற்றால் அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே" என்பதனால் இருந்த இடமே முக்தி வீடாய்விடும் என்றும் அறிகின்றோம்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்ற வள்ளுவர் தமிழ்மறையும் இதை உறுதிப்படுத்து கின்றது.

"நரகமே சுவர்க்கமாகும்" என்று தொண்டர் அடிப் பொடி வாக்கும் இருந்த இடமே வீடு என்பதை உறுதி செய் கின்றது.

முக்திக்குத் தடையாக இருப்பது இருவகைப் பற்று. அவற்றை விடுவதே முக்தி என்று ஆன்றோர் அனைவரும் கூறியுள்ளனர். ஆதலால் முக்தி என்பதற்கு (பற்று) விடுதல் என்பதே சரியான பொருள் எனலாம்.

உடலும் உடல் பற்றிய கொண்ட பெண்டிர், மக்கள் முதலிய உறவும், இல்லம், செல்வம் முதலியனவுமே உலக பந்தம் எனப்படும். இதனையே ''ஆரா இயற்கை அவா'' என்றார் வள்ளுவர்.

வீடு பெறுவதற்கு உடலே சாதனம் என்று ஆன்மிகக் கலைகள் கூறுவதால், உடலை வீடுபேற்றுக்குத் தடை என்று எவ்வாறு கொள்ளலாம்?

எண்சாண் நீளமும் ஒன்பது வாசல்களும் எட்டுவித நீட்டெலும்பும் மூன்றுசாண் அளவுள்ள முதுகெலும்பும் பதினாறு பழுவெலும்பும் எழுபது பேரெலும்பும் இரண்டாயிரம் துண்டெலும்பும் ஆயிரம் தொடர் எலும்பும் எழுபத்தொரு மலக்குழிகளும் நாற்பது வெளி வாசல்களும் முப்பத்திரண்டு அவயவங்களும் எண்ணில் கோடி உதிரத் தாரைகளும் மூன்றரைக் கோடி மயிர்க்கால் ஓட்டைகளும். நூற்றெட்டுக் கோடி உரோமங்களும் எழுபத்து ஈராயிரம் நரம்புகளும் எழுநூற்றுப் பதின்மூன்று பலசர்ம மாமிசக் குழிகளும் ஏழு தாதுக்களும் இரண்டுபடி வாதமும் மூன்றுபடி பித்தமும நான்குபடி சிலேட்டுமமும் இருகைகளும் இருகால் களும் இருபது விரல்களும் ஒரு தலையும் உடையது உடல்.

அது நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோயொடு கூடியது. அளவற்ற நோய்க்கிருமிகளுக்கு இருப்பிடம். மலம் மூத்திரங்கள் முதலிய அழுக்குக்கள் விளை நிலம். ஏழு அவத்தைகளையுடையது. சாதி, குலம் முதலிய செருக்குக் கொள்வதற்குக் காரணம். மூவகைத் தாபங்கள் பிறக்குமிடம்.

தானே உயிர் என்னும் அறியாமையை விளைப்பது உடல். இறைவன் ஒருவனுக்கே உரிமையான உயிரைப் பிற நக்கும் தனக்கும் உரிமை என நினைக்கின்ற ஐயத்தைத்

தோற்றுவிப்பது அது. இறைவனுக்கே அடிமையாய் (தனக்கு உரிமையில்லாமல்) பரமன் விருப்பப்படி செயல்படும் உயிரைத் தன் விருப்பப்படி செயல்பட வல்லது என எண்ணும் திரிபுணர்ச்சியைப் பிறப்பிப்பதும் அது.

இத்தகைய இளிவரலையும் பொல்லாத ஒழுக்கத்தையும் உடைய அழுக்குடம்பானது, இறைவனை அடைவதற்குச் சாதனமாக இருப்பினும், (உணவுகொள்வதற்குச் சாதனமான இலையானது, உண்டபின், தூர எறியத் தக்கது ஆவது போல்) விடத்தக்கதே ஆகும்.

''மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல்? பிறப்பு அறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை''

என்பது திருவள்ளுவப் பெருமான் திருவாக்கு.

தாய், தந்தை, மனைவி, மக்கள், உறவினர் முதலியோர், இடையே வந்து சந்தித்த சந்தைக் கூட்டத்தைப் போன்றவர்களே.

கூர்ந்து நோக்கினால், இவர்களால் நன்மை எட்டுணையும் இல்லை என்பது விளங்கும். முற்பிறப்பில் இவர்கள் தேவரோ, அசுரரோ மனிதரோ விலங்குகளோ பறவைகளோ ஊர்வனவோ நீர் வாழ்வனவோ தாவரமோ அறிகிலோம். நாமுந்தான் எப்பிறப்போ அறியோம்.

''காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனின் பலர் ஆவர்—ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால்,—ஈர்ங்குன்ற நாட!—
தொடர்புடையேம் என்பார் சிலர்''

என்றபடி, நம்மிடம் பொருள் உண்டாயின் உறவினர் அடுத்து, இல்லாத உறவு முறைகள் உரைத்து நடித்து, அட்டைகளைப் போலே கடித்து, உண்ணிகளைப் போலே பிடித்து,

ஞானத்தைக் கெடுத்துக் கைப்பொருள்களை உறிஞ்சி விடுவார்கள்.

எவ்வளவு பணம் தேடி வைக்கினும், 'என்ன வைத்தான் பாவி' என்று வைவார்கள் அன்றிச் சிறிதும் மனநிறைவு பெறமாட்டார்கள்.

"கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்
சுற்றத் தவர் பிறரும்
கண்ட தோடு பட்ட தல்லால்
காதல் மற்று யாதும் இல்லை"

"தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன்"

என்னும் அருளிச் செயல் பாசுரப் பகுதிகளை உய்த்துணர்ந்து, உற்றுழி உதவாத உறவினரிடத்து வைத்த பற்றை விட்டுவிடல் வேண்டும்.

திருமந்திரத்தில் சொல்லப்படுகின்ற நமக்கு ஒழிக்க ஒழியாத ஒன்பது உறவுகள் உடையவன் இறைவன். என்றும் கைவிடாமல் காப்பவன் அவன், கருணைப் பெருந் திருவாளனை அனைத்து உறவுமாகப் பற்றுவதே நன்று; நன்று.

விட வேண்டியவற்றில் உறவுக்கு அடுத்தது செல்வம்.

"யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் — ஏனை
வினை உலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள"

என்றும்

"ஒருநாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவ்விய காலர் சிதைஇகிய பானையர்
பெருநாடு காண இம்மையி லேபிச்சை தாம் கொள்வர்
திருநா ரணன்தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ"

என்றும்

"திந்தித் திமிகிட திமிதிமெ னுஞ்சொல்
தம்பட் டமும்ஒரு புடையின்மு ழங்கச்
சிந்தித்து அடையலர் முடிகள்வ ணங்கித் தொழவேநீள்
செங்கைத் தெரிவையர் கவரிது, லங்கத்
துங்கக் கடகரி கடவிடு லங்கத்
திங்கட் குடையினில் அரசுபு ரிந்திட் டருள்வோர்தாம்

அந்தப் பதியினில் அரசும யங்கிக்
குந்தித் தடியொடு தெருவில்இ ரந்திட்
டஞ்சித் திரிவர்கள் விதிவழி சிந்தித் தறிவார்யார்?
அந்தப் படிஅடி யெனும்இவ்அ கந்தைப்
பந்தப் பழவினை வழியின்ம யங்குற்
றம்பொற் கழலிணை நினைவைம றந்திட்
டுழல்வேனோ?

என்றும் முறையே நாலடியாரும், திருவாய்மொழியும் குரவை இராமாநுசதாசரும் கூறியபடி செல்வம் நிலையில்லாதது என்பதனை அறிதல் வேண்டும்.

அடியார்களைக் கண்டால், அலட்சியமாகக் கருதி அவமதிக்கும்படி செல்வமானது அறிவைக் கெடுக்கும். அகந்தை தலையெடுத்து இறுமாந்திருக்கப் 'பணப்பேய்' என்னும் பெயரைக் கொடுக்கும்.

சகுனி, துரியோதனனுக்கு உதவுபவன்போல் நடித்து, அவனை அடியோடு அழித்துவிட்டான். சூர்ப்பணகையும்

இராவணனுக்கு நலம் செய்வதுபோல் நடித்து, அவன் அழிவுக்குக் காரணமானாள். மந்தரையும் கைகேயியை அப்படித்தான் கெடுத்தாள்.

செல்வமும் நன்மை பயப்பது போல் தோன்றி, 'செல்வம்' (செல்வோம்) என்ற பெயரைக் காரணப் பெயராகக் கொண்டு உடையவனை நீங்கி, அவனை நடுதெருவில் நிறுத்திவிடும். ஓடு கையில் ஏந்தி நாடு காணும்படி நடுத்தெருவில் நின்று 'நாராயணா' என்று கூவிப் பிச்சை எடுக்கச் செய்துவிடும். உயிர்க் கொலை, நஞ்சூட்டுதல், பொய்ச்சான்று பகர்தல் முதலிய பல தீச் செயல்களைச் செய்யத் தூண்டி நரகத்துக்கு ஆளாக்கும்.

இறையடியாரையும் இந்தச் செல்வம் வாளா இருக்க விடாது. அவருடைய அறிவையும் இறையன்பையும் கெடுத்து, நண்பரிடத்தில் அவமதிப்பும் பகைவரிடம் அன்பும் கொள்ளச் செய்துவிடும்.

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலிய தீக் குணங்களை உண்டாக்கும். கண்டார் சிரிக்கத் தலைசுற்றியாடச் செய்யும் இச் செல்வப் பேய்.

"ஒருவன் இறைவனைச் சரண் புகுந்து பிரபன்னன் ஆகி விட்டால், அவன் உடறபயணம்[1] வினைப்பயனுக்கு உட்பட்ட து. ஆகையால், அதைப்பற்றிக் கவலைப்படக் கடவன் அல்லன், கவலைப்பட்டான் ஆகில், தான் சரணம் புகுந்த இறைவனிடம் நம்பிக்கை இழந்த நாத்திகன் ஆவான்" என்று எம்பெருமானார் அருளிச் செய்துள்ளார்.

---

1 உடற்பயணம் (தேகயாத்திரை) உடல் வளர்ப்பது.

"நல்ல புதல்வர், மனையாள், நவைஇல்கிளை
இல்லம், தனம், மாடு இவை அனைத்தும்—அல்லல் எனத்
தோற்றி எரி தீயிற் சுடுமேல் அவற்கு எளிதாம்
ஏற்றருவை குந்தத்து இருப்பு"

என்றும்

"ஈனம் இலா அன்பர் என்றாலும் எய்திலா
மானிடரை எல்லா வணத்தாலும்—தான் அறிய
விட்டார்க்கு எளியன். விடாதார்க்கு அறஅரியன்
மட்டார் துழாய் அலங்கல் மால்"

என்றும் அருளிச்செயல் கூறியபடி, புறம்புண்டான பற்றுக் களை எல்லாம் வாசனையோடு விட்டவனே, பொன் ஆழிக் கை அப்பனுக்கு இனிய முமுட்சு ஆவன்.

இந்த முமுட்சுக்கள் உபாசகர், பிரபன்னர் என இரு வகையினர்.

1. உபாசகர்: வீடு பெறுவதற்காகத் தாமே முயன்று கர்ம, ஞான யோகங்களை உறுப்புக்களாகக் கொண்ட பக்தி நெறியினால் இறைவனை வழிபடுகின்றவர்கள். குரங்குக் குட்டி, தானே முயன்று தன் தாயை இறுகப் பற்றிக் கொள்வது போன்றது இவர்கள் செயல். இதனை மற்கட நியாயம்[1] என்றும் சுவகத சுவீகாரம்[2] என்றும் கூறுவர்.

2. பிரபன்னர்: நல்லாசாரியனிடம் திருமந்திர உபதேசம் பெற்று, அதன் நடுச்சொல்லான நம: என்பதற்குப் பொருளான உயிரின், 'இறைவனுக்கே உடைமை' என்னும் இயல்பை[3] உணர்ந்து, தன் ஆற்றலின்மையை அதாவது கைம்

1 மற்கடம்—குரங்கு—நியாயம்—எடுத்துக்காட்டு.
2 சுவகத சுவீகாரம்—தானே முயன்று பற்றுவது.
3 பாரதந்திரியம் (இறைவன் உடைமை)

முதல் இல்லாமையை[1] அறிந்து, "புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று இறைவனிடம் சரணாகதி அடைபவர்கள்.

பூனைக்குட்டி, தானே எம்முயற்சியும் செய்வதில்லை. தாய்ப்பூனை வாயால் கவ்வி எடுக்கும்போது, மறுக்காமல் இருப்பது ஒன்றே அதற்குரியது. பூனைக் குட்டிபோல் தான் எந்த முயற்சியும் செய்யாமல், இறைவன் வலிய வந்து ஆட்கொள்ளும்போது. இசைந்திருப்பது மார்ச்சால நியாயம்[2] எனப்படும். இதனையே பரகத சுவீகாரம்[3] என்றும் கூறுவர்.

பிரபத்திக்கும் கர்மம் ஞானம் பக்திகள் ஆகிய வழிகளுக்கும் மிக்க வேறுபாடு உண்டு.

இறைவனே உபாயமாக நின்று பயன் தருவதால், பிரபத்தி பரமசேதனம் எனப்படும். பரமசேதனம் என்றால் பேரறிவுடையது என்று பொருள். பரமசேதனன்—இறைவன்.

பிற உபாயங்கள், சேதனன் தானாகவே கைக் கொள்ளும் சாதனமாக—கருவியாக இருப்பதால், அசேதனமாக—உயிரில்லாதனவாக—இருக்கும்.

இறைவன் என்றும் உள்ளவன். அவனே பிரபத்தி நெறி ஆவதாலும், என்றும் சேதனனை ஏற்றுக் கொள்ள இறைவன் சித்தமாக இருப்பதாலும், இறைவன் சித்தோபாயம்[4] எனப் பெயர் பெறுகின்றான்.

---

1 கைம் முதல் இல்லாமை ஆகிஞ்சன்யம் என்பர் வைணவர்.

2 மார்ச்சாலம்—பூனை. நியாயம்—எடுத்துக்காட்டு,

3 பரகத சுவீகாரம்—இறைவனே வலிய வந்து ஏற்றுக் கொள்வது.

4 பலன்தர ஆயத்தமாயிருக்கும் வழி.

பிற உபாயங்கள், உயிர்கள் தங்கள் சாதனையாலேயே கடைப்பிடித்துப் பயன் பெற வேண்டியுள்ளமையால் அவை சாத்திய[1] உபாயங்கள் எனப்படும்.

உயிர் இறைவன் உடைமை. தனக்கென ஏதும் உரிமை இல்லாதது. உடைமைக்கு உடைமையிருக்க இயலுமோ? இறைவனுக்கு உடைமையாக இருப்பதே ஆன்மாவின் இயல்பு. ஆதலால் பிரபத்தி உயிரின் இயல்புக்கு முழுத் தகுதி பெற்றது.

பிறநெறிகள் உயிரானது தானே முயன்று கைக்கொள்ள வேண்டியிருப்பதால், உயிரின் தகுதிக்கு மாறானவையாகும்.

வழியும் பயனும் வேறு வேறு ஆக இருப்பதால், பிற வழிகளும் பயனும் வேறு வேறாக இருக்கும்.

பிரபத்தி போல், பிற வழிகள் எப்போதும் சித்தமான— ஏற்றுக்கொள்ளக் கூடிய - நிலையில் இராமையால், அவ் வழிகள் சேதனனால் புதுவனவாகக் கைக் கொள்ளத் தக்கன வாயிருக்கும். அது மட்டுமன்று. அவை கைக் கொள்வதற்கு அரியனவாயிருக்கும்.

இத்தகைய வேறுபாடுகளைச் சீர் தூக்கிப் பார்த்து, உலகத் தொடர்பு விடுதற் பொருட்டும் அதன் மூலம் இறை யனுபவம் பெறுதற் பொருட்டும் தன் முயற்சி—கைம்முதல்— இல்லாமையும் வேறுபுகல் இல்லாமையும் உடையவர்களாய்ப் பிற வழிகளை அடியோடு விடுத்து, மிக்க நம்பிக்கையுடன் இறைவன் இணையடிகளையே வழி எனப் பற்றி, வேறு பொறுப்பற்றவராக இருக்கும் அருட் செல்வர்களே பிரபன்னர் ஆவர். பிரபன்னர்க்கு வேறு பொறுப்பு ஏதும் இன்மையால், அவர்களுக்கு ''வாழும் சோம்பர்'' என்று ஒரு பெயர் சூட்டுகின்றார் தொண்டரடிப் பொடி.

---

1 சாத்திய உபாயங்கள்—கடை பிடிக்கும் நெறிகள்.

இந்த பிரபத்தியானது, சரணாகதி, சரணம்கத: பரசமர்ப்பணம், பரந்யாசம், ஆத்ம சமர்ப்பணம், அத்ருஷ்டம், ந்யாசம், ஆத்ம நிட்சேபம், ஆத்ம நிவேதனம், அடைக்கலம், சரணம், புகல், கதி, தஞ்சம் எனப் பல பெயர் களைப் பெறும்.

இந்தப் பிரபன்னர்களை வழியில் மூவகை யினராகப் பிரிக்கலாம்.

1. **அஞ்ஞானப் பிரபன்னர் :** கர்மம், ஞானம், பக்தி ஆகிய நெறிகளை அறிவதற்கேற்ற அறிவும் அவற்றைக் கடைப் பிடிப்பதற்கேற்ற ஆற்றலும் இல்லாதவராயும் வேறு புகல் அற்றவராயும் இறைவனிடம் சரணம் புகுந்தவர்கள். இவர்கள் நம்மைப் போன்று அறியாமையில் உழல்பவர்கள்.

2. **ஞானாதிகப் பிரபன்னர் :** கர்மம் முதலிய வழி களை அறியும் அறிவும் அவற்றைக் கடைப்பிடிக்கும் ஆற்றலும் நிரம்பப் பெற்றிருந்தும், அவை உயிரின் இயல்புக்கு ஒவ்வாதன என்று அஞ்சி, உயிரின் உண்மை இயல்பை அறிந் தமையால் உண்டான மிகு ஞானத்தால், புகல் வேறு ஒன்று இல்லாதவராய் இறைவனிடம் சரணம் புகுந்தவர்கள்.

நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார் முதலான முன்னைய ஆசாரியர்கள், ஞான அதிகப் பிரபன்னருக்குச் சான்று ஆவர்.

3. **பக்தி பாரவச்யப்[1] பிரபன்னர் :** இறைவனிடத்து உண்டான பரபக்தி, பரஞானம், பரம பக்திகளின் மிகுதி யினால், கால் ஆழும் நெஞ்சு அழியும் கண்சுழலும் என்றும் இட்டகால் இட்டகையாளாய் இருக்கும் என்றும் சொல்லுகிற படி பக்தி மேலீட்டால் தன்வசம் இழந்து பரவசம் (இறைவன்

1 பாரவச்யர்—பரவசமானவர்; இறைவன் வசமானவர். தம் செயல் மறந்தவர்கள்.

வசம்) அடைந்து, கட்டுக் குறைந்து கரணங்கள் கரைந்தவர்கள்.

"அங்குற்றேன் அல்லேன் இங்குற்றேன் அல்லேன்
உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான்
எங்குற் றேனும் அல்லேன் இலங்கை
செற்ற அம்மானே!
திங்கள் சேர்மணி மாடம் நீடு
சிரீவரமங் கலநகர்உறை
சங்கு சக்கரத்தாய்! தமியேனுக்கு
அருளாயே!" என்றும்

"என்கொள்வன் உன்னை விட்டு என்னும்
வாசகங்கள் சொல்லியும்
வன்கள்வ னேன்மனத்தை வலித்துக்
கண்ணநீர் கரந்து
நின்கண் நெருங்கவைத் தேஎனது ஆவியை
நீக்ககில்லேன்
என்கண் மலினம் அறுத்து என்னைக்
கூவி அருளாய்! கண்ணனே"

என்றும் சொல்லுகிறபடியே, வேறு வழிகளைக் கடைப் பிடிக்கும் ஆற்றல் இருந்தும் பக்திப் பரவசத்தால் அதை விடுத்து வேறு புகல் நாடாமல் இறைவனிடம் சரணம் புகுந்தவர்கள்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள், பக்தி பாரவச்யப் பிரபன்னர்க்குச் சான்று ஆவர்.

ஆழ்வார்கள் பெருமையும் கருணையும் அளவிடற்கு அரியன. அவர்களின் அருளிச் செயல்கள் தமிழ் மறை எனப்படும் தமிழை முத்தமிழ் என்பர். சங்கத் தமிழ் என்ற ஒரு பெயரும் தமிழுக்கு உண்டு. ஆழ்வார்கள் ஆரியத் தமிழ், மறைத்தமிழ், கோதைதமிழ், பெருந்தமிழ், இருந்தமிழ் எனப் பல பெயர்களைச் சூட்டித் தமிழை வளப்படுத்தியுள்ளனர்,

ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் இல்லாத எப் பொருளும் இல்லை.

சேதனன் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய ஐம்பொருள்களையும் விளக்கமாகக் கூறுவது தமிழ்மறை. வடமொழி மறைகளில் பரம்பொருள் யார்? என்று தெளி வாகச் சொல்லப்படவில்லை. தமிழ்மறையோ ''நாராயணன் ஒருவனே'' என்று தக்க சான்றுகளுடன் அறுதியிட்டுக் கூறுகின்றது.

இறையனுபவம் பெறச் சேதனர் மேற்கொள்ளும் வழிகள் பயன் தருவன அல்ல. பசுவின் பாலே மருந்தும் உணவும் ஆவதுபோல், அவனையே வழியாகப் பற்றும் சரணாகதியே பயனும் ஆகும். பிரபத்தியால் பெறும் பயன் கைங்கரியம் ஒன்றே என்று தெளிவாகவும் விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறுகின்றது தமிழ்மறை.

வடமறைகள் நான்கு. அவை என்றும் உள்ளன. ஒருவரால் செய்யப்படாதன என்பர். அத்தகு சிறப் பனைத்தும் தமிழ் மறைக்கும் உண்டு.

வடமறை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு பிரிவாக இருப்பது போல், தமிழ் மறையும் திரு விருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய் மொழி என நான்கு பிரிவாக இருக்கும்.

வடமொழி மறை என்றும் உள்ளது போல் தமிழ் மறையும் என்றும் உள்ளது. வடமறை ஒருவரால் செய்யப் படாதது போல் தமிழ் மறையும் ஒருவரால் செய்யப்படாதது, இதனை ''ஆகஸ்தியமும் அனாதி'' என்ற தொடரால் ஆசாரிய இருதயம் வலியுறுத்துகின்றது.

அனாதியான வடமறையைப் பிரளயந்தோறும் இறைவன் நினைந்து புதுப்பிப்பது போல், அனாதியான

தமிழ்மறையும் காலந்தோறும் இறைவனாலும் ஆழ்வாராலும் புதுப்பிக்கப்படுகின்றதே தவிரப் புதிதாகப் புனையப் படுவதில்லை.

சிட்சை, கற்பம், வியாகரணம். நிருக்தம், சந்தோவிசிதி, ஜோதிஷம் என ஆறு அங்கங்களும் உப அங்கங்களுமாகப் பதினான்கு பிரிவுகள் வடமறைக்கு இருப்பதுபோல், திருக் குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருஎழுகூற்றிருக்கை, பெரிய திருமொழி ஆகிய ஆறு அங்கங்களும் வேறு பதினான்கு பிரபந்தங்களாகிய உப அங்கங்களும் தமிழ் மறைக்கும் உண்டு.

''பிரம சூத்திரமும் திருவாய்மொழி முதல் இரண்டு பத்தும் ஒரே பொருளைக் கூறுகின்றன'' என்று சான்றோர் நிறுவியுள்ளனர்.

வடமறை ''சாந்தி சாந்தி'' என்பதுபோல், தமிழ்மறை பல்லாண்டு பல்லாண்டு என்கின்றது.

வேத அன்னையான காயத்திரியில் இருபத்து நான்கு எழுத்துக்கள் இருப்பதுபோல், தமிழ்மறையிலும் இருபத்து நான்கு பிரபந்தங்கள் உள்ளன.

தமிழ்மறை வசனங்களை வடமொழி நூல்கள் மேற் கோளாக எடுத்தாண்டுள்ளன.

உடையவர் ஸ்ரீ பாடியம் எழுதும்போது, திருவாய் மொழியை எடுத்து ஆண்டுள்ளார் என்பதனை ''பாடியகாரர் இது கொண்டு சூத்திர வாக்கியங்கள் ஒருங்க விடுவர்'' என்று ஆசாரிய இருதயம் கூறுகின்றது.

திருவாய்மொழி துவய மந்திரத்தின் விளக்கமாக இருப்பதை விளக்கவே, ''திருவாய்மொழி துவய அர்த்த விவரணம்'' என ஒரு நூல் தோன்றியுள்ளது.

"வடமொழி மறை என்றது தென்மொழி மறையை நினைத்திறே" என்பதால் இருமொழி மறையும் சமம் என்பது உறுதியாகின்றது.

வடமொழி வேதம் 'இறைவன் ஆணை' என்பர். தமிழ்மறையும் 'ஆணை ஆயிரம்' எனப்பட்டது.

வடமறை சத்தியமானது எனில், தமிழ் மறையும் பொய்யில் பாடலாக இருக்கும்.

வடமறை குற்றமற்றது எனில், தமிழ் மறையும் ஏதம் இல் ஆயிரம் எனப்படும்.

வடமொழியில் இல்லாத தமிழ்ப் பிரபந்தமும், வேதம் போல் பிரமாணமாகக் கொள்ளத் தக்கதாகுமோ? என்று அறியாதார் சிலர் கேட்கலாம்.

இறைவனைப் பற்றிப் பேசாமல் வேறு சிலவற்றைப் பற்றிப் பேசுமாயின் எம்மொழியாயினும் விலக்கத் தக்கதே! இறைவனைப் பேசும்மொழி எதுவாயினும் ஏற்கத்தக்கதே! இதனை ஒரு வரலாற்றின் மூலம் விளக்குவோம்.

கைசிகன் என்ற ஓர் அந்தணன், திருமால் சீரினை வடமொழி யொழிந்த வேறு ஓர் மொழியில் பாடிக் கொண்டிருந்தான்.

அவ்வாறு பிறமொழியில் பாடுவது தவறு என்று கருதிய அந்நாட்டு அரசன், அவனை நாடு கடத்திவிட்டான். அந்த அரசனை இறுதியில் இயம தூதர் தங்கள் உலகிற்கு அழைத்துச் சென்றனர்.

"நான் எந்தப் பாவமும் செய்யவில்லையே! எத்தனையோ அறங்கள் செய்துள்ளேன். என்னைச் சொர்க்கத்துக்கு அல்லவா அழைத்துச் செல்லவேண்டும்!

தவறுதலாக இயம லோகத்துக்குக் கொண்டு வந்து விட்டீர்கள் போலும்!'' என்று அந்த அரசன் கேட்டான்.

''திருமால் சீர் பாடுவதற்கு மொழி வரம்பு கிடையாது என்பதனை உணராமல், திருமால் சீரை வடமொழி தவிர, வேறு மொழியில் பாடலாகாது என்று கைசிகனை நாட்டை விட்டு ஓட்டினாய் அல்லவா? அது மிகப் பெரும் பாவம். அதனாலேயே நீ இங்கு வர நேரிட்டது'' என்று இயமன் கூறினான். இந்த வரலாறு வராக புராணத்தில் உள்ளது.

மொழியை மட்டும் கொண்டு தள்ளுவதும் கொள்ளுவதும் செய்வோமானால், வடமொழியிலுள்ள உலகாயத நாத்திக நூல்களையும் ஏற்க நேர்ந்து விடுமே!

ஆழ்வார் தம் கரைபுரண்ட கருணைப் பெருக்காலே பெண்களும் இழிகுலத்தார் என்று அறிவில்லாத அகந்தை யரால் ஒதுக்கப்பட்டவரும் இறையனுபவம் இழந்து போக லாகாது என்று தமிழ்மொழியில் எல்லோரும் அறிந்து உய்யு மாறு அருளிய தமிழ்மறை பொற்குடம் போன்றது. யார் பயன்படுத்தினாலும் அதன் தூய்மை கெடாது.

வடமொழி மறை மண்குடம் போன்றது. ஒருமுறை ஒருவர் பயன்படுத்திவிட்டால், அதன் தூய்மை கெட்டு விடுவது மண்குடத்தின் இயல்பு. வடமொழி மறையும் தகாதவர் யாரேனும் ஓதினால், அதன் தூய்மை கெட்டுவிடும் என்பது வடமொழியாளர் நம்பிக்கை.

''நான்காம் வருணத்தில் பிறந்த ஆழ்வாருக்கு உபதேசம் செய்யும் தகுதி உண்டா?'' என்று சிலர் சாதி பேதத்தைக் காட்டித் தங்கள் அறியாமையை ஒழுக விடுவர். அத்தகையவர் இறைவனிலும் உயர்ந்தவர் என்று உலகமும் இறைவனும் ஏற்றுக் கொண்ட ஆழ்வாரை இழிவாக மதிப்

பதால், அவரை உண்ட நரகம் மீண்டும் வாசலைத் திறக்காது. அதாவது அவர்கள் மீளாத நரகிலேயே உழல்வர். அண்ணாத்தல் செய்யாது அளறு.

பத்தி என்பது எட்டு வகைப்படும் என்பர்.

1. இறையடியாரிடம் தாயன்பு[1] வைப்பது.
2. இறைவனை ஆராதிப்பதில் உகப்பு.
3. தானே வழிபாடு செய்வது.
4. இறை வழிபாட்டில் ஆடம்பரமின்மை.
5. இறைவன் கதைகளை விருப்புடன் கேட்டல்.
6. குரல் தழுதழுப்பக் கண்ணீர் சோரத் தேகம் புளகமுற ஆடி அரற்றுதல்.
7. இறைவனை இடைவிடாது நினைத்தல்.
8. இறையனுபவம் பிரியேன். பிரியில் தரியேன் என்னும் உறுதி.

இத்தகைய பக்தியுடையவன் இழிகுலத்தவன் ஆயினும் அவன் அந்தணர் அனைவரினும் உயர்ந்தவனும் துறவியும் பண்டிதனும் முனிவனும் ஆவான் என்று இறைவனே கூறியுள்ளான். அப்படியிருக்க அவன் உபதேசிக்கத் தகுதியில்லாதவன் ஆவானோ?

"பிரமன் முதலாகத் தொடர்ந்து வருகின்ற மரபில் வந்த அந்தணர்களே! இழிகுலத்தில் பிறந்தவர்கள் என்று நீங்கள் அறியாமையால் நினைத்திருக்கும் ஒருவர், எனக்கு அடியார் ஆகிவிட்டால், அவர் திருவடிகளில் விழுந்து வணங்குங்கோள்! அவர் உங்களிடம் ஞானம் பெற விரும்பினால், ஆதாரத்துடன் சொல்லுங்கோள்! அவர் இறைவனைப் பற்றிய ஞானத்தை உபதேசித்தாராயின் ஏற்றுக் கொள்ளுங்கோள்!

---

1 தாயன்பு—வாத்சல்யம்.

"உயர் குலத்தில் பிறந்த கூரத்து ஆண்டாள், தாழ்குலம் என்று தவறாகக் கருதப்பட்ட பொன்னாச்சியாரிடம் ஐயம் கேட்டுத் தெளிந்த கதை உலகறியுமே!

"மேலொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள் நான் ஆயினும், என் அடியார் என்னை விட மேலானவர் ஆவர். ஆதலால், என்னை வழிபடுவது போலாகிலும் அவர்களை ஆதரித்து வழிபடுங்கோள்!

"என்று திருவரங்கனாகிய நீயே அருளிச் செய்ததும் அன்றி, இது உபதேச மாத்திரமேயாய்ப் போகாமல், திருவரங்கம் கோவிலிலே வந்து அறிதுயில் அமர்ந்து, லோக சாரங்க முனிகள் தலையிலே திருப்பாண் பெருமானை ஏற்றி யருளச் செய்து, சொன்னதை நேரிலும் காட்டியருளினவனே!" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய் துள்ளாரே!

இறைவனுக்கு அடியான், நாயின் ஊன் உண்ணும் சண்டாளனே ஆகினும், வணங்கி வழிபடத் தகுந்தவன் ஆவதோடு ஞானத்தைக் கற்பிக்கவும் ஏற்றவன் ஆகின்றான்.

நைமிச வனத்தில் வாழ்ந்த மேற்குலத்தார் ஆகிய சௌனகர் முதலிய முனிவர்க்குத் தாழ்குலத்தவர் என்று பிறர் தவறாக மதித்த சூதர், புராணங்களை எல்லாம் ஐயம், திரிபு, அறியாமை என்னும் முக்குற்றங்களும் அறப் போதித்தார்.

மிதிலையில் வேடர் குலத்தில், முற்பிறப்பிற் பெற்ற ஞானத்தோடே பிறக்கையாலும் அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம் என்று அவர்களுக்குத் தொண்டு செய்யும் பெருமையாலும் அறத்தின் நுணுக்கங்கள் யாவும் அறிந்தவன் தர்மவியாதன். அவன் ஆட்டு ஊன் வணிகம் செய்து வந்தான். சத்துவ குணத்தினரான மாமுனிவர்கள், அவன்

ஊன் விற்று முடிக்கும் வரையும் வாசலிலே பாடுகிடந்து, அவனைத் தரிசிப்பதற்காக ஏங்கி, அறத்தில் நேரும் ஐயப்பாடு களைக் கேட்டுத் தெளிந்தார்கள்.

ஏழை ஏதலன் கீழ்மகன் என்று உலகம் மயங்கிய குகப்பெருமாள், புல்லாலான படுக்கையிலே பிராட்டியோடு துயில் கூர்ந்த பெருமாளை, இரவெல்லாம் நாண் பூட்டிய வில்லும் கையுமாய் நடையாடும் மதிள் போல் சாரிதிரிந்து காவல் இருந்த இளைய பெருமாளின் பெருமையைப் பரதாழ்வானுக்கு எடுத்துரைத்தார்.

இறைவன் தானே பல பிறப்புக்கள் எடுத்து, எதிர் சூழல்புக்குத் தொடர்ந்து பெறுதற்கேற்ற ஆசூழ் படைத்தவர் நம்மாழ்வார். அவர்பால் பொங்கிய அருள் வெள்ளம், வேறு யாரிடமும் காண இயலாமையால், அவர் பெருமையை இறைவன் தானும் அளவிட முடியாதவன் ஆனான். அது மட்டுமன்று. விதுரர், சபரி முதலானோரிலும் வேறுபட்டவ ராய், பிரபன்ன குலத்தலைவரான நம்மாழ்வார், ஞான உபதேசம் செய்ய மிகவும் தகுதி வாய்ந்தவர் என்பது சொல்லவும் வேண்டுமோ?

''நாயின் ஊன் உண்ணும் சண்டாளனே ஆகினும், இறைவனுக்கு உறவுடையவன் ஆகிவிட்டால், அந்த உறவாகிய பெருநெருப்பில் அவன் இழிகுலம், செயல் ஆகிய குற்றங்கள் தீர்ந்து ஞானிகள் போற்றும் அந்தணன் ஆகி விடுகின்றான்'' என்றும்

''சங்கு சக்கரங்களைத் தரித்த வைணவன் எவனாயினும் பண்டைக்குலம் முதலிய குற்றங்கள் தீர்ந்து, பூணூல் பூண்ட பூசுரன் ஆகிவிடுகின்றான்'' என்றும்

''இறையன்பர்கள் கீழ்க்குலத்தார் அல்லர். அவர்களே அந்தணர்; வைணவர் என்று சொல்லப்படுகின்றனர். இறையன்பில்லாதவர் எக்குலத்தினராயினும் அவர்களே கீழ்க்

குலத்தினர்'' என்றும் எத்தகு மேன்மையன் ஆயினும் புரை தீர்ந்த நல்லொழுக்கமுடைய வைணவனைக் கண்டவுடனே, எக்குற்றவாளன்; எதுபிறப்பு; ஏது இயல்பாக நின்றோன் ஆயினும் தண்டம் போல் பூமியில் விழுந்து வணங்குதல் வேண்டும் என்றும் சான்றோர் பலவாறு சாதித்துள்ளனர்.

நாகேந்திரன், யுதிட்டிரனிடம் ''அந்தணன் யார்?'' என்று வினவினான். ''சத்தியம், கொடை, பொறுமை, ஒழுக்கம், தயை ஆகிய குணங்கள் நிரம்பியவன் எவனோ அவனே அந்தணன்'' என்று யுதிட்டிரன் விடையிறுத்ததாக ஓர் ஐதிகம் உண்டு.

திருவள்ளுவ நாயனாரும் ''அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்'' என்று தமிழ்மறையில் விளக்கியிருக்கின்றார் அன்றோ?

யுதிட்டிரன் கூற்றுப்படி சத்குணத்தன் அந்தணன் ஆவான் எனில், இறையடியான் யாராயினும் அந்தணன் ஆகத் தடை உண்டோ?

பிறப்புப் பற்றி வரும் முன்னைய சாதி ஒழுக்கமானது, மற்றொன்றின் தொடர்பால் கழிந்து, புதிய சாதி ஒழுக்கம் உண்டாகும் என்பதற்குச் சான்றோர் உரையும் காட்சியும் சாட்சியாவதற்குப் பல எடுத்துக் காட்டுக்கள் காட்டலாம்.

மண்குடமானது நெருப்பின் தொடர்பால், செய்யும் போதிருந்த பசுமை நிறம் மாறிச் செந்நிறம் அடைகின்றது.

குளவியினால் கொட்டப்பட்டுப் புழுவானது முன் உருவம் மாறிக் குளவி உருவம் பெறுகின்றது.

இரும்பானது பரிசவேதியின் தொடர்பால் பசும்பொன் ஆகின்றது,

கௌதமன் சாபத்தால் அகலிகை கல் ஆனாள்.

அரசனான திரிசங்கு, வசிட்டர் சாபத்தால் அப் பிறப்பிலேயே சண்டாளன் ஆனான்.

அரசனான விசுவாமித்திரன், வசிட்டர் வாக்கினால் பிரம்ம இருடியானான்.

இப்படி ஒரு பிறப்பிலேயே தாழ்வு உயர்வாவதும், உயர்வு தாழ்வாவதும் உண்மையாதலால், இறையடியார் பண்டைக் குலம் தவிர்ந்து தொண்டக்குலம் ஆவது திண்ணம்.

ஒருவன் இறைவனை நோக்கி ஓரடியிட்டாலும் அவன் பெருமை பேசும் தரம் அன்று.

சக்கரவர்த்தித் திருமகன் ஏழை ஏதலனான குகனை ''எனக்கு உகந்த தம்பி நீ'' என்றான், வீடணனை இக்குவாகு குலத்தனாக மதித்து உரையாடினான். பெரிய உடையாராகிய சடாயுவுவைத் தந்தையாக மதித்து இறுதிக் கிரியைகளைச் செய்தான். சபரி என்னும் வேட்டுவப் பெருமாட்டி கையால் ஊட்டிய எச்சிற் பழத்தை அமுது செய்தருளினான்.

கண்ணன், வீடுமன், துரோணன் முதலியோர் மாளிகை களில் புகாமல் தாழ்பிறப்பினர் ஆன விதுரர் திருமாளிகையில் புகுந்து அமுது செய்தருளினான்.

யுதிட்டிரன், விதுரர்க்குத் தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்தான்.

பெரியநம்பி, மாறனேர நம்பிக்கு இறுதிச் சடங்கு செய்தார்.

பட்டர், பிள்ளை யுறங்காவில்லிதாசர்க்கு இறுதிக் கிரியைகள் செய்தருளினார்.

நல்லான் என்பார், ஆற்றில் மிதந்துவந்த உடலில் வைணவக்குறிகள் கண்டு இறுதிக்கிரியை செய்தார்.

எம்பெருமானார் நீராடிய பின், பிள்ளை யுறங்காவில்லி

தாசருடைய கையைப் பற்றிக் கொண்டு மீண்டு. உடல் தூய்மை பெற்றார்.

நம்பிள்ளை, இறைவன் பிரசாதத்தைப் பிள்ளை ஏறு திருவுடையார் தாசர் கையினால் தொடச் செய்து தூய்மை யாக்கி அமுது செய்தார்.

நடுவில் திருவீதிப் பிள்ளை, பட்டர் பிள்ளை வானமாமலை தாசர் பொன்னடி சாத்திய போதே தூய்மையாயிற்று என்று, புது மண்டபம் புகுவிழாவை நிறுத்திக் குடிபுகுந்தார்.

பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமை, கண்சோர, நண்ணாத, தேட்டருந்திறல், திருமாலையில் மேம்பொருள் எனத் தொடங்கும் பாடலுக்கு மேலுள்ள பாடல்கள் ஆகியவற்றில்

''எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏது இயல்பு ஆக நின்றோர்
அக்குற்றம் அப்பிறப்பு அவ்இயல்பே நம்மை
ஆட்கொள்ளுமே'

என்றபடி இறையடியார் பெருமை பேசப்பட்டுள்ளது.

இங்கே கூறிய செய்திகளில் சிலவற்றோடு மேலும் சில அரிய செய்திகளையும் தொகுத்து ''மிலேச்சனும் பக்தன் ஆனால்'' என்று தொடங்கும் நூற்பா ஒன்றை 'ஆசாரிய இருதயம்' தருகின்றது.

உயர்குலத்தர் எனப்படுவோர் வைணவராகும்போது, குலம், கல்வி, செல்வம் ஆகியவற்றால் வரும் முக்குறும்பையும் அரிதின் முயன்று கடத்தல் வேண்டும். கடந்தாலும் ஒவ்வொருகால் அவை தலையெடுக்க வாய்ப்பு உண்டு.

தாழ்குலத்தர் எனப்படுவோர் வைணவராகும்போது, அந்த முக்குறும்புகளையும் கடக்க வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் பிறப்பிலேயே அவற்றைக் கடந்தவர்கள்.

இந்த இருநிலையரையும் ஒப்பிடும்போது உயர்குலத்தர் எனப்படுவோரைக் காட்டிலும் தாழ்குலத்தோர் எனப்படுவோரே உயர்ந்தவர் ஆவர் என்பதை எளிதில் உணரலாம்.

வைணவராகும் தாழ்குலத்தவர் மூதுவராம் விண்ணோரிலும் முனிவரிலும் சீரியர் என்பது ஆழ்வார், ஆச்சாரியர்களின் ஒருமித்த கருத்து.

## உயிர்

பூதஉடல் புலன்கள்மனம் புல்ஆவி புந்திஎனும்
யாதும்அல்ல னாய்இலகி யான்எனும்இன் நுண்ணறிவாய்ச்
சேதனனாய் அடிமையுமாம் உயிர்க்கெல்லாம் திண்உயிராய்
தீதல்இன்றித் திகழும்சீர் அத்திகிரித் திருமாலே!

தான் அடைந்த குணம்கருவி தம்கிரிசை வழிஒழுக்கி
ஊன்எடுத்துஉண்டு உமிழ்ந்துஉழலும் உயிர்க்கெல்லாம்
உயிர் ஆகிக்
கான்நடத்திக் கமலையுடன் கண்டுஉகந்து விளையாடும்
தேன்எடுத்த சோலைகள்சூழ் திருஅத்தி யூரானே!

அருத்த பஞ்சகம்—தேசிகப் பிரபந்தம்.

பார்த்த குருவின் அளவில் அருள் இன்றிச்
சீர்த்திமிகு ஞானமெலாம் சேர்ந்தாலும்—கார்த்தகடல்
மண்ணின்மேல் துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழாம் நரகு —சப்தகாதை

இந்த உயிரின் இயல்பு பற்றி நம்பிள்ளை ஈடு கூறுவதன் சாரத்துடன் முடிப்போம்.

உயிர் அணு அளவானது.

ஒளிப் பொருளானது (பிரகாசம் என்று பெயரிடுவர் சைவர்)

அறிவும் இன்பமும் இயல்பாக உடையது.

அழிவின்மையுடையது ஆதலால், காலத்தால் அளவிடக் கூடாதது.

அறிவுப்பொருளாகையால், பொருள்களால் அளவிடக் கூடாதது.

இறைவனை விட்டுத் தனியே பிரிப்பதற்கும் தனியே குறித்துக் காட்டுவதற்கும் தகுதி அற்றது.

இறைவனுக்கே அடிமைப்பட்டது.

இறைவன் பணியே இன்பமாகக் கொள்வது.

இறைவனுக்கே உரிமைப் பட்டது.

# நெறி

உயிர் பெறுவதற்கு உரிய தகுதியான பலனை அடைவதற்கான வழி, நெறி எனப்படும்,

கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசாரியன் அபிமானம் என நெறிகள் ஐந்து ஆகும்.

## 1. கர்மயோகம் :

வேள்வி, கொடை, தவம், தியானம் சந்தியாவந்தனம், ஐம்பெரு வேள்விகள், அக்கினி கோத்திரம், தீர்த்த யாத்திரை, திருத்தலவாசம், கிருச்சிரம், சாந்திராயணம், புண்ணிய நதிநீராடல், விரதம், சாதுர் மாசியம், பலமூல அசனம், சாத்திரப் பயிற்சி, சமாராதனம், சபம், தருப்பணம். முதலியவற்றைக் கையாள்வதால், உடல் இளைத்து வற்றும். அதனால் இருள்சேர் இருவினைகள் கெடும்.

ஐம்பொறிகள் வாயிலாக உருவாகும் அறிவு தர்ம பூத ஞானம் எனப்படும், அந்த ஞானத்துக்குச் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை இலக்கு ஆக்காமல், உயிரிடத்தும்

இறைவனிடத்தும் அவாவினை எழுப்பி, எண் வகை யோகத்தில் ஈடுபட்டு உயிரை இலக்கு ஆக்குவது கர்மயோகம்,

மேலே கண்ட வேள்வி முதல் தருப்பணம் ஈறாக உள்ள வற்றில் சிறந்தவற்றை விளக்குவோம் :

**வேள்வி :** தீவளர்த்து, நெய் முதலிய அவி சொரிந்து ஆற்றுவது வேள்வி. வேள்வியின் வடமொழிப் பெயர் யக்ஞம், யஜ் என்பது இறைவழிபாடு எனப் பொருள்படும்.

**கொடை :** பசு, நிலம், உண்டி, பொன், கன்னி முதலிய வற்றைத் தக்கார்க்கு அளிப்பது கொடை.

**தவம் :** குளிர் காலத்தில் கழுத்தளவு நீரிலிருந்தும், கோடைக் காலத்தில் தீயின் நடுவிலிருந்தும் கனியேனும் இனிய செங்காயேனும் உதிர் சருகு சந்த மூலங்களேனும் நீர், வாயு ஆகியவையேனும் கனல் வாதையாகிய பசி வருங்கால் புசித்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது தவம்,

**ஐம்பெரு வேள்வி :** முறம், அம்மி, துடைப்பம், உரல் உலக்கை, தண்ணீர்க்குடம் ஆகிய இவ்வைந்தையும் பயன் படுத்தும் போது, காணா உயிர்களாகிய கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் அழிய நேரும். நாம் அறியாமலே நேரும் பாவங்கள் இவை. இதற்குக் கழுவாயாக நாள்தோறும் பிரமவேள்வி, தேவ வேள்வி, தென்புலத்தார் வேள்வி, மானுடவேள்வி, பூதவேள்வி ஆகிய ஐந்து வேள்விகள் செய்தல் வேண்டும்.

1. பிரமவேள்வி : வேதம் ஓதுதல்.
2. தேவ வேள்வி : (வேள்வித்) தீ வளர்த்தல்.
3. தென்புலத்தார் வேள்வி : தருப்பணம்[1] செய்தல்.
4. மானுட வேள்வி : விருந்தோம்புதல்.
5. பூத வேள்வி : பிறஉயிர்களுக்குந் தீனியிடுதல்,

1 பிதிரர்க்கு மனநிறைவுண்டாகச் செய்யும் சடங்கு.

**அக்கினி கோத்திரம் :** காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி ஆகிய மூன்று அழல்களை வாழ்நாள் முழுவதும் அவியாமல் வளர்ப்பதும். காலையும் மாலையும் செய்யப்படும் ஔபாசனமும்[1] அக்கினி கோத்திரம்.

**கிருச்சிரம் :** [2] அர்த்த கிருச்சிரம், சீதக் கிருச்சிரம், தப்தக் கிருச்சிரம் என மூன்று வகைப்படும். பாவத்தின் கழுவாயாகச் செய்யப்படுவது அது.

**சாந்திராயணம் :** பௌர்ணமி கடந்த முதல் நாள் தொடங்கி, அமாவாசை வரை ஒவ்வொரு கவளமாகக் குறைத்தும் அமாவாசை கடந்த மறுநாள் முதல் ஒவ்வொரு கவளமாக அதிகப்படுத்தியும் அன்னம் உண்பது சாந்திராயணம். பாவத்திற்குக் கழுவாயகச் செய்யப்படுவது இது.

**விரதம் :** புரட்டாசி மாதச் சுக்கில சதுர்த்தசியில் திருமால் அடியார் கைக்கொள்ளும் ஒருவகை விரதம். அது அனந்த விரதம் எனப்படும்.

**சாதுர் மாசியம் :** ஆடி மாதம் சுக்கிலபட்ச ஏகாதசி தொடங்கிக் கார்த்திகை மாதம் சுக்கில பட்ச ஏகாதசி வரை (நான்கு மாதங்கள்) ஓரிடத்திலேயே இருத்தலாகிய நியமம் சாதுர் மாசியம்.[3]

**பல, மூல அசனம் :** காய், கனி, கிழங்குகளை மட்டும் புசிப்பது பல மூல அசனம் ஆகும். பலம்—பழம். மூலம்—கிழங்கு. அசனம்—உணவு.

**எண்வகை யோகம் :** இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு அங்கங்களையுடையது அட்டாங்க

---

1 உபாசனைக்காக வீட்டில் வளர்க்கும் தீ.
2 பிராயச்சித்தம்; கழுவாய்.
3 நான்கு மாத விரதம்.

யோகம் எனப்படும் எண்வகை யோகம், அஷ்டம்—எட்டு. அங்கம்—உறுப்பு அந்த எட்டு உறுப்புகளையும் சற்றே விளக்குவோம்.

அ இமயம் : பிரமசரியம், அகிம்சை, அஸ்தேயம், சத்தியம், அபரிககிரகம் என்னும் ஐந்தும் இயமம்.

1. பெண இன்பம் துறத்தல் பிரமசரியம்.
2. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை அகிம்சை.
3 பிறர் பொருளை மனத்தாலும் கவராமை (திருடாமை) அஸ்தேயம்.
4. பிறர்க்கு நலம் தரும் மெய்ம்மொழி சத்தியம்[1].
5. கள், ஊன முதலிய இழிபொருள்கள் உண்ணாமை அபரிக்கிரகம்.

ஆ. நியமம் : சுவாத்தியாயம், சௌசம், மகிழ்ச்சி, தவம், நியதாத்மம் என்னும் ஐந்தும் நியமம்.

1. வேதங்களை ஓதுதல் சுவா ததியாயம்.
2 உடலை மண்ணாலும் நீராலும் மனத்தை வாய்மையாலும் தூய் தாக்குதல் சௌசம்.
3. பெற்றது கொண்டு மன நிறைவு கொள்ளுதல் மகிழ்ச்சி
4 உபவாசம் முதலியன மேற்கொள்ளுதல் தவம.
5 தெய்வத்தை வழிபடுவது நியதாத்மம்.

இ ஆசனம் : பத்திராசனம், கோமுகாசனம், பத்மாசனம், சிம்மாசனம், மயூராசனம். குக்குடாசனம், சுவத்திகாசனம் எனப் பல வகைப்படுவது ஆசனம். இதன் நுட்பங்களையும் செய்யும் முறைகளையும் "அடயோகப் பிரதீபிகை" முதலிய யோக நூல்களிற் காணலாம்.

---

1 "பொயமையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நனமை பயககும் எனின்"—ஒப்பிடுக!

ஈ. **பிராணாயாமம் :** உயிர்க்காற்றை உள் இழுத்து நிறுத்தி வெளிவிடுவது பிராணாயாமம்.

உயிர்க்காற்றை மூக்கின் ஒரு பகுதியால் உள் இழுத்தல் பூரகம்.

உயிர்க்காற்றை உள்ளே அடக்குதல் கும்பகம்.

உயிர்க்காற்றை மூக்கின் மறு பகுதியால் வெளிவிடுவது ரேசகம்.

உ. **பிரத்தியாகாரம் :** சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐப்புலன்கள் அடங்கும்படி, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளைத் தடுத்து உள்நோக்கி யிருத்தல் பிரத்தியாகாரம். 'செயற்கரிய' என்று வள்ளுவர் குறிப்பிடுவது இதைத்தான் எனலாம்.

ஊ. **தாரணை :** இறைவனிடம் இடை விடாமல் மனம் ஒன்றியிருத்தல் தாரணை.

எ. **தியானம் :** தாரணையின் முதிர்ச்சியே தியானமாம். ஐம்படைகளுடனும் அணிகலன்களுடனும் கூடிய இறைவனது திவ்விய மங்களத் திருமேனியை அல்லது திருக்குணங்களை இடைவிடாமல் நினைத்திருப்பது அது.

ஏ. **சமாதி :** புலன் இன்பத்தால் வரும் ஆசை முற்றும் ஒழிந்து இறைவனிடம் ஒருமுகமாக ஈடுபட்டிருத்தல் சமாதி.

## 2. ஞான யோகம்

சங்கு, சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐம்படையுடன், பொன்னாடை புனைந்து, முடிச்சோதி யாகிய மகுடம் முதல் காற்சிலம்பு முதலான அணிகலன் களால் அலங்கரிக்கப்பட்ட திவ்விய மங்களத் திருமேனி யனாய்ப் பெரிய பிராட்டியுடன் நம் நெஞ்சத தாமரையிலும் சூரிய மண்டலம் முதலிய சிறப்பிடங்களிலும் எழுந்தருளி யிருக்கும் இறைவனை எண்வகை யோகத்தால் உண்டான ஞானத்துக்கு இலக்காக்கி அனுபவித்து, யோகப் பயிற்சி

முறையால் அந்த அனுபவ காலத்தைப் பெருக்கி எப்போதும் பாவனை செய்தல் ஞான யோகம்.

## 3. பக்தி யோகம்

ஞான யோகத்தின் பலனாகப் பெற்ற தைலதாரை போன்ற இறையனுபவம் கனிந்து பக்குவமான அன்பு வடிவாகி, அதுவே மேன்மேலும் விரிந்து வளர்வது பக்தி யோகம்.

கர்மயோகம், இம்மை மறுமைச் செல்வங்களைப் பெறு வதற்கு முக்கியமான சாதனமாகும்.

ஞான யோகம், உயிரை மட்டும் அனுபவித்துக் கொண்டு இறையனுபவத்தை இழந்து விடுகின்ற கைவல்ய முக்திக்கு முக்கிய சாதனமாகும்.

பக்தியோகம், கைங்கரிய வடிவான மேலான, தனித் தன்மை வாய்ந்த வீடு பேற்றுக்கு முக்கிய சாதனமாகும்.

இது தவிர, கர்ம, ஞான, பக்தி யோகங்கள் தனித் தனியே வீறு பெறு துறக்கமாகிய முக்திக்கும் வழியாவது உண்டு. அவ்வாறு வழியாகும்போது, வழியாகும் ஒன்று மற்ற இரண்டையும் அங்கமாகக் கொண்டிருக்கும். வழி எனினும் நெறி எனினும் பொருள் ஒன்றே.

கர்மயோகம் முக்திக்கு வழியாகும்போது, ஞானம், பக்திகள் அதற்கு அங்கமாகும்.

ஞானயோகம் முக்திக்கு வழியாகும்போது, கர்மம், பக்திகள் அதற்கு அங்கமாகும்

பக்தியோகம் முக்திக்கு வழியாகும்போது, ஞானம், கர்மங்கள் அதற்கு அங்கமாகும்.

இவ்வாறு மூன்றும் இணையாமல் ஒன்றே தனித்து முக்திக்கு வழியாகாது என்பது திரண்ட பொருள்.

**பக்தியின் இயல்பு :** கர்மம், ஞானங்களின் உதவியினால் உருவாவது பக்தி யோகம். அது நெடுங்காலம் வருந்தி முயன்று சாதிக்க வேண்டும். பக்தி யோகத்தால் பலன் பெறுவதற்குக் காலதாமதம் ஆகும்.

மேலும் பக்தி யோகத்நால் பலன் பெற வேண்டுமானால், உடல் துறக்கும்போது, இறைவன் நினைவு வரவேண்டியது அவசியம். இல்லையேல் பலன் கிட்டாமல் மறுபிறப்பு வரும்.

பக்தியோகமானது, ஆன்மாவின் இயல்புக்குச் சேராதது என்ற அச்சமும், அந்தப் பக்தி யோகத்தை முழுமையாக அறிவதற்கு ஞானமின்மை, கைக் கொள்வதற்கு ஆற்றல் இன்மைகளும் ஆகிய காரணங்களால் அனைவராலும் எளிதில் ஈடுபட இயலாதது.

மேலும் பெண்கள் முதலியோரும் இறையன்பில்லாத இழிகுலத்தினரும் பக்தி யோகத்துக்குத் தகுதியில்லாதவர் ஆவர் என்றும் இடையே சிலர் தடை விதித்துள்ளனர்.

## 4. பிரபத்தி :

அனைவரும் எளிதில் கடைப்பிடித்தற்குரிய வழி பிரபத்தி என்னும் சரணாகதியே. அதனை ஆன்மாவின் இயல்புக்குச் சேராதது என்று அஞ்சவேண்டியதில்லை. முழுமையாக அறிவதற்குரிய ஞானம் இல்லையே என்றும் கைக் கொள்வதற்கு ஆற்றல் இல்லையே என்றும் ஒதுங்க வேண்டியதில்லை.

பிரபத்தி அடைந்த போதே பலன் தருவது. தானே வழியும் பலனுமாக இருப்பது. உயிர் தனக்கு உரியதன்று; இறைவனுக்கே உரியது என்னும் இயல்புக்கு ஏற்றது. ஒரு முறை மட்டுமே செய்தாற் போதுமானது.

பெரிய பிராட்டியாரை முன்னிட்டு, இறைவன் திருவடிகளே வழி என்று பற்றுவதுதான் பிரபத்தி,

அகல கில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம்மூன்
றுடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே
புகல்ஒன் றில்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

என்று ஆழ்வார் அருளிய பாசுரம் பிரபத்தியை நன்கு விளக்குகின்றது.

மந்திரத்திரயம் என்று வைணவ உலகம் கொண்டாடும் மூன்று திருமந்திரங்களும் பிரபத்தியையே விளக்குகின்றன.

''ஸ்ரீ மந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே'' என்று இறைவனையே பற்றிய பின்பும், 'சரணம் பிரபத்யே' என்ற நினைவு வருவது இயல்பு. ஆனால் அந்த நினைவு மீண்டும் பிரபத்தி செய்ததாக ஆகாது. முதலில் செய்த பிரபத்தி இறைவனைப் பெற வழியானதைப் போல், அந்த நினைவு, வழியும் ஆவதில்லை. அந்த நினைவு இறையனுபவ மாகிய பயனாகவே கொள்ளப்படும் என்பது தென்னா சாரியர்களின் கருத்து[1].

---

1 ஒருமுறை மட்டுமே பிரபத்தி செய்தல் வேண்டும். மறுமுறை செய்தல் கூடாது என்பது தென் ஆசாரியர் கொள்கை. ஆகையால் தான் மீண்டும் 'சரணம் பிரபத்யே' என்பதனை இறையனுபவப் பயனாகக் கொள்கின்றனர். மீண்டும் சரண மடைவதாகக் கொள்வதில்லை.

வட கலையார் மீண்டும் மீண்டும் பிரபத்தி செய்து கொண்டே இருத்தல் வேண்டும் என்பர். ஆதலால் 'சரணம் பிரபத்யே' என்பதனை மறுமுறை செய்யும் பிரபத்தியாகக் கொள்வர்.

சரணம் பிரபத்யே என்பது சரணமாகப் பற்றுகின்றேன் என்று பொருள்படும் வடசொல். இது த்வய மந்திரத்தில் உள்ளது.

இந்தப் பிரபத்தி ஆர்த்தப் பிரபத்தி. திருப்தப் பிரபத்தி என இருவகைப்படும்.

1. **ஆர்த்தப் பிரபத்தி :** காரணமின்றி வரும் இறைவன் திருவருள் நோக்கத்தின் அடியாக உண்டாகும் வேதப் பயிற்சி, கற்றல், கற்ற வழி நிற்றல் (ஞானம் அனுட்டானம்) ஆகியவற்றால் சிறப்புற்ற நல்லாசிரியனால் உபதேசம் செய்யப் பெறுவான் ஒருவன், இறைவனுக்கே தகுதியான தலைமைத் தன்மையும் தஞ்சமாகும் தன்மையும் தானே வழியும் பயனும் ஆகும் தன்மையும் அறியும் மும்மை வடிவான ஞானம் பெறுவான்.

உயிருக்கே தகுதியான அடிமைத் தன்மை. தஞ்சமடையும் தன்மை இறைவனை அனுபவிக்கும் தன்மை ஆகிய மும்மை வடிவான அறிவும் தோன்றும்

அப்போது இறையனுபவத்துக்குத் தடையான பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் கொண்ட அழுக் குடம்பில தொடர்பும் இறைவன் நினைவை விரும்பாமல் ஐம்புல இன்பங்களில் ஈடுபாடு கொண்டவரின் தொடர்பும் நெருப்பில் வெந்த இரும்பை விடுவதுபோல், தன்னடையே விட நேரும். சட்டி சுட்டதடா கை விட்டதடா என்ற பழமொழி நினைவு கூர்க!

இறையனுபவத்துக்கு வழியான மெய்ந்நின்ற ஞானமும் நல்லொழுக்கமும் திவ்வியத் திருமேனியும் மாசற்ற சுடரொளி தெளி விசும்பாகிய பரமபதமும் தெள்ளியோராகிய நித்தர் முத்தர் என்னும் தேசிகர் உறவும் ஆர்த்தப் பிரபன்னன் பெறத் துடிப்பான்.

அதனால், அழியாத பேரின்பமுற விரைந்து,

''புகல் ஒன்று இல்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்றும்,

"வேங்கடத்து உறைவார்க்கு நம:" என்றும்,
பூரணமான சரணாகதி அடைந்து,

"பலநீ காட்டிப் படுப்பாயோ?
இன்னம் கொடுப்பாயோ"

"தரியேன் இனிஉன் சரணம் தந்துஎன்
சன்மம் களையாயே"

"இக்கரை ஏறி இளைத்திருந்தேனை
அஞ்சேல் என்று கைகவியாய்" என்றும்

"திருஆணை நின்ஆணை கண்டாய்
இனிநான் போகலொட்டேன்" என்றும்

தடுத்து வளைத்துப் பெறுதல் ஆர்த்தப் பிரபத்தி. ஆர்த்தப் பிரபத்தி என்பது, சரணடைந்த அப்போதே இறையனுபவமாகிய பலன் பெறத் துடித்தல் எனப் பொருள் படும்.

**2. திருப்தப் பிரபத்தி :** வீடுபேற்றுக்குத் தடையாக மேலும் ஓர் உடலைப் பெறுதலும் நல்வினைப் பயனால் துறக்கம் புகுதலும் தீவினைப் பயனால் நரகம் புகுதலும் ஆகிய இம்மூன்றிலும் வெறுப்பும் அச்சமும் பிறந்த ஒருவன், அவை அறுவதற்கும் இறையனுபவம் பெறுவதற்கும் உறுப்பாகத் தீங்கேதும் இல்லாத ஆசாரியனைச் சரண மடைந்து, தானே வழியும் பயனுமாகிய சித்தோபாயமாக விளங்கும் இறைவன் திருவடிகளைச் சிக்கெனப் பிடிப்பான்.

திருமால் தவிரப் பிற தெய்வங்களைப் போற்றுதல், பிரபத்தி தவிரப் பிற உபாயங்களில் ஈடுபாடு, இறையனுபவம் தவிரப் பிற (புலன்) இன்பங்களில் விழைவு, அகங்காரம், பொருளாசை, இறைவன் பாலும் அவன் அடியார் பாலும் பிழைபடுதல் முதலியன உயிரின் இயல்புக்கு மாறுபட்டவை. இவை, அறியாமலே கூட வந்து பற்றிக்கொள்ள வல்லவை. விழிப்பாக இருந்து இவற்றை அணுக விட மாட்டான்,

மனம், சொல், உடல் ஆகிய முக்கரணங்களாலும் இயன்ற மட்டும் இறைவன், இறையடியார், ஆசாரியன் ஆகியோர்க்குத் தொண்டு செய்து கொண்டிருப்பான்.

இறைவன் நம்மை ஆளாகக் கொண்ட தலைவன், நம்மைச் செயல்படுத்துபவன், உயிரை உடலாகக் கொண்டவன் (சரீரி), எங்கும் பரவியிருப்பவன், உயிர் உடலில் தரித்திருப்பதற்குக் காரணமானவன், காப்பவன், உயிரை அனுபவிப்பவன், எல்லாம் அறிந்தவன், அனைத்து ஆற்றலும் உடையவன், அனைத்து நலங்களும் நிரம்பியவன், இனிமேல் பெற வேண்டியன ஏதும் இல்லாதவன் ஆகிய இறைவன் நிலையை உணர்வான்.

உயிராகிய தான் இறைவனுக்கு அடிமைத் தன்மையை இயல்பாக உடையவன். இறைவனால் செலுத்தப் படுகின்றவன். இறைவனுக்கு உடைமையானவன், உடலானவன், இறைவன் பரவியிருக்கும் இடமானவன், இறைவனால் தாங்கப்பட்டிருப்பவன், காக்கப்படுபவன், அனுபவிக்கப்படுபவன், அறியாமையினன், தன் ஆற்றல் இல்லாதவன், நிறைவில்லாதவன். வேறு ஒன்றை விரும்பும் குறையுள்ளவன் என்று ஆராய்ந்து தெளிவான்.

''களைவாய் துன்பம், களைவாது ஒழியாய்,
களைகண் மற்றி லேன்''

என்று உயிரையும் உயிரைப் பற்றிய எல்லாப் பொறுப்புக் களையும் அவன் பக்கலிட்டு நிம்மதியாக இருப்பான் திருப்தப் பிரபத்தியாளன். பொறுப்பு அனைத்தும் அவனிடம் ஒப் படைத்துவிட்டு மன நிறைவோடு இருக்கும் சரணாகதியே திருப்தப் பிரபத்தி.

பொறிகளை அடக்கி நெடுங்காலம் முயன்றால், பலன் தருவன கர்மம், ஞானம், பக்தி ஆகிய நெறிகள். இவை உயிரின் இயல்புக்கு ஒவ்வாதன. பிரபத்தி ஒன்றே எளிதானது; உயிரின் இயல்புக்குத் தகுதியானது.

## 5. ஆசாரிய அபிமானம் :

பிரபத்திக்கும் பெரு நம்பிக்கை என்ற ஒரு தகுதி வேண்டும். அந்தப் பெருநம்பிக்கை கொள்வதற்கும் சிலருக்கு ஆற்றல் இராது, இன்னும் சிறுவர், ஊமையர், செவிடர், குருடர், முடவர், அறிவிலர், விலங்கு, பறவை, தாவரம் ஆகியனவும் பிரபத்திக்குத் தகுதியில்லாதன ஆகும்.

தகுதியில்லாமையால் இவை யாவும் இறையனுபவம் பெறாமல் இழக்கலாமா? அந்த இழப்பு இறைவன் திருவுள்ளம் ஏற்குமா?

அவையும் ஈடேற ஒருவழி ஏற்படுத்தியுள்ளான் இறைவன். அந்த வழியே ஆசாரிய அபிமானம். இதுவே இறுதிவழி. இது ஐந்தாவது வழியாக அமைவதால் பஞ்சம உபாயம் என பெயர் பெறும்.

பால் மணம் மாறாத குழவிக்கு ஒரு நோய் வருமாயின், அது, தான் பத்தியமில்லாமல் உண்டதால் வந்ததாகக் கொண்டு, தன் குறையாகக் கருதுவாள் தாய்.

அதற்காகத் தானே மருந்து உண்டு, பத்தியம் காத்து, பால்ஊட்டி, நோய் ஓட்டிக் குழவியைக் காப்பாள்.

அத்தகைய தாயைப்போல, மேலே சொன்ன கர்ம, ஞான, பக்தி, பிரபத்திகளைக் கடைப்பிடிக்க ஆற்றல் இல்லாதவனாக—உலகப் பற்றுவிட இயலாதவனாக—ஒருவன் மாணாக்கன் இருக்கலாம்.

அவனுக்காக ஞானமும் அனுட்டானமும் கை வந்த தானே இறைவன்பால் பிரபத்தி செய்து ஈடேற்ற வல்ல பேரருளாளனே நல்லாசிரியன். அவன் அருள் நிழலில் ஒதுங்கி, செயல், செயலின்மைகளையும் அவன் இட்ட வழக்காக்கிக்கொள்வது மாணாக்கன் கடமை. அந்த மாணாக்கனைக் கைவிடாமல் காப்பதுவே ஆசாரிய அபிமானம்

என்னும் இறுதி வழி. இதனைச் சரம உபாயம் என்பர். சரம உபாயம் என்பது இறுதியான வழி என்று பொருள்படும்.

நல்லாசிரியன் : தன்னை ஈடேற்ற வல்ல ஆசாரியன் யார் என்று அறுதியிடுவது நாம் அறிவு பெற்றதன் பயன் ஆகும். நல்லாசிரியன் இலக்கணத்தையும் அவனை அடைவதற்கு உரிய வழியையும் ஆன்றோர் காட்டியுள்ளனர்.

வேதம், உபநிடதம், மிருதி, இதிகாச, புராண, காவிய, நாடக, அலங்கார, மீமாம்சை முதலிய கலைகள் அனைத்திலும் ஆழ்ந்த பயிற்சி.

உடையவர் அருளிய சீபாடியத்துக்கு விளக்கம் தரும் தகுதி.

அங்க, உபாங்கங்களோடு கூடிய தமிழ்வேதம், அதன் உரையாகிய பகவத் விஷயம், சீவசநபூடணம், திருமந்திரப் பொருள், அறியவேண்டிய ஐம்பொருள், மூவகைத் தத்துவம் முதலிய வைணவத் தத்துவங்கள் முழுவதும் ஐயம், திரிபு, மறதியின்றி அறிகை,

நாட்டிலே இடம் பெற்று விட்ட மாறுபட்ட சமயங்களை வென்று களையும் நாவீறு.

விசிட்டாத்துவைத சித்தாந்தத்தைப் பரப்பும் ஆர்வம்.

நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், உடையவர் முதலியோர் காட்டிய நன்னெறி கடைப்பிடித்தல்,

தவாப் பிறப்பு ஈனும் வித்தாகிய அவா என்னும் பெருங் கடல் கடக்கும் திறம்.

அறியாமை, அகந்தை, மமதை, இடம்பம், வஞ்சனை, பொய்ம்மை. பொறாமை, பொருட்பற்று, காமம், சினம், பேராசை, விருப்பு, வெறுப்பு, மயக்கம் முதலிய தீய பாவ குணங்களை அணுகாமல் அழித்தல்,

புலனடக்கம், மன அடக்கம், விவேகம், கருணை, மெய் யுணர்வு, நட்பு, சாந்தம், பொறுமை, நேர்மை, (ஆர்ஜவம்) முதலிய உயிர் உய்தற்குரிய குணங்களின் நிறைவு,

பகை—நட்பு, இன்ப—துன்பம், மானம்—அவமானம், புகழ்-இகழ், விருப்பு—வெறுப்பு, நல்குரவு—செல்வம் ஆகிய வற்றில் சம நோக்கு,

மண்ணையும் பொன்னையும், மணியையும் கல்லையும் ஒப்ப மதிக்கும் இயல்பு.

ஆகியவை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவனே நல்லாசிரியன்.

கற்றலையும் கற்றவழி நிற்றலையும் தாம் கடைப் பிடிப்பதுடன் மாணாக்கரையும் கடைப் பிடிக்க வைப்பவன் ஆதலால் ஆசாரியன்[1] (நடையில் நின்று உயர்ந்தவன்) என்றும்,

அறியாமை இருளை அகற்றுவதால் குரு[2] என்றும்,

தெள்ளிய ஞானம் கற்பிப்பதால் தேசிகன்[3] என்றும்,

மாணாக்கனையே சொத்து ஆகக் கருதுவதால் சுவாமி[4] என்றும்.

அதிகாரத்தை (தகுதியை) உண்டாக்குவதால் ஆசான்[5] என்றும்,

பிரமத்தில் விருப்பம் உண்டாக்குவதால் பிராஹ்மணன் என்றும்,

பிரமதேஜசு அளிப்பதால் ஆரியன்[6] என்றும்,

---

1 ஆசாரியன்—நடையிற் காட்டுபவன்.
2 'ரு' இருள்; அறியாமை. கு—ஒழிப்பவர்.
3 தேசிகன்—உபதேசிப்பவன்; ஒளி தருபவன்.
4 ஸ்வம்—சொத்து. ஸ்வாமி—சொத்து உடையவன்.
5 ஆசு—பற்றுக்கோடு; பற்றாசு. ஆசான்—பற்றுக்கோடு (தகுதி) தருபவன். 6 வழிபடத்தக்கவன்.

ஞானத் தந்தை ஆதலால் குரவன்[1] என்றும்

பழுதற்ற மெய்ஞ்ஞானி ஆதலால் பகவன்[2] என்றும்

தூயவன் ஆகி, மாணாக்கனையும் தூயவன் ஆக்குவதால் தீர்த்தன்[3] என்றும்,

உயிர் உய்வதற்குக் காரணன் ஆதலால் அடிகள்[4] என்றும்

அறிவில் சிறந்தவன் ஆதலால் புங்கவன்[5] என்றும்

புலமை நிரம்பியவன் ஆதலால் பட்டாரகன்[0] என்றும்

பந்தப்படுகுழியிலிருந்து மேலேற்றுபவன் ஆதலால் உத்தாரகன்[7] என்றும்

இறைவனுடன் இணைத்து வைப்பதால் கடகன்[8] என்றும்

ஒப்புயர்வற்ற உபகாரம் செய்வதால் பரம உபகாரன் என்றும் பலவாறு பாராட்டப்படுபவனே நல்லாசாரியன்.

மாணாக்கன் தம்மை விடினும், தாம் அவனை விடாது, அவன் தீய வழியில் நடவாதபடி கழுத்தைக் கட்டிக் கொண்டு நல்வழி கற்பிப்பவரே நல்லாசாரியன்,

"அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க
சம்பந்தம் காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவம் ஒன்றும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறிகாட்டு
மவன்அன்றோ ஆசாரி யன்,"

என்பது நல்லாசிரியன் இலக்கணம்.

அனைத்துலக காரணனும் அனைத்துக்கும் காவலனும் திருமகள் கேள்வனும் அனைத்துக் கல்யாண குணங்களுக்கும்

---

1 முதல்தந்தை. 2 தெய்வம்.
3 புனித நீர் ஆனவன். 4 அடி—காரணம்.
5 தேவன். 6 இருடி. 7 மேலேற்றுபவன்,
8 காரியத்தைக் கூட்டிவைப்பவன்.

இருப்பிடமானவனும் அனைத்துக்கும் தலைவனும் எல்லா வற்றையும் உள்ளிருந்து நியமிப்பவனும் (அந்தர்யாமி) எவற்றையும் தாங்குபவனும் தானே வழியும் பயனு மானவனும் எவ்வகை உறவும் ஆனவனும் ஆகியவன் இறைவன்.

அறிவு இன்ப வடிவானவனும் தானே ஒளிர்பவனும் பிரகிருதியாகிய அசித்துக்கு வேறுபட்டவனும் ஆனவன் சேதனன் (உயிர்),

இத்தகைய இறைவனுக்கும் சேதனனுக்கும் உள்ள ஒன்பான் வகை உறவுகளையும்[1] சேதனனின் இயல்புக்கும் உயர்வுக்கும் பயனுக்கும் உரிய வழியையும்[2] அவ்வழிக்கு ஏற்படும் தடைகளையும் புருஷார்த்தமாகிய பயனையும் ஐயம், திரிபு, மறதி ஆகிய முக்குற்றங்களும் இன்றிக் காட்டுபவனே நல்லாசிரியன்.[3]

---

1 தந்தை - மகன், காப்பவன்—காக்கப்படுபவன், தலைவன்—அடிமை, கணவன்—மனைவி, அறியத்தகவன்—அறிபவன், உடையவன்—உடைமை, தாங்குபவன்—தாங்கப்படுபவன், உயிர்—உடல், அனுபவிப்பவன்—அனுபவப் பொருள் என்பனவே இறைவனுக்கும் சேதன னுக்கும் அமைந்த ஒழிக்க ஒழியாத உறவுகள். இந்த உறவு திருமந்திரம் ஆகிய எட்டெழுத்தின் விளக்கத்தால் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

2 இறைவன் ஆகிய உபாயம் (சித்த உபாயம்).

3 அனைத்துலக காரணன் என்பது முதல் காட்டுபவனே நல்லாசிரியன் என்பது வரை உள்ள பகுதி, அர்த்தம் ஐந்தையும் விளக்குவதைக் காணலாம்.

மேலே காட்டிய அம்பொன் அரங்கர்க்கும் என்ற செய்யுளிலும் இந்த அர்த்தம் ஐந்தும் சுட்டப்பட்டுள்ளன. 1 அரங்கன்—இறைவன். 2. ஆவி - உயிர். 3. தடை—விரோதி. 4. நெறி—உபாயம். 5 திவம்—பயன்.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணின் கடைப்பட்டான் என்று இகழார்—காணாய்!
அவன் துணையா ஆறுபோய் அற்றே நூல் கற்ற
மகன் துணையா நல்ல கொளல்."

என்றபடி ஆசாரியன் குலம் பிறப்பு முதலியவற்றை ஆயக் கூடாது. அவன் கல்வியறிவைக் கொண்டும் அதன்படி ஒழுகும் இயல்பு கண்டும், அவனிடம் உபதேசம் பெறுதல் வேண்டும். தோணி இயக்குபவன் எக்குலத்தானாயினும் நாம் அதைப்பற்றி ஆராயத் தேவையில்லை, அவன் ஆற்றைக் கடத்துவதுதான் நமக்கு வேண்டும்.

**ஆசாரியன் கடமை :** மாணாக்கரைக் கண்டால், காதலியைக் கண்ட காதலன்போல் அக மகிழ்ந்து,

"பிள்ளைகாள்! ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர் கருநாய் கவ்விய காலர் சிதைகிய பானையர் பெருநாடு காண இம்மையிலே பிச்சை எடுத்துழலக் காண்கின்றோம். ஆதலால் நீவிர், பூரியார் கண்ணும் உளவாகிய பொருட் செல்வத்தை விரும்பாதீர்கோள்! அருட் செல்வத்தையே விரும்பி எம் அப்பன் அடிகளுக்கு ஆட்படுங்கோள்!

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு"

"இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பார் என்று
எண்ணவோ திடம் இல்லையே"

"மின்னின் நிலைஇல மன்உயிர் ஆக்கைகள்"

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்.
நீரிற் சுருட்டும் நெடுந் திரைகள்.
நீரில் எழுத்தாகும் யாக்கை"

என்ற ஆன்றோர்களின் கருத்துட்படி இவ்வுடல் நிலை இல்லாதது.

"ஆதலால் மறுமைப் பயனையே விரும்பி, மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறல் அடிகள் ஆகிய திருமாலை வழிபட்டு வாழுங்கோள்!

"பிற தெய்வ வழிபாட்டையும் சித்தோபாயம் தவிரப் பிற உபாயங்களையும் புலன் இன்பங்களையும் வெறுத்துத் தேவதேவன் அருட் பிரசாதத்துக்கு இலக்கு ஆகுங்கோள்!

"பண்டைக் குலத்தைத் தவிர்ந்து, தொண்டக் குலத்தின ராகிப் பல்லாண்டு பாடுங்கோள்!

"உங்கள் இல்லத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளை நாடோறும் உள்ளன்போடு உபசரித்து வழிபட்டு வாருங்கோள்!

"உங்கள் தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தைத் தனிமுதல் அப்பன் திருக்கல்யாண குணங்களில் ஈடுபடச் செய்யுங்கோள்!"

என்று அறிவுறுத்துவது ஆசாரியன் கடமை.

**ஆசாரியன் அல்லாதான்:** மேலே கண்ட இயல்பில்லா தவன் மனம்போனபடி வாழும் விலங்கு ஒபபான்.

வேசிகளை விரும்பும் விடபுருடனும், கல்வி வாசனை அறியாக் கசடனும், ஞானமும் அனுட்டானமும் அறவே இல்லாதவனும், பணப்பேய் பிடித்த குணக்கேடனும், உடலைத் தன் வசப்படுத்தாது பரவசப்படுபவனும், புகழ், பலன், வழிபாடு முதலியவற்றுக்காக மாணாக்கனிடம் பொருளைக் கவர எண்ணுபவனும், தீயகருத்துடன் ஆரவாரம் செய்து வீணாய்த் திரிபவனும் ஒருகாலும் ஆசாரியன் ஆகான்.

"மாணாக்கனிடம்," உன் வருமானம் என்ன? உன் சொத்து எவ்வளவு? அதில் எனக்கு எவ்வளவு காணிக்கை தருவாய்? இவ் ஆண்டு நமக்குத் திருமாளிகைச் செலவு ஏராளமாய் உள்ளது. எல்லாவற்றுக்கும் உன்னைத்தான் நம்பியிருக்கின்றேன். எனக்கு மனநிறைவு வரும்படி பொருள் தருவாயாகின், உனக்கு வேளாண்மை, வாணிகம், தொழில் களில் வருமானம் உயர்ந்து இன்புறுவாய்" என்று பாராட்டிப் பேசி, சங்கு சக்கர இலச்சினையை மட்டும் முறைதவறிப் பொறித்து, மாணாக்கனது செல்வத்தைக் கவர்வோன் விழலர் ஆவான்.

பணத்தாசை பிடித்த இவன், தான் விரும்பியபடி மாணாக்கர் பணம் தாராவிடின். "நீ பாழாய்ப் போவாய்!" என்று தூற்றித் தொலைந்து போவான்.

பொருளில்லாத ஏழை மாணாக்கரிடத்து நற்பண்புகள் இருப்பினும் மனம் மகிழ்ந்து ஆதரியான். இன்சொல் உரையான்; ஏளனம் செய்வான். இகழ்வான். புல்லறி வாண்மையினன் ஆகிய இவ் ஆசாரியனைப் புல் ஆடவனைப்[1] போல்வான் என்று உணர்தல் வேண்டும்,

இத்தகையானை அடைந்தால் உயிர்க்கு ஈடேற்றம் உண்டாகாது. ஓட்டை ஓடத்தில் ஏறினவன் கரை ஏறுவானோ? ஞானமில்லாத ஈனனை அடைந்தவன் கடைத் தேறல் இயலுமோ?

ஞானம் அனுட்டானம் இல்லாத பொய்யாசாரியனை அடைபவர், கரடியைக் கம்பளி என்று கட்டிப் பிடித்துக் கொண்டு ஆற்றுள் அழுந்திய இடையனை ஒப்பர்.

---

1 விளை நிலத்தில் கதிரை மேயவரும் பறவை, விலங்குகள் அஞ்சுவதற்காகப் புல்லினால் மனிதன்போல் செய்து நிறுத்திய உருவம்.

வண்டானது தான் அடைந்த பூவினிடத்துத் தேன் இல்லையாயின், அதைவிடுத்து வேறு ஒரு பூவைத் தேடி அடைவதுபோல், ஞானம் இல்லாத ஆசாரியனை விட்டு விலகுவதே நலம் பயக்கும்.

ஓர் ஆசாரியனை ஏற்றபின் இன்னோர் ஆசாரியனை அடைவது குருத்துரோகம் ஆகாதா? என ஓர் ஐயம் எழலாம். அதற்கு விடையாக இரண்டு ஐதிகங்களைக் காண்போம்,

முதலியாண்டாள் திருநாராயணபுரத்தில் எழுந்தருளி யிருந்தபோது, அவருடைய மாணாக்கர் ஒருவர், திருவரங்கத் தில் எம்பார் திருமுன் வந்து சேவித்திருந்தார்.

முதலியாண்டான் மாணாக்கர் அவர் என்பதனை அறியாத எம்பார், அவரிடம் "முன்பே உமக்குச் சிறப்பான உறவு (ஆசாரியன் உறவு) உண்டோ?" என்று வினவினார்.

"தேவரீரது சம்பந்தமே சம்பந்தம்" என்று மாணாக்கர் விண்ணப்பித்தார்.

எம்பார் அவருக்குப் பஞ்ச சம்ஸ்காரங்களைச் செய்து வைத்தார்.

இந்நிலையில் திருவரங்கத்துக்கு எழுந்தருளினார் முதலியாண்டான். அவர் மூலம், அந்த மாணாக்கர் முதலி யாண்டான் மாணாக்கர் என அறிந்து, "அடியேன் அறியாமல் குற்றப்பட்டேன்" என்று சழிவிரக்கம் வெளியிட்டார் எம்பார்.

"ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இருவர் கை கொடுத் தால், எடுக்கிறவர்களுக்கும் ஏறுகின்றவனுக்கும் எளிதா யிருக்குமே! அதுபோல், நாம் இருவரும் அவனுக்கு ஆசாரிய ராகி "ஞானக கைதா" என்ற ஆழ்வார் வாக்குப்படி இருவரும் கை கொடுத்துள்ளோம" என்று அமைதிப்படுத்தி னார் முதலியாண்டான் என்பது ஓர் ஐதிகம்.

கோயில் கந்தாடையண்ணன் முதலியோர் பூர்வாசாரி யர்கள். முதலிலேயே தக்க ஆசாரியரிடம் ஞானம் பெற்றவர்கள்.

அவர்கள் பின்னாளில் ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடியில் முறைப்படி சரணமடைந்த வரலாறுதான் அந்த ...கம்.

ஆதலால் எம்பெருமானார் தரிசனப்படி ஞானம் அனுட்டானம் நிரம்பியவர் சிலரிடம் ஆசிரயிப்பது[1] குருத் துரோகம் ஆகாது என்பதனை உணரலாம்.

ஏகலைவன் ஆசாரியனிடம் நேரில் கலையைக் கல்லாமல், மண் மாண்புனை பாவையை[2] ஆசாரியனாகப் பாவித்துப் பயன் பெற்றான் என்பது இதிகாச வரலாறு.

இதனால் ஆசாரிய மரபினர் ஞானம் அனுட்டானக் குறையாளர் ஆயினும், அவரை ஞானம் அனுட்டானம் நிரம்பியவராகப் பாவித்துக் கடைத்தேற இயலாதோ? என்ற வினா இங்கே எழ வாய்ப்பு உண்டு.

ஏகலைவன் வில் வித்தையில் வல்லன் அல்லாத ஒருவனை ஆசாரியனாகப் பாவித்துப் பயன் பெற்றான் அல்லன். வில் வித்தையில் வல்ல துரோணரை அன்றோ அவன் ஆசாரிய னாகப் பாவித்துப் பயன் பெற்றான். ஆதலால், கற்றலையும் கற்றவழி நிற்றலையும் கையாளும் ஆசாரியனை அடைந்தால் அன்றி நலமந்தமில்லதோர் நாடு அடைதல் கூடாது என்பது

ஒருவனுக்கு ஓர் ஆசாரியனே இருத்தல் வேண்டும் என்று கருதுவாரும் உண்டு

---

1 சரணடைவது.

2 மண்ணால் செய்த வடிவம்.

எம்பெருமானார் தொடக்கமான பூர்வ ஆசாரியர்கள், பலரை ஆசிரயித்துள்ளனர் என்பதனை வரலாறுகளில் காண்கின்றோம். ஒருவனுக்கு ஒருவனே ஆசாரியன் என்ற நியதி இல்லை. பலர் ஆசார்யர் இருக்கலாம் என்பது இவ் வரலாறுகளால் தெளிவாகின்றது.

**இருவகை ஆசாரியர் :** மந்திரம் கற்பித்தவர், மந்திரப் பொருள் கற்பித்தவர் என ஆசாரியர் இருவகைப்படுவர். அவர்கள் முறையே மந்திரப் பிரதர்[1], மந்திரார்த்தப் பிரதர் எனப்படுவர். பிரதர்—கொடுப்பவர்.

**1. மந்திரம் கற்பித்தவர் :** தீயிற்பொலிகின்ற செஞ் சுடர் ஆழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே திரு இலச்சினையிட்டுத் திருமந்திரம் கற்பிப்பவர்.

**2. மந்திரப் பொருள் கற்பித்தவர் :** மந்திரத்தின் நுட்ப மான உட்பொருளைக் கற்பித்துத் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆட் செய்யுமாறு செய்பவர்.

மந்திரமானது உடல். அதன் உட்பொருள் உயிர் என்பது ஆன்றோர் கருத்து. ஆதலால், மந்திரம் கற்பித்த ஆசாரியனைக் காட்டிலும், உட்பொருள் கற்பித்தவனே சிறந்தவன் ஆவான்.

எனினும் இவ்விருவரையும் சமமாகவே எண்ணி வழி படுதல் வேண்டும். ஏனெனில் இவ்விருவரும் இறைவன் இணையடிகளுக்கு ஒப்பர். இறைவன் இணையடிகளில் ஏற்றத்தாழ்வு உண்டா?

## பஞ்ச சமஸ்காரம்

இனிச் சுருக்கமாகப் பஞ்ச சமஸ்காரம் என்பது யாது என்பதனைக் காண்போம் :

---

1 கொடுப்பவர்.

1. **திருஇலச்சினை :** தீயிற்பொலிகின்ற செஞ்சுடர் ஆழி திகழ்திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே தோள்களில் இலச்சினை பொறித்துக் கொள்ளுதல்.

2. **திருநாமம் இடுதல் :** நெற்றியிலும் பிற அங்கங்களிலும் திருமண் இட்டுக் கொள்ளுதல்,

3. **உயிர் இயல்புக்குத் தகுதியாக அடியான் எனப் பெயரிட்டுக் கொள்ளுதல் :** இது தாசியநாமம் எனப்படும். ஏதாவது வைணவப் பெயருக்குப்பின் இராமாநுசதாசன் என்று இணைத்துக் கொள்ளுதல், வைணவப் பெயர் ஏற்ற போதே நான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள் வேரோடு அழிந்துபோகும். அகந்தை என்னும் ஆர்ப்பைத் துடைத்தால், ஆன்மாவுக்கு அழியாத பேர் அடியான் என்றிறே என்பது ஸ்ரீ வசனபூடணம்.

4. **திருமந்திரம் கற்றல் :** ஓம் நமோ நாராயணாய என்பதே திருமந்திரம். இது எட்டெழுத்தே உடையதாயினும் வைணவன் அறிந்து அனுட்டிக்க வேண்டிய அனைத்து நுட்பப் பொருள்களும் இதனுள் உண்டு. பிள்ளை லோகாசாரியர் அருளிய முமுட்சுப்படியில் இந்தத் திருமந்திரத்தின் விரிவான உட்பொருள் காணலாம்.

5. **திருவாராதனை செய்யும் முறை கற்றல் :** வீட்டில் எழுந்தருளுவித்து நாடோறும் தளிகை படைத்து வழிபடுவதற்கு இறைவன் திருமேனியைப் பெறுதல்.

**ஆசாரிய அபிமானத்தின் பெருமை :** இறைவன் தானே என்றும் மாறாத சித்தோபாயமாக அதாவது வழியும் பலனும் ஆகின்றான் அவனே அனைத்துத் தேவதைகளிலும் அந்தர்யாமியாய் முடிவான பலனும் ஆவது போலவும், பிரபத்தியானது, கர்ம ஞான பக்திகளுக்கு அங்கமும் தனித்தன்மை வாய்ந்த வழியும் ஆவது போலவும் ஐந்தாவது வழியாகிய

இந்த ஆசாரிய அபிமானமும் கர்ம ஞான பக்தி பிரபத்தி களுக்கு அங்கமும் தனித்தன்மை வாய்ந்த உபாயமுமாக இருப்பதொன்று ஆகும்.

## வழி

உய்யும்உறவு இசையாதே ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப்
பொய்உருவைத் தமக்குஏற்றிப் புலன்கொண்ட
பயனேகொண்டு
ஐயுறவும் ஆரிருளும் அல்வழியும் அடைந்தவர்க்கு
மெய்அருளசெய் திடும்திருமால் வேழமலை மேயவனே!

விதைமுளையின் நியாயத்தால் அடியில்லா வினைஅடைவே
சதைஉடலம் நால்வகைக்கும் சரண்அளிப்பான் எனத்திகழ்ந்து
பதவி அறி யாதுபழம் பாழில்உழல் கின்றார்க்கும்
சிதைவுஇல் அருள் தரும்திருமால் திருஅத்தி நகரானே
அருத்த பஞ்சகம்—தேசிகப் பிரபந்தம்

என்பக்கல் ஓதினார் இன்னார் எனும் இயல்பும்
என்பக்கல் நன்மை எனும்இயல்பும்—மன்பக்கல்
சேவிப்பார்க்கு அன்புடையார் சென்ம நிருபணமும்
ஆவிக்கு நேரே அழுக்கு

—சப்தகாதை.

# தடை

உயிரின் இயல்புக்குத் தடை, பரத்துவத்துக்குத் தடை, பயனுக்குத்தடை, வழிக்குத் தடை, அனுபவத்துக்குத் தடை[1] எனத் தடைகள் ஐந்தாம்.

**1. உயிரின் இயல்புக்குத் தடை:** திருஎட்டெழுத்தின் முதற் பதம் பிரணவம். அதன் இறுதி எழுத்து மகாரம். அது உயிரைக் குறிப்பது அந்த உயிர், உலகியல் தொடர்பால் அடைகின்ற உடலில் வைக்கும் ஆசையும், அதே பிரணவத்தின் உகாரத்தால் விளக்கப்படுவது, இறைவன் ஒருவனுக்கே அடிமைப் பணிக்கு உரியது உயிர் என்பதாகும். அதற்கு மாறாகத் தனக்கும் பிறர்க்கும் அடிமைப் பணிக்கு உயிர் உரியது என நினைதலும் அதே பிரணவத்தின் அகாரத்தால் விளக்கப்படும் உயிரானது இறைவனுக்கே உரிமை என்பதற்கு மாறாகத் தனக்கும் உரிமை என நினைதலும் ஆகியன உயிரின் இயல்புக்கு மாறான தடைகளாம்.

**2. பரத்துவத்துக்குத் தடை:** பிரமன், இந்திரன் முதலிய பிற உயிர்களைத் தெய்வம் என எண்ணுவது; நாராயணன் உட்புகுந்து உறைதலால் பெற்ற ஆற்றல் மட்டும் உடைய அவர்களுக்கும் இயல்பான ஆற்றல் உண்டு என எண்ணுவது; பரமபதத்தில் உள்ளது போலவே ஆதியஞ் சோதி உருவம் இங்கே கொண்டு பிறந்த இராமன், கண்ணன் முதலிய அவதாரங்களை மானுடப் பிறப்பு என எண்ணுவது; பரமபதத்தில், தான் ஏற்றுள்ள சுத்த சத்துவமயத் திருமேனியில் வைக்கும் ஆதரத்துடன் அடியார் உகந்த உருவிலே திருக்கோயில்களிலும் திருமனைகளிலும் முழுமையான ஆற்றலுடன் எழுந்தருளியுள்ள எளிமைக்கு எல்லை நிலமான அர்ச்சாவதாரத்தில் ஆற்றல் இல்லை என எண்ணுவது ஆகிய

---

1 இவை முறையே ஆன்ம சொரூப விரோதி. பரத்துவ விரோதி, புருஷார்த்தவிரோதி, உபாயவிரோதி, பிராப்த விரோதி எனப்படும்.

இவையே பரத்துவத்துக்குத் தடையாம். அதாவது பரம் பொருள் நாராயணனே எனத் தெளிவதற்குத் தடையாம்.

3. பயனுக்குத் தடை : நிலையில்லாததாயும் வெறுக்கத் தக்கதாய் உள்ளமையால் 'வெறுக்கை' என்னும் பெயர் கொண்டதாயும் உள்ள செல்வங்களில் அவாவும், இறைவன் உகப்புக்காக மட்டுமே என்று மேற்கொள்ளாமல், தனக்கும் உகப்பு என்று தொண்டுகளை மேற்சொள்வதும் பலனுக்குத் தடைகளாகும். அதாவது அடிமைத் தொண்டுக்கு நேரும் தடையாம். பயன் என்பது உயிர் ஆனது, அடையும் முக்திப் பயனாம். தொண்டே பயன் என்பது வைணவக் கொள்கை.

4 வழிக்குத் தடை : உயிரின் இயல்புக்கு மாறுபாடாக, கர்மம், ஞானம், பக்தி ஆகிய வழிகள், இறைவனை அடை விக்கும் என எண்ணுவதும், மூன்றுவகை ஐயங்களும் வழிக்குத் தடைகளாம்;

எந்த வழியும் வழிஅன்று. இறைவனே வழியாக இருந்து பயனும் ஆகின்றான். உயிர் மேற்கொள்ளும் வழிகள் சாத்திய வழிகள். இறைவனே சித்தோபாயம். அதாவது பயன் தருவதற்கு ஏற்கனவே ஆயத்தமாக இருக்கும் வழி.

நாம் நாள் முழுவதும் பாடுபடுவது கூலியாகிய பயன் பெறுவதற்குரிய வழியாகத தோன்றினாலும், அந்த வழியே பயன் தந்துவிடாது, நம் உழைப்பை ஏற்பவன் ஒருவன் முன்பே சித்தமாக இருத்தல் வேண்டும். அவன்தான பலன தருவான். ஆதலால் அவனே சித்த உபாயம் ஆகின்றான். அவனைத் தவிர வேறு உபாயங்கள் நாம் பலன் பெறுவதற்குத் தடைகளே என்பர்.

தண்ணீர் பெறுவதற்கு ஏரி அமைக்கினறோம். ஏரி அமைப்பது தண்ணீர் பெறுவதற்கு உரிய வழிதான். ஆனால் ஏரி அமைப்பதால் மட்டும் தண்ணீராகிய பலன் கிடைத்து விடுமா? உறுதியாகக் கிடைக்காது. மழை பெய்தால் தான்

தண்ணீர் கிடைக்கும்! ஏரியை நாம் புதுவதாக அமைத்தோம். மழை இயல்பாகவே சித்தமாக உள்ளது ஆகையால் மழை சித்த உபாயம் எனலாம்.

''ஏரி ஆம் வண்ணம் இயற்றும் இது அல்லால்
மாரி யார் பெய்கிற்பார் மற்று''

என்ற அருளிச்செயல் வாக்கு இக்கருத்துக்கு அரண் ஆகின்றது.

மூவகை ஐயம் : 1. தனித்தன்மை வாய்ந்த கருமம், ஞானம், பக்தி ஆகிய உபாயங்களால் கிட்டுவதன்றோ பலன்! மனத்தால் செய்யும் ஞானமாத்திரமான பிரபத்தியால் மட்டுமே பலன் கிட்டுமோ என்று, இறைவனே சித்த உபாய மாகும் தன்மையைச் சிறுமையாக எண்ணும் ஐயம்.

2. பிரமன் முதலிய தேவர்க்கும் சனகர் முதலிய கரும யோகிகட்கும் பெறுதற்கரிய இறையனுபவமாகிய பலன், மனத்தால் பிரபத்தி செய்த நமக்குக் கை கூடுமோ! என்று பலனின் பெருமையை நோக்கி உண்டாகும் ஐயம்.

3. பற்பல பிறவிகளில் செய்யப்படும் சமுவாயான கருமங்களால் பாவங்கள் நசிக்கும். அதன் பின்னர் பக்தி பிறக்கும். அப்போது எப்போதும் மாறாத பாவனையும் இறுதி நினைவும்[1] உண்டானால் மட்டுமே எய்தும் வீட்டின்ப மானது, மனத்தால் செய்த பிரபத்தியால் மட்டும் கிடைக்குமோ! என்று தன் பாவத்தின் கனத்தை நோக்கி உண்டாகும் ஐயம். ஆகிய இவையே மேலே கூறப்பட்ட மூவகை ஐயங்களாம்.

---

1 பக்திமார்க்கத்தில் ஈடுபடுபவன் மரணத்தருவாயில் இறைவன நினைவு வந்தால்தான், முக்தி பெறுவான் எனறு கீதை பேசுகினறது. இது அந்திம ஸமருதி எனப்படும்,

**5 இறையனுபவத் தடை :** வினைப் பயனால் இப்போது பெற்றுள்ள உடல் தொடர்பு நோக்கி, அனுதாபம் கொள்ளல் வேண்டும். அனுதாபம் கொள்வது போதுமோ! பெரியனவாகவும் நிலையாகவும் இடம் பெற்ற தீய குணங்களும், இறைவனிடத்தும் இறையடியாரிடத்தும் செய்யும் குற்றங்களும், அவர்கள்பால் கொள்ளும் பொறாமையும் இறைவனை அடையாமல் தடுக்கும் தடைகளாம். பிராப்தி என்பது இறைவனை அடைந்து அனுபவிக்கும் பேறு எனப் பொருள் படும்.

மேலே இறையனுபவத் தடைகள் என்று குறிப்பிட்ட தீய குணங்களாவன : காமம், சினம், பற்றுள்ளம், மயக்கம், செருக்கு, பொறாமை, விருப்பு, வெறுப்பு, பேராசை, ஆடம்பரம், அசூயை, கருவம், அகங்காரம், சொல் மனம் உடல் ஆகிய முக்கரணங்களால் வரும் குற்றங்கள் எனப் பலவாகும். அவற்றை ஓரளவு விளக்குவோம் :

**1. காமம் :** உலகின்கண் தான் விரும்பிய உயிர்ச்சார்பையும், பொருட்சார்பையும் எய்தி அனுபவித்தாலன்றித் தரியாத மனவிகாரம்.

**2. குரோதம் :** விரும்பிய பொருள் கிட்டாதபோது, மனத்தில் எழும் கோபம்.

**3, பற்றுள்ளம் :** தன் உயிர்க்கு இறுதி வந்த காலத்தும் தனக்குரிய பொருளை ஒரு சிறிதும் கொடாமை. இது உலோபம் எனப்படும்.

**4. மயக்கம் :** ஆசை அறிவைக் கெடுப்பதால், தக்கது இது, தகாதது இது என்னும் விவேகம் இழத்தல். இது மோஹம் எனப்படும். பாரதப் போர்த் தொடக்கத்தில் அர்ச்சுனனுக்கு இந்த மோஹந்தான் தோன்றியது. இதை நீக்கவே கண்ணன் கீதை உபதேசிக்கான்.

5. செருக்கு : செல்வம், கல்வி, வீரம், அதிகாரம், அழகு முதலியவற்றால் செருக்குற்று, ஒருவரையும மதியாமல் மரம்போல் இருப்பது. இது 'மதம்' எனப்படும்.

6. பொறாமை : பிறர் உயர்வு கண்டால் பொறாமல் புழுங்கி, அவரைக் கெடுக்க முயல்வது. இது மாற்சரியம் எனப்படும். இதனை மனச்சழக்கு என்னும் ஞானாமிர்தம்.

7. விருப்பு : பிறரால் தனக்கு வரும் புகழ், பயன், முகமன் முதலியவற்றுக்காக, அவர்கள் மேல் வைக்கும் அன்பு. இது இராகம் எனப்படும்.

8. வெறுப்பு : தான் விரும்பிய தொன்றைக் கொடாமையாலும், தன் குற்றங்களை எடுத்துக் கூறிப் பழிப்பதாலும், தன்னை வணங்கி முகமன் கூறாமல் இருப்பதாலும், பிறரைக் கெடுக்க நினைப்பது. இது துவேஷம் எனப்படும்.

9. பேராசை : பிறர் இன்புற்றால் பொறாமல், "நமக்கு வந்த துன்பம் இவர்க்கும் வாராதா? இவர்கள் மட்டும் இன்புறலாமா?" என்று எண்ணி வருந்துவது. இது ஈரிஷை எனப்படும். இது பொறாமையின் ஒருவகை.

10. ஆடம்பரம் : அனைவரும் தன்னைப் போற்ற வேண்டும் என்று சொல்லாலும் ஒப்பனையாலும் நடை உடைகளாலும் தன் நிலைமைக்கு மேற்பட்ட பெருமிதத்தைக் காட்டிக் கொண்டு திரிவது. இது இடம்பம் எனப்படும். வள்ளுவர் கூறும் ஆகுலம் என்பதும் இதுவே.

11. அசூயை : பிறர் செல்வம், கல்வி, ஒழுக்கம் முதலிய உயர்வைக் கண்டு மனம் புழுங்கி, வருந்தி மனம் எரிவது. இதுவும் பொறாமையின் ஒரு வகையே. நல்லோருடைய நற்குணங்களைக் குறை கூறி, குறைவுள்ளவர்களை இகழ்ந்து, பிறர் குற்றம் கண்டு மகிழ்வது அசூயை என்று அத்ரிஸ்ம்ருதி என்ற நூல் கூறுகின்றது.

12. **கர்வம் :** தனக்குள்ள செல்வம் கண்டு மகிழ்ந்து' ''இதற்குக் கேடு வாராதபடி, எளியவரை மட்டும் வைத்து, மற்றவரையெல்லாம் அழித்துவிட்டால், நாம் மட்டும் நன்றாய் வாழலாம்'' என்று வெதும்பி வருந்துவது. இது தர்ப்பம் எனப்படும்.

13. **அகங்காரம் :** உலகத்தில் சிறப்புடையோம் நாமே யொழிய நமக்கு மேற்பட்டோர் ஒருவரும் இலர் என்று அணைகடந்து நிமிர்கின்ற செருக்கே அகங்காரமாம்.

அடுத்து மனம், வாக்கு, காயங்களால் நேரும் குற்றங் களாகிய தடைகளைக் காண்போம் :

1. **சொல்லால் வரும் தடை :** பிறர் பொருளைக் கவர்ந்து வயிறு வளர்த்தற் பொருட்டுப் பொய்ச்சான்று, ஒருவருக்கொருவர் பகைத்தலுக்குக் காரணமாகிய கோள் (குறளை), பிறர் அஞ்சும்படியான கடுஞ்சொல், பயன்இல் சொல் ஆகிய நான்கும் வாசக விரோதி என்னும் சொல்லால் வரும் தடைகளாம்.

2. **உடலால் வரும் தடை :** ஒருவர் தாமே தாராத தொன்றனை, அவர் அறிந்தோ அறியாமலோ களவால் கவர்தல்,உயிர்களைத் துன்புறுத்தல், பகை பாவம் அச்சம்பழி களுக்கு இடமான பிறன்மனைவியைக் கவர்தல் ஆகியமூன்றும் காயக விரோதி என்னும் உடலால் வரும் தடைகளாம்.

3. **மனத்தால் வரும் தடை :**

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருள்
கள்ளத்தால் கள்வேம் எனல்''

என்ற குறளாசான் அறிவுரையை மதியாமல், பிறர் பொருள கவர நினைத்தலும் பிறருக்குத் தீங்கு செய்ய நினைத்தலும் ''கிட்டாதாயின் வெட்டென மற'' என்ற அறவுரைக்குப் புறம்பாக வீணாசைப் படுதலும் ஆகிய மூன்றும் மானச விரோதி என்னும் மனத்தால் வரும் தடைகளாம்.

## இறைவன்பால் குற்றப்படுதல்

இனி பகவத அபசாரம் என்னும் இறைவனிடம் குற்றப் படுதலாகிய தடையைக் காண்போம்.

உயிர், உயிர்இல் பொருள் ஆகிய அனைத்துக்கும் உள்ளே இருந்து நியமிக்கும் அந்தர்யாமியாகிய—ஒத்தாரும் மிக்காரும் இலையாகிய - மாமாயனை, அவனை உயிராகக் கொண்டு இயங்கும் உடல்கள் ஆகிய பிரமன் முதலிய தேவர்களோடு சமமாகக் கருதுவதும்.

''பிறப்புஇல் பல்பிறவிப் பெருமான்''

''எம்மாண்பும் ஆனான்''

''உயிர் அளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்''

''ஆனான் ஆனாயன் மீனோடு ஆமையும்''

''பன்றியாய் அன்று பாரகம் கீண்டவன்''

என்று ஆழ்வார்கள் பரவசம் அடைந்து வியக்கும்படியாகப், பிரகிருதியின் தொடர்பில்லாத சுத்த சத்துவ மயமான திருமேனியைத் தாங்கி, அறம் தலை நிறுத்துவதற்காக இறைவன் தானே விரும்பி அவதாரங்கள் செய்கின்றான். நாம் பிறப்பதற்குக் காரணம் நாம் செய்த வினைப்பயன். இறைவன் பிறப்பதற்குக் காரணம் அவன் விருப்பம். துயரில் மலியும் மனிசப் பிறவியில் தோன்றிய இறைவன், நமக்காக நடித்துக் காட்டியவையே கர்ப்பவாசம், பிறவி, சோகம், மோகம் முதலியன. இவ்வாறு எண்ணாமல், கர்ப்பவாசம் முதலியன இறைவன் இயல்பாக அடையும் நிலைகள் என்று மயங்கி, அவன் நம்மைப்போலவே வினைப்பயனால் பிறப்ப தாகவும் நம் இனத்தில் அவனும் ஒருவனே என நினைப்பதும்,

இறைவன் தன் அடியார் உகந்த கல், வெள்ளி, பொன், செம்பு முதலிய ஏதாவது ஒரு பொருளைத் தன் திவ்வியத் திருமேனியாக ஏற்பான். அந்தத் திருமேனியில், தன்

முன்னைய சுத்த சத்துவத் திருமேனியிங் கொண்ட ஆதரத்தைச் செய்வான். அந்த ஆதரத்துடனேயே திருக் கோயில்களிலும் அடியார் திருமனைகளிலும் எழுந்தருளி யிருப்பான். அந்நிலையே அர்ச்சாவதாரம் எனப்படும். அந்தத் திவ்விய அர்ச்சைத் திருமேனிகளை இவை இன்ன பொருளால் ஆனது என்று அறுதியிடுவதும்,

உயிர் இறைவனுக்கே உரியது. அதனைத் தனக்கு உரியது என்று எண்ணுவது, பிறர் பொருளைக் களவு செய்வ தற்குச் சமம். ''நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்'' என்ற மதுரகவி வாக்கில், 'பிறர்' என்பது உயிரினும் வேறுபட் டிருப்பவனாகிய இறைவனையும் நன்பொருள் என்பது உயிரையும் நம்பினேன் என்பது தனக்குரியது என விரும்புவ தையும் (களவு செய்வதையும்) குறிக்கின்றன என்பது அதன் வியாக்கியானம். இத்தகைய உயிரைத் தனக்குரியது எனக் கருதுவதும்,

இறைவனுக்கு உரிய அமுதுபடி, சாத்துபடி முதலிய வற்றுக்குத் தகுதியான நிவேதனப் பொருள்களைத் தெரிந்தோ தெரியாமலோ தனதாக்கிக் கொள்ளுவதும்,

இறைவன் திருக்கோயிலுக்குள் ஊர்தி ஏறியாவது, பாதுகை அணிந்தாவது நுழைந்து செல்லுவதும்,

இறைவன் திருமுன் தண்டனிட்டு வணங்காமலிருத்தலும், ஒரு கையால் வணங்குவதும்,

திருக்கோவிலினுள் எச்சில் உமிழ்வதும் மூக்குச் சீந்துவதும், அசுத்தம் செய்வதும், மாசுக் காற்றை (அபானன்) விடுவதும்,

திருக்கோவிலில் கால் நீட்டிக் கொண்டிருப்பதும் படுப்பதும் இரு கையாலும் முழங்காலைக் கட்டிக் கொண்டி ருப்பதும்,

திருக்கோவிலினுள் பொய் புகலுதல், உரத்துச் சிரித்தல், வீண் பேச்சுப் பேசுதல், பக்திப் பரவசத்தால் அன்றி வேறு காரணங்களுக்காக அழுதல், மகளிருடன் பரிகாச வார்த்தை பேசுதல், பிறரைப் பழித்தல், புகழ்தல், ஆசனத்தில் அமர்தல் முதலியனவும் இறைவன்பால் குற்றப்படுதலாகிய தடை களாம். இது பகவத் அபசாரம் எனப்படும்.

## இறையடியார்பால் குற்றப்படுதல்

அடியார் உயர்த்தி கண்டு பொறாமைப்படுவதற்கும் தன்னை உயர்ந்தவன் என்று மயங்கும் நினைவுக்கும் உறுப் மான அகந்தையும்,

அடியார்கள் விரும்பிய பொருளை விழைந்து விரைந்து வழங்காத பொருளாசையும் ஆகியன இறையடியார்பால் குற்றப்படுதல் என்னும் தடைகளாம். இது பாகவத அபசாரம் எனப்படும்.

ஆசாரிய பதவி நிருவாகம் செய்தவரான எம்பெருமா னார் தம் இறுதி நிலையில் அருளிச் செய்தவை வருமாறு ;

வேதங்கள், தத்துவ நூல்கள், அருளிச் செயல்கள், ஆசார்யர்களின் கருத்துக்கள் ஆகிய அனைத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்தவிடத்து முடிந்த முடிவாகத் தெரிவன இவை ;

வைணவராகும் தகுதியுடையார்குத் துவயம்[1] ஒழிய வேறு மந்திரம் இல்லை.

---

1 "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே.
ஸ்ரீமதே நாராயணாய நம :"
என்பது துவய மந்திரம். இது இரு பகுதிகளைக் கொண்டிருப்பதால் துவயம் (இரண்டு) எனப் பெயர் பெற்றது.

பெரிய பிராட்டியுடன் கூடிய நாராயணனைத் பெறும்பேறு வேறு இல்லை.

கைங்கரியமே வீட்டின்பம்

ஆசாரியன் அபிமானமே முக்திக்கு வழி

அடியார்பால் குற்றப்படுதல் (பாகவத அபசாரம்) தவிர முக்திக்கு வேறு தடை இல்லை.

அந்தக் குற்றப்படுதல் (அபசாரம்)தான் பல ஆகும். அவற்றுள் முதன்மையானவை சில: அவற்றைக் காண்போம் :

1. பிறப்பைச் சுட்டுவது : இறைவன் அடியார் பஞ்சமர் அடியார் ஆயினும் வேட்டுவர் ஆயினும் நாயின் ஊன் உண்ணும் சண்டாளர் ஆயினும் அவர் குலத்தைச் சுட்டித் தாழ்ந்தவராக மதிப்பவர் நரகத்தை அடைவர்.

"குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை
நலந்தான் இலாதசண் டாளர்சண் டாளர்கள் ஆயினும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆள் என்று உட்
கலந்தார் அடியவர் தம்அடியார்எம் அடிகளே!"

"பழுதிலா ஒழுக லாற்றுப் பலசதுப் பேதிமார்கள்!
இழிகுலத் தவர்க ளேலும் எம்அடி யார்கள் ஆகில்
தொழுமின்!நீர் கொடுமின்! கொள்மின்! என்றுநின் னோடும் ஒக்க
வழிபட அருளி னாய்போன்ம்! மதிள்திரு வரங்கத் தானே!"

"அடிமையிற் குடிமை இல்லா அயல்சதுப் பேதி மாரில்
குடிமையிற் கடைமைப் பட்ட குக்கரிற் பிறப்ப ரேலும்
முடியினில் துளபம் வைத்தாய்! மொய்கழற்கு அன்பு செய்யும்
அடியரை உகத்தி போலும்! அரங்கமா நகரு ளானே!"

"திக்குற்ற கீர்த்தி இராமா நுசனைஎன் செய்வினையாம்
மெய்க்குற்றம் நீங்கி விளங்கிய மேகத்தை மேவும் நல்லோர்
எக்குற்ற வாளர் எதுபிறப்பு ஏதுஇயல் பாகநின்றோர்
அக்குற்றம் அப்பிறப்பு அவ்இயல்பே நம்மை ஆட் கொள்ளுமே!"

என்ற அருளுரைகளின்படி இறையடிகளார் இழிகுலத்திற் பிறந்தவரேனும், உயர்குலத்தில் அவதரித்தவர் என உகத்தல் வேண்டும். இறைவனுக்கு நடமாடும் கோயிலான அவர்களின் அவதாரத் திருமேனியைத் தாழ்வாக நினைப்பது, பிறப்பைச் சுட்டுவது (ஜன்ம நிரூபணம்) என்னும் குற்றமாம்.

2. சாதியைச் சுட்டுவது: தர்ம வியாதனை மாமுனிவரும், குகப்பெருமாளையும் சபரி அன்னையையும் பெரிய உடையார் சடாயுவையும் சக்கரவர்த்தித் திருமகனாரும், திருமழிசை யாழ்வாரைப் பெரும்புலியூர் அடிகளும், திருப்பாணாழ்வாரை லோக சாரங்க முனிவரும், நம்பாடுவாரைப் பிரம்ம ராட்சசனும், மாறனேர் நம்பியைப் பெரிய நம்பியும், விளாஞ்சோலைப் பிள்ளையைத் திருவாய் மொழிப் பிள்ளையும், பிள்ளை ஏறு திருவுடையார் தாசரை நம் பிள்ளையும், பிள்ளை வானமாமலைத் தாசரை நடுவில் திருவீதிப் பிள்ளைப் பட்டரும், பிள்ளை உறங்கா வில்லி தாசரை எம்பெருமானாரும், குறும்பு அறுத்த நம்பியைத் தொண்டமான் சக்கரவர்த்தியும் மதித்து நடத்திய முறை உணர்ந்த பெரியோர்கள் அடியார்களின் சாதியைச் சுட்டுவார்களோ? அடியார்களின் சாதி நிரூபணம் செய்யும் குற்றமானது அதோ கதிக்கே ஆளாக்கிவிடும்.

3. உடலைச் சுட்டுவது: இறைவனை உணர்ந்த அடியார்களுடைய திருமேனி கண்டு, ஆண் என்றும் பெண் என்றும் அசுர வடிவென்றும் அரக்க வடிவென்றும் விலங்கு என்றும் பறவை என்றும் சுட்டி இகழ்வது சரீர நிரூபணம் என்னும் பெருங் குற்றமாம்.

பெரிய திருவடி, திருஅநந்தாழ்வான், திருவடி (அனுமன்), பெரிய உடையார் (சடாயு), பிரகலாத ஆழ்வான், மாபலி, வீடண ஆழ்வான், ஆண்டாள், பொன்னாய்ச்சியார், சபரி, சாண்டிலி, திரௌபதி, கஜேந்திரன். ஆழ்வான் முதலிய பிரம்ம ஞானிகள் பெண், ஆண், அசுர, அரக்க, விலங்கு, பறவை முதலிய உடல்களை ஏற்றிருக்கக் காண்கின்றோம் அன்றோ? அதனால் அவர்களுக்கு வரும் தாழ்வு உண்டோ?

4. **பருவத்தைச் சுட்டுவது :** அடியார்களைப் பாலன், குமரன், கிழவன் என்று அகவையைச் சுட்டி அவமதிப்பது பாக நிருபணம் என்னும் குற்றப்பாடு ஆகும். நம்மாழ்வார் குமரப் பருவத்தினர்; ஆண்டாள் பாலப் பருவத்தினள், என்பதற்காக அவர்களைப் புறக்கணித்தவர் உண்டா? பாகம் என்பது பருவம் என்று பொருள்படும்.

## ஆசிரமத்தைச் சுட்டுவது

5. **நிலையைச் சுட்டுவது :** இல்லறம், பிரமசரியம், சந்நியாசம், வானப் பிரத்தம் என வாழ்வின் நிலைகள் நான்கு வகைப்படும். இறைவன் அடியார்கள் இந்த நிலைகளைக் கடந்தவர்கள். ஆதலால் அவர்களை ஐந்தாவது (பஞ்சமி) ஆசிரமிகள் என்று அழைப்பது உண்டு.

இத்தகைய அடியார்களை மற்றவரினும் தனித்தன்மையுடையவர் என்று எண்ணி வழிபடாமல், ஏதாவது ஓர் நிலையினைச் சுட்டி, இன்ன நிலையினர் என்று அவமதிப்பது ஆசிரம நிருபணம் என்னும் குற்றமாம்.

6. **அவயவங்களைச் சுட்டுவது :** அடியார்களுடைய திருமேனி, கூன், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய விகாரங்களுடன் இருப்பினும் அவர்களை இகழ்தலாகாது. அவர்கள்பால் உள்ள ஞானம், பக்தி, பற்றின்மை முதலியனவே அவயவங்களின் நிறைவு என்று கொண்டு வழி

படல் வேண்டும். அவ்வாறு வழிபடாமல் வெறுப்பது அவயவ நிரூபணம் என்னும் குற்றமாம்.

## இயலாமையைச் சுட்டுவது

7. இயலாமை சுட்டுவது : அடியார்கள் திருமேனிகள் சில சமயம் நோய்களுக்கு இலக்காவது உண்டு. அந்த நோய்களால் வரும் துன்பத்தையும் அவர்கள் இறைவன் அருட்பிரசாதமாகவே ஏற்பர். அதனால் தான் "இன்ன அடியார் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டார்" எனக் கூறும் வைணவ மரபுமொழி தோன்றியது. நோய்ப் பட்டாலும் இறைவனுக்கு ஆலயமான அடியார்கள் திருமேனியே வழிபடத்தக்கது என உபசரிக்காமல், வெறுப்பது ஆலசிய நிரூபணம் என்னும் குற்றமாம். ஆலசியம் என்பது தாமதம் அல்லது இயலாமை எனப் பொருள்படும்.

8. இருப்பிடம் சுட்டுவது : இறையடியார்கள் பறைச் சேரி, பள்ளச்சேரி, மிலேச்சர் ஊர் முதலிய இடங்களில் தொடர்ந்து குடியிருந்தாலும், அவையே திருக்கோயில் (திருவரங்கம்), திருமலை, பெருமாள் கோவில், திருநாராயண புரம் முதலிய திவ்வியத் திருத்தலங்கள் என்று நெஞ்சாரப் புகழ்தல் வேண்டும். அதற்கு மாறாகக் குப்பங்கள், குக் கிராமங்கள் என்று இகழ்வது வாச நிரூபணம் என்னும் குற்றமாம்.

இக்குற்றத்துக்கு எடுத்துக்காட்டாக ஒரு வரலாறு இங்கே நினைவு கூரத் தகும்.

காலவன் என்ற அந்தணன், விசுவாமித்திரனிடம் மாணாக்கன் ஆகி வித்தை கற்றான். ஆசாரியன், "காணிக்கை ஏதும் வேண்டா" என்று மறுத்தும், ஏதாவது ஏற்குமாறு வற்புறுத்தினான் காலவன்,

அவன் வற்புறுத்துதலால் வெறுப்புற்ற ஆசான், "உடல் எங்கும் வெளுத்து, ஒரு காது மட்டும் பச்சையாயுள்ள எண்ணூறு குதிரைகள் கொடு" என்றான்.

செய்வது இது என்று அறியாமல் திகைத்த காலவனுக்குத் திருவடி நயினார் ஆகிய கருடன் அபயம் தந்தார்.

காலவனைத் தம் கால்களில் இடுக்கிக் கொண்டு மேற் கடலில் இடபம் என்ற மலையை முதலில் அடைந்தார் கருட ஆழ்வார்.

அம்மலைமேல் இருந்த மிலேச்சர் ஊரில் குடியிருந்தார் சாண்டிலி என்னும் பெண் அடியார். அவர், இவர்களை வரவேற்று உபசரித்து விருந்தளித்தார்.

இரவு அவர் திருமாளிகையில் இளைப்பாறிக் கொண் டிருந்த கருட ஆழ்வார் மனததில் ஓர் நினைவு எழுந்தது.

"ஞானத்தால் மிக்க இந்த அன்னை, மிலேச்சர் ஊரிலே யிருப்பது தகுமா? இவரை ஏதாவது ஒரு திவ்விய தேசத்தில் சேர்ப்பது நம் கடமை" என்பதே அந்த நினைவு.

அந்த அருளரசியின் குடியிருப்பைக் குறைவாக நினைத்தலால், கருடனின் இறகுகள் உதிர்ந்து, பறக்கும் ஆற்றல் பறந்து போனது.

இறையடியார் இருக்கும் இடமே திவ்வியதேசம் என எண்ணாமையால், இவ்வாறு நேர்ந்தது என்று உணர்ந்த கருடன், அந்தச் சாண்டிலியை அணுகி வழிபட்டுத் தம் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினார். அந்த அன்னையின் திருவருளால் பண்டுபோல் இறகுகள் தளிர்த்தன. பின்னர், விடைபெற்றுக் காலவனும் கருடனும் புறப்பட்டனர் என்பதே அந்த வரலாறு.

9. உறவைச் சுட்டுவது: நம் உலகியல் உறவினரில் ஒருவர் உயர் ஞானம் கைவரப் பெற்றால், அவரை 'நம்

அரும்பெறல் அடிகள்' என்று வணங்கி வழிபடல் வேண்டும். அவ்வாறு செய்யாமல், தாய், தந்தை, தமையன், தம்பி, மாமன், மாமி, மனைவி, மைத்துனன், மகன், மகள் என்று உடலுக்கு உரிய உறவு மட்டும் பாராட்டி, அகங்கார, மமகாரப் பாசத்தால் கட்டுண்டு அவர்களைப் புறக்கணிப்பது பந்து நிருபணம் என்னும் குற்றமாம். பந்து—உறவு,

10. புகழ் சுட்டுவது : அருளாளரான எழுபத்து நான்கு சிங்காதன அதிபதிகளும் மரபு வழிப்பட்ட ஆசாரியர் களும் மட்டுமே வழிபாட்டுக்கு உரியவர், ஏனையோர் உரியர் அல்லர் என்றும், பலர் அறியும்படி ஆசாரிய கைங்கரியம் செய்பவர்தான் ஏற்றுக் கொள்ளத் தக்கவர், ஆடம்பரமின்றி அடக்கத்துடன் கைங்கரியம் செய்பவர் மதிக்கத்தக்கவர் அல்லர் என்றும் புகழ் பெற்றவரை விரும்புவதும் ஏனை யோரை வெறுப்பதும் பிரகாச நிருபணம் என்னும் குற்றமாம். பிரகாசம்—புகழ்.

11. தொழில் சுட்டுவது : உயிரை ஒரு மலராக உருவகம் செய்தால், அதற்கு அறிவும், இன்பமும் ஆகிய இன்றியமையாத ஞானமும் இறைவன் கைங்கரியத்தால் வரும் ஆனந்தமும் புற இதழ்கள் எனலாம். இறையடியார்க் குச் செய்யும் கைங்கரியமே அகஇதழ் ஆகிய உள்இதழ். புற இதழைவிட அகஇதழே மணத்தால் மிக்கது அன்றோ?

இவ்வாறு உணரும் இன்றியமையாத ஞானமுடைய பாக்கியவான்கள், இறைவனுக்கும், அவன் அடியார்க்கும், ஆசாரியனுக்கும் கைங்கரியத்திற்கு உதவும் பொருட்டு உழவு, கைத்தொழில், அரசுப் பணி, வாணிகம் முதலிய முயற்சிகளில் ஈடுபட்டிருப்பர். அவர்களின் செயல்களைக் கண்டு, உலகியலாளராகிய சம்சாரிகள் என்று நினைத்து, வெறுத்து ஒதுக்குவது வர்த்தந நிருபணம் என்னும் குற்றமாம். வர்த்தனம்—தொழில்.

12. இயல்பு சுட்டுவது : உலகம் புகழுமாறு அகந்தையுடன் திருக்கோபுரம், திருவிமானம், திருமதிள், திருமண்டபம், திருத்தேர், திருநந்தனவனம், திருமாலை, திருவிளக்கு திருவலகு முதலிய பிரசித்தமான கைங்கரியங்கள் செய்கின்ற பிரபன்னர்தாம் பின்பற்றத்தக்கவர் என்றும் காம்பறத் தலைசிரைத்து இறைவன் கடைத்தலை இருந்து, அகந்தையை வேர்முதல் மாய்த்து, இறைவனே புகலிடம் என்று பிரபத்தி செய்து, பிறர்நலம் பேணி, புகழ் விரும்பாமல், தன்னலச் செயல்களில் ஈடுபடாது "வாழும் சோம்பர்" ஆகிய பிரபன்னர் பின்பற்றத்தக்கவர் அல்லர் என்றும் வேறுபாடு காட்டுவது பிரகார நிருபணம் என்னும் குற்றமாம். பிரகாரம்—இயல்பு.

13 குற்றம் சுட்டுவது : திருமந்திரப் பொருள் உணர்ந்து அடிமைத்திறம் பூண்ட திருவுடையார், உடலோடே கூடிச் செயல்படுவதால், மேலெழுந்த வாரியாகச் சில சிறு குறைகள் தென்படலாம். அவற்றைப் பொருட்படுத்தலாகாது.

அக் குறைகளைப் பொருட்படுத்தி, அவர்களைக் குறை கூறி, ஞானமும் அனுட்டானமும் அறியாதவர் என்று பழித்து இழிவு படுத்துவது, தோட நிருபணம் என்னும் குற்றமாம். தோடம்—குற்றம்.

## இக்குற்றங்களைத் தடுக்கும் வழி

குற்றப்பாடுகள் தடுக்கும் வழி : இதுகாறும் கூறியவை தவிர, இன்னும் பல குற்றங்கள் உண்டு தொகுத்து வகுத்துச் சொல்ல முயன்றால், பெரும் பாரதமாகும்.

ஒருவன் தான் மட்டும் இக்குற்றங்களைச் செய்யாமல், இருப்பது போதாது. ஆசாரியன முதல் அடியார் வரை உள்ள யாரும் குற்றம செய்யவிடாமல் தடுப்பதும் கடமையாகக் கோடல் வேண்டும்.

தனக்கு வழிகாட்டியான ஆசாரியன் இத்தகைய குற்றங்களில் யாதேனும் செய்ய முயன்றால், தனியிடத்தே அவன் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு, தடுக்க வேண்டும்.

தனக்கு உரிமைப்பட்டவர்கள் இத்தகு குற்றங்கள் செய்ய முயன்றால், முதுகில் அடித்து விலக்குதல் வேண்டும்.

இறைவன் அடியார்பால், இத்தகு குற்றங்கள் காணின், அவர்கள் திருவடிகளைக் கட்டிக் கொண்டு வேண்டி, விலக்க வேண்டும்.

அவர்கள் அக்குற்றங்கள் செய்வதினின்று மீளாவிடின், அதனை விலக்கியருளும்படி, இறைவன்பால் சரணம் புகுதல் வேண்டும்.

இறையடியார் தனியிடத்தே செய்த குற்றங்களைப் பலரும் அறிய வெளியிடலாகாது. குற்றம் கண்டு விலக்காமல் இருப்பதும் குற்றமாகும். ஆனால், விலக்காமல் பொறுத்திருப்பவர்களை வெறுக்கலாகாது.

இதுகாறும் கூறியவற்றிற்கு மாறாகச் செயல்படுபவர்கள் இறையடியார்பால் குற்றம் செய்தவர்களே ஆவர்.

அவர்களைப் பெரிய பிராட்டியார் ஒரு கையும் பிரபத்தியை அறிவுறுத்திய ஆசாரியன் ஒரு கையும் பற்றிக் கொண்டு, நலம் அந்தம் இல்லதோர் நாட்டுக்கு அழைத்துச் சென்றாலும், அவர்கள் உள்ளே புக முடியாமற் போகும் என்பது திண்ணம்.

**பொறாமை :** அனைத்துக் குற்றங்களிலும் பெரியது பொறாமை. "தன்அடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகிலும் சிதகுரைக்குமேல், என் அடியார் அது செய்யார். செய்தாரேல், நன்று செய்தார்" என்று அடியார் செய்த குற்றங்களில் காணாக்கண் இட்டிருக்கும் இறைவனும் பொறாமைக் குற்றத்தைப் பொறுக்கமாட்டான்.

காரணமே இன்றி, இறைவனிடத்தும் அவன் அடியாரிடத்தும் இரணியனைப் போலவே காணவும் கேட்கவும் பொறாமல் இருக்கும் குற்றமே பொறாமை. கீதையில் கண்ணன், பார்த்தனைப் பொறாமை அற்றவனே என்று அழைக்கின்றான். இதனால் உபதேசம் கேட்கப் பொறாமையில்லாமை மேலான தகுதி என அறிகிறோம்.

ஆசாரியன் பக்கல் செய்யும் குற்றமும் உடன் பயிலும் மாணாக்கருடன் நீரொடுநீர் கலப்பதுபோல் ஒன்று பட்டுக் கலந்து நடந்து கொள்ளாமல் இருப்பதும் பொறாமையின் பாற்படும்.

உணவுக் குற்றம் : பிரணவத்தால் விளக்கப்படும் உயிருக்கு, இன்றியமையாத அறிவுக்குத் தடை உணவுக் குற்றமாம்.

உணவுக் குற்றம் என்றால் என்ன? இறைவனுக்குப் படைக்காததும், பிற தெய்வங்களுக்குப் படைத்ததும், உலகியலினருடையதும், எச்சிற்சோறு, மணச்சோறு, பிணச்சோறு, விலைச்சோறு முதலியனவும, இறையடியார் அல்லாத சண்டாளர், மிலேச்சர், சம்சாரிகள் கண்ணிற்கண்டதும், அவர்கள் தொட்டதும், சாதிதுஷ்ட, நிமித்ததுஷ்ட, ஆசிரய துஷ்ட உணவும் ஏற்பது உணவுக் குற்றமாம்.

சாதியால் தாழ்ந்த உணவு : தாமச உணவாகிய மீன், ஊன், கள், உள்ளி, முள்ளங்கி, கஞ்சா, முருங்கை, பீர்க்கு, சுரை, வெள்வாங்கம் (பூடு), எள், பிண்ணாக்கு முதலியன சாதியால் தாழ்வானவை. இவை சாதி துஷ்டம் எனப்படும்.

சக்கரவர்த்தித் திருமகனாராகிய பெருமாள், பிராட்டியைப் பிரிந்திருந்தபோது, "ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந ச அபி மது ஸேவதே" என்றமையால், ஊன் உண்டார் இல்லை; மது அருந்தினார் இல்லை என்று கொள்ளக் கிடபபதால்,

பிராட்டியைக் கூடியிருந்தபோது, ஊனும் மதுவும் உண்டார் என்று தெரிகின்றதன்றோ! அறம்தலை நிறுத்த அவதரித்த பெருமாளே உண்ட ஊனும் கள்ளும் நாம் மட்டும் ஏன் விலக்கல் வேண்டும்?

சக்கரவர்த்தித் திருமகன் சாமானிய அறத்தை நடையில் காட்டியவர் ஆகையாலே, தாம் பிறந்த அரசு குலத்துக்குத் தகுதியாக ஊனும் பரிமள புஷ்ப ரசங்கள் கூட்டிய மதுவும் உண்டார் என்று கொள்ளல் வேண்டும். அரசர், பயிர்களைக் காக்க வேட்டையாடுவது அவசியம். ஆதலால் ஊன் உண்ணுதல் அரசருக்கு உரியதாக ஏற்கப்பட்டது எனக் கோடல் வேண்டும்.

அவதாரத்திற் செய்த அரிய செயல்கள் அனைத்தும் நாம் கைக்கொள்ளத்தக்கன என்று கொண்டால், புலத்தியப் பிரமாவின் பேரனான இராவணனைக் கொன்றதும், வாலியை மறைந்திருந்து கொன்றதும், பிராட்டியைத் தீக் குளிக்கச் செய்ததும், கிருட்டின அவதாரத்தில் செய்த உயிர்த் திரளின் கொலையும், பிறர் பொருள் கவர்தல் முதலிய செயல்களும் கொள்ளத்தக்கன ஆகிவிடுமே! அப்போது சில பாபச் செயல் களும் பிரபன்னர்க்கு உரிய அறங்களாகக் கடைப்பிடிக்க வேண்டி வருமே!

தாமத குணத்தார்க்கே உரியனவாய்ச் சத்துவ குணத் தினர் விலக்கத்தக்கனவான ஊன், கள் முதலியன சுத்த சத்துவத்தைக் கைக்கொள்ள முயல்பவராய், வர்ண ஆசிரமங்களுக்கு அப்பாற்பட்டவராய், இறையனுபவத்தில் திளைப்பவராய் உள்ள பரம ஏகாந்திகள் ஆகிய இறை யடியார்க்கு ஏற்புடையன ஆகுமோ? ஆகாது என்பதே ஆன்றோர் முடிவு.

"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்"

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''

''புலைஎன்னும் புலைதீரப் புனல்என்னும் புனமூழ்கி
அலைகின்ற முழுமூடர் அறிவென்ன! அறிவென்ன!
புலையன்தன் மலம்உண்ணும் எமைஉண்ணும்
புலையர்க்குக்
குலம்என்ன! நலம்என்ன! கூ!கூ!என் றதுகோழி.''

''பிணம்கிடக்க நான்நுகரேன் என்றுநீ பேசுகின்றாய்!
குணம்கிடக்க வேண்டியதுஎன் கூறாய்!—பிணம்தன்
கலத்திலே இட்டுக் கலக்கிநா வாரப்
புலத்தினால் தின்றாய் புகல்''

''துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலம்கெட்ட
புல்லறி வாளர் வயிறு''

### பல்லவி

ஊத்தைப் புலாலினை உண்ணுத வாமா
புண்ணிய மாமா (ஊத்தை)

### அனுபல்லவி

பார்த்தவர் நடுங்கப்
பகுத்தறி வொடுங்கப்
பாழ்வயிறு ஓம்பவே பல்லுயிர் கொன்று
பல்லினில் மென்று (ஊத்தை)

### தொகையறா

மனிதர்உண வுக்காய் அனேகவித தானியமும்
மாசில்காய் கறிகி ழங்கும்
புனிதமிகு பழவகையும் முதலியன இறைவன்
போதவே தந்தி ருந்தும்

சரணம்

புழுத்திடும் தசையே
புசிப்பது வசையே
வழுத்திடும் நம்காரி மாறன்சொல் மெய்யே
வாழ்விது பொய்யே (ஊத்)

அன்னபா னீயத்தின் மயிரினுடன்
ஆதிஒன்று உற்றதெனி னும்
அசங்களின் கோழையோடு அதருதான் தங்களுடைய
ஆகத்தின் உற்றதெனி னும்
உன்னதம தாகவே ஊறுகா யிற்கிருமி
ஒன்றுஇருக் கக்காணி னும்
ஒருபிணமது அயல்இலில் இருப்பினும் அதற்கா
உளம்பொறாது அருவருப் போர்
பின்னமுற வேபற்பல் உயிர்களைக் கொன்றுஅப்
பிணங்கள்தமை உண்கலத் தில்
பிரியமுட னேபடைத் துண்ணுகின் றனர்—என்ன
பேதைமை இவர்க்குற்ற தே!
மன்னுகன காம்பர! முராரி!நர காரியே!
மதுசூத னப்பிரபு வே!
மருமேவு பொழிலூடு குயில்பாட மயில்ஆடு
வயலாலி மணவாள னே?

[அரங்க சீனிவாசனின் வயலாலி
மணவாள சதகம்]

என்று ஊனின் இழிவு பற்றி ஆன்றோர் பலர் பேசியுள்ளனர்.

"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர்—எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்"

"தீமை பயக்கும் சுராபானம்
செய்த பாவி மலம்புசித்துத்
தூய்மை அடையா உடல்வீக்கித்
துக்கித்து உழலும் உயிர்களாய்

நாம்அது[1] அடையும் பறவைகளாய்
நலம்இல் கிருமி கீடமாய்த்
தோம்அது[2] உறுபல் பவம்எடுத்துச்
சுழன்று திரிவான் பற்பலநாள்''

இவ்வாறு கள்ளின் கீழ்மையையும் பலர் கூறியுள்ளனர். ஆகையால் மாபாவங்கள் அனைத்துக்கும் காரணமான மதுவையும் விலங்கு, பறவைகளின் உடற்புண் ஆன ஊனை யும் உண்பது அறியாமையேயாகும்.

**சடங்கால் தாழ்ந்த உணவு :** சிரார்த்தம், சாந்தி முதலிய வற்றின் காரணமாக ஆக்கப்பட்ட உணவும், புழு அல்லது மயிர் பட்ட உணவும் நல்லன ஆயினும் அறிவைக் கெடுக்கும். ஏதாவது ஒன்றன் காரணமாக வரும் தாழ்வினால் அது நிமித்த துட்டம் எனப்படும். நிமித்தம்—சடங்கு.

**இடத்தால் தாழ்ந்த உணவு:** இறையன்பு இல்லாத சண்டாளர், மிலேச்சர், உலகியலாளருடைய பாவங்கள் அவர் களின் செல்வத்தையும் பற்றிக் கிடக்கும். ஆதலால் அவர் களால் விரும்பப்படும் பண்டங்கள் நல்லன ஆயினும் இடத் தால் வரும் தாழ்வு உடையனவாம். ஆதலால் அது ஆசிரய துட்டம் எனப்படும். ஆசிரயம்—இடம்.

**அறிவுக்குத் தடையான உணவு :** தூய்மையான உண வால் சத்துவ குணம் உண்டாகும். அதனால் ஞானமும் ஞானத்தால் வீடு பேறும் கிட்டும். வீடு பேற்றுக்குக் காரண, மான ஞானத்துக்குத் தடை தூய்மை அற்ற உணவாதலால் அது ஞான விரோதி எனப்படும் தடையாம்.

**இறையனுபவத்துக்குத் தடையான உணவு :** ஞானம், பக்தி, பற்றின்மை முதலியன நல்லன போலத் தோன்றினும், இறைவனை அடைய நான் இந்த வழிகளைக் கையாள் கின்றேன் என்ற அகந்தை தோன்றுவதற்குக் காரணமாவ

1. நாம்—அச்சம். 2. தோம்—குற்றம்.

தால் இவைகளும் இறையனுபவத்துக்குத் தடைகளேயாகும். இவற்றுடன் பொறுமையில்லாதவருடன் உறவையும் தடையாகச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். திருமந்திரத்தில் வெளிப்படையாக உள்ள 'ஆய' என்னும் நான்காம் வேற்றுமைக்குப் பொருளாகக் கொள்ளப்படும் இறையனுபவத்துக்குத் தடைகளாகிய இவை போக விரோதிகள். போகம் – இறையனுபவம். விரோதி—தடை.

## சொரூப விரோதி

**உயிர் இயல்புக்குத் தடை:** திருமந்திரத்தின் நடுப்பதமான 'நம'ப் பதத்தால் விளக்கப்படும் ''இறைவனுக்கே உயிர் அடிமை. தனக்கோ பிறர்க்கோ அடிமை அன்று'' என்னும் பாரதந்திரிய இயல்புக்கு அகங்கார மமகாரங்கள் தடைகளாம். ஆதலால் அவை சொரூப விரோதிகள் ஆகும். சொரூபம்—உயிரின் உண்மை இயல்பு. பாரதந்திரியம் – பரனுக்கு உடைமை என்னும் தன்மை.

**முமுட்சுவின் பொழுதுபோக்கு ;** முக்தியடைய முயல்பவன் முமுட்சு எனப்படுவான். முமுட்சு நிலை அடைந்தவன், தாமரை இலைத் தண்ணீர் போலவும், பழுத்த புளியம்பழம் போலவும் உலகியலோடு ஒட்டாமல் இருப்பான். அத்தகையவன் முக்திநிலை அடையுங்காறும் இடையே உள்ள வாழ்நாளை எவ்வாறு கழிப்பான்?

முமுட்சுவானவன், முத்தி பெறுமளவும் வருணம். ஆசிரமம் ஆகியவற்றுக்குத் தகுதியாக இருப்பான், இறையன்பில்லாத உலகியலாரிடம், தன் தாழ்வு கூறி இரக்க மாட்டான்.

இறையன்புடைய நல்லோரை வற்புறுத்திப் பொருள் தேட மாட்டான். 'மெய்வருந்திக் கைசெய்து உய்ம்மினோ!' என்ற ஆழ்வார் வாக்குப்படி, உடலை வருத்தி உழவுத்

தொழில் முதலியன மேற்கொண்டாவது, நல்லோர் வேண்டித் தரும் பொருள் கொண்டாவது பிடிசோறு மட்டும் யாசிக்கும் மாதுகரம்[1] என்னும் உஞ்சவிருத்தியாலாவது உண்டி உடை தேடிக் கொள்வான். அவ்வாறு தேடும் பொருள் அனைத்தும் இறைவனுக்கு நிவேதனம் செய்து, இது இறைவன் பிரசாதம் என்ற நினைவுடன் உடலில் உயிர் நிலைத்திருக்கும் அளவுக்கு மட்டும் உண்பான்.

தன்னால் இயன்ற மட்டும் அடியார்க்கு உபசாரம் செய்வான். தன்னைத் திருத்தித் திருமகள் கேள்வனுக்கு உரிமை ஆக்கிய ஆசாரியன் திருமுன், அவன் திருவுள்ளத்துக்குப் பாங்காக நடப்பான். உடல் வாழ்வில் வெறுப்பும் உயிர்வாழ்வு பெறுவதற்கு ஆதுரமும் கொண்டிருப்பான்.

உலகியற் பொருள் எதுவாயினும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ண மாட்டான். உடலில் பற்றின்மையும் அது சுமை எனக் கருதும் வெறுப்பும் கொள்வான்.

"கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ?"

என்று இருத்தலாகிய உயிரின் இயல்பில் ஆர்வம் கொள்வான்.

"என் நான் செய்கேன்! யாரே களைகண்!" என்று தன்னைக் காத்துக் கொள்வதில் ஆற்றலின்மையனாக இருப்பான்.

"உன்னால் அல்லால் யாவராலும்
ஒன்றும் குறை வேண்டேன்"

என்று பேறு பெறுவதில் பெருநம்பிக்கை கொள்வான்.

---

1 மாதுகரம்—வண்டு பல மலர்களில் சிறிது சிறிதாகத் தேன் திரட்டுவதுபோல், பல மனைகளில் சிறிது சிறிது உணவு பெறுதல். மதுகரம்—வண்டு. மாதுகரம்—வண்டின் இயல்பு.

"மாக வைகுந்தம் காண்பதற்கு என்மனம்
ஏகம் எண்ணும் இராப்பகல் இன்றியே"

என்றும்

"கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ!"

என்றும் பேறு பெறுவதற்குத் துடிப்பான்.

"பாம்போடு ஒரு கூரையில் பயின்றாற்போல்
தாங்காது உள்ளம் தள்ளும்"

என்று உடலைப் பகை என்று கருதி அச்சம் உறுவான்.

"அவன் அடியார் சிறுமா மனிசராய்
என்னை ஆண்டார் இங்கே திரியவே"

என்று குறிக்கோளில் பெருமிதம் கொள்வான்.

"பெரியார்க்கு ஆட்பட்டக்கால்
பெறாத பயன் பெறுமாறு"

என்று உபகாரச் செயலில் நன்றி கூர்வான்.

"ஆவிக்கு ஓர் பற்றுக்கொம்பு நின் அல்லால்
அறிகின்றிலேன்"

என்று தீங்கிலிருந்து மீட்கும் பிரபத்தியும், இறைவனது இயல்பாகிய தலைமைத் தன்மையும் தன் இயல்பாகிய அடிமைத் தன்மையும் தெளிவாக அறியும் உறவின் அறிவும் இறைவனது தர்மித்துவமும்[1] (குணியாம் தன்மை), தன் தர்மத்வமும்[2] (குணமாம் தன்மை) தெளிவாக அறியும் உறவின் இயல்பான ஞானமும், குணி (குணமுடையவன்) குணம் (உயிர்) ஆகிய இரண்டும் இரண்டறக் கலந்த தன்மையால், அவனேயாய்த், தான் தனியே இல்லை என்னும்படியிருக்கும் தன்மையைத் தெளிய அறிகையாகிய இன்றியமையாத உறவின் அறிவும்.

---

1 தர்மி—குணமுடைய உயிரையுடைய இறைவன்.
2 தர்மம்—குணம்; குணத்தையுடைய உயிர்.

இறைவன் கைங்கரியத்தில் ஈடுபாடும்,

நல்லொழுக்கத்தினின்று நழுவாமையும்

ஐம்புல நுகர்வில் அச்சமும், கைங்கர்யம் இடையீடு பட்டால் துன்பமும்,

கைங்கர்யம் செய்கையில் 'நான் செய்கின்றேன்' என்று எண்ணாமையும்,

விலக்கிய செயல்களை விட்டு. விதித்தவற்றைச் செய் வதற்கு நான் அறிகையாலே அன்றோ இறைவன் என்னை ஏற்றுக் கொண்டான் என்று எண்ணும் இறுமாப்புத் தவிர்கையும்,

விலக்குவனவற்றை விட்டு விதித்தவைகளைச் செய்த பின் அன்றோ இறைவன் என்னை ஏற்றுக் கொண்டான் என்று தன் செயல் செயலின்மைகளில் இறுமாந்து, நான் என் விருப்பம்போல் செயல்பட இயலும் என்று எண்ணாமையும்,

இறைவனுக்கு அடிமை செய்யுமிடத்தில், தன் உகப்புக்கு அந்த அடிமைப் பணி காரணம் என்று எண்ணாமையும்,

அவயவ மாகிய உயிர்ப் பொருள், அவயவியாகிய இறைவன் விரும்பியபடி இயங்குகின்றது. நான் செய்பவன் அல்லன் என்று செயலின்மை உடையவனாகத் தன்னை எண்ணுகையும் ஆகிய ஞான அனுட்டானங்களோடு கூடி யிருக்கும் பிரபன்னன், இறைவன் - பிராட்டி இவர்களிடமும், நித்தர் - முத்தர்களிடமும் அணுக்கத் தொண்டனாய்க் கைங்கரியச் செல்வத்தைப் பெற்று அழிவில்லாத பேரின்பம் துய்த்து நித்திய விபூதி என்னும் வீட்டுலகில் பிணைகொடுக்கி னும் மீளாப் பெருவாழ்வு பெற்று நீடு வாழ்வான்.

# தடை

எமம் நியமம் ஆசனங்கள் இயல்ஆவி புலன் அடக்கம்
தமதுஅறிவும் தாரணைகள் தாரைஅறா நினைவுஒழுக்கம்
சமமுடைய சமாதிநலம் சாதிப்பார்க்கு இலக்குஆகும்
அமரர்தொழும் அத்திகிரி அம்புயத்தாள் ஆரமுதே!

புகல்உலகில் இல்லாது பொன்னருள்கண்டு உற்றவர்க்கும்
அகலகிலா அன்பர்க்கும் அன்றேதன் அருள்கொடுத்துப்
பகலதனால் பழங்கங்குல் விடிவிக்கும் பங்கயத்தாள்
அகலகிலேன் என்று உறையும் அத்திகிரி அருள்முகிலே!

—அருத்தபஞ்சகம் - தேசிகப் பிரபந்தம்

அழுக்கு என்று இவை அறிந்தேன். அம்பொன் அரங்கா!
ஒழித்தருளாய் உள்ளில் வினையைப் - பழிப்பிலா
என்ஆ ரியர்க்காக எம்பெருமா னார்க்காக
உன்ஆ ரருட்காக உற்று.

—சப்தகாதை

தடையாகிய பிரகிருதியின் தொடர்பு பற்றி நம் பிள்ளை ஈடுதரும் சுருக்கம் இங்கே காண்போம்.

மகான் முதலான விகாரங்களை உடையது.

முக்குண வடிவானது.

வெண்மை, கருமை, செம்மை நிறங்களை உடையது.

பெருந்திரளான உயிர்கள் உண்டாதற்கு இடமானது.

எம்பெருமானுக்குச் சரீரம் ஆகையால் அடிமையானது.

சேதனர் வினைப்பயன்களுக்குத் தகுதியாக இறைவன் விரும்புவதற்குத் தகுதியாகப் பகவானுடைய நினைவாலே இருபத்துநான்கு தத்துவங்களாய் விரிந்து விகாரப்படுவது.

இவ்வண்ணம் எம்பெருமான் விருப்பத்துக்கு (இஷ்ட விநியோகத்துக்கு)த் தகுதியாக இருப்பது பிரகிருதித் தொடர் பாகிய தடை,

# வாழ்வு

உயிர்' அடைய வேண்டிய பயன் இறைவன் கைங்கரியம். இதனையே செல்வம் என்றும் வாழ்வு என்றும் கூறுவதுண்டு. வடமொழியில் புருடார்த்தம் என்றும் தமிழில் வீடு என்றும் குறிப்பிடுவர்.

இந்தப் பயனானது, அறம், பொருள், இன்பம், உயிரனுபவம், இறையனுபவம் என ஐந்து வகைப்படும்.

'ஈதல்அறம்' என்று ஔவை சுருக்கமாகச் சொல்லிய அறம், பிற உயிர்களைக் காக்கும் பொருட்டுச் செய்வதாகும், இதனை 'ஒப்புரவு' என்பர் வள்ளுவர்.

இந்த அறம் பொது அறம், சிறப்புஅறம் என ㄫவகைப் படும்.

பொதுஅறம் : வறியவர்க்கும், வேதம் கற்பவர்க்கும், அறு சமயத்தார்க்கும், சிறைப்பட்டார்க்கும், பசுவிற்கும் பசி நீக்குதல், ஐயமிடுதல் எனப் பல வகையாம்.

சிறப்பு அறம் : எம்பெருமானார் எண்பத்துஇரண்டு சொற்றொடாகளால் சிறப்பு அறத்தை விளக்கியுள்ளார்.

1. உடலானது வினை வசபட்டது. ஆதலால், உடலுக்கு இன்ப துன்பம் வருவது இயல்பு என்று பிரபன்னன் அதனைப் பொருட்படுத்தலாகாது. பொருட்படுத்தினால், நாத்திகன் ஆவான்.
2. உயிர் வாழ்க்கை இறைவன் வசப்பட்டது. அந்த உயிரின் பொருட்டுக் கவலையுறலாகாது. கவலையுற்றால், இறைவனிடம் செய்த சரணாகதி (ஆன்ம சமர்ப்பணம்) பொய்யாய் முடியும். ஆகையால் கர்மம், ஞானம், பக்தி முதலிய வழிகளில், கண் வையாமல், இறைவனுக்கும் இறையடியார்க்கும் ஏற்ற கைங்கர்யங் களில் ஈடுபடுதல் வேண்டும்.

3. பிரம சூத்திரத்துக்கு உடையவர் செய்த சீபாடியம் என்னும் உரை கற்றல் வேண்டும், அது இயலாதாயின், ஆழ்வார்கள் அருளிச் செயல்களைக் கற்று வல்லவர் ஆதல் வேண்டும்.

அதற்கும் ஆற்றல் இல்லையாயின், இறைவன் உகந்தருளின திருத்தலங்களில், திருவிமானம், திருக்கோபுரம், திருமதிள், திருஆராதனக் கலங்கள், திருமண்டபங்கள், திருஆபரணங்கள், திருப்பரிவட்டங் கள், திருக்குளம், திருத்தேர் முதலிய ஊர்திகள், திருநந்தனவனம், திருவிளக்கு முதலியன அமைத்தல், திருவிழாக்கள் நடத்துதல், அமுதுபடி சாத்துபடி செய் வித்தல், திருஅலகிடுதல், திருக்கோலமிடுதல் முதலிய தொண்டுகளில் இயன்ற அளவு செய்தல்வேண்டும்.

அதுவும் இயலாதாயின், திருநாராயணபுரத்தே ஒரு குடில் அமைத்துக் கொண்டு நிரந்தரமாகக் குடியிருத்தல் வேண்டும்.

அதுவும் இயலாதாயின் இருந்த இடத்தில் இருந்து கொண்டே துவய மந்திரத்தை நினைத்துக் கொண்டி ருத்தல் வேண்டும்.

அதுவும் இயலாதாயின் "நம்முடையவன்" இவன் என்று அன்பு காட்டும் ஓர் ஞான அதிகாரியான ஆசாரியன் அபிமானத்தில் ஒதுங்குதல் வேண்டும், இவையே இறை பணி எனப்படும்.

4. உறவினர், பகைவர், நொதுமலர் என்ற மூவகை யினரிடத்தும், முன்னடி பார்த்து (விழிப்புடன்) நடந்து கொள்ளுதல் வேண்டும்.

உறவினர் இறையடியார். பகைவர் இறைவனை வெறுப்பவர். நொதுமலர்[1] உலகியலே பயன் எனக் கருதும் சம்சாரிகள்.

---

1. உறவும் பகையும் அற்றவர்கள்.

இவர்களுள் உறவினர்களாகிய இறையடியார்களைக் கண்டால், சந்தனம், மலர், தாம்பூலம், நிலா, தென்றல் முதலியவற்றைக் கண்டாற் போலவும், காதலியை எதிர்ப் பட்ட காமுகரைப் போலவும் விரும்பி வணங்கி வழிபடல் வேண்டும்.

இறைவனை வெறுப்போராகிய பகைவரைக் கண்டால், பாம்பு, சிங்கம் முதலியவற்றைக் கண்டாற் போலே அஞ்சி விலகல் வேண்டும்.

சம்சாரிகளாகிய நொதுமலரைக் கண்டால், மரக் கட்டை முதலியவற்றைக் கண்டாற்போல ஒதுங்க வேண்டும்.

அந்த நொதுமலர், நலம் விழைபவராயின்,[1] அவர் களுக்கு ஆன்மிக ஞானம் கற்பித்தல் வேண்டும். நலம் விழையாதவர் ஆயின்[2] 'ஐயோ!' என்று இரங்கி அவர் களிடத்துக் கருணை காட்டல் வேண்டும்.

5. பொருள் இன்பங்களில் உள்ள ஆசையானது, மேலே சொன்னபடி செய்ய வொட்டாது. பொருள், இன்பம் காரணமாக அடியார்களை மதியாதிருப்பது குற்றம். உலகம் முழுதாளும் மன்னன் மகனை அந்த மன்னன் கண் எதிரே அவமதித்தால், அவன் பொறுப்பானா? ஒறுப்பான் அன்றோ! அதைப் போல் அடியார்களை மதியாதவரை இறைவன் வெறுப்பான்; தண்டம் இறுப்பான்.

6. இறையன்பில்லாத பகைவர்களைப் பொருள், இன்பம் கருதிப் பின் தொடர்வது (யாசிப்பது) பாவம். உலக முழுதாளும் அரசன் மனைவி, அற்பர்பால் மடியேந்திப் பிச்சையெடுத்தால், அது அரசனுக்குத் தானே இழிவு! அவளை அரசன் வெறுப்பான் அன்றோ? அரசன்

1. அனுகூலர். 2. அனுகூலர் அல்லாதவர்,

ஒருவனுக்கு மட்டுமே அவன் மனைவி உரியள் ஆக இருப்பதுபோல், அடியார்களும் இறைவன் ஒருவனுக்கே உரியவர் ஆவர். அவர்கள் பொருள், இன்பத்துக்காகப் பிறரைப் பின்பற்றுவதை இறைவன் பொறுப்பானோ?

7. நொதுமலரான சம்சாரிகளைப் பொருள் இன்பத்துக் காகப் போற்றுபவர், ஒளிமணிக்கும் கல்லுக்கும் வாசி அறியாதவர் ஆவர். அவர்கள் பெற்ற ஞானம், செயலுக்கு உதவவில்லையே என்று இறைவன் அவர் களைப் புறக்கணிப்பான்.

8. இறைவன் பணி, அடியார் பணி, ஆசாரியன் பணி ஆகிய வற்றில் முழுமையாக ஈடுபடல் வேண்டும்.

9. எந்நாளும் பொறிகளுக்கு ஆட்படக் கூடாது.

10. "அலகுசால் கற்பின் அறிவு நூல் கல்லார்
உலக நூல் ஓதுவது எல்லாம்—கலகல
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஓம் துணை அறிவார் இல்"

என்றபடி சாமானியமான உலகியல் நூல்களைக் கற்றுக் கடைப் பிடிக்கலாகாது,

11. சிறப்பான அறிவு நூல்களையே கற்று அதன்வழி நிற்றல் வேண்டும்.

12. ஞானத்தால் மிக்கவராயிருக்க முனைதல் வேண்டும்.

13. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய ஐம்புல இன்பங் களில் விருப்பம் வைத்தலாகாது.

14. சந்தனம், மலர் முதலிய போகப் பொருள்களில் ஆசையை விடல் வேண்டும்.

15. சுவை, ஒளி முதலிய புலன் இன்பங்களில் ஆட்படாமல் நொதுமல் (நடு) நிலையில் இருத்தல் வேண்டும்.

16. இறைவன் திருப்பெயர் திருக்குணங்களில் வைக்கும் விருப்பத்தை அவனடியார் திருப்பெயர் திருக்குணங்களில் வைத்தல் வேண்டும்.

17. இறைவன் திவ்வியத் திருமேனிகளில் வைக்கும் விருப்பத்தை, அவன் அடியார் திருமேனிகளிலும் வைத்தல் வேண்டும்.

18. திவ்விய தேசங்களில் (அடியார் வாழும் இடங்களில்) ஏற்படும் விருப்பம், வேறு தலங்களில் உண்டாதல் கூடாது.

19. இறைவனுக்கும் அடியாருக்கும் ஆசாரியனுக்கும் உகப்புடனும் நம்பிக்கையுடனும் விருப்புடனும் பணி செய்தல் வேண்டும்.

20. அடியாருடைய ஞானம் அனுட்டானங்களை, ''இவை இறைவனை அடையும் வழி'' என்று எண்ணலாகாது. அதுவே ''பயன்'' என்று எண்ணல் வேண்டும்.

21. அடியார்களை 'வா' 'போ' என்று மரியாதை இல்லாமல் அழைத்தல் ஆகாது.

22. அடியார்களைக் கண்டபோதே முதலில் வணங்கிச் சேவித்தல் வேண்டும்.

23. இறைவன், அடியார், ஆசாரியன் ஆகியோருக்கு எதிரே கால் நீட்டல் ஆகாது,

24. இறைவன், அடியார், ஆசாரியன் ஆகியோரின் திருமாளிகைகள் உள்ள திசையில் கால் நீட்டிப் படுத்தல் ஆகாது.

25. இறைவன் முதலாகத் தன் ஆசாரியன் வரை தொடர்ந்து வரும் குரு பரம்பரையை நினைத்துக் கொண்டே வைகறையில் துயில் எழுதல் வேண்டும்.

26. இறைவன் திருக்கோவிலில் அடியார்கள் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தால், திருமந்திரத்தைச் சிந்தித்துக் கொண்டே தண்டன் இடுதல் வேண்டும்.

27. இறையடியார்கள், இறைவன், ஆசாரியன் ஆகியோரின் குணங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கையில், உடனிருந்து அடியார்களுக்கு உகப்பூட்டல் வேண்டும். நடுவில் எழுந்து போதல் கூடாது.

28. அடியார்கள் எழுந்தருளக் கண்டால், எதிர்கொண்டு தெண்டனிட்டு உபசரித்து அழைத்து வரல் வேண்டும்.

29. அடியார்கள் வழிபாடு பெற்று மீண்டு செல்லும் காலத்தும் பின்சென்று வழிபட்டு, அவர்கள் கண்ணுக்கு மறையும் அளவும் அஞ்சலியும் கையுமாய்க் கண்களிக்க நோக்கிக் கொண்டிருந்து திரும்பி வருதல் வேண்டும்.

30, அடியார்க்குப் பணி செய்து பொழுது போக்குதல் வேண்டும். அவ்வாறன்றி, வயிறு வளர்க்கும் பொருட்டுச் சம்சாரிகளிடம் சென்று, அவர்கள் பெயர் முதன்மை யாகவும் தங்கள் பெயர் பின்ஆகவும் "அய்யா? அம்மா!" என்று இரந்து அலைவது, உயிரின் இயல்புக்குக் கேடு ஆதலால், அத்தகைய செயலைத் தவிர்த்தல் வேண்டும்.

31. இறைவன் திருக்கோவில், திருக்கோபுரம், திருவிமானம் திருப்பண்டாரம் ஆகியவற்றைக் கண்டவுடனே வணக்கம் செய்தல் வேண்டும்.

32. பிற தெய்வங்களைக் கண்டு வியத்தலாகாது.

33. இறைவன், அடியார், ஆசாரியன் ஆகியோரின் சன்னிதி களை வலம் வருதல் வேண்டும். இடப்புறமாகச் சுற்றி வருதல் கூடாது.

34. பாசுபத, மாயாவாத சமயத்தினர், சாத்விக புராணங் களை விரிவுரை செய்தாலும் கேட்கலாகாது.

35, பிற தெய்வங்களின் வரலாறுகளைக் கேட்டு உகப்பு அடைதல் ஆகாது.

36. அடியார்களின் ஆசாரியர்களின் குணங்களைப் பேசி அடியார்கள் அனுபவிக்கும்போது, அவர்கள் உடனிருந்து

உகப்பிக்க வேண்டுமே அல்லது குற்றங்களை ஆராய லாகாது.

37. அடியார்களின் திருமேனி நிழலை மிதித்தலாகாது.

38. அடியார்கள் மீது தன்நிழல் படும்படி நடக்கலாகாது.

39. சம்சாரிகளைத் தொட்டுக் கொண்டு, அடியார்களைத் தொடலாகாது.

40. அடியார்கள் அடியேன் என்று பணிவு பாராட்டினால் அவர்களைப் போற்றாமல், அவமதிக்கலாகாது.

41. அடியார்களின் பிறப்பையும் தொழிலையும் உசாவுதல் கூடாது.

42, அடியார்களின் குற்றங்களை நினைத்தலாகாது; சொல்ல லாகாது. அவர்களின் குணங்களையே நினைத்துக் கொண்டாடுதல் வேண்டும்.

43. உலகியற் சம்சாரிகளின் கண்எதிரே, அடியார்களின் திருவடித் தீர்த்தம் ஏற்கலாகாது.

44. சித்து, அசித்து. ஈசன்[1] என்ற மூன்று தத்துவங்களையும் பற்றிய அறிவு பெறாதவரின் பாத தீர்த்தம் ஏற்க லாகாது.

45. ஞானமும் அதற்கேற்ற செயலும் உடையவர்களின். திருவடித் தீர்த்தம் நாடோறும் ஏற்றல் வேண்டும்.

46. திருமால் அடியார்க்கு ஒப்பாகத் தன்னைக் கருதலாகாது.

47. இழிந்த பொருளைத் தொட நேர்ந்தால், உடுத்த உடை யுடனே நீராடி அடியாரின் திருவடித் தீர்த்தம் ஏற்க வேண்டும்.

48. ஞானம், பக்தி, பற்றின்மை உடைய சான்றோரைக் கண்டால், அவர்கள் பல பிறப்புக்களின் இறுதியில்

---

1. இவற்றின் தத்துவம் முறையே உயிர், தடை, இறை என்ற தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன,

முக்திக்கு ஏற்றதாகப் பெற்றுள்ள தூய திருமேனியினர் என்று சிறப்பாகப் பாராட்டுதல் வேண்டும்.

49. அடியார்களின் திருவடித் தீர்த்தத்தை மற்றொருவரைக் கொண்டு ஏற்காமல், தானே ஏற்றல் வேண்டும்.

50. சம்சாரிகள் வீட்டில் பெருமாள் திருவுருவம் இருந்தால், அத்திருவுருவத்தை வணங்கலாகாது.

51. ஞானம், பக்திகள் உள்ள சான்றோரை வழிகாட்டிகள் (உத்தேசியர்) என்று எண்ணுதல் வேண்டும்.

52. இறையடியார் அல்லாதவர் வாழும் ஊர்களில், பெருமாள் கோவில் இருப்பினும், அங்குத் தீர்த்தப் பிரசாதங்கள் ஏற்கலாகாது.

53. திவ்விய தேசங்களிலுள்ள திருக்கோயில்களில், பிறர் பார்த்துக் கொண்டிருப்பினும் கூசாமல் தீர்த்தப் பிரசாதங்களை ஏற்றல் வேண்டும்.

54. இறைவன் திருக்கோயில்களில் தரும் தீர்த்தப் பிரசாதங்களை 'உண்ணா நோன்பு' முதலிய காரணம் காட்டி மறுத்தலாகாது,

54. தூயவரான அடியார் உண்டு எஞ்சிய தளிகைப் பிரசாதங்களைப் போனகம் புரிந்த சேடம் (எச்சில்) என்று வெறுக்கலாகாது.

56. திருவரங்கத் திருப்பதியைத் திருவரங்கம் என்று சொல்லக் கூடாது. (பெரிய) கோயில் என்றே கூறுதல் வேண்டும்,

57, திருமலையை 'வேங்கடாசலம்' என்னப் போகாது. திருவேங்கடம் அல்லது திருமலை என்றே கூறுதல் வேண்டும்.

58. பெருமாள் கோவிலைக் காஞ்சீபுரம் என்னலாகாது.

59. கருடனைக் கருத்மான் என்னக் கூடாது. 'பெரிய திருவடி' என்றே கூறுதல் வேண்டும்.

60. ஆஞ்சநேயனை 'அனுமன்' என்னலாகாது. (சிறிய) திருவடி என்றே கூறுதல் வேண்டும்.

61. திருக்குகப் பெருமாளைக் 'குகன்' என்று கூறுதலாகாது

62. அடியார்கள் முன்பு தன் குணங்களைப் பாராட்டிக் கூறலாகாது.

63. அடியார் ஒருவரின் எதிரில், மற்றோர் அடியாரை இகழ்ந்து பேசலாகாது.

64. இறைவன், அவன் அடியார் ஆகியோரின் குணங்களை நினைந்து அனுபவிப்பதை விட்டு, உலகச் செய்திகள் கேட்டு வியக்கலாகாது.

65. நாடோறும் ஒரு நாழிகைப் போதாவது, ஆசாரியன் பெருமையைக் கொண்டாடிப் பேசுதல் வேண்டும்.

66. ஆழ்வார்கள் அருளிச் செயல்களையும் ஆசாரியர்களின் ஞானம் அனுட்டானங்களையும்[1] எப்போதும் நினைத்துக் கொண்டே இருத்தல் வேண்டும்.

67. உடற்பற்று உடையவருடன் உறவு கூடாது.

68. திருமால் அடியாரின் அடையாளங்களைத் தரித்துக் கொண்டு, புலனின்பம் விரும்புபவருடன் நட்புக் கோடலாகாது.

69. கொடுமனத்தாருடன் நட்பாடலாகாது.

70. பிறரை இகழ்வாருடன் உரையாடலாகாது,

71. பிற தெய்வங்களை இகழ்ந்தோ புகழ்ந்தோ பேசலாகாது.

72. ஒருகால், பிறதெய்வங்களைப் பற்றிப் பேச நேரிடுமாயின் அந்தக் குற்றம் நீங்கத் திருமால் அடியாருடன் உரையாடுதல் வேண்டும்.

---

1. ஞானமும் அதற்குத் தகுதியான செயலும். 'கற்க! அதற்குத்தக நிற்க!' எனற் வள்ளுவர் வாக்கு இங்கு நினைவுகூரத் தகும்.

73. அடியாரை இகழ்பவர் முகத்தில் விழிக்கவே கூடாது.

74. துவய மந்திரத்துக்குத் தகுதியில்லாதவருடன் உறவு கொள்ளக் கூடாது.

75 பிரபத்தி தவிர, வேறு உபாயங்களில் ஈடுபடுவோருடன் உறவு கூடாது.

76. பிரபத்தியில் ஈடுபட்டவரோடு அன்புடன் கூடிப் போது போக்குதல் வேண்டும்.

77. சித்து, அசித்து, ஈசன் என்னும் மூன்று தத்துவங்களும் திருமந்திரம், துவயம், சரமசுலோகம் என்னும் மூன்று திருமந்திரங்களும் உணர்ந்து, இறையனுபவத்தில் ஈடுபடாதவருடன் பழகக் கூடாது.

78. இறையன்பில் திளைப்பவரை உசாத்துணையாகக் கொண்டு போது போக்குதல் வேண்டும்.

79. அடியார்கள், தன்னை அவமதித்தாலும் அவர்கள் கேடு செய்தார்கள் என்று மனத்தாலும் நினையாமலிருப்பதே உயிர்க்கு இயல்பு என்று கவலையின்றி இருத்தல் வேண்டும்.

80. அடியார்கள் இல்லறக் கடமைகள் காரணமாகத் துயருற்று, அப்போதே பரம பதத்துக்குப் போனால் (இறந்து விட்டால்) நல்லது என்று நினைப்பார்கள். ஆனால், ''தேவரீர் திருநாடு அலங்கரித்தால் (உலகைத் துறந்தால்) அடியோமை ஆட்கொள்வார் யார் உளர்?' என்று அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்கள் துயரம் போக்குதல் வேண்டும்.

81. அறம் தலை நிறுத்தும் பொருட்டுப் பகைவரை அழிப்ப தற்காகவே இறைவன் எடுத்த இராமன், கிருட்டினன் முதலிய திரு அவதாரங்களை, ''மனிதப் பிறப்புத் தானே'' என்று நினைப்பதும், அர்ச்சைத் திருமேனி களைச் செம்பு, மண், பொன், மரம் முதலியவற்றால்' ஆனவை தாமே என்று நினைப்பதும் கூடாது.

82. அர்ச்சைத் திருமேனிகளில், செம்பு, வெள்ளி என்று அவற்றின் மூலப் பொருள்களை ஆராய்வது, பெற்ற தாயின் அல்குலை ஆய்வதற்குச் சமமாகும். ஆதலால், இறைவன், அடியார், ஆசாரியன் ஆகியோருக்கு அடிமை செய்வதே தன் இயல்பு என்று, தனக்கோ, பிறர்க்கோ உரியன் ஆகாமல், அவர்களுக்கே உரியவன் ஆகும் தன்மையுடனும் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து கொண்டு, முதற்பருவமாகிய இறைவன் பணி யிலும் இடைப்பருவமாகிய ஆசாரியன் பணியிலும் இறுதிப் பருவமாகிய அடியார் பணியிலும் சோர்வோ குற்றமோ படாமல், போது போக்கி வருதல் வேண்டும்.

இவை எண்பத்து இரண்டுமே சிறப்பு அறங்கள் என்பதும் இவற்றைக் கடைப்பிடிப்பவரே திருமால் அடியார் என்னும் தகுதிக்கு உரியவர் ஆவர் என்பதும் ஆனறோர் திருவுள்ளம்.

**2.** பொருள் : ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை''

என்ற குறளின்படி ஐம்புலத்து ஆறு ஓம்புவதற்கும், அனைத்துயிர்க்கும் நலம் செய்வதற்கும் தக்கார்க்கு உதவு வதற்கும் செவ்வே செலவிடும் பொருட்டுத் தத்தம் நிலை களுக்கு ஏற்ப நல்வழியில் தேடும் பொன், வெள்ளி முதலிய செல்வங்களும் நெல் முதலிய தானியங்களும பொருள் எனப்படும்,

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன் அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள்''

''பொருள் என்னும் பொய்யா விளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று''

''அருள் என்னும் அன்புஈன் குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு''

என்ற குறள்கள் பொருளின் இன்றியமையாமையை விளக்க எழுந்தனவாம்.

3. இன்பம் : மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பொறிகளால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகியவற்றைத் துய்த்தலால் வருவது இன்பம். இது காமம் எனவும் படும். வள்ளுவர் காமம் என்றே குறிப்பிடுகின்றார்.

இந்த இன்பத்தை இருவகையாகப் பிரிப்பர்.

இம்மை இன்பம் : தாய், தந்தை. தாரம், கிளை, மக்களாலும் தனம் தான்யங்களாலும் வீடு, நிலம், அடிமை, ஊர்திகள் முதலியவற்றாலும் ஆடை, அணிகலன்களாலும் உண்டி, தின்றிகளாலும் சந்தனம், மலர், தாம்பூலம் முதலிய வற்றாலும் உண்டாகும் இன்பம் இம்மை இன்பம் எனப்படும்.

மறுமை இன்பம் : இவ்வுலகில் வேள்வி, தானம், தருமங் களைச் செய்ததன் பயனாகப் பருவுடலை விட்டு, இன்பத்துக்கு இடமான சொர்க்கம் முதல் சத்திய உலகம் முடிவான மேலுலகங்களிற்போய்த் தேவஉடல் பெற்றுச் செய்த நல்வினைக்கு ஈடாக அமுதம் உண்டு, நரை, திரை மூப்பு ஏதும் இன்றிக் கற்பகத் தருவின் நிழலில் தெய்வ மகளிரோடு கூடி ஐம்புலனால் அனுபவிக்கும் இன்பம் மறுமை இன்பமாகும்.

கைவல்ய இன்பம் : மேலே சொன்ன இம்மை, மறுமை இன்பங்களைத் தவிரக் கைவல்ய இன்பம் என வேறு ஒரு வகை இன்பமும் உண்டு.

"பிறவித் துயர் அற ஞானத்துள் நின்று துறவிச் சுடர் விளக்கம் தலைப்பெய்வார்" என்ற ஆழ்வாரின் அமுத வாக்கின்படி, ஞானயோகத்தில் நிலை பெற்று, வாழ்வின் இறுதியில் பருவுடல் நீங்கி நுண்ணுடலுடன் வைகுந்த நாட்டின் எல்லையாகிய விரசை நதிக்கு அக்கரை அடைந்து, நுண்ணுடலும் துறந்து, ஆங்கு ஓர் இடத்திலே உயிர் ஆனது தன்னைத் தானே அனுபவித்துக் கொண்டு என்றென்றும் இருப்பது உயிர் அனுபவமாகிய கைவல்ய இன்பம் எனப்படும்.

அழிவில்லாத பேரின்ப வெள்ளமான இறையனுப வத்தோடு ஒப்பிடுகையில், உயிர் அனுபவமானது பெருந் துன்பமே என்பது வைணவர் கொள்கை. ஆதலால் அதனைப் பெருந்துன்பம் என்றும் இறப்பு என்றும் ஆழ்வார்கள் இகழ்ந்து கூறியுள்ளனர். மாயாவாதிகள் வீடுபேறு என்பது கைவல்யமே என்று மயங்குவர்.

**இறையனுபவம் :** உயிர் அடைய வேண்டிய உண்மை யான பயன், இறைவனுடன் கூடிக் குளிர்ந்து, அவன் அணுக்கத் தொண்டுகளைச் செய்து கொண்டு அவனை அனுபவிப்பதே ஆகும். அதுவே வைணவம் முடிவாகக் கூறும் இன்பப் பயனாகிய இறையனுபவம். அதற்கு மேம்பட்ட பலன் ஏதும் இல்லை.

இந்த உடலானது உண்டாதல், பிறத்தல், வளர்தல், பெருத்தல், குறைதல், நசித்தல் ஆகிய ஆறுவகை மாறுபாடு களுக்கு உட்பட்டது; மூவகைத் தாபங்களுக்கும்[1] தங்கும்

---

1. மூவகைத்தாபம் : 1. உயிரை ஆதாரமாகக் கொண் டுள்ள பருவுடலும் நுண்ணுடலும் அத்யாத்மம். அவ்வுடலால் உண்டாகும் துக்கம் ஆத்யாத்மிகம். அது சாரீரிகம், மானசம் என இருவகையாம். சாரீரிகம் - உடலைப் பற்றியது. மானசம் - மனத் தைப் பற்றியது. பசி, தாகம், தலைவலி, சுரம், சூலை, குன்மம், அதிசாரம் முதலிய நோய்களால் உண்டாகும் தாபம் சாரீரிகம். ஆசை, கோபம், பற்றுள்ளம், மயக்கம், துயரம், வெறுப்பு, அச்சம், இகழ்ச்சி முதலியவற்றால் உண்டாகும் தாபம் மானசம். தாபம் - துன்பம்.
2. தன் உடலுக்கு வேறாகவும் பொறிகளால் உணரக் கூடியதாகவும் இருப்பது அதிபூதம். அதனால் உண்டாகும் தாபம் ஆதிபௌதிகம். திருடர், துட்டர், தேள், பாம்பு முதலியவற்றால் உண்டாகும் துன்பம் அது.
3. தன் உடலுக்கு வேறாகவும் பொறிகளுக்கு எட்டாததாகவும் உள்ளது அதி தெய்வம். அதனால் வரும் தாபம் ஆதி தைவிகம் என்னும் துன்பம், மழை, காற்று, இடி, எரிமலை வெள்ளம் முதலிய வற்றால் வருவது அது.

இடமாயுள்ளது. மிக்க உயிர் நிலையும் மேலாம் இறை நிலையும் தோன்றாமல் மறைப்பது.

உயிர் அல்லாத உடலை, உயிர் என்றும், இறைவன் அல்லாத சில சேதனரை இறைவன் என்றும், இறைவனுக்கே உரிமைப்பட்டிருக்கும் இயல்புடைய உயிரைத் தன் விருப்பப்படி செயலாற்ற வல்ல உரிமையுடையது என்றும், துய்க்கத் தகாத புலன் இன்பங்களைத் துய்ப்பதற்கு உரியன என்றும் கருதுகின்ற திரிபு உணர்ச்சியை ஊட்டுவது இந்த உடல்.

முடிவான பலனாகிய இறையனுபவம் பெற விழைவோன், அவசியம் துய்த்தே தீர்க்க வேண்டிய பிராரப்த வினை ஆகிய புண்ணிய பாவங்களால் வரும் இன்ப துன்பம் கழிந்து, பருவுடலைத் துறந்து, நம்பிக்கைக்கு உரிய ஆசாரியன் ஆகிய ஆப்தன் வழிகாட்டச் சுழு முனை என்னும் மேல் நோக்கிய நாடி வழியே, பிரமரந்திரம் என்னும் மேல் வாயிலைப் பிளந்து கொண்டு, நுண்ணுடலுடனே புறப்படுவான்.

ஒங்கார விமானத்தில் ஏறி அர்ச்சிசு, அகசு, சுக்கிலபட்சம், உத்தராயணம், வருடம், வாயு ஆகியவற்றுக்கு உரிய தெய்வங்கள் வழி நடத்திச் செல்ல, அவர்கள் பதவிகளாகிய உலகங்களைக் கடந்து, ஞாயிற்று மண்டலம் பிளந்து, சந்திர மண்டலம் விண்மீன் மண்டலம் வருண மண்டலம் ஆகிய வற்றையும் கடப்பான்.

சொர்க்கலோகம், சனலோகம், மஹர்லோகம் தபோலோகம், சத்திய லோகங்களையும் அந்தந்த உலகங்களுக்கு உரிய தேவர்கள் வழி நடத்தி அழைத்துச் செல்லக் கடப்பான்.

அண்ட கடாகம் பிளந்து, நீர் நெருப்பு காற்று வானம் அகங்காரம் மகான் அவ்வியக்தம் (பிரமம்) ஆகிய ஏழு மதிள் களையும் உவப்புஇல் பெரும்பாழ் ஆன மூலப் பகுதியையும் தாண்டுவான்.

தாபங்கள் அனைத்தும் ஆறும்படி அமுதப் பெருக்கான விரசை நதியிற் படிந்து, பருவுடலுக்குக் காரணமான நுண் ணுடலையும் பருவுடல் நுண்ணுடல்களுக்குக் காரணமான கர்ம, வாசனைகளின் அணுக்களையும் கழுவப் பெறுவான்.

விரசை அடைந்தபின் அமானவன் என்னும் தெய்வம் கரத்தாலே தீண்டுவதால், சுத்த சத்துவமாய்ப் பரமேட்டி. புமான், விசுவம், நிவிருத்தி, சர்வம் என்னும் ஐந்து சக்தி களின்[1] மயமாய், அறிவு இன்பங்கள் பிறக்கும் இடமாய் இறையனுபவமாகிய சோதியுருவமான அப்ராகிருதத் திருமேனியைப் பெறுவான்.

முடியுடைய நித்திய சூரிகள் முறை முறை எதிர் கொள்ளும் தெளிவிசும்பு ஆன திருநாட்டில் புகுவான்.

அளவிறந்த இன்பமயமான திருமாமணி மண்டபத்தை அடைவான்.

அங்கு இவ்வுலகு, வீட்டுலகு என்னும் ஈருலகையும் கொண்டு படைக்கப்பட்ட சீரிய சிங்காதனம் உண்டு. அதில் பன்னிரண்டு இதழ்களையுடைய பொற்றாமரைப் பூவின் பொகுட்டின் மேல், திருவநந்தாழ்வான் ஆகிய திருவணையில் வைகுந்தத்து அமரரும் முனிவருமான நித்தர், முத்தர், குழுமிக் கைதொழுது வரவேற்பர்.

---

1. இவ்வுலகில் பஞ்ச பூதங்களால் உடல் உண்டாவது போல், விரசைக்கு அக்கரையிலும் பரமேட்டி முதலிய பஞ்ச சக்திகளால் புதிய உடல் உண்டாகும். அங்கு இறைவன் திருமேனியும் பஞ்ச சக்தி மயமானதே. அது அப்ராகிருதம் (பிரகிருதித் தொடர் பற்றது) எனவும் பெறும். சுத்த சத்துவம் எனபதும் அதுவே,

கதிர் பல பூத்த கருஞாயிறு சுடர் பொழிவது போன்று, சுழிப்பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளத்துத் தூநீர் முகில் வண்ணச் சுந்தரத் திவ்வியத் திருமேனியனாய், பெரிய பிராட்டி, பூமிப் பிராட்டி நீளாதேவி ஆகிய முத்தேவியருடன் எழுந்தருளியிருக்கும் பரமபத நாதனான பரவாசுதேவனை என்றென்றும் அனுபவித்துக் கைங்கரியச் செல்வம் பெற்று ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து கொண்டிருப்பான.

அந்தக் கைங்கரியச் செல்வமே முடிவான பலன் என்பது வைணவக் கொள்கை.

இவ்வுலகிலும் தொண்டு, அவ்வுலகிலும் தொண்டு ஆக, தொண்டு தானே உயிருக்கு உரிய முழுமையான பலன். அடிமை(த்தொண்டு) என்பது உலகில் துன்பமாக அன்றோ காணப்படுகின்றது. உயிருக்கு அடிமைத் தொண்டுதான் வாழ்வு என்பது எவ்வாறு பொருந்தும் என்று ஓர் வினா எழலாம்.

காதலிக்காக எவ்விதத் தொழிலும் செய்வான் காமுகன். அத்தொழிலால் அவனுக்குத் துன்பம் தெரிவதில்லை. மாறாக அதுவே மிக்க இன்பமாக இருப்பதைக் காண் கின்றோம்.

There is no Slavery in it where you love என்று ஓ' நீல் என்ற ஆங்கிலக் கவிஞன் வாக்கை இங்கு எடுத்துக் காட்ட லாம். "அன்பு உள்ள இடத்தில் அடிமை செய்வது அடிமை அன்று" என்பது இதன் பொருள்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு கதையை ஆன்றோர் தந்துள்ளனர்.

"ஒருவன் ஒரு வேசியிடத்தில் அடங்காக் காதல் கொண்டி ருந்தான். ஒருகால் அவளுக்குத் தீராத் தலைவலி வந்து விட்டது. 'அவன் தான் வழிபடு தெய்வமாகிய காளியிடம்

போய், "அவள் தலைவலி தீர்ந்து விட்டால், தாயே! உனக்கு என் தலையை அறுத்துக் காணிக்கை ஆக்குகின்றேன்" என்று வேண்டிக் கொண்டான். "தான் இறந்த பின்பு தனக்கு அந்த வேசியால் ஆவது என்?" என்று சிந்திப்பதை ஒழித்தது அவன் கொண்ட காமம்.

உலக வழக்கிலேயே இத்தகைய நிலையிருக்குமானால், எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வது துன்பம் பயக்குமோ? மாறாகப் பேரின்பமாக அன்றோ இருக்கும். இறைவனுக்கு அடிமை செய்ய வாய்ப்புக் கிட்டாதபோது நித்தரும் முத்தரும் வாட்டமுறுவர் என்பது வைணவக் கொள்கை.

உயிர், கைங்கரியத்தால் தனக்கு மட்டும் இன்பம் என நினைப்பது நரகத்துக்கு ஒப்பாகும்.

கைங்கர்யத்தால் தனக்கும் உகப்பு. இறைவனுக்கும் உகப்பு என நினைப்பது அழியும் இயல்புடைய சொர்க்கத்துக்கு ஒப்பாகும்.

கைங்கர்யம் இறைவன் உகப்புக்காகவே என நினைப்பது முக்திக்கு ஒப்பாகும் என்பர் ஆன்றோர். "தனக்கே ஆக எனைக்கொள்ளும் ஈதே எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே" என்பது இப்பொருளை விளக்கும் ஆழ்வார் வாக்கு.

## வாழ்வு

இருவிலங்கு விடுத்துஇருந்த சிறைவிடுத்துஓர் நாடியினால்
கருநிலங்கள் கடக்கும்வழி காவலரால் கடத்துவித்துப்
பெருநிலம்கண்டு உயிர்உணர்ந்து பிரியாமல் அருள் செய்யும்
உருநலம் கொண்டு உறும்திருவோடு உயர்அத்தி கிரியானே!

தம்திருமா துடனேதாம் தனியரசாய் உறைகின்ற
அந்தம்இல்பே ரின்பத்தில் அடியவரோடு எமைச்சேர்த்து
முந்திஇழந் தனஎல்லாம் முகிழ்க்கத்தந்து ஆட்கொள்ளும்
அந்தம்இலா அருள்ஆழி அத்திகிரித் திருமாலே!
—அருத்தபஞ்சகம்--தேசிகப் பிரபந்தம்

## நூற்பயன்

அயன்பணியும் அத்திகிரி அருளாளர் அடியிணைமேல்
நயங்கள்செறி கச்சிநகர் நான்மறையோர் நல்லருளால்
பயன்கள்இவை ஐந்தும்எனப் பண்டு உரைத்தார் படிஉரைத்த
வியன்கலைகள் ஈரைந்தும் வேதியர்கட்கு இனியனவே
—தேசிகப் பிரபந்தம்

தீங்கேதும் இல்லாத் தேசிகன்தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர்—ஓங்காரத்
தேரின்மேல் ஏறிச் செழுங்கதிரி னூடுபோய்ச்
சாருவரே அந்தாமந் தான்

—சப்த காதை,

# எங்களது திருநாடு

எங்களது திருநாடு பரமபதம் அம்மே!—அது
எங்கள்சரு வேசன்அர சியற்றும்பெரு நாடு
பொங்குபுகழ் திருவரங்கம் எங்கள்திரு நாடு—அது
பூலோக வைகுந்தம் என்பர்அடி அம்மே! 1

ஏழுமலை சோலைமலை எங்கள்மலை நாடு—கச்சி
எதுசயிலம் பதரிகிரி எங்கள்மலை நாடு
சீலமுறும் வானமலை எங்கள்திரு நாடு—அங்கே
செயமுறுநம் குரவரொடு வாழ்வம்அடி அம்மே! 2

எங்கள்குல கோத்திரங்கள் சூத்திரங்கள் எல்லாம்—நன்கு
எடுத்துரைப்பேன் கேட்டுமகிழ் வெய்திடுவாய்! அம்மே!
புங்கவர்கள் போற்றும்பெரும் பூதூர்எதி ராசர்—அவர்
புகலும்பிர பத்தியதே சூத்திரமென்று அறிவாய்! 3

பண்டைக்குலம் விட்டதடி தொண்டக்குல கோத்ரம்—நல்ல
பாகவதர் விஷயமதில் சாதிபேதம் எண்ணோம்.
அண்டபிண்டம் உண்டுமிழ்ந்து அளந்தமண வாளன்—பரன்
அவனேசர் வேசுரன்மற் றெவரும்இல்லை அறிவாய்! 4

சித்திமுக்தி பக்திஅருள் தேவிஜெகன் மாதா—அவள
திருவருளே புருடகாரம் என்றுதெளிந் திருப்போம் !
சத்துவநன் ஞானம்அனுஷ் டானம்உள்ள குருவின்—நல்ல
சரணமலர் அன்றிமறு சாதனங்கள் அறியோம்! 5

ஆகமங்க ளாலேபிற தெய்வம்பரம் என்று—சொல்லும்
அறிவிலரை மாறன்தமிழ் ஆரணத்தால் வெல்வோம்!
பாகவதர் தங்களுக்குப் பணிவிடைகள் செய்து—அவர்
பரமன்என வேபணிந்து பரகதிநாம் அடைவோம்! 6

பெரியதிரு மந்திரமாம் துவயமனு எல்லாம்—நல்ல
பெரியவர்பால் தொண்டுசெய்து பேணிஅதைக் கற்போம்!
அரியபெரு மந்திரத்தின் அரும்பொருளை எல்லாம்—நல்ல
ஆரியன்பால் கேட்டுஅதன் படிநடந்து கொள்வோம்! 7

எட்டெழுத்து. மூன்றுபதம். இருப்பதுமூன்று
அர்த்தம்—இதை
ஈரிரண்டு மாமறைக்குத் தாய்எனநீ அறிவாய்! 8

அகரம்எனும் முதல்எழுத்தை ஆராய்ந்தால் அம்மே!—அந்த
அச்சுதனே ரட்சகன்என்று அறிந்துகொள்வோம் அம்மே!
உகரம்எனும் நடுஎழுத்தை உற்றுப்பார்த்தால்
அம்மே—அது
ஒருவனையே சரண்அடைஎன்று உரைக்குமடி நங்காய்! 9

மகரம்எனும் கடைஎழுத்தை மார்க்கமுடன்
அறிந்தால்—அது
மாதவனுக்கு அடிமைஎன்று வழங்குமடி நங்காய்!
நமப்பதத்தை அறிந்தவர்க்கு எமப்பதந்தான்
இல்லை—அதில்
நான்எனது என்பதெல்லாம் நாத்திகம்என்று அறிவாய்! 10

அகிலசரா சரங்களுமே நாரம்என்ப தாகும்.—அதற்கு
ஆதார மாய்இருப்பது அயனம்என்ப தாகும்.
ஆயஎனும் கடைப்பதத்தின் அருத்தமதைச்
சொல்வேன்—அடி
அதுசதுர்த்தி. பரமனுக்கே அடிமைபயன் என்னும் 11

நம்குரவர் நியமனத்தை நாங்கள்மறக் கில்லோம்—ஸ்ரீமந்
நாரணனார் நாமம்அன்றி நாவில்ஒன்று சொல்லோம்.
தென்குருகைத் திருப்புளிக்கீழ் அமர்ந்தகுரு கேசன்—தந்த
செந்தமிழைப் பாடிஅவர் திருவடிசேர்ந்து உய்வோம்! 12

இப்பாடல் அருத்த பஞ்சகத்தை விளக்குவதோடு, வைணவ தத்துவத்தையே பிழிந்து சாரமாகத் தருகின்றது

| | |
|---|---|
| எங்கள் சருவேசன் | —(எல்லாவற்றுக்கும் தலைவன்) |
| அச்சுதன் | —(அழிவில்லாதவன்) |
| மாதவன் | —(திருமகளோடு கூடியவன்) |
| நாரணன் | —(எப்பொருளிலும் தங்கியிருப்பவன்) |
| பரமன்; பரன் | —(மேலானவன்) |

ஒருவன் —(ஒப்பற்றவன்)
மணவாளன் —(உயிர்கள் எல்லாம் பெண்கள்.
அவன் ஒருவனே புருடோத்தமன்)
—இவை இறை நிலை.

தொண்டக்குலம்
நான், எனது அறல்
பரமனுக்கே அடிமை —இவை உயிர் நிலை

குரவரொடு வாழ்தல்
குருவின் சரணமலர் அடைதல்
பாகவதர் பணி விடை
பிரபத்தி
நாரணனார் நாம ஜெபம் —இவை நெறி

நான், எனது
பாகவதரிடம் சாதிபேதம் காண்பது
பண்டைக் குலம்
பிரபத்தி அன்றி மறுசாதனத்தில் ஈடுபடல்
—இவை தடை

பரமனுக்கே அடிமையாயிருப்பது —இது பயன்

இப்பாடல் அருளியவர் குருகேச ராமானுச ஏகாங்கி சுவாமிகள். பிறப்பால் திருக்குலத்தார். சிறப்பால் வைணவர்க்கெல்லாம் பரமாசாரியர். திருவரங்கம் திருப்பாணாழ்வார் திருமடம் இவர் நிறுவியது. நம் காலத்தில் வாழ்ந்து இறை நிலை எய்திய அருளாளர். இவர் பிறக்கத் தவம் செய்த சிற்றூர் திண்டுக்கல் அருகே உள்ள தென்னம் பட்டியின் சேரி. இவர் பல தத்துவப் பாடல்கள் பாடிப் பரப்பியுள்ளார்.

பிற்சேர்க்கை—2

# பாரதியார் பாடல்

*நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே நீங்களெல்லாம்*
*சொற்பனந் தானா?—பல—தோற்ற மயக்கங்களோ?*
*கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே நீங்களெல்லாம்*
*அற்ப மாயைகளோ?—உம்முள்—ஆழ்ந்த பொருள் இல்லையோ?*
*வானகமே, இளவெயிலே மரச்செறிவே, நீங்களெல்லாம்*
*கானலின் நீரோ?—வெறுங்—காட்சிப் பிழைதானோ?*

*போனதெல்லாம் கனவினைப் போல் புதைந்தழிந்தே போனதனால்*
*நானும் ஓர் கனவோ?—இந்த—ஞாலமும் பொய்தானோ?*
*காலம் என்றே ஒருநினைவும் காட்சிஎன்றே பலநினைவும்*
*கோலமும் பொய்களோ? அங்குக் குணங்களும் பொய்களோ?*
*சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர் விதையிலென்றால்*
*சோலை பொய்யாமோ?—இதைச்—சொல்லொடு சேர்ப்பாரோ?*

*காண்பவெல்லாம் மறையுமென்றால் மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?*
*வீண்படு பொய்யிலே—நித்தம்—விதிதொடர்ந் திடுமோ?*
*காண்பதுவே உறுதிகண்டோம் காண்பதல்லால் உறுதியில்லை*
*காண்பது சக்தியாம்—இந்தக் காட்சி நித்தியமாம்.*

உள்ளது எல்லாம் ஓர் உயிர். உலகமெலாம் மாயை; பரப்பிரமம் ஒன்றே உண்டு. மற்றவை அனைத்தும் பொய்; மாயத்தோற்றம் என்னும் கொள்கையில் நின்றவர் பாரதியார். தம் இறுதிக்காலத்தில் தம் கருத்தை மாற்றிக் கொண்டு உலகு பொய்யன்று. உயிர்கள் ஒன்றல்ல; பல காண்பவெலாம் கானல்நீர் அன்று. சத்தியம் என உணர்ந்து, கொண்டதையே மேலே கண்ட பாடல் உணர்த்துகின்றது.

பிற்சேர்க்கை—3

## பாரதியார் பாடல்

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள
இறைவா இறைவா இறைவா

சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்குச்
சேரும்ஐம் பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்

முக்திஎன் றொருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்
பக்திஎன் றொருநிலை வகுத்தாய்—எங்கள
பரமா பரமா பரமா.